(c) First Aid and Ambulance Drill (முதலுதவி மற்றும் நோயாளர் ஊர்தி பயிற்சி)

(d) Swimming (depending upon facilities) (நீச்சல்)

(e) Unarmed combat. (ஆயுதமின்றி போர்)

(f) Stable management which includes general principles and sanitation of stables, selection of horses and their up-keep. (குதிரை லாயத்தின் மேலாண்மை)

(g) Lathi Drill (குறுந்தடி கவாத்து)

## PSO 19

ஒரு உதவி காவல் கண்காணிப்பாளர், இந்திய காவல் பணிக்கு பணியமாவு செய்யப்பட்ட தேதியிலிருந்து 4 வருடத்திற்குள் TNPSC நடத்தும் கீழ்க்கண்ட துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

(1) Assistant Superintendent of Police whose mother tongue is Tamil.-
- (a) Tamil – Lower Standard
- (b) Hindi – Lower and Higher Standard
- (c) Police Standing Orders.

(2) Assistant Superintendent of Police whose mother tongue is not Tamil
- (a) Tamil – Lower and Higher Standard
- (b) Hindi – Lower Standard
- (c) Police Standing Orders

குறிப்பு : S.S.L.C. அல்லது பட்டப் படிப்பில் தமிழ் படித்துள்ள IPS அதிகாரி தமிழ் உயர்நிலைத் தேர்வு தேர்ச்சியிலிருந்து விலக்களிக்கப்படுவார். ஆயினும் கீழ்நிலைத் தரத்தில் தமிழ் கையெழுத்துப் பிரதியினை வாசித்து விளக்கம் கொடுத்தலில் சோதிக்கப்படுவார். அதே போன்று S.S.L.C. அல்லது பட்டப்படிப்பில் இந்தி பயின்றுள்ள IPS அதிகாரி இந்தி உயர்நிலைத் தேர்வு தேர்ச்சியிலிருந்து விலக்களிக்கப்படுவார். ஆயினும் கீழ்நிலைத் தரத்தில் இந்தி கையெழுத்துப் பிரதியினை வாசித்து விளக்கம் கொடுத்தலில் சோதிக்கப்படுவார்.

(அ.நி. எண்.639 உள்துறை நாள் 2-3-1972)



## PSO 20 - காவல் துணைக் கண்காணிப்பாளர்கள்.– Deputy Superintendents of Police.-

(1) த.நா. காவல் சார்நிலைப் பணியிலிருந்து பதவி உயர்வு அல்லாது வேறு வகையில் பணியில் சேர்ந்துள்ள DSPகள் த.நா. காவல் பணி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுகள் நடைபெறும் போது அவற்றில் தேர்ச்சி பெறும் வரை கலந்து கொள்ள வேண்டும்.

(2) செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் சங்கத்தினால் நடத்தப்படும் **"காயமடைந்தவருக்கான முதலுதவி"** தேர்விலும் அவர்கள் கலந்து கொள்ள வேண்டும்.

(3) நேரடி நியமனம் செய்யப்பட்ட 4 வருட பணியினை முடித்த அனைத்து ASP & DSPகள் PSO 31ல் குறிப்பிடப் பெற்ற சென்னை காவல் பயிற்சிக் கல்லூரியில் ஆண்டு தோறும் நடைபெறும் புத்தாக்கப் பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

# அத்தியாயம் - 5

## அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களின் பதவி உயர்வு
## PROMOTION OF GAZETTED OFFICERS

### PSO 21 - D.I.G. மற்றும் S.P. – தேர்வு நிலை
### Deputy Inspector-General and Superintendent-Selection Grade.-

(1) இந்திய காவல் பணியில் தேர்வு நிலைக்கு கண்டிப்பாக தெரிவு மூலம் பணியமர்வு செய்யப்படுகிறது. காவல் கண்காணிப்பாளராக மிகவும் திறமையான முறையில் பணியாற்றிய அனைத்து அதிகாரிகளும் பணியமர்வுக்கு தகுதியுள்ளவர்களாக கருதப்படுவர்; ஆனால் D.I.G. பதவிக்கு தகுதியற்றவர் எனக் கருதப்படும் யாதொரு அலுவலரும் அந்நிலைக்கு பதவி உயர்த்தப்படமாட்டார். தேர்வு நிலை SP யாக பதவி நியமனம் என்பது, அவ்வாறு பதவி உயர்த்தப்பட்டநபர் DIG பதவி காலியாக ஏற்படும்போது அதற்கு தகுதியானவர் என அரசு இறுதியாக முடிவு கொண்டிருப்பதாக பொருள் அல்ல.

(2) D.I.G. கிரம நிலைக்கு பதவி உயர்வு மூலம் கூட தெரிவு செய்யப்படுகிறது.

குறிப்பு : IPS தேர்வு நிலைக்கு நிலை பேறில்லா பணியமர்வுகளும் அனுமதிக்கப்படும்

### PSO 22 - தகுதிகாண் பருவத்தினை முடிப்புச் செய்தல்.–
### Termination of probation.-

தகுதிகாண் பருவத்தினர் ஒருவர்

(1) IPS (தகுதிகாண்) விதிகள் 1954ன் விதி 9ல் குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளில் இறுதித் தேர்வில் தேர்ச்சி அடையத் தவறுவாராயின், அல்லது

(2) தகுதிகாண் பருவத்தினரின் நாட்டினம், வயது, உடல்நலம் அல்லது முந்தைய நிலையின் அடிப்படையில் பணியில் சேர்வதற்கு தகுதியற்றவர் என அல்லது பணியில் உறுப்பினராவதற்கு பொருத்தமானவர் அல்ல என மைய அரசு உள நிறைவு கொள்ளுமாயின்; அல்லது

(3) பணிக்கு தேவையான குண நலன்களும் (அ) அறிவுத் திறன் அல்லது பொதுப் பணிக்கு தேவையான மனிதாபிமானம் மற்றும் ஆக்கப்பூர்வமான பார்வை கொண்டவராக இல்லாது இருப்பின்; அல்லது

(4) IPS (தகுதிகாண்) விதிகள் 1954ன் காப்புரைகளில் ஏதேனும் ஒன்றை பின்பற்றத் தவறுவாராயின் (அறி. எண்.1695 உள்துறை நாள் 24-8-1964)

பணியிலிருந்து விடுவிப்புக்குள்ளாவார்.-

### PSO 23 - முதுநிலை நிலை.– Seniority.-

ஒவ்வொரு அலுவலருக்கும் ஒரு நியமன ஒதுக்கீட்டு வருடம் அளிக்கப்படும் மற்றும் அந்த ஒதுக்கீட்டு வருடமானது தரப்பட்டியலில் அவரது முதுநிலையினை நிர்ணயிக்கும்.

### PSO 24 - பணி நீக்கம்.– Removal from service.-

(1) மேற்கொண்டு பணி முன்னேற்றத்திற்கு பொருத்தமற்றவர் என நிரூபிக்கப்படும் IPS பணி உறுப்பினரை பணிநீக்கம் செய்திடும் அதிகாரம் மைய அரசிடம் உண்டு.

(2) யாதொரு அலுவலரும், அவருக்கு எதிராக சாட்டப்பட்டுள்ள திறமையின்மையின் அடிப்படைகளை அவருக்கு முழுமையாக அறிவிக்காமலன்றி மற்றும் தற்காப்புக்கு வாய்ப்பு அளிக்காமலன்றி பணி நீக்கம் செய்யப்படமாட்டார்.



### PSO 25 - தமிழ்நாடு காவல் பணி அதிகாரிகள் – திறமையின்மையால் பணி நீக்கம்.– Tamil Nadu Police Service Officers – Removal from service for inefficiency.-

நிலை ஆணை எண் 24 (1)ல் உள்ள IPS அதிகாரிகள் மேற்கொண்டு முன்னேற்றத்திற்கான தகுதியற்றவர் என்பதனால் பணிநீக்கம் தொடர்பான விதிகள் தநா. காவல் பணி அதிகாரிகளுக்கும் பொருந்துவனவாகும்; பணி நீக்க உத்தரவு அல்லது பணி ஓய்வு உத்தரவுக்கான அதிகாரம் தவிர மாநில அரசினால் செயலுறுத்தப்படும்.

❁❁❁❁❁❁

Scanned by CamScanner

Scanned with CamScanner

# அத்தியாயம் - 6

## அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்களின் ஆள் எடுப்பு, ஊதியம், தேர்வுகள் முதலியன
## RECRUITMENT, PAY, EXAMINATIONS, ETC., OF NON-GAZETTED OFFICERS

### PSO 26 - த.நா. காவல் சார்நிலைப் பணியாளர் தொகுதி ஆள் எடுப்பு, சம்பளம் முதலியன.
### The Tamil Nadu Police Subordinate Service-Recruitment, pay, etc. –

*தநா. காவல் சார்நிலைப் பணியாளர் தொகுதிக்காகவும், தநா. சிறப்பு காவல் சார்நிலைப் பணியாளர் தொகுதிக்காகவும் ஆள் சேர்க்கும் முறைகள், பணி விதிகள் சம்பளம், படிகள், ஓய்வுத் திட்டங்கள் ஆகியவற்றை நிர்ணயித்து வெளியிட்ட விதிகள் தநா. பணியாளர் நடைமுறை நூல் தொகுதி III-ல் அச்சிடப்பட்டுள்ளன.*

### PSO 27

*(1) பற்பல காவல் வகுப்பினர்களின் பணி நிபந்தனைகள் அரசாங்கத்தாலும் காவல் துறைத் தலைவராலும் அவ்வப்போது வெளியிடப்படும் விதிகளிலும் ஆணைகளிலும் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆயினும், பொதுப்படையான நிபந்தனைகள் பின்வருமாறு:-*

*ஒவ்வொரு காவல் அலுவலரும், பணியின் நெறிமுறைக்காகவும் சீர்நிலைக்காகவும் அவ்வப்பொழுது செய்யப்படும் அனைத்து விதிகளுக்கும் முழுமனதுடன் இணங்கி நடந்துகொள்வதுமன்றி, அதன் கௌரவத்துக்கும் கண்ணியமுடைமைக்கும் உரிய சரியான மரியாதையை முறையாக செய்ய வேண்டும்.*

*(2) கட்டளையிடப்படும் எந்த இடத்திலும் அவர் பணிபுரிந்து வகிக்க வேண்டும்.*

*(3) அவர் அனைத்து காலங்களிலும், பணியின் எந்தெந்த வகுப்பு எந்தெந்த காவல் சீருடையையும் ஆயுத அணியையும் அணிந்துகொள்ள வேண்டுமென்று அவ்வப்போது பிறப்பிக்கப்படும் கட்டளைக்கேற்ப அத்தகைய சீருடை அணிந்துகொண்டு ஆஜராக வேண்டியதுமன்றி, பார்வைக்கு எப்பொழுதும் சுத்தமாகவும் சீராகவும் இருக்க வேண்டும்.*

*(4) அவர் அரசாங்க அதிகாரிகள் அனைவரோடு மரியாதை கனத்துடனும் அனைத்து வகுப்பைச் சேர்ந்த நபர்களோடு பொறுமை, அன்பு, விநயம் இவற்றுடனும் நடந்து கொள்ள வேண்டும். அவர் சொந்த நடத்தையில் கௌரவமும் அமைதியும் கொண்ட ரீதியில் நடந்துகொண்டு, அனைத்து சார்பு மனப்பான்மையையும் தவிர்க்க வேண்டும்.*

*(5) எந்த காவல் அதிகாரியும், தகுதியின்மை, அசட்டை அல்லது தவறான நடத்தை காரணமாக நீக்குதலுக்குள்ளாவார்; மேலும், சிறிய குற்றங்களுக்காக அவரை அதிகாரமுள்ள அலுவலர் சிறிதுகாலம் பணியிடை நீக்கம் அல்லது மற்றப்படி தண்டிக்கலாம்.*

*(6) காவல் அதிகாரி ஒருவர் காவல் படையில் உறுப்பினராக இருப்பது அற்றுப் போகையில், அரசாங்கச் செலவில் அவருக்கு வழங்கப்பட்டிருக்கக் கூடிய ஒவ்வொரு உடை அல்லது ஆயுதவர்க்கப் பொருள் (கருவித்தொகுதி) முதலியனவற்றை அவர் உடனடியாக ஒப்படைக்கவேண்டும், உறைவிடங்களை காலி செய்யவேண்டும்.*



### PSO 28 - சார்பு ஆய்வாளர்கள் மற்றும் சேமப்படை சார்பு ஆய்வாளர்களின் நேரடி ஆள் எடுப்பு.
### Direct Recruitment of Sub-Inspectors and Reserve Sub-Inspectors.-

S.I. மற்றும் R.S.I. களின் நேரடி ஆள் எடுப்பு TNPSC மூலம் மேற்கொள்ளப்படும். காவல்துறை உடல் திறனாய்வுத் தேர்வு நடத்தி அதன் முடிவுகளை தேர்வாணையத்திற்கு தெரிவிக்கும். உடல் திறனாய்வுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே தேர்வாணையம் நடத்தும் எழுத்துத் தேர்விற்கு அனுமதிக்கப்படுவர்.

*(அ.நி. எண்.2652 உள்துறை நாள் 15-11-1974)*

*(அ.நி. எண். 1585 உள்துறை நாள் 2-9-1975)*

### PSO 29 - மாவட்டங்களில் செயல்முறைப் பயிற்சி.–
### Practical training in districts.-

மாவட்டங்களில் சார்பு ஆய்வாளர்களது செயல்முறைப் பயிற்சியின் காலத்தில் அவர்களது பயிற்சியின் மேல் கண்காணிப்பாளர்கள் நேர் கவனத்தைச் செலுத்தவேண்டும். மேலும் கண்காணிப்பாளர்கள் மேற்கண்ட சார்பு ஆய்வாளர்களை மிகச் சிறந்த ஆய்வாளர்கள் நிர்வகித்து வரும் வட்டங்களுக்கு மாற்றப்படும்படி கவனிக்கும் பொறுப்புடையவராகக் கருதப்படுவர். இந்த சார்பு ஆய்வாளர்கள் வேலையில் உறுதிப்படுத்தப்படுவதற்கோ மற்றப்படியோ தகுதியுள்ளவர்களா என்பதைப்பற்றி கண்காணிப்பாளர் ஓர் எண்ணம் கொள்வதற்குச் சாதகமாக அவர்களின் திறமையை கவனமான மேற்பார்வையின்கீழ் திருப்திகரமாய்ச் சோதிப்பதற்கு ஏதுவாயுள்ள, போதிய பளுவான நிலையப் பொறுப்புகளில், கூடுமானால் மாற்றத்தைத் தவிர்த்து போதுமான நீண்டகால அளவுகளுக்கு அமர்த்திவைக்க வேண்டும். கண்காணிப்பாளர்கள் ஒவ்வொரு சார்பு ஆய்வாளர் விஷயத்திலும் த.நா.காவல் சார்நிலை பணித்தொகுதி விதிகளைச் சேர்ந்த 18(அ) (i) (ii) விதியில் குறிப்பிட்டுள்ள நடைமுறையைப் பற்றிய வாய்மொழித் தேர்வை ஓராண்டில் குறைந்தது இருமுறை நடத்துவார்கள். தேர்வு நுட்பமாயிருக்கும்; பின்வரும் பொருள்களின் மேலும் அவை போன்ற விஷயங்களின் மேலும் கேள்விகள் கேட்கப்படும்.

(1) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தல், நாட்குறிப்புகளைத் தொகுத்தல். இறுதி அறிக்கை தயாரித்தல் முதலியன உள்பட வழக்கு வேலை.

(2) வழக்கு வேலைத் தவிர மற்ற படைக்கல மேற்பார்வை, உடுப்புப்பை (கருவி கலப்பெட்டி) (Kit) தணிக்கை போன்ற நிலைய அதிகாரியின் செயல் முறைத் தொழில்.

(3) நகர நடைமுறை அலுவல்கள், முறைக் காவல்கள் (Beats), போக்குவரத்து ஒழுங்குபாடு முதலியன;

(4) உண்மையான வழக்குகள் மூலம் விளக்கப்பெற்ற துப்பறியும் முறைகள்;

(5) குற்றத்தை ஒத்துக்கொண்ட வாக்கு மூலங்கள் (confession), குற்றம் ஒப்பியவர்கள் (குற்றமேற்ற சாட்சிகள்) (Approvers) இவர்களில் பயன்;

(6) வழக்குகளில் குற்றம் சாட்டுதல்;

(7) பழைய குற்றவாளிகளை நடத்தும் முறை

(8) சம்பளப் பட்டிகள், பயணப்படிப் பட்டிகள் முதலியவற்றை தயாரித்தல்.

### PSO 30 - அதிகாரிகளுக்கு ஆண்டுதோறும் புத்தாக்கப் பயிற்சி
### Annual Refresher Course for Officers.-

(1) சட்டம் ஒழுங்கு தொடர்பாக பல்வேறு பொருள்வகைகளில், புலனாய்வு மற்றும் சட்ட நடைமுறைகள் மற்றும் காவல் பணி சார்ந்த பல்வகை பொருட்பாடுகளில் காவல் அதிகாரிகள் நன்கு அறிந்து கொள்ளும் பொருட்டு, அதன் மூலம் அவர்கள் தங்களது நாள்தோறுமான பணிகளைச் செவ்வனே செய்வதற்கு தயார்படுத்திட, ஆண்டுதோறும் புத்தாக்கப் பயிற்சி கீழ்க்கண்ட பிரிவு அதிகாரிகளுக்கு த.நா.காவலர் பயிற்சிக் கல்லூரி, சென்னையில் நடத்தப்படும்

Scanned by CamScanner

(a) 4வருட பணியினை முடித்த நேரடி நியமனம் செய்யப்பட்ட அனைத்து ASP மற்றும் DSP கள்.

(b) 4 முதல் 6 வருட பணியினை அந்த படி நிலையில் முடித்த அனைத்து நேரடி நியமனம் செய்யப்பட்ட மற்றும் பதவி உயர்த்தப்பட்ட SI கள்.

(c) காவல் ஆய்வாளர்களாக பதவி உயர்த்தப்பட்ட சார்பு ஆய்வாளர்கள்

(2) பயிற்சி வகுப்பானது 6 வாரங்கள் வரை நடைபெறுவதானது அரசிதழ் பதிவு மற்றும் பதிவிலா அலுவலர்களுக்கு பொதுவாக இருக்கும்; அரசிதழ் பதிவு அலுவலர்களுக்கு கண்காணிப்பு & மேலாண்மையில் கூடுதலாக சில வகுப்புகள் நடத்தப்படும். பயிற்சியின் போது கற்பிக்கப்பட வேண்டிய பாடப்பிரிவு, பாடப்பிரிவுகளில் விரிவுரையாற்றப் போகும் பல்வேறு அதிகாரிகள் மற்றும் குழுக் கலந்தாய்வுகளில் யார் தலைமை? போன்றன கீழ்க் குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

சட்ட தலைப்புகளில் விரிவுரையாற்றிட சிறந்த உதவி அரசு வழக்கறிஞரின் பணி பெறப்படும்.

(3) புத்தாக்கப் பயிற்சி வகுப்பின் இறுதியில், வகுப்பில் கற்பிக்கப்பட்ட பாடப்பிரிவுகளில் தேர்வு ஒன்று நடத்தப்பெறும் மற்றும் தேர்வு முடிவுகள் அவர்களது பணியாளர் மந்தணக் கோப்பு, பணிப்பதிவேட்டில் கோப்பிலிடப்படும். காவல் ஆய்வாளர்களாக பதவி உயர்த்தப்பட்ட சார்பு ஆய்வாளர்கள் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் குறைந்த பட்சம் 40 விழுக்காடு அல்லது ஒவ்வொரு பாடப்பிரிவிலும் 30 விழுக்காட்டிற்கு குறையாது அனைத்து பாடப்பிரிவுகளிலும் கூட்டி 50% பெறுதல் வேண்டும்; தவறுவாராயின் பதவி உயர்வுப் பட்டியலில் சேர்க்கப்படமாட்டார். அரசிதழ் பதிவு அலுவலர்களுக்கு D.I.G. தேர்வாளராக இருப்பார் மற்றும் தேர்வு முடிவுகள் ரகசியமாய் வைக்கப்பட்டு காவல் துறைத் தலைவரால் மறு ஆய்வு செய்யப்படும். அரசிதழ் பதிவிலா அலுவலர்களைப் பொறுத்து தேர்வு முடிவுகள் அவர்களது மந்தணக் கோப்பு மற்றும் பணிப்பதிவேட்டில் கோப்பிலிடப்படும் மற்றும் பதவி உயர்வு பரிசீலனையின் போது மாநில பதவி உயர்வு குழுமத்தினால் கருத்தில் கொள்ளப்படும். தேர்வு முடிவுகள் கூடுதல் தகுதியாக மட்டுமே நோக்கப்படும். தேர்வில் தோல்வியடைவாராயின் அவரை 'C' பட்டியலில் நிறுத்தி வைக்கும் வினாவும் கூட மாநில பதவி உயர்வு குழுமத்தினால் மறு ஆய்வு செய்யப்படும்.

(4) புத்தாக்கப் பயிற்சிக்காக வேற்றுப் பணியில் காவலர் பயிற்சிக் கல்லூரி சென்னையில் இருக்கும் போது நிலையத்தின் முதுநிலை தலைமைக் காவலர் S.I. பதவி பொறுப்பு வகிப்பார். உட்கோட்ட அலுவலர்களைப் பொறுத்து அதாவது ASP & DSP கள் புத்தாக்கப் பயிற்சி வகுப்பிற்கு வேற்றுப் பணியில் இருக்கும் போது,தொடர்பான காவல் கண்காணிப்பாளர் அவர்கள் பதவியிடத்தை கூடுதல் பொறுப்பு வகிப்பார்.

(5) பயிற்சி பெறுபவர்களின் பயிற்சிக் காலம் பணிக்காலமாக கருதப்பட்டு அவர்தம் ஊதியம் & படிகள் அடிப்படை விதிகளின் படி முறைப்படுத்தப்படும். புத்தாக்கப் பயிற்சி வகுப்புக்காக வேற்றுப் பணியில் செல்லும் அதிகாரிகள், விரிவுரையாற்றவும், குழுக்கலந்தாய்வுகளில் தலைமையேற்கச் சென்றவர்களும் சுற்றுப் பயணத்தின் போதான பயணப்படி பெறுவர்.



## TIME TABLE FOR ANNUAL REFRESHER COURSE FOR OFFICERS

| | Subject | Number of Periods (each Period is 45 minutes) | By whom lectures are to be delivered |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1. | Indian Penal Code | 12 | Assistant Public Prosecutor Grade I |
| 2. | Criminal Procedure Code (Case Procedure) | 18 | Assistant Public Prosecutor, Grade I |
| 3. | Indian Evidence Act | 12 | Assistant Public Prosecutor Grade I |
| 4. | Special Local Laws<br>Group discussions on law subjects by City Public Prosecutor, Chennai on 4 days at 2 periods each day and by Public Prosecutor, Chennai on 2 days at 2 periods each day. | 12 | Assistant Public Prosecutor, Grade I |
| 5. | Medical Jurisprudence | 12 | By the District Medical Officer or one of his Assistants |
| 6. | Police Standing Orders (Station Routine and Discipline). Maintenance of records. | 12 | By the Deputy Inspector - General of Police, Training and Principal, Police Training College, Chennai. |
| | Group discussions by a Deputy Inspector-General of Police or Commissioner of Police on Police Standing Orders | 6 | By Deputy Inspector -General of Police or Commissioner of Police, Chennai. |
| 7. | Investigation | 6 | By an Assistant Commissioner of Police (Crimes, Chennai City or by a Deputy Superintendent of Police C.I.D.) |
| | Group Discussion by a Deputy Inspector-General of Police or Commissioner of Police, Chennai | 6 | By a Deputy Inspector-General of Police, Commissioner of Police, Chennai |

Scanned by CamScanner
Scanned with CamScanner

| Subject | Number of Periods (each Period is 45 minutes) | By whom lectures are to be delivered |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 8. Public Relations | 12 | By a Superintendent of Police |
| 9. Man-management | 12 | By a Superintendent of Police |
| 10. Finger Prints | 6 | By the Superintendent, Finger Print Bureau, Chennai |
| 11. Foot Prints | 3 | C.I.D. Expert, Chennai. |
| 12. Ballistics | 3 | Arms Expert, Chennai. |
| 13. Scientific aids to detection | 12 | By the Assistant Director, Tamil Nadu Forensic Science Laboratory, Chennai. |
| 14. Explosives | 6 | Inspector of Explosives, Chennai. |
| 15. Photography | 6 | Assistant Director, Tamil Nadu Forensic Science Laboratory, Chennai |
| 16. Map drawing | 4 | By the Plan Drawing Instructor, Police Training College, Chennai |
| 17. Juvenile Delinquency | 6 | By the Superintendent of Police, Crime Branch C.I.D. Chennai or one of the Deputy Superintendents of Police. |
| 18. First Aid | 6 | By St. John Ambulance Association |
| 19. Wireless Telegraphy State grid | 4 | Director of Police Tele-communication, Chennai. |
| 20. Drill | 30 | Police Training College Drill Staff |



## PSO 31 - காவலர்கள் – ஆள் எடுப்பு.– Constables-Recruitment.-

(1) காவலர்கள் நிலை II-க்கு நபர்களை சேர்க்கும் போது உடல் தகுதியினை, அவர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் மற்றும் அவர்கள் பணியாற்ற வேண்டிய வட்டாரத்தின் தன்மையினை பரிசீலனையில் கொள்ள வேண்டும்.

(2) தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் 1920 பிரிவு 29ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்ட சீர்திருத்தப் பள்ளியின் முன்னாள் உடனுறைபவர்கள், வேறு வகையில் தகுதி பெற்றிருந்து, காவலர் II ஆள் சேர்ப்புக்கு பொருத்தமானவர்களாக இருப்பின், தகுதியற்றவர்களாக கருதப்படக் கூடாது. சீர்திருத்தப் பள்ளிகளின் பிற முன்னாள் உடனுறைபவர்களைப் பொறுத்து, ஒவ்வொருவர் நேர்விலும் தகுதிப்பாடுகளின் பேரில் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

(3) குற்றம் செய்த இளைஞர்கள் இளங் குற்றவாளிகள் சிறைப்பள்ளி அல்லது சீர்திருத்தப் பள்ளியில் சேர்ந்து தேறிய பின்னர், தங்கள் குற்றமுறு போக்கிலிருந்து விடுபட்டவர்கள் காவல்துறையில் கொம்பு ஊதுவோர்களாக (Buglers) சேர்ப்பதில் மறுப்புரையில்லை.

## PSO 32 - காவலர்கள் நிலை II – ஆள் சேர்ப்பு.– Enlistment of Constables Grade II.-

காவலர்கள் நிலை II தேர்வு நாடுபவர்களை SP படிநிலை அதிகாரி ஒருவரும் மற்றும் DSP படிநிலைக்கு குறையாத இரு அரசிதழ் பதிவு பெற்ற தேர்வுக்குழு நேர்காணல் நடத்திடும். தேர்வு செய்யப்படுவோர் தகுதிப்பாடுகளின் பேரில் பட்டியலிடப்பட்டு காலியிடம் ஏற்படும் போது பணியமர்த்தப்பட வேண்டும். இந்த நோக்கத்திற்காக அத்தகைய தேர்வு நாடுபவர்களின் நிலைப்பட்டியல் ஒன்று நியமன அதிகாரியால் அவ்வப்போது பேணப்படும். காவலர்கள் நிலை II ஆள் சேர்ப்பு தொடர்பான அறிவிக்கைகள் அனைத்து காவல் நிலையங்கள், மாவட்ட காவல் அலுவலகங்கள் மற்றும் சென்னை காவல் அலுவலகத்தில் வெளியிடப்படும்.

(2) (a) காவலர்கள நிலை IIக்கான ஆள் சேர்ப்பு வழக்கமாக திங்கள் தோறும் முதல் வேலை நாளில் அனைத்து மாவட்ட தலைமையகங்களில் காலை 7 மணிக்கு ஆயுதப்படை மைதானத்தில் நடைபெறும். ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதி அல்லது அதற்கு அடுத்த வேலை நாளில் காவலர் பணியிட காலியிட எண்ணிக்கையினை தன்னிடம் தெரிவிக்கும்படியும் மற்றும் அதே நாளில் ஆள் சேர்ப்பு ஆணைகள் அனுப்புகை செய்யப்படுமாறும் SP பார்த்துக் கொள்ள வேண்டும். 15ஆம் தேதிக்குப் பின்னர் ஏற்படும் காலியிடங்கள் பணி ஓய்வு காரணமாக தெரிந்தவை தவிர, பின்வரும் மாதத்தில் நிரப்பப்படும்.

(b) காவலர்கள் நிலை II க்கு சேர்க்கப்படும் அனைத்து நபர்களுக்கும் அவர்கள் வேலைக்காக அறிக்கையிடவேண்டிய தேதியைப் பற்றி போதிய அறிவிப்பு கொடுக்கவேண்டியது முக்கியம். மேலும், அறிக்கைத் தேதிக்கும் புது ஆட்கள் காவலர் பயிற்சிப் பள்ளிக்குக் கடவுச் சீட்டின் மேல் அனுப்பப்படும் தேதிக்கும் இடையே போதுமான காலம் இருக்கவேண்டியது மிகவும் முக்கியம்; ஏனெனில் இந்த இடைக்காலத்தில் புது நபர் அம்மை குத்திக் கொள்ளவும், ஊசி போட்டுக் கொள்ளவும், சீருடை பெற்று அதைச் சரியாய்ப் பொருத்திக் கொள்ளவும், அதை அணியும் வகையைக் கற்றுக் கொள்ளவும் கூடும். ஒரு புது ஆள் வேலைக்காக அறிக்கையிடுவதற்கு, மாதத்தின் முதல் நாள் முற்பகல் அனைத்து விஷயத்திலும் மிகப் பொருத்தமான நாளாகும்.

(c) பணியில் சேர்க்கப்பட்ட புதிய நபர் பயிற்சியினைப் பற்றியும் பணி வரையறைகளைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் வகையில் மற்றும் முன்னரே விட்டோடுதலை தடுக்கும் பொருட்டு ஆள்சேர்ப்பு உத்தரவு கீழ்க்கண்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்:-

திரு .................................. தற்காலிக காவலர் நிலை II ஆக பணியில் சேரும் நாள் முதல் நியமிக்கப்படுகிறார். அவர் முற்பகல் .................. தேதி .......................... மாவட்ட/நகர காவல் அலுவலகத்தில் பணிக்கு அறிக்கையிட வேண்டும்.



Scanned by CamScanner
Scanned with CamScanner

அவர் காவலர் பயிற்சிப் பள்ளிக்கு .......... பிற்பகல் .......... 9 திங்கள் பயிற்சி வகுப்பிற்கு அனுப்பப்படுவார்; பயிற்சியின் போது அவர் ஊதியம் ரூ. .......... மற்றும் அகவிலைப்படி ரூ. ..........

அவர் காவலர் பயிற்சிப் பள்ளிக்கு கடவுச் சீட்டின் மேல் அனுப்பப்படும் வரையில் தனது உணவுக்கும், இடவசதிக்கும் தன் சொந்த ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டியிருக்கும் என்பதாலும், பட்டியில் சேர்க்கப்பட்ட பின்னர் எந்த சந்தர்ப்பம் நேரினும் அவருக்கு யாதொரு சம்பள முன்பணமும் கொடுக்கப்பட மாட்டாது என்பதாலும், தன்னைத்தானே பராமரித்துக் கொள்வதற்குப் போதிய பொருளாதாரத்தைத் தன் கையில் வைத்துக்கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறார். அவர் பயிற்சிப் பள்ளியில் இருக்கையில், பள்ளி உணவுச் சாலையில் தனது உணவை அருந்தும்படி கட்டளையிடப்படுவார்; அந்த உணவுச் செலவு அவரது சம்பளத்தில் கழித்துக்கொள்ளப்படும்.

## PSO 33 - பணியில் சேர்ந்தவர்களுக்கு மருத்துவ ஆய்வு.– Medical examination of recruits.–

தநா. காவல் சார்நிலைப் பணி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் உடற்தகுதி சான்றிதழ் ஒன்றினை பணியில் சேர்ந்த ஒவ்வொருவரும் அளித்தல் வேண்டும்.

## PSO 34 - பணி துறப்புக்குப் பின்னர் பணியில் மறுசேர்ப்பு.– Re-enlistment after resignation.-

(1) பணியிலிருந்து பணி துறந்த நபர்கள் புதிதாக ஆள் சேர்ப்பு அடிப்படையில் மட்டுமே பணியில் மறு நியமனம் செய்யப்படுவர்.

(2) அரசு ஊழியர் ஒருவர் தனது பணியினை துறப்பின், குறிப்பிட்ட பதவியின் பணி மட்டுமன்றி அவரது முந்தைய அனைத்துப் பணிக்காலம் முற்றிலுமாக அகற்றப்பட்டுவிடும் என அரசினால் விதிக்கப்பட்டுள்ளது. அத்தகைய அரசு ஊழியர் மீண்டும் அரசுப் பணியினில் பணியமர்த்தப்பட்டால் அவரது பணி துறப்பிற்கான முந்தைய பணிக்காலம் யாதொரு விதி(அ) உத்தரவின் கீழ் எந்தவொரு பலன் (அ) சலுகைக்கும் கணக்கில் கொள்ளப்படாது.

## PSO 35 - உதவி சட்ட பயிற்றுநர்கள் மற்றும் உதவி கவாத்து பயிற்றுநர்களின் தேர்ந்த பெயர்ப் பட்டியல் – காவலர் எடுப்புப் பள்ளி. Panel for Assistant Law Instructors and Assistant Drill Instructors-Police Recruits School.-

(1) உதவி சட்ட பயிற்றுநர்கள் மற்றும் உதவி கவாத்து பயிற்றுநர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியல் தயார் செய்வதற்கான நடைமுறை தமிழ்நாடு காவலர் ஆள் எடுப்புப் பள்ளிகளின் நடைமுறை நூலில் வெளியிடப்பட்டுள்ளன. சென்னை காவலர் பயிற்சிக் கல்லூரியின் D.I.G. (பயிற்சி & முதல்வர்) அவர்களால் தேர்ந்த பெயர்ப் பட்டியல் பேணி வரப்படும்.

(2) நான்கு முதல் ஆறு ஆண்டு பணி முடித்த முன்னுரிமையாக பட்டதாரி சார்பு ஆய்வாளர்கள் மட்டுமே காவலர் எடுப்புப் பள்ளியில் உதவி சட்ட பயிற்றுநராக நியமனம் செய்ய பெயர் குறிப்பிடப் பெறுவர். தூய்மையான பணி வரலாறு கொண்ட சார்பு ஆய்வாளர்கள் மட்டுமே பெயர் குறிப்பிடப்பட வேண்டும். பெயர் குறிப்பீடுகளுடன் சார்பு ஆய்வாளர்களின் மந்தனப் பதிவுருக்களும் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) பெயர் குறிப்பீடுகள் கிடைக்கப் பெற்றவுடன், DIG/PTC சென்னை அவர்களை நேர்காணல் நடத்தி தெரிவு செய்வார் மற்றும் அவர்களின் பெயர்களை உதவி சட்டப் பயிற்றுநர்களின் தேர்ந்த பெயர்ப் பட்டியலில் வைத்திடுவார்.

**குறிப்பு :** உதவி சட்ட பயிற்றுநர் பணிக் காலம், மாநில பதவி உயர்வு குழுமத்தினால் பதவி உயர்வின் போது தனிச் சிறப்புடன் பரிசீலனையில் கொள்ளப்படும்.

*********



# அத்தியாயம் - 7

# அரசிதழ் பதிவுறா அலுவலர்களின் பதவி உயர்வு
# PROMOTION OF NON-GAZETTED OFFICERS

## PSO 36 - பொது கோட்பாடுகள்.– General Principles.-

(1) திறமை மற்றும் ஆற்றலின் அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கப்படும்; திறமை மற்றும் ஆற்றல் சமமாக இருக்கிறவிடத்து முதுநிலை பரிசீலிக்கப்படும்.

(2) ஒவ்வொரு தடவை பதவி உயர்வு பட்டியல் தயாரிக்கப்படும் போது அல்லது மாற்றியமைக்கப்படும் போது அதில் உள்ள பெயர்களின் எண்ணிக்கையானது அடுத்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் அவ்வகை அல்லது கிரம நிலை எண்ணிக்கையினை விட அதிகமாக இருக்காமல் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு பதவி உயர்வு பட்டியல் தயார் செய்திடும் பொறுப்பினை கொண்ட அதிகாரிகள் ஒவ்வொரு 'C' பட்டியலில் அலுவலர்களின் எண்ணிக்கையினை முறைப்படுத்துவர். எதிர்பார்க்கப்படும் காலியிடங்களின் எண்ணிக்கையானது, அந்த வகை அல்லது படிநிலைப் பிரிவில் உள்ள நிரந்தர மற்றும் தற்காலிக பணியிடங்களின் மொத்த எண்ணிக்கை, அடுத்த ஆண்டில் ஒப்பளிப்பு எதிர்நோக்கப்படும் புதுப் பணியிடங்கள், விடுப்பு ஒதுக்கீடுத் தேவை, பணிஓய்வு மற்றும் பதவி உயர்வு காரணமாக எதிர்நோக்கு காலியிடங்கள் முதலானவைகளுடன் ஏற்கனவே அந்த வகை (அ) படிநிலைப் பிரிவில் உள்ள நபர்களின் எண்ணிக்கையினை கழித்து அதன் அடிப்படையில் கணக்கிடப்படும்.

(3) ஒவ்வொரு ஆண்டும் சேர்க்கப்பட வேண்டிய எண்ணிக்கை முடிவு செய்யப்பட வேண்டும் மற்றும் விளைவுக்குரிய பதவி உயர்வு பட்டியலை தேவையெனில் பெயர் சேர்க்கப்பட உத்தரவிடும் அதிகாரியினால் மறு ஆய்வு செய்யப்படும். தொடர்பான அதிகாரியானவர் ஒவ்வொரு வகையிலும் பணியாளர்களின் முதுநிலைக்கான வருடத்தினை பட்டியலில் சேர்த்திடுவதற்காக முடிவு செய்திடுவார்.

(4) காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் உட்கோட்ட அலுவலர்கள் நீண்ட கால விடுப்பில் (அ) மாற்றலில் செலலும் போது, பொறுப்பினை ஒப்படைப்பதற்கு முன்னர் தங்கள் சார்நிலை அலுவலர்களின் பதவி உயர்வு பரிசீலனை பற்றிய குறிப்பினை தமது வழியுரிமையினர்க்கு கொடுத்தல் வேண்டும்.

(5) பல்வகை பிரிவுகளுக்கு பதவி உயர்வு பட்டியலில் சேர்த்தவைகளை பரிசீலனை செய்திடவும் மற்றும் பரிந்துரை செய்திடவும் கீழ்க்கண்டவர்களைக் கொண்டு பதவி உயர்வுக் குழுமம் இருக்கும்:-

| Category (1) | Composition of Board (2) | |
|---|---|---|
| | **STATE PROMOTION BOARD** | |
| Inspectors | Additional Inspector - General of Police | Chairman |
| Reserve Inspectors | Commissioner of Police, Senior most among the functional Deputy Inspectors-General in State Headquarters; Three Senior most Deputy Inspectors-General of Police of Ranges | Member |

Scanned by CamScanner
Scanned with CamScanner

| Category (1) | Composition of Board (2) | |
|---|---|---|
| | **RANGE PROMOTION BOARD** | |
| Reserve Sub-Inspectors<br>Sub Inspectors | Deputy Inspector - General of Police (Administration) Office of the Director-General of Police, Chennai | Secretary |
| | Senior- most Superintendent of Police of the Range concerned. | Chairman |
| | Other Superintendents of Police of the Range. | Members |
| | **DISTRICT PROMOTION BOARD** | |
| Police Constables, Grade I (District Police) | Superintendent of Police of the District. | Chairman |
| | Senior- most Deputy Superintendent of Police of the District. | Member |
| Police Constables-Grade I (Armed Reserve) | Superintendent of Police of the District | Chairman |
| | Deputy Superintendent of Police of Armed Reserve or, where there is none such, any other Sub-divisional Officer | Member |

**(6)** தொடர்பான SP அல்லது தளவாய் குறிப்பிடப்பட்ட தேதிகளில் பதவி உயர்வு குழுமத்தினால் பரிசீலிக்கப்படுவதற்கு முதுநிலை கிரம வரிசையில் பணியாளர் பட்டியலை சமர்ப்பித்தல் வேண்டும். பொருத்தம் பற்றிய தனது கருத்தினை அல்லது பட்டியலில் ஒவ்வொரு பெயருக்கு எதிரில் அவர் பதிவு செய்தல் வேண்டும் மற்றும் நாளிதுவரை பணியாளர் மந்தணக் கோப்பு மற்றும் பணிப்பதிவேடுகளை உடன் இணைக்க வேண்டும். பரிந்துரை செய்யப்படாத ஒவ்வொரு நேர்வுக்கும் குறிப்பான காரணங்கள் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

**(7)** 'A' 'B' & 'C' பட்டியல்கள் - பொருள் விளக்கம்

**'C' பட்டியல்** - நபர் ஒருவர் பதவி உயர்வு பட்டியலில் சேர்க்கப்பட்டவுடன் அவர் C பட்டியலில் இருப்பவராகக் கருதப்படுவார்.

**'B' பட்டியல்** - C பட்டியலிலிருந்து நபர் ஒருவர் பதவி உயர்த்தப்பட்டால் அவர் B பட்டியலில் கொணரப்பட்டதாகக் கருதப்படுவார்.

**'A' பட்டியல்**

நபர் ஒருவர் தகுதிகாண் பருவம் முடிக்கப் பெற்றதாக (அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறவிடத்து) விளம்புகை செய்யப்பட்டவுடன் அவர் A பட்டியலில் கொணரப்பட்டதாகக் கருதப்படுவார். அவர் தகுதிகாண் பருவத்திற்கு ஆட்பட வேண்டியிராத பதவிகளுக்கு பதவி உயர்த்தப்படின், அவர் நேரடியாகவே 'A' பட்டியலுக்கு கொணரப்பட்டதாகக் கருதப்படுவார்.



**(8) 'C' பட்டியல்கள் தயாரிப்பிற்கான கால அட்டவணை**

'C' பட்டியல்கள் தயாரிக்கும் நோக்கத்திற்காக கீழ்க்காண் கால அட்டவணை கடைப்பிடிக்கப்படல் வேண்டும்:-

| Category (1) | Date of preparing estimate of vacancy (2) | Date of calling for recommendation roll (3) | Date by which recommendation roll should reach the Promotion Board concerned (4) | Date by which 'C' list should be communicated (5) |
|---|---|---|---|---|
| Inspector | 1st February | 15th February | 1st April | 1st June |
| Reserve Inspector | 1st September | 1st October | 1st November | 31st December |
| Sub-Inspectors | 1st January | 1st February | 1st March | 10th April |
| Reserve Sub-Inspectors | 1st September | 1st October | 1st November | 31st December |
| Police Constable, I Grade | 15th April | 1st May | 1st June | 1st August |

## PSO 37 - மாவட்ட காவல் – ஆய்வாளர்கள் பதவிகளுக்கு பதவி உயர்வு.– District Police - Promotion to the posts of Inspectors.-

**(1)** ஆண்டு தோறும் SP, ஆய்வாளர்கள் கிரம நிலைக்கு பதவி உயர்வுக்கு பரிசீலிக்கப்பட வேண்டிய சார்பு ஆய்வாளர்கள் பட்டியலை முதுநிலை கிரம வரிசையில் தயாரித்து தனது DIG க்கு பணிந்தனுப்புவார். இரகசியம் என கருதப்படும் அப்பட்டியலுடன் தொடர்பான அதிகாரிகளின் நாளிதுவரை தவறுகைத் தாள்கள் (Defaulter Sheets) மற்றும் பணியாளர் மந்தணக் கோப்பு சேர்ந்து இருக்கும். இப்பரிந்துரைகளை DIG கூர்ந்தாய்வு செய்து ஏப்ரல் முதல் தேதியில் DGP அலுவலகத்திற்கு பணிந்தனுப்பிடுவார்; அவைகள் அங்கு செய்முறைக்குட்பட்டு பரிசீலனைக்காக மாநில பதவி உயர்வு குழுமம் முன் வைக்கப்படும். மாநில பதவி உயர்வுக் குழுமத்தின் பரிந்துரைகள் இறுதியாக, பொருத்தமான நபர்களை 'C' பட்டியலில் சேர்த்திட வேண்டி ஏற்பு ஆணைகளுக்காக DGP முன் வைக்கப்படும்.

**(2)** S.I. கிரம நிலையிலிருந்து ஆய்வாளர்கள் பதவிகளுக்கு பதவி உயர்வுக்கு மாநில அளவில் ஒரு 'C' பட்டியல் தயாரிக்கப்படும்.

## PSO 38 - ஆயுதப் படையில் R.I. பதவிகளுக்கு பதவி உயர்வு Promotion to the post of Reserve Inspectors in the Armed Reserve.-

ஆண்டு தோறும் காவல் கண்காணிப்பாளர் RI கிரம நிலைக்கு பதவி உயர்வுக்கு பரிசீலிக்கப்பட வேண்டிய RSI கள் பட்டியலை முதுநிலை கிரம வரிசையில் தயாரித்து தனது DIG.க்கு பணிந்தனுப்புவார். இரகசியம் எனக் கருதப்படும் அப்பட்டியலுடன் தொடர்பான அதிகாரிகளின் நாளிதுவரை தவறுகைத் தாள்கள் மற்றும் பணியாளர் மந்தணக்கோப்பு சேர்ந்து இருக்கும். இப்பரிந்துரைகளை DIG கூர்ந்தாய்வு செய்து நவம்பர் முதல் தேதியில் DGP அலுவலகத்திற்கு பணிந்தனுப்பிடுவார்; அவைகள் அங்கு செய்முறைக்குட்பட்டு பரிசீலனைக்காக மாநில பதவி உயர்வு குழுமம் முன் வைக்கப்படும். மாநில பதவி உயர்வுக் குழுமத்தின் பரிந்துரைகள் இறுதியாக, பொருத்தமான நபர்களை 'C' பட்டியலில் சேர்த்திட வேண்டி ஏற்பு ஆணைகளுக்காக DGP முன் வைக்கப்படும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

## PSO 39 - ஆயுதக் காவல் படைப்பிரிவுகளில் ஆய்வாளர்கள் மற்றும் போர்ப்படை ஆய்வாளர்களுக்கு பதவி உயர்வு.–
**Promotion to the post of Inspectors, Inspectors-Adjutant in the Armed Police Battalions.-**

ஆயுதக் காவல் படைப் பிரிவுகளில் ஆய்வாளர்கள் மற்றும் போர்ப்படை ஆய்வாளர்கள் பதவிக்கு, த.நா. சிறப்புக் காவல் படைப் பிரிவுகளின் அனைத்து படைத்தலைவர்களும் அடங்கிய பதவி உயர்வு குழுமத்தினால் தயாரித்து அறுதி செய்யப்பட்ட பொருத்தமான தகுதிபெற்றவர்களின் பட்டியலிலிருந்து பதவி உயர்த்தப்படுவர். DGPயின் ஏற்புக்காக பட்டியல் DIG (ஆயுதக் காவல்) மூலம் பணிந்தனுப்பப்படும்.

## PSO 40 - மாவட்ட காவல் துறையில் சார்பு ஆய்வாளர்கள் பதவிக்கு பதவி உயர்வு.–
**Promotion to the Post of Sub-Inspectors in the District Police.-**

(1) D.I.G. அல்லது COP நேர்விற்கேற்ப ஆகியோரின் ஏற்புக்குட்பட்டு சரக பதவி உயர்வுக் குழுமத்தினால் தயாரிக்கப்பட்டு அறுதியாக்கப்பட்ட தகுதி பெற்ற பொருத்தமானவர்களின் பட்டியலிலிருந்து சார்பு ஆய்வாளர்கள் பதவிக்கு பதவி உயர்த்தப்படுவர்.

(2) தலைமைக் காவலர் கிரம நிலையிலிருந்து சார்பு ஆய்வாளர்கள் பதவி உயர்வுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட ஒரே ஒரு பட்டியல் இருக்கும்.

(3) S.I. நிலைக்கு பொருத்தம் எனக் கருதப்படும் தலைமைக் காவலர்கள் PTC சென்னையில் ஆறு வாரங்கள் பயிற்சிக்கு செல்ல வேண்டியிருக்கும். SP ஒவ்வொருவரும் தங்கள் மாவட்டத்தில் S.I. பதவி உயர்வுக்கு பொருத்தமான தலைமைக் காவலர்களின் பட்டியல் ஒன்றினைத் தயாரித்தல் வேண்டும். தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணித் தொகுதி விதிகள் 3 (c)யில் குறிப்பிடப்பெற்ற வரையறைகளை உள நிறைவு செய்திடும் நபர்கள் மட்டுமே பட்டியலில் சேர்க்கப்படல் வேண்டும்.

(4) HC யிலிருந்து S.I. பதவி உயர்விற்கு தேர்வு செய்திடும்போது இயன்ற வரை S.S.L.C. (அ) அதற்கு சமமாக படித்து தேறியவர்களை வரையறை கொள்ள வேண்டும். மிக அரிதான நேர்வுகளில் மட்டுமே S.S.L.C. வரை படிக்காதவர்களை தேர்ந்தெடுக்க முடியும்.

(5) SP அல்லது DC தாங்கள் தயாரித்த பட்டியலை நேர்வுக்கேற்ப தொடர்பான DIG அல்லது C.O.P. க்கு பணிந்தனுப்பிடுவர். இந்நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட சரக பதவி உயர்வுக் குழுமம் முதலில் எழுத்துத் தேர்வினை நடத்தி அதன் பின்னர் அதில் வெற்றி பெற்றவர்களுக்கு கவாத்து உள்ளிட்ட வாய்மொழித் தேர்வினை நடத்தி பயிற்சிக்காக நபர்களை தேர்வு செய்திடும். தேர்வு செய்யப்பட வேண்டிய தலைமைக் காவலர்களின் எண்ணிக்கை, S.I. காலியிட மொத்த எண்ணிக்கையினைப் பொறுத்து இருக்கும்.

(6) காவலர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியில் இருக்கும் தலைமைக் காவலர்களுக்கான தேர்வு நடத்துவது தொடர்பான உத்தரவுகள் மற்றும் முதுநிலை நிர்ணயித்தல் தொடர்பான நடைமுறைகள் முதலியன த.நா. காவல் சார்நிலைப் பணி விதிகள் விதி 18(e)யில் விதிக்கப்பட்டுள்ளன.

## PSO 41 - ஆயுதக் காவல் படைப்பிரிவுகளில் சார்பு ஆய்வாளர் பதவிக்கு பதவி உயர்வு.–
**Promotion to the post of Sub-Inspectors in Armed Police Battalions.-**

ஆயுதக் காவல் படைப் பிரிவுகளில் சார்பு ஆய்வாளர் பதவிக்கு தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப் பிரிவுகளின் அனைத்து படைத்தலைவர்களும் அடங்கிய பதவி உயர்வுக் குழுமம் தயாரித்து அறுதி செய்யப்பட்ட பொருத்தமான தகுதி பெற்றவர்களின் பட்டியலிலிருந்து பதவி உயர்த்தப்படுவர் மற்றும் DIG (ஆயுதப்படை) சென்னை அவர்களால் ஏற்பளிக்கப்படும்.

வ.ண.செல்வக்குமார், இ.கா. வணிகம்.



## PSO 42 - சேம ஆயுதப்படை மற்றும் மாவட்ட காவல் பிரிவுகளில் தலைமைக் காவலர் பதவிக்கு பதவி உயர்வு.–
**Promotion to the post of Head Constables in the District Police and Armed Reserve.-**

(1) காவலர் நிலை II லிருந்து தலைமைக் காவலர் பதவி உயர்வுக்கு தகுதி பெற தனி தேர்வு எதுவும் கிடையாது. உள்ளூர் காவல் நிலையங்களில் பேணப்பட்டு வரும் ஒருங்கிணைந்த முதுநிலைப் பட்டியலிலிருந்து நிலை I காவலர்கள் தாமாக HCயாக பதவி உயர்வு பெறுவர். நியமன முறை நேரடியாக ஆள் சேர்ப்பு அல்லது மூத்தவர் (அ) இளையவர் பதவி உயர்வு மூலம் பொருட்டல்லாது அனைத்து நிலை I காவலர்களும் அவர்களது முறையான பணி நியமன தேதியிலிருந்து முதுநிலை தொடங்கிடுவர்.

(2) சேம ஆயுதப் படைப் பிரிவுகளில் உள்ள பொது மற்றும் சிறப்பு பிரிவில் உள்ள அனைத்து காவலர்களும் முறையே தங்கள் பிரிவுகளில் தேர்வு எதுவுமின்றி முதுநிலைப்படி தலைமைக் காவலராக பதவி உயர்த்தப்பட வேண்டும். ஆயினும் ஓட்டுநர், கம்மியர் பதவிகளுக்கு ஓட்டுநர் தலைமைக் காவலர்களிடையே தனி தேர்வு நடத்தப்பட வேண்டும்.

(3) HC நிலையில் ஒரு திங்களுக்கு மேற்பட்ட அனைத்துக் காலியிடங்களும் முதுநிலை அடிப்படையில் நிரப்பப்படுதல் வேண்டும்.

## PSO 43 - மாவட்ட காவல் துறையில் காவலர் நிலை I க்கு பதவி உயர்வு.–
**Promotion to the post of Grade I Police Constables in the District Police.–**

(1) நிலை I காவலர் பதவி உயர்வுக்கு தகுதி பெற காவலர் நிலை II பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு தேர்வு ஒன்று நடைபெறும். தேர்வானது காவலர் நிலை II ன் இளவர்கள் மற்றும் மூதவர்களுக்கு பொதுவாக இருக்கும். மூத்தவர் மற்றும் இளையவர் பதவி உயர்வுக்குத் தனி பட்டியல் தயாரிக்கப்படும். இப்பட்டியல் மாவட்டத்தின் SP மற்றும் DSP அடங்கிய மாவட்ட பதவி உயர்வுக் குழுமத்தினால் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(2) மூத்தவர் மற்றும் இளையவருக்கு பதவி உயர்வுக்காக முறையே பேணப்பட்டு வரும் 'C' பட்டியலிலிருந்து மட்டுமே காலியிடங்கள் நிரப்பப்படுதல் வேண்டும்.

(3) மூத்தவர் மற்றும் இளையவர் காவலர் நிலை I க்கு பதவி உயர்வில் தகுதிகாண் பருவம் இல்லை.

(4) மேற்குறிப்பிட்ட மூத்தவர் அல்லது இளையவர் பதவி உயர்வு என்பது காவலர் நிலை II லிருந்து நிலை I க்கு பதவி உயர்வு செய்முறையானது கீழ்க்காண் தகுதிகளுக்குட்பட்டதாகும்:

**(a) மூத்தவர் பதவி உயர்வு :**

8ஆம் வகுப்பு முடித்த, 10 வருட பணியினை முடித்த நிலை II காவலர்கள்

**(b) இளையவர் பதவி உயர்வு:**

நிலை II காவலர்கள் பணிக்காலம் ஒரு பொருட்டன்று.

குறிப்பு : சில விலக்கான நேர்வுகளில் புறநகரங்களில் தொடர்பான SP அல்லது நகரங்களில் DC குறைந்தபட்ச 8 ஆம் வகுப்பு கல்வித் தகுதி கொண்டிராத, ஆனால் நிலை II காவலருக்கு முழுத் தகுதி கொண்டுள்ள, மூத்தவர் நிலை II காவலர்களை நியமனம் செய்திடலாம்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

## PSO 44 - சேம ஆயுதப்படையில் காவலர் நிலை I க்கு பதவி உயர்வு.–

### Promotion to the post of Grade I Police Constables in Armed Reserve.-

அனைத்து கிரம நிலை II காவலர்கள் ஏற்பளிக்கப்பட்ட தகுதிகாண் பருவத்தினர் காவலர் நிலை I பதவி உயர்வுக்கு தேர்வு எழுதிட அனுமதிக்கப்படுவர். ஆயினும் பொது மற்றும் சிறப்பு வகை காவலர்களுக்கு தனித் தேர்வு நடத்தப்படும் மற்றும் இரண்டு தனித் தனி 'C' பட்டியல் ஒன்று பொதுப் பிரிவுக்கும் மற்றொன்று சிறப்பு வகையினர்க்கும் தயாரிக்கப்படுதல் வேண்டும். இப்பட்டியல்கள் மாவட்டத்தின் SP மற்றும் DSP (AR), மாவட்டத்தில் DSP (AR) இல்லாதிருக்கிறவிடத்து வேறு ஏதேனும் உட்கோட்ட அலுவலர் கொண்ட மாவட்ட பதவி உயர்வுக் குழுமத்தினால் தயாரிக்கப்பட வேண்டும். இப்பட்டியல்களில் உள்ள நபர்கள் மட்டும் முறையே தங்கள் பிரிவுகளில் அதாவது பொது மற்றும் சிறப்பு பிரிவுகளில் "நாயக்ஸ்" மற்றும் காவலர் நிலை I க்கு பதவி உயர்த்தப்பட வேண்டும்.

## PSO 45 - ஏற்பளிக்கப்பட்ட பணி.–

### Approved Service.–

(1) ஊதிய உயர்வானது குறிப்பாக நிறுத்தப்பட்டாலன்றி வழக்கமாய் அனுமதிக்கப்படும்; காவல் அதிகாரி ஒருவரின் (i) நடத்தை நன்றாக இல்லை எனில் (அ) அவரது பணி உள நிறைவு கொள்ளத்தக்க வகையில் இல்லை எனில் மற்றும் (ii) குறிப்பிட்ட தவறுகைக்கு உறுதியான தண்டனையாக, ஊதிய உயர்வு நிறுத்தப்படலாம்.

(2) ஊதிய உயர்வினை நிறுத்துவதற்கு முன்னர், தொடர்பான அலுவலருக்கு குற்ற குறிப்பாணை ஒன்று கொடுத்து அவர் மீது தநா. காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு & மேல்முறையீடு) விதி 3(a) வின் கீழ் ஏன் நடவடிக்கை எடுத்தல் கூடாது என விளக்கம் கோருதல் வேண்டும். அவரது விளக்கம் கிடைக்கப் பெற்றவுடன், தண்டனை விதிப்பு எண்பிப்பு பற்றி ஆராய்ந்திட வேண்டும் மற்றும் முடிவுகள் பற்றிய விவர அறிக்கை ஒன்றும் மற்றும் அதற்கான அடிப்படைகளும் உத்தரவில் பதியப்படுதல் வேண்டும்

(3) அலுவலர் ஒருவரது ஊதியத்தில் ஊதிய உயர்வு ஒன்றினை நிறுத்தக் கருதுகிறவிடத்து, தண்டனை விதித்திடும் அதிகாரி உத்தரவு பிறப்பித்திடுவதற்கு முன்னர் அலுவலரது ஓய்வூதியத்தினைப் பாதிக்குமா என்றும் பாதிக்கும் எனில் எந்த அளவுக்கு என்பதனைப் பரிசீலனையில் கொள்ள வேண்டும், இறுதியாக ஊதிய உயர்வு நிறுத்துவதற்கு முடிவு செய்திட்டால், ஓய்வூதியத்தின் மீது தண்டனையின் செயல்விளைவு பரிசீலிக்கப்பட்டதென்று உத்தரவில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

(4) ஊதிய உயர்வினை நிறுத்த உத்தரவிடும் அதிகாரியானவர், ஊதிய உயர்வு நிறுத்த உத்தரவில்

(a) ஊதிய உயர்வு நிறுத்தப்படும் காலம்

(b) ஊதிய உயர்வு நிறுத்தப்பட்ட காலத்தில் விடுப்பு துய்ப்புக் காலம் தவிர்க்கப்படும் என்பதையும்; மற்றும்

(c) தள்ளி வைப்பதானது வருங்கால ஊதிய உயர்வுகளை தள்ளி வைக்கும் செயல் விளைவு கொண்டதா ? என்பதையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

(5) குறிப்பிடப் பெற்ற ஏற்பளிக்கப்பட்ட பணிக்காலம் முடிவுற்ற தேதியினைப் பின் தொடர்ந்து வரும் தேதி முதல் ஊதிய உயர்வு செல்லாற்றலுக்கு வரும்

(6) யாதொரு வகை விடுப்புக் காலத்தில் வந்தடையும் ஊதிய உயர்வுகள் அத்தகைய விடுப்பு காலம் முடிவு பெற்ற பின்னர் தான் வழங்க முடியும்.



(7) கூடுதல் படைப்பிரிவுகளில் (அ) சிறப்பு பிரிவுகளில் (அ) தற்காலிக பணியமைப்பில் மாவட்ட காவலுக்குரிய அதே கால சம்பள ஏற்ற முறையில் தற்காலிகமாக பணியாற்றும் காவலர்கள், நிரந்தர பணியமைப்பிற்கு மாற்றப்படும் போது அத்தகையப் படைப் பிரிவுகளின் தொடர் பணிக்காலத்தை ஊதிய உயர்வுக்கு கணக்கில் கொள்ள அனுமதிக்கப்படுவர்; ஆனால் பணியிடை முறிவு இருத்தலாகாது.

(8) மறு ஆள் சேர்ப்புக்கு பின்னர் காவலர்களின் முந்தைய பணிக்காலம் ஊதிய உயர்வுக்கு கணக்கில் கொள்ளப்பட மாட்டாது.

(9) இயலாமை காரணமாக ஓய்வு பெற்ற காவலர் அல்லது ஈடுகட்டும் ஓய்வூதியம் பெறும் காவலர் பின்னிட்டு மறுபடியும் பணியில் சேர்ந்தால் குடிமைப் பணி ஒழுங்காற்று பிரிவுக் கூறுகள் 514 & 519ன் கீழ் அவரது முந்தையப் பணி ஓய்வூதியத்திற்கு கணக்கில் கொள்ளப்பட்டால், அத்தகைய பணிக்காலத்தினை ஊதிய உயர்வுக்கும் கணக்கில் கொள்ளலாம்.

(10) இரண்டாம் உலகப் போரில் ஒரு வருடத்திற்கு குறையாத ஆக்கப்பூர்வமான போர்ப் பணிக்காலம் கொண்ட நபர் அதிக தொடக்க ஊதியம் பெற உரிமையுடையவராவார்.

Scanned by CamScanner

# அத்தியாயம் - 8

## வெகுமதிகள்
## REWARDS

### PSO 46 - வெகுமதிகள் – இந்தியாவில் உள்ள இதர மாநிலங்களின் காவல்துறையினர் உள்பட சார்நிலை காவல் அலுவலர்கள் Rewards - Subordinate Police Officers including Policemen of other States in India

(1) (a) ஆணை எண் 49-ல் சொல்லப்பட்ட அலுவலர்களின் ஒப்பளிப்பு அதிகாரங்களுக்குட்பட்ட பணப் பரிசுகள் சிறப்புத் திறமைப் பணிக்கென்று ஆனால் கைதுக்குப் பின்னரான ஏற்புரை (அ) ஒப்புதலுரை பெறும் பணிகளன்று; காவலர்கள், தலைமைக் காவலர்கள், காவல் உதவி ஆய்வாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட வேண்டும். திறமைப் பணிக்கென்று பிற வகைகளில், இயலுமளவிற்கு HC, SI, RSI களின் நேர்வில் பணக்கொடைகளை துரிதப் பதவி உயர்வு மூலம் வெகுமதியளிக்க வேண்டும்

(b) SI பதவியும் அதற்குக் கீழ்ப்பட்ட பதவியும் உள்ள தநா. சிறப்புக் காவல் பணியாளர் தொகுதிக்கும், சிறப்புத் திறமைப் பணிக்காகப் பணப் பரிசுகள் அளிக்கலாம். ஆனால் யாதொரு தலைசிறந்த திறமையும் வெளியாகாத பணிக்காக அளிக்கலாகாது. அவர்கள் விஷயத்தில்கூட, இயன்றபோதெல்லாம், பிற வகைகளில் உதாரணமாக பணக்கொடைகளை துரிதப் பதவி உயர்வு மூலம், வெகுமதியளிக்க வேண்டும்.

(c) விரல் ரேகைப் பதிவு கழகம் சென்னையில் பணியாற்றும் அரசிதழ் பதிவுறா பணியாளர்களுக்கும் ஒரு இலக்க விரல் ரேகைப் பதிவுப் பிரிவுகளில் பணியாற்றும் அலுவலர்கள் உட்பட மற்றும் மாவட்டங்களில் நிழற்படப் பிரிவுகளில் உள்ள புகைப்பட வல்லுநர்கள் மற்றும் காவல் வானொலிப் பிரிவு அரசிதழ் பதிவிலா தொழில் நுட்பப் பணியாளர்களுக்கும், அவர்கள் தங்கள் தனிப்பட்ட தன் முயற்சி மற்றும் புத்தி கூர்மைக்காகவும் PSO 47ல் குறிப்பிடப்பெற்ற பண வரம்புகளுக்குட்பட்டு, சிறப்பு நேர்வுகளில் DGP அவர்களால் பண வெகுமதி வழங்கப்படலாம்.

(d) விரல் ரேகைப் பதிவுக் கூடத்தில் உள்ள அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களுக்கு காவல் துறையில் உள்ள அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள் போன்று பண வெகுமதி வழங்கப்படாது.

(2) அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களைத் தவிர மற்ற அனைத்து காவல் அலுவலர்களும் பின்வரும் இனங்களில் பணக்கொடைகளை பெற்றுக்கொள்ளலாம்:-

(a) அரசினரால் அளிக்கப்படும் பரிசுகள்.

(b) பரிசுகள் கொடுக்க வேண்டியது சம்பந்தப்பட்ட ஆட்களுக்கா, அல்லது ஒரு காவல் நிதியத்திற்கா அல்லது ஒவ்வொன்றுக்கும் ஒரு பகுதி மட்டுமா என்று நேர்விற்கேற்ப காவல் ஆணையர் (அ) காவல் துறை துணைத் தலைவர் இடும் உத்தரவுகளுக்குட்பட்டு தனியார்களால் அளிக்கப்படும் பரிசுகள்.

இதன்படி. D.C நகரங்களில் மற்றும் மாவட்டங்களில் SP மற்றும் சென்னையில் C.I.D. பரிசுப் பணத்தை முதன் முதல் வாங்கி, அதிகாரமுள்ள அலுவலரின் ஒப்பளிப்புடன் சம்பந்தப்பட்ட பயன் அடைபவர்களுக்குப் பிற்பாடு கொடுப்பது அவசியமாகும். ஆகையால். பெற்ற தொகைகளை முழுவதுமாக கருவூலத்தில் செலுத்திவிட்டு, கொடுக்கும் காலத்தில் மறுபடியும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

(c) சென்னை சூதாட்டச் சட்டம், 1930-ன் 11-அ பிரிவின் கீழும், சென்னை மாநகர காவல் சட்டம், 1888-ன் 50-வது பிரிவின் கீழும் நீதிமன்றங்களால் அளிக்கப்படும் பரிசுகள்.



(d) அபின் மற்றும் அபாயகரமான மருந்துகள் சட்ட வழக்குகளில் அளிக்கப்படும் பரிசுகள்.

(3) உதவி ஆய்வாளர் பதவியிலும் அதற்குக் கீழ்ப்பட்ட பதவியிலும் உள்ள காவல் அலுவலர்கள் அடியிற்கண்ட இனங்களிலும் பரிசுகளை ஏற்றுக்கொள்ளலாம்:-

(a) சுங்கத்துறை, உப்புத்துறை, ஆயத்துறை, இவைகளால் அளிக்கப்படும் பரிசுகள்; செலுத்தப்படும் போது அவர்கள் பதவி உயர்வு அளிக்கப்பட்டிருந்தாலும்

(b) இந்தியாவில் உள்ள இதர மாநிலங்களால் அளிக்கப்படும் பரிசுகள்.

(4) விசாரணைக்குக் கொண்டு வரப்பட்ட வழக்குகளையொட்டியுள்ள பரிசுகளை குற்றத் தீர்ப்புகளுக்குப் பின்னர் கூடிய விரைவில் கொடுத்து விடவேண்டும். ஒப்பளிக்கும் அதிகாரிக்கு அனுப்பப்படும் பரிந்துரைப் பட்டியலைத் தொடக்கத்திலிருந்து கட்டாயமாக இரகசியமானதென்று முறைப்படுத்தவேண்டும். அதில் விதிக்கப்பட்ட தண்டனையைப்பற்றியும், காவலர் நடத்தையைக் குறித்து நீதிமன்றத்தால் செய்யப்பட்ட யாதொரு கருத்துக் குறிப்புகளைப் பற்றியும், தகவல் கண்டிருக்க வேண்டும்; மேலும், அதில் பங்குபெற்ற ஒவ்வொரு நபரின் செயலையும் அதைச் சிறப்பாகப் புகழத்தக்க தன்மைக்கு அடிப்படையான காரணங்களுடன் விவரிக்கவேண்டும்.

(5) C.I.D. சிறப்புப் பிரிவைச் சேர்ந்த உதவியாளர்கள், ஆய்வாளர்கள், S.I. மற்றும் H.C. மற்றும் மாவட்ட சிறப்பு பிரிவினர்க்கு, அவர்கள் கீழ்க்காண் தாய்மொழி அல்லாத மண்டல மொழிகளில் தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, உருது, குஜராத்தி, மராத்தி மற்றும் பெங்காலியில் வல்லமை தேர்வு தேர்ச்சி பெற்றமைக்கு வெகுமதி வழங்கிடலாம். D.I.G. (C.I.D) (நுண்ணறிவு) சென்னை இம்மொழித் தேர்வுகளை நடத்திடுவார்.

(6) PSO 42ல் குறிப்பிடப்பெற்ற அதிகாரிகள் பண வெகுமதிக்கான தங்கள் ஒப்பளிப்பு அதிகாரங்களுக்குள் PSO 46 (1) (a)வில் குறிப்பிடப்பெற்ற காவல் அதிகாரிகளுக்கு நாடுகளுக்கிடையிலான (அ) தேசிய அளவிலான (அ) மண்டல அளவிலான காவல் துறை விளையாட்டுப் போட்டிகளில் முதல் (அ) இரண்டாம் இடம் பெற்றமைக்கு பண வெகுமதி வழங்கிடலாம்.

### PSO 47 - பரிசுகள்–அலுவலர்களின் ஒப்பளிப்பு அதிகாரங்கள்.– Rewards – Sanctioning powers of officers.-

(1) காவல் அலுவலர்களுக்கு ஏதேனுமொரு சூழ்நிலையில் காவல் துறை இயக்குநரும், காவல் ஆணையரும் ரூ.500 வரையறை வரைக்கும், காவல்துறை துணைத் தலைவர் ரூ.300 வரைக்கும், காவல் கண்காணிப்பாளர்கள், தமிழ்நாடு சிறப்பு காவல் படைத்தளவாய், ஆகியோர் ரூ.150 வரைக்கும் பரிசுகள் அனுமதிக்கலாம். காவல் துறை இயக்குநர், அல்லது காவல் ஆணையர், காவல் துறைத் துணைத் தலைவர் எவரேனுமொரு காவல் அலுவலருக்கு அனுமதிக்கத்தக்க உச்சப்பரிசு ரூ.250-க்கு அதிகப்படக்கூடாது. காவல் கண்காணிப்பாளர் எவரேனுமொரு காவல் அலுவலருக்கு அனுமதிக்கத்தக்க உச்சப்பரிசு ரூ.75-க்கு அதிகப்படக் கூடாது.

(2) காவல் உட்கோட்ட அலுவலர்கள் (அல்லது அவர்களுக்கு நேரிணையான நிலை, அலுவலர்கள்) உதவி ஆய்வாளர்களுக்கும், RSI களுக்கும் தலைமைக் காவலர்களுக்கும், காவலர்களுக்கும் ஏதேனுமொரு சூழ்நிலையில் ரூ.25 வரையறை வரைக்கும் பரிசுகளை அனுமதிக்கலாம். ஒரு காவல் உட்கோட்ட அலுவலர் அனுமதிக்கத்தக்க உச்சப்பரிசு ஒரு உதவி ஆய்வாளர் & RSI விஷயத்தில் ரூ.10-க்கும் ஒரு தலைமைக் காவலர் அல்லது ஒரு காவலர் விஷயத்தில் ரூ.5-க்கும் அதிகப்படக்கூடாது.

(3) C.I.D. சிறப்புப் பிரிவைச் சேர்ந்த உதவியாளர்கள், ஆய்வாளர்கள், S.I. மற்றும் H.C. மற்றும் மாவட்ட சிறப்பு பிரிவினர்க்கு, அவர்கள் கீழ்க்காண் தாய்மொழி அல்லாத மண்டல மொழிகளில் தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, உருது, குஜராத்தி, மராத்தி மற்றும் பெங்காலியில் வல்லமை தேர்வு தேர்ச்சி பெற்றமைக்கு வெகுமதி ரூ.200/- DGP ஒப்பளிக்கலாம் மற்றும் வருடாந்திர மண்டல மொழித் தேர்வில் தேர்ச்சி பெற்று வல்லமையினை பேணிக் காப்போருக்கு ரூ.100/- வழங்கிடலாம்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

குறிப்பு:- யாதொரு நபரும் அவரின் / அவளின் தாய்மொழி அல்லாத மொழிகளில் இரண்டிற்கு மேற்பட்டவைகளுக்காக வெகுமதியினை உரிமை கோர முடியாது.

4 (a) அபின் வழக்குகளில் DGP பண வெகுமதியினை DSP நிலைக்கு கீழ் உள்ள அதிகாரிகளுக்கு கீழ்க் குறிப்பிட்டவாறு வழங்கிடுவார்.

| | Categories of Police personnel | Monetary ceiling on rewards |
|---|---|---|
| 1. | Deputy Superintendent of Police Categories 1, 2 and 3 | Rs. 2,500 |
| 2. | Inspectors (including Inspectors of Armed Police Battalions) and Reserve Inspectors | Rs. 1,500 |
| 3. | Sub-Inspectors and Reserve Sub-Inspectors, (including Sub-Inspectors in Armed Police Battalions) | Rs. 1,000 |
| 4. | Head Constables (both in local and Armed Reserve) including Havildars in Armed Police Bus) and Police Constables, Grade I and II including Naiks, Lance Naiks, Police Constables in the Armed Reserve and Armed Police Battalions. | Rs. 750 |

(b) பண வெகுமதியின் மொத்த மதிப்பானது அத்தகைய நேர்வில், கைப்பற்றப்பட்ட அபின் மதிப்புடன் நடைமுறையில் உள்ள தண்டத் தொகை சேர்த்து தொகையை விட அதிகமாக இருத்தலாகாது மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்களின் மதிப்புடன் வசூலிக்கப்பட்ட தண்டத் தொகையினை சேர்த்து தொகையினை விட குறைவாக இருத்தலாகாது. கச்சா அபின் (பச்சை அபின்) மற்றும் அபின் கலவை கைப்பற்றுகைக்கு அல்லது குற்றவாளியின் குற்றத் தீர்ப்புக்கு பங்களிப்பு செய்த பிற துறை அலுவலர்களுக்கு மற்றும் தகவலாளர்களுக்கு IG தான் பொருத்தமெனக் கருதும் அத்தகைய வீதத்தில் பண வெகுமதிக்கு ஒப்பளிப்பு வழங்கிடலாம்.

(c) அடியிற்கண்ட அலுவலர்கள் ஒவ்வொருவரும் எதிராகக் குறித்துள்ள வரையறை வரைக்கும் பண வெகுமதிகளை ஏதேனுமொரு சூழ்நிலையில் ஒப்பளிப்பு வழங்கிடலாம்.

| | |
|---|---|
| Inspector-General of Police and Commissioner of Police | Rs. 500 |
| Deputy Inspector General of Police | Rs. 300 |
| Superintendent of Police | Rs. 150 |
| Sub-divisional Officers | Rs. 50 |

காவல் ஆணையர்/காவல் துறை துணைத் தலைவர் ஒரு வழக்கில் யாதொரு காவல் அலுவலருக்கு அனுமதிக்கத்தக்க உச்சப் பரிசு ரூ.250-க்கு அதிகப்படக்கூடாது. ஒரு காவல் கண்காணிப்பாளர் ஒரு வழக்கில் யாதொரு காவல் அலுவலருக்கு அனுமதிக்கத்தக்க உச்சப்பரிசு ரூ.75-க்கு அதிகப்படக்கூடாது. காவல் உட்கோட்ட அலுவலர்கள் அல்லது அவர்கள் நிலைக்கு நேரிணையான அலுவலர்கள், உதவி ஆய்வாளர் நிலைக்கும், அதற்குக் கீழ்ப்பட்டும் உள்ள காவல் கீழ்நிலை பணியாளர்களுக்கு மட்டும், பரிசுகள் அளிக்கலாம். ஒரு உட்கோட்ட அலுவலர் அனுமதிக்கத்தக்க உச்சப்பரிசு, ஒரு உதவி ஆய்வாளர் விஷயத்தில் ரூ.10-க்கும், ஒரு தலைமைக் காவலர் அல்லது ஒரு காவலர் விஷயத்தில் ரூ.5-க்கும் அதிகப்படக்கூடாது.



## PSO 48 - தப்பியோடிய கிளைச்சிறைச்சாலை கைதியை மீண்டும் பிடித்தல்.– Recapture of escaped sub-jail prisoner.-

ஒரு கிளைச் சிறைச்சாலையிலிருந்து தப்பியோடின கைதி ஒருவரை மறுபடியும் பிடித்ததற்காக ஒரு காவல் அலுவலருக்கு பரிசு காவல் துறையால் கொடுபடக் கூடியதாகும்.

## PSO 49 - பிற துறைகளால் பரிசளிப்பு.– Rewards by other departments.-

(1) தமிழ்நாடு மின்வாரியம் உள்ளிட்ட பிற துறைகளின் அலுவலர்களால் காவல் அலுவலர்களுக்குக் கொடுக்கப்படும் பரிசுகளை, அவர்கள், நேர்விற்கேற்ப காவல் ஆணையர் அல்லது கண்காணிப்பாளருக்கு விஷயத்தைத் தெரிவித்துவிட்டு அவர்களுக்கு நேரில் கொடுத்து விடலாம்.

(2) உப்பு வருவாய்த் துறை ஆட்சியர் அல்லது ஆயத்துறை ஆணையர் அளிக்கும் பரிசுகள் உதவி ஆட்சியரால் காவல் ஆய்வாளருக்குக் கொடுக்கப்படும்; ஆய்வாளர் அவைகளைக் கொடுத்துவிட்டு, விவரங்களை அப்பணியாளரின் பணிப்பட்டியலிலும் சிறிய பணிப்பதிவேட்டிலும் குறிப்பதற்காக கண்காணிப்பாளருக்கு அனுப்ப வேண்டும்.

குறிப்பு:- மேற்படி இனங்களில் கண்ட பரிசுத் தொகைகளை, காவல் கண்காணிப்பாளர் ஒரு மாவட்ட உத்தரவை வெளியிட்ட பின்புதான் கொடுக்க வேண்டும்.

(3) மாவட்ட சிறைச்சாலைகளினின்றும் மத்திய சிறைச்சாலைகளினின்றும் தப்பியோடின கைதிகளை மீண்டும் பிடித்ததற்காக பரிசுகோரி எழுதியனுப்பப்படும் பட்டியல்கள், சிறைத்துறைத் தலைவருக்கு அனுப்பப்படுவதற்கென்று, சம்பந்தப்பட்ட சிறைச்சாலைக் கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படும். அவைகளில், பரிந்துரை செய்யப்படும் அலுவலர் பரிசுக்குத் தகுதியுள்ளவரென்று தெளிவாகக் கண்டிருக்க வேண்டும்.

## PSO 50 - உயிர், சொத்து, இவைகளைக் காப்பாற்றுதல், தீயணைத்தல், முதலியனவற்றிற்காகப் பரிசுகள் Rewards for saving life and property and putting out fires, etc.-

உயிரைத் தீயினின்றோ மற்றபடியோ காப்பாற்றினதற்காகப் பரிசுகள் சாதாரணமாக ஆட்சியரால் வழங்கப்படுகின்றன. காவல் துறை இயக்குநர், காவல் கீழ்நிலைப் பணியாளருக்கு உயிர், சொத்து இவைகளை விடுவித்ததற்காகவும், தீ முதலியவற்றை அணைத்ததற்காகவும், ஒவ்வொரு விஷயத்திலும் ரூ.50 உச்சவரம்புக்குட்பட்டு, பரிசுகளை அனுமதிக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்.

## PSO 51 - விட்டோடிகளைப் பிடிப்பதற்குப் பரிசுகள்.– Rewards for the capture of deserters.-

படையை விட்டோடியவர்களைப் பிடித்ததற்காக இராணுவ அதிகாரிகள் பரிசுகள் அளிக்கின்றனர்; ஆனால், அப்பரிசுகள், விட்டோடியவர் சரணடைதல், அல்லது அவருக்கும் பிடித்தவருக்கும் இடையே வஞ்சக ஒப்பந்தம் இருத்தல், ஆகிய விஷயங்களில் கொடுக்கப்படமாட்டாது.

## PSO 52 - இந்தியாவில் பிற மாநிலங்களால் அளிக்கப்படும் பரிசுகள்.– Rewards offered by other states in India -

குடியரசுத் தலைவரின் இசைவின்றி, அயல் நாட்டரசிடமிருந்து எந்தவிதமான நன்கொடையையாவது, சம்பளத்தையாவது, அதன்கீழ் எந்தப் பதவியையாவது ஏற்றுக்கொள்ளலாகாதென்று அரசியல் அமைப்பின்படி தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் பிற மாநிலங்களால் அல்லது அவைகளால் அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர்களால் அளிக்கப்படும் பரிசுகளை ஏற்றுக்கொள்வதற்கு, ஏதேனுமொரு சூழ்நிலையில், ரூ.500 வரையறை வரைக்கும் காவல் துறை இயக்குநரும், காவல் ஆணையரும், ரூ.200 வரையறை வரைக்கும் காவல் துறை துணைத் தலைவரும், ரூ.50 வரையறை வரைக்கும் காவல் கண்காணிப்பாளரும், அனுமதியளிக்கலாம்;

Scanned by CamScanner

எனினும், அது எந்த ஒரு காவல் அலுவலருக்காவது இவ்வதிகாரிகள் வழங்கத்தக்க உச்சவரம்பு முறையே ரூ.250, ரூ.50, ரூ.25 ஆகியவற்றிற்கு மேற்படலாகாது என்ற நிபந்தனைக்குட்பட்டதாகும்; இதர இனங்களில் அரசாங்கத்தின்முன் ஒப்பளிப்புடன் அனுமதியளிக்கலாம்.

## PSO 53 - வெளியீடு.– Publication.-

அரசாங்கத்தாலும் காவல் துறை இயக்குநராலும் அளிக்கப்படும் பரிசுகள் காவல் துறை அரசிதழில் வெளியிடப்படும். காவல் ஆணையரும், காவல் துறை துணைத் தலைவர்களும் காவல் கண்காணிப்பாளர்களும், அளிக்கும் பரிசுகள் காவல் குற்ற நடப்பு ஏட்டில் வெளியிடப்படும்.

## PSO 54 - வெகுமதிகளின் வடிவம்.– Form of rewards.-

பொதுவாக, பரிசுகள், பணம் அல்லது உடைகள் அல்லது நகைகளின் வடிவத்தில் இருக்கலாம். ஆனால் தனிப்பட்ட நேர்வுகளில் அரசாங்கத்தின் முன் அங்கீகாரத்துடன் பதக்கங்களை (Medals) -யும் கொடுக்கலாம்.

## PSO 55 - தனிப்பட்ட நபர்களுக்குப் பரிசுகள்.– Rewards to private persons.-

(1) குற்றத்தைக் கண்டு பிடிப்பதற்கு வழிகாட்டும் செய்திக்காகவும், குற்றவாளிகளைப் பிடிப்பதற்காகவும் தனிப்பட்ட நபர்களுக்கு அடியிற்கண்ட அதிகாரிகள் ஏதேனுமொரு சூழ்நிலையில் அவர்களுக்கு எதிராகக் காட்டியுள்ள வரையறைகளுக்குட்பட்ட பரிசுகளை ஒப்பளிப்பளித்து வழங்கலாம்:-

| | | ரூ. |
|---|---|---|
| D.G.P. | — | 500 |
| COP | — | 500 |
| D.I.G. | — | 300 |
| மாவட்ட ஆட்சியர் | — | 200 |
| S.P. | — | 150 |

(2) மாநில அரசினர் காவல் துறைக்கு அல்லது அரசினர் குற்றவியல் நிர்வாகத் துறைக்கு ஒரு தனிப்பட்ட நபர் செய்த சிறப்புப் பணியின் காரணமாக, அவருக்கோ அல்லது அவரது வாரிசுக்கோ அல்லது விதவைக்கோ ரூ.500-க்கு மேற்படாத மதிப்புகொண்ட ஒரு அரசாங்க நிலத்தை நன்கொடையாகக் கொடுக்கலாம் அல்லது அவருக்கோ அல்லது அவரது வாரிசுக்கோ அல்லது விதவைக்கோ, ஒராண்டுக்கு ரூ.15-க்கு அதிகப்படாத ஓர் நிலவருவாய் ஒப்படையை ஒரு ஆயுள் காலத்துக்காவது இருபத்தைந்து ஆண்டு காலத்துக்காவது, இவற்றில் நீண்டிருக்கக் கூடிய எந்தக் கால அளவுக்காகிலும் அளிக்கலாம். அந்த நன்கொடையை சிறிதளவு ஒரு நிலக்கொடை வடிவத்திலும் சிறிதளவு அந்த நிலத்தின் அல்லது மற்றொரு நிலத்தின் வருவாய் ஒப்படை வடிவத்திலும், வழங்கலாம்; ஆனால் நன்கொடையின் மொத்தக் கணித மதிப்பு ரூ.500-க்கு மேற்படலாகாது. அந்த நன்கொடையானது, மாவட்ட ஆட்சியரின் அனுமதியின்றி அது உரிமை மாற்றம் செய்யப்படமாட்டாதென்ற நிபந்தனையின் மேல அளிக்கப்படும்; மேலும், அது நிலவருவாய் ஒப்படை வடிவத்தில் இருக்கையில் அது தேசபக்தி, நன்னடத்தை எனும் நிபந்தனைக்குட்பட்டிருக்கும்.

**குறிப்பு.**- கிராம அதிகாரிகளையும் கிராமப் பணியாளர்களையும் "தனிப்பட்ட நபர்கள்" என்று கருதவேண்டும். பரிசளிப்புக்காகக் கிராம அதிகாரிகள் அல்லாத பிறத் துறைகளின் அலுவலர்களைத் தனிப்பட்ட நபர்கள் என்று கருதலாகாது. அத்தகைய அலுவலர்களுக்கு ஒரு பரிசைக் கொடுப்பதற்கு முன்பு, அவர்களுடைய வட்டார துறை மேலதிகாரிகளைக் கலந்தாலோசிக்க வேண்டும்.



(3) அபின் வழக்குகளில் காவல் துறைத் தலைவர் வரையறை இல்லாமல், ஆனால், பறிமுதலான அபினின் மதிப்போடு அந்த குறிப்பிட்ட வழக்கில் ஏதேனும் வசூலான அபராதத் தொகையையும் சேர்த்து மொத்தத்துக்கு மேற்படாத, பரிசுகளை வழங்க அதிகாரம் பெற்றிருக்கிறார். அடியிற்கண்ட அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் எதிராகக் காட்டியுள்ள வரையறைக்குட்பட்டு ஏதேனுமொரு சூழ்நிலையில் தனிப்பட்ட நபர்கள் அபின் வழக்குகளில் செய்த திறமைப் பணிக்காக அவர்களுக்குப் பரிசுகளை அனுமதித்துக் கொடுக்கலாம்:-

| | | ரூ. |
|---|---|---|
| COP | — | 500 |
| D.I.G. | — | 300 |
| SP | — | 150 |

## PSO 56 - சான்றுகள், நன்றிக் கடிதங்கள், இவற்றை வழங்கல்.– Grant of Certificates and Letters of Thanks.-

(1) பணிபுரிந்த பொதுப்பணியாளர்கள் அல்லது தனிப்பட்ட நபர்களுக்கு மாவட்ட ஆட்சியர்கள் தங்களது நன்றியைத் தெரிவிக்கும் வழக்க முறையான நடவடிக்கைகளை வெளியிட அனுமதி பெற்றுள்ளனர்; அத்தகைய நடவடிக்கைகள் மாவட்ட அரசிதழில் வெளியிடப்படும். பொதுவாக, இந் நடவடிக்கைகளின் நகல் ஒன்றை சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அனுப்புவது போதுமானது; எனினும், ஆட்சியர் தனிப்பட்ட நேர்வுகள் வேண்டுறுத்தினால் செய்யப்பட்ட சேவைக்கு நன்றி தெரிவிப்பதாக தோற் காகிதத்தின் மேல் பெரிய எழுத்துக்களில் தயாரிக்கப்பட்ட சான்றுகளை வழங்கலாம். அச்சடித்த சான்றுகளை வழங்குதல் விலக்கப்பட்டிருக்கிறது. தோற் தாள்களை விண்ணப்பத்தின்மேல் எழுதுபொருள் அச்சு இயக்குநரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(2) மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் தனிப்பட்ட நபர்களுக்கும் மற்றவர்களுக்கும் பணப் பரிசுகள் பொருத்தமில்லாத தருணங்களில் அவர்கள் காவல் துறைக்குச் செய்த சேவைக்கு நன்றி தெரிவித்து நன்றிக் கடிதங்களையாவது தனிப்பட்ட நேர்வுகளில் தோற் காகிதத்தில் பெரிய எழுத்துக்களில் தயாரிக்கப்பெற்ற சான்றுகளையாவது வழங்கலாம்.

## PSO 57 - தனிப்பட்ட நபர்களுக்குச் சான்றுகள்–அரசிதழ் பதிவு பெறாத காவல் அலுவலர்கள் கொடுப்பது தடை விதிக்கப்பட்டிருக்கிறது.– Certificates to private individuals Granted by Non-Gazetted Police Officers-Prohibited.-

அரசிதழ் பதிவு பெறாத நிலையிலுள்ள காவல் அலுவலர்கள், தனிப்பட்ட நபர்களுக்கும் மற்றவர்களுக்கும் காவல் துறைக்கு செய்த யாதொரு பணிவகைகளுக்காக, தங்களுடைய பதவி முறைமையில் சான்றுகளிப்பதினின்று தடை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

## PSO 58 - புகழுக்குரிய பணிப் பதிவுகளும், திறமைப் பணிப் பதிவுகளும்.– Meritorious Service Entries and Good Service Entries.-

(1) புகழுக்குரிய பணிப்பதிவுகள் சிறப்பு அங்கீகாரத்துக்குத் தகுதி வாய்ந்த பிரசித்தமான திறமைப் பணிக்காக அளிக்கப்படும். காவல் துறை இயக்குநரால் அனுமதிக்கப்படும் கொடைகளான இவற்றிற்கு காவல் ஆய்வாளர்கள், சேமப்படை ஆய்வாளர்கள் மற்றும் தநா.சிறப்புக் காவல் படை ஆய்வாளர்கள் மட்டுமே தகுதியுடையவராவர்.

(2) சிறந்த துப்பறிதல், திறன் வெளிப்பாடு அல்லது சிறப்பு அங்கீகாரத்துக்குரிய பணிக்காக திறமைப் பணிப்பதிவுகள் அளிக்கப்படும்; சார்பு ஆய்வாளர்கள், தலைமைச் காவலர்கள் மற்றும் காவலர்களுக்கு உட்கோட்ட அலுவலரால் அல்லது அவருக்கு நேரிணையான நிலையில் உள்ள அதிகாரியால் திறமைப் பணிப் பதிவுகள் வழங்கப்படும், மற்றும் அனைத்து சார்நிலை காவல் அதிகாரிகளுக்கு கண்காணிப்பாளரால் வழங்கப்படும்.

Scanned by CamScanner

(3) ஆய்வாளர்கள், சேமப்படை ஆய்வாளர்கள் மற்றும் த.நா. சிறப்பு காவல் படை ஆய்வாளர்கள் ஆகியோருக்கு அளிக்கப்படும் புகழுக்குரிய பணிப்பதிவுகளும் திறமைப் பணிப்பதிவுகளும் அவர்களுடைய பணிப்பதிவேடுகளில் பதிவு செய்யப்படும்; சார்நிலைப்பணியாளர்களுக்கு அளிக்கப்படும் திறமைப் பணிப்பதிவுகள், அவர்களுடைய பணிப்பதிவேடுகள் அல்லது பணிப்பட்டியல்களிலும் சிறிய பணிப்பதிவேடுகளிலும் ஆக இரண்டிலும் பதிவுசெய்யப்படும். ஒவ்வொரு விஷயத்திலும் ஒரு மாவட்ட உத்தரவு வெளியாகும்.

## PSO 59 - குடியரசுத் தலைவரின் காவல் மற்றும் தீயணைப்புப் படை பதக்கம் மற்றும் காவல் பதக்கம்.-

## The President's Police and Fire Services Medal- and Police Medal.-

(1) குடியரசுத் தலைவரின் காவல் தீயணைப்புப்படை பதக்கமும் காவல் பதக்கமும், புகழத்தக்க பணி அல்லது பராக்கிரமம், கடமையில் ஒப்பற்ற ஆர்வம், ஆகியவற்றின் காரணமாக காவல் படைகளையும் சீரமைக்கப்பட்ட தீயணைப்புப் படைகளையும் சேர்ந்த உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும். பதக்கங்களை அளிப்பதற்கான சிபாரிசுகளை அவற்றிற்குக் காரணமாயிருந்த செயல்கள் நடந்தபின் உடனடியாக, இரகசியம் என்று குறித்து காவல் துறை துணைத்தலைவர் மூலம் காவல் துறை உதவித் தலைவருக்கு அனுப்பிவைக்கவேண்டும்; மேலும் அத்தகைய விஷயங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் எழுத்துருவிலான கருத்தை வாங்கி அனுப்பவேண்டும்.

(2) இதர விஷயங்களில் கொடைகள், ஆண்டுக்கு இருமுறை (ஜனவரி 26-ம் தேதி) குடியரசு நாளும் (ஆகஸ்ட் 15-ம் தேதி) சுதந்திர நாளும் கொண்டாடப்படும் சமயத்தில் கொடுக்கப்படும். அரசிடம் செப்டம்பர் 10ம் தேதி மற்றும் ஏப்ரல் 1ம் தேதியில் நிலுவையிலுள்ள கொடைகளுக்கான பரிந்துரைகள் அரசிற்கு ஜூலை 6ம் தேதிக்குள்ளும் மற்றும் பிப்ரவரி 15-ம் தேதிக்குள் முறையே ஒவ்வொரு ஆண்டும் இரகசியம் என்று குறித்து காவல்துறை துணைத் தலைவர் மூலம் காவல் துறை உதவித் தலைவருக்கு அனுப்பி வைக்க வேண்டும். பரிந்துரை செய்யப்பெற்ற நபர்களின் முழுப்பெயர்கள், அவர்களின் பதவி, காவல் துறையில் அவர்கள் பணிபுரிந்த ஆண்டுகளின் எண்ணிக்கை, அவர்களது முந்திய திறமைப்பணி இவைகளைப்பற்றியவையும், எந்தக் குறிப்பான செயல் அல்லது செயல்களுக்காகப் பதக்கக் கொடை பரிந்துரை செய்யப்படுகிறதோ அவைகளைப் பற்றியவையுமான முழு விவரங்களை, குறிப்பிட்ட நிகழ்ச்சித் தேதிகளுடன் குறிப்பிட வேண்டும்; அன்றியும், பரிந்துரை செய்யப்பெற்றவர்கள் எப்போதேனும் ஒரு நீதிமன்றத்தின் கண்டனத்துக்குள்ளானவர்களா, அல்லது சட்ட நீதிமன்றங்களின் கண்டன நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவர்களா என்றும் கூற வேண்டும்.

(3) பல்வேறு பிரிவுகளின் அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்களைப் பொறுத்து அவற்றின் பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றவுடன் DGP அலுவலகத்தில் அவர்களின் தகுதி குறித்து கூர்ந்தாய்வு செய்யப்பட்டு D.G.P முன் வைக்கப்படும்; அவர் அரசுக்கு இறுதி பரிந்துரை செய்திடுவார். D.I.G கிரம நிலைக்கு கீழான அரசிதழ் பதிவு அலுவலர்களைப் பொறுத்து, பதக்கத்திற்கு தகுதியான முதுநிலை அலுவலர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு மாநில பதவி உயர்வுக் குழுமத்தின் முன் வைக்கப்படும். குழுமம் தான் பொருத்தமெனக் கருதும் பரிந்துரைகளுடன் DGP முன் வைத்திடும்; அவர் அரசுக்கு இறுதி பரிந்துரை செய்திடுவார். ADGP மற்றும் D.I.G. கிரம நிலையிலான அதிகாரிகள் நேர்வில் DGPயின் பரிந்துரை முடிவுக்காக தகுதிபெற்ற அத்தகையவர்களின் பட்டியல் DGP முன் வைக்கப்படும்.

ஒவ்வொரு பரிந்துரை குறித்தும் கீழ்க்காண் படிவத்தின் படி சான்று ஒன்றைக் கொடுக்க வேண்டும்.



### பராக்கிரமத்துக்காக பிரசித்தமான புகழுக்குரிய பணிக்காக குடியரசுத் தலைவரின் காவல் தீயணைப்புப்படை பதக்கம், காவல் பதக்கம்

காவல் பதக்கம் அளிக்கப்படுவதற்கென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கும் திரு ______________ சந்தேகமற்ற நேர்மையுள்ளவரென்றும், ஒருக்காலும் அவர் ஒரு நீதிமன்றத்தில் கண்டனத்துக்குட்பட்டாவது கண்டன நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டாவது இருந்ததில்லையென்றும், சான்று கூறப்படுகிறது.

பரிந்துரைக்கு அடிப்படையான நிகழ்ச்சி சம்பந்தமாய் எந்த நீதிமன்ற நடவடிக்கையேனும் முடிவாகாமல் இல்லையென்றும் சான்று கூறப்படுகிறது. பராக்கிரமத்துக்கு மட்டும்.

(2) அப்பதக்கங்கள் கொடுக்கப் பெறுவதற்கான தகுதிகள், அவற்றின் அளிப்பை முறைப்படுத்துவதற்கென்று குடியரசுத்தலைவரால் வெளியிடப்பட்ட சட்டங்களின் 3-வது கூறில் கண்டுள்ளன.

குடியரசுத்தலைவரின் காவல் தீயணைப்புப்படை பதக்கம், காவல் பதக்கம், இவற்றின் வெகுமதியை முறைப்படுத்தும் சட்டங்களும் விதிகளும் கீழே அச்சிடப்பட்டுள்ளன.

### குடியரசுத்தலைவரின் காவல் தீயணைப்புப்படை பதக்கமும், காவல் பதக்கமும்

### விளம்பரம்

(புதுடெல்லி, 1–ம் தேதி, மார்ச், 1951.)

எண் 3. இதழ் (Press) - குடியரசுத்தலைவர், மன மகிழ்வுடன் இந்திய ஒன்றியம் முழுவதிலும் உள்ள காவல் படைகள், சீரமைக்கப்பட்ட தீயணைப்புப் படைகள், ஆகிய இவைகளின் உறுப்பினர்களுக்கு அளிக்கும் பொருட்டு புகழத்தக்க பணி அல்லது பராக்கிரமம், ஒப்பற்ற கடமைப்பக்தி காரணமாக முறையே **"குடியரசுத்தலைவரின் காவல் தீயணைப்புப்படை பதக்கம்"**, **"காவல் பதக்கம்"**, என்று பெயரிடப்பட்ட அடியிற்கண்ட வெகுமதிகளை ஏற்படுத்தி அவைகளை முறைப்படுத்தும் பின்வரும் சட்டங்களைச் செய்து, உத்தரவிட்டு, நிலை நிறுத்துகிறார்; இச்சட்டங்கள் ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதாம் ஆண்டில் ஜனவரி இருபத்தி ஆறாம் நாள் முதற்கொண்டு அமுலுக்கு வருவதாகக் கருதப்படவேண்டும்.

குடியரசுத்தலைவரின் காவல் தீயணைப்புப்படை பதக்கம் முதலாவதாக.- வெகுமதியானது ஒரு பதக்கத்தின் வடிவத்தில் இருக்கும்; மேலும் அது (இதில் பின்னர் பதக்கம் என்று குறிப்பிடப்படுகிற) குடியரசுத்தலைவரின் காவல் தீயணைப்புப்படை பதக்கம் என்று பெயர் பெற்று குறிப்பிடப்படும்.

இரண்டாவதாக.- பதக்கமானது, வட்டவடிவமாயும், பொன்பூச்சுள்ள வெள்ளியால் செய்யப்பட்டதாயும், ஒன்றும் எட்டில் மூன்று அங்குல விட்ட முள்ளதாயும், தலைப்புறத்தில் மையத்திலுள்ள ஓர் கேடயத்தின்மேல் குடியரசுத்தலைவரின் கொடிப்படமும், கேடயத்தின் மேலே பதக்கத்தின் விளிம்பு ஓரமாக ஐந்து முனை கொண்ட ராணுவக் கவச நட்சத்திரங்களால் பிரிக்கப்பட்ட **"குடியரசுத்தலைவரின் காவல் தீயணைப்புப்படை பதக்கம்"** எனும் சொற்களும் கீழே **"இந்தியா"** எனும் சொல்லும் பொறிக்கப் பெற்றதாயும், இருத்தல் வேண்டும். பின்புறத்தில், மையத்தில் அரசுச் சின்னமும், கீழ் விளிம்பு ஓரமாக, நேர்விற்கேற்ப **"பராக்கிரமத்துக்காக அல்லது பிரசித்தமான பணிக்காக"** எனும் சொற்களும், மேல் விளிம்பு ஓரமாக உச்சியில் ஓர் சாதாரண பிடிப்பால் இணைக்கப்பெற்ற சுட்டு மாலை ஒன்றும், பொறிக்கப்பெற்று இருத்தல் வேண்டும். விளிம்பின்மேல் பதக்கம் அளிக்கப்பட்டிருக்கும் நபரின் பெயர் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.



Scanned by CamScanner
Scanned with CamScanner

**மூன்றாவதாக.-** இந்திய ஆட்சிப் பகுதிக்கு உள்ளே ஒரு அங்கீகாரம் பெற்ற காவல் படையின் அல்லது தீயணைப்புப்படையின் உறுப்பினர்களாக, ஒப்பற்ற வீரதீரச் செயல்களைச் செய்த, அல்லது பிரசித்தமான கடமைப் பக்தியைக் காட்டிய, நபர்களுக்கு மட்டுமே பதக்கம் கொடுக்கப்படும்.

**நான்காவதாக.-** இப்பதக்கம் அளிக்கப்படக்கூடிய நபர்களின் பெயர்கள் இந்திய அரசிதழில் பிரசுரிக்கப்பட்டு அத்தகைய பெயர்களின் பதிவேடு ஒன்று உள்துறை அமைச்சரவையில் குடியரசுத்தலைவர் எவருக்குக் கட்டளையிடலாமோ அவரால் வைத்துவரப்படும்.

**ஐந்தாவதாக.-** ஒவ்வொரு பதக்கமும் இடதுமார்பிலிருந்து தொங்கவிடப்படும்; மேலும், ஒன்றும் எட்டில் மூன்று அங்குல அகலங்கொண்ட பல்வகை நிற நாடாவானது (Riband), பிரசித்தமான பணி விஷயத்தில் பாதி நீலத்திலும் பாதி வெள்ளி வெண்மையிலும் இருத்தல் வேண்டும்; ஒப்பற்ற தீரச் செயல்கள், பராக்கிரமம் இவைகள் விஷயத்தில் பல்வகை நிற நாடாவானது பாதி நீலநிறத்திலும் பாதி வெள்ளி வெண்மையிலும் இருப்பதுடன் இரு நிறங்களும் எட்டில் மூன்று அங்குல அகலங்கொண்ட ஓர் சிவப்பு நேர்க் கோடால் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**ஆறாவதாக.-** குடியரசுத்தலைவரின் காவல் தீயணைப்புப்படை பதக்கமளிப்பு மூலம் அங்கீகரிக்கத்தக்கதாய், ஆனால், ஏற்கனவே அந்தக் கௌரவப் பதக்கம் கொடுக்கப்பெற்ற ஒருவரால் செய்யப்பட்டதாய் உள்ள பராக்கிரமச் செயலை, பதக்கம் தொங்கவிடப்படும் பல்வகை நிற நாடாவுடன் இணைக்கப் பெற்ற ஓர் பட்டை (Bar) மூலம் பதிவு செய்யலாம். அத்தகைய ஒவ்வொரு கூடுதலான செயலுக்கும் ஒரு அதிகப்படியான பட்டையைச் சேர்த்து, அளிக்கப்பட்ட ஒவ்வொரு பட்டையோடு பொன்பூச்சுள்ள ஓர் சிறிய வெள்ளி ரோஜாவை பல்வகை நிற நாடாவுடன், அதைத் தனியாய் அணிந்திடும் போது இணைத்துக் கொள்ள வேண்டும்.

**ஏழாவதாக.-** எந்த நபருக்கேனும் அளிக்கப்பட்ட மேற்சொன்ன கௌரவப்பதக்கத்தை குடியரசுத்தலைவர் ரத்துசெய்து செல்திறனற்றதாக்க அதிகாரம் உள்ளவராவார்; அதன்மேல், அந்த நபரின் பெயர் பதிவேட்டில் அழித்துவிடப்படும். ஆயினும், குடியரசுத்தலைவர் அவ்வாறு பறிமுதல் செய்த எந்தக் கௌரவ பதக்கத்தையாவது திரும்பக் கொடுக்க அதிகாரம் உள்ளவராவார். கௌரவப்பதக்கம் கொடுக்கப்படுகிற ஒவ்வொரு நபரும், அதைப் பெறுவதற்கு முன்னர், மேற்கூறியவாறு தனது பெயர் அழிக்கப்பட்டால் பதக்கத்தைத் திருப்பிக்கொடுத்து விடுவதாக ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். ரத்து அல்லது திருப்பிக் கொடுத்தலைப் பற்றிய அறிவிப்பு ஒவ்வொரு விஷயத்திலும் இந்திய அரசிதழில் வெளியிடப்படும்.

**எட்டாவதாக.-** இச்சட்டங்களின் காரியங்களை நிறைவேற்றும் பொருட்டு விதிகளைச் செய்ய குடியரசுத்தலைவர் அதிகாரம் உள்ளவராவார்.

## காவல் பதக்கம்

**முதலாவதாக.-** வெகுமதியானது ஒரு பதக்கம் வடிவத்தில் இருக்கும்; மேலும், அது இனிமேல் **"பதக்கம்"** என்று குறிப்பிடப்படுகிற காவல் பதக்கம் என்று பெயர்பெற்று குறிப்பிடப்படும்.

**இரண்டாவதாக.-** பதக்கம், வட்டவடிவமாயும், வெண்கலத்தால் செய்யப்பட்டதாயும், ஒன்றும் எட்டில் மூன்று அங்குல விட்டமுள்ளதாயும் தலைப்புறத்தின் மையத்தில் அரசுச்சின்னமும், அரசுச் சின்னத்துக்குமேலே காவல் பதக்கம், எனும் சொற்களும் அடியிலே பதக்கத்தின் விளிம்பு ஓரமாக தேவநாகிரி எழுத்தில் **"சத்யமேவ ஜெயதே"** எனும் அரசுக் குறிக்கோளும் மேற்கண்ட சொற்கள் ஐந்துமுனை கொண்ட ராணுவக்கவச நட்சத்திரங்களால் பிரிக்கப்பட்டவையாயும், பொறிக்கப்பெற்று இருத்தல் வேண்டும். அதன் பின்புறம் சரியான மையத்திலே ஒரு குழிவான கோடால் இருமுனைகளும் இணைக்கப்பெற்ற இரண்டு இணையான நேர்க்கோடுகளுக்கு இடையே அடைக்கப்பெற்ற நேர்விற்கேற்ப, **"புகழத்தக்க பணிக்காக"** அல்லது **"பராக்கிரமத்திற்காக"** எனும் சொற்களும், மேலே **"இந்தியா" எனும் சொல்லும் கீழே "காவல்"** எனும் சொல்லும், முழுவதையும் சூழ்ந்து அடியில் ஒரு சாதாரண பிடிப்பால் இணைக்கப்பெற்ற ஓர் குட்டு மாலையும், பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். விளிம்பின்மேல் பதக்கம் அளிக்கப்பட்டிருக்கும் நபரின் பெயர் பொறிக்கப் பெற்றிருக்க வேண்டும்.



**மூன்றாவதாக.-** இந்திய ஆட்சிப் பகுதிக்கு உள்ளே ஒரு அங்கீகாரம் பெற்ற காவல் படை அல்லது சரியாகச் சீரமைக்கப்பட்ட தீயணைப்புப்படையில், பிரசித்தமான திறமைப்பணியும் வீரச்செயலும் செய்துள்ள உறுப்பினர்களுக்கு மட்டுமே பதக்கம் கொடுக்கப்படும்.

**நான்காவதாக.-** இப்பதக்கம் அளிக்கப்படக்கூடிய நபர்களின் பெயர்கள் இந்திய அரசிதழில் பிரசுரிக்கப்பட்டு அத்தகைய பெயர்களின் பதிவேடு ஒன்று உள்துறை அமைச்சரவையில் குடியரசுத்தலைவர் எவருக்குக் கட்டளையிடலாமோ அவரால் வைத்துவரப்படும்.

**ஐந்தாவதாக.-** ஒவ்வொரு பதக்கமும் இடது மார்பிலிருந்து தொங்கவிடப்படும்; மேலும் பல்வகை நிற நாடாவானது ஒன்றும் எட்டில் மூன்று அங்குல அகலங்கொண்டதும் கருநீலநிறத்திலும் அதன் இரண்டு ஓரங்களில் ஒரு குறுகிய வெள்ளிக்கோடும் மையத்தில் ஒரு கருஞ் சிவப்புக்கோடும் உள்ளதுமாயும் இருக்கவேண்டும்; அன்றியும் பிரசித்தமான பராக்கிரமச் செயல்களுக்கான வெகுமதிகள் விஷயத்தில், பல்வகை நிற நாடாவின் நீலநிறப் பகுதிகள் ஒவ்வொன்றின் மையத்திலும் ஒரு வெள்ளி நடுக்கோடு இருத்தல்வேண்டும்.

**ஆறாவதாக.- "காவல் பதக்கக்"** கொடை மூலம் அங்கீகரிக்கத் தக்கதாய், ஆனால், ஏற்கனவே அந்த கௌரவப்பதக்கம் கொடுக்கப்பெற்ற ஒருவரால் செய்யப்பட்டதாய் உள்ள யாதொரு முதல்தரமான நடத்தை அல்லது பராக்கிரமச் செயலை, பதக்கம் தொங்கவிடப்படும் பல்வகை நிற நாடாவுடன் இணைக்கப்பெற்ற ஓர் பட்டை (Bar) மூலம் பதிவு செய்யலாம். அத்தகைய ஒவ்வொரு கூடுதலான செயலுக்கும் ஒரு அதிகப்படியான பட்டையைச் சேர்த்து, அளிக்கப்பட்ட ஒவ்வொரு பட்டையோடு ஒரு சிறிய வெள்ளி ரோஜாவை பல்வகை நிற நாடாவுடன் அதைத் தனியாய் அணிந்திடும்போது, இணைத்துக் கொள்ளவேண்டும்.

**ஏழாவதாக.-** எந்த நபருக்கேனும் அளிக்கப்பட்ட மேற்சொன்ன பதக்கக் வெகுமதியை குடியரசுத்தலைவர் ரத்துசெய்து செல்திறனற்றதாக்க அதிகாரம் உள்ளவராவார்; அதன்மேல் அந்த நபரின் பெயர் பதிவேட்டில் அழித்து விடப்படும். ஆயினும், குடியரசுத்தலைவர் அவ்வாறு பறிமுதல் செய்த எப்பதக்கத்தையேனும் திரும்பக்கொடுக்க அதிகாரமுள்ளவராவார். பதக்கம் கொடுக்கப்படுகிற ஒவ்வொரு நபரும், அதைப் பெறுவதற்கு முன்னர், மேற்கூறியவாறு தனது பெயர் அழிக்கப்பட்டால் பதக்கத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுவதாக ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். ரத்து அல்லது திருப்பிக் கொடுத்தலைப்பற்றிய அறிவிப்பு ஒவ்வொரு விஷயத்திலும் இந்திய அரசிதழில் வெளியிடப்படும்.

**எட்டாவதாக.-** இச் சட்டங்களின் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு விதிகளைச் செய்ய குடியரசுத் தலைவர் அதிகாரம் உள்ளவராவார்.

***ஏ. வாக்ஸ் ஏ. லால்,***
*செயலாளர்.*

எண் 4-இதழ் (Press)

குடியரசுத்தலைவரின் காவல் தீயணைப்புப் படை பதக்கம், காவல் பதக்கம், இவைகளின் வெகுமதிக்குச் சம்பந்தமான சட்டங்களின் "எட்டாவது" சட்டப்பிரகாரம் அவைகளை முறைப்படுத்துவதற்கான கீழ் கண்டுள்ள விதிகள் வெளியிடப்படுகின்றன.

குடியரசுத்தலைவரின் காவல் தீயணைப்புப் படை பதக்கம். (1) பிரபல பராக்கிரமம் எனும் காரணமாகக் கொடுக்கப்படும் கொடைகளுக்கான பரிந்துரைகளை பிரபல பராக்கிரமம் காட்டப்பட்ட சமயத்துக்குப் பின்னர் கூடிய விரைவில் செய்யவேண்டும்; மேலும், தனிப்பட்ட நேர்வுகளில் உடனடியாகக் கொடுப்பதற்கென்று இதர காரணங்களின் மேல் அளிக்கப்படும் வெகுமதிகளுக்கான பரிந்துரைகளை எச்சமயத்திலேனும் செய்து கொள்ளலாம்.

**(2) அனைத்து பரிந்துரைகளும், பரிந்துரை செய்யப்படும் நபர்களின் பெயர், பதவி, அவர் உறுப்பினராக இருக்கும் அல்லது இருந்த காவல் படை அல்லது தீயணைப்புப் படையின் பெயர், எந்த பராக்கிரமம் அல்லது பணிக்காக பதக்க வெகுமதி பரிந்துரை செய்யப்படுகிறதோ அதன் விபரங்கள், ஆகியவற்றைக் கூறவேண்டும்.**

Scanned by CamScanner
Scanned with CamScanner

(3) ஏதேனும் ஓராண்டில் கொடுக்கப்படும் பதக்கங்களின் எண்ணிக்கையானது, எந்த ஆண்டிலாவது எண்ணிக்கை நாற்பத்தைந்துக்கு அதிகமாகப் பதக்கங்கள் அளிப்பதைப் பொருத்தமாக்கும் சிறப்புச் சூழ்நிலை இருந்தாலன்றி மற்றபடி, நாற்பத்தைந்துக்கு மேற்படலாகாது.

(4) பதக்கமானது

(i) உயிர், சொத்து, இவற்றைக் காப்பாற்றுவதிலாவது, குற்றத்தைத் தடுப்பதிலாவது, குற்றவாளிகளைப் பிடிப்பதிலாவது, சம்பந்தப்பட்ட அலுவலரின் கடமைகள் அலுவல்களைச் சரியாய் நிதானித்து உள்ளதான அபாயம் மதிப்பிடப்பட்டுள்ள பிரபல பராக்கிரமத்துக்காக,

(ii) காவல் பணியில் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த ஊழிய வரலாற்றுக்காக,

(iii) காவல் அல்லது தீயணைப்புப் படை அமைக்கையில், அல்லது அவற்றின் அமைப்புகளை சிறப்பான இன்னல்களின்கீழ் பராமரிக்கையில் அடைந்த வெற்றிக்காக,

(iv) ஆபத்தான அல்லது பரவலான குற்ற எழுச்சிகளையோ பொது அமைதிக் கேட்டையோ, தீமையோ, சமாளிக்கையில் அவற்றின் சிறப்புப் பணிக்காக,

(v) நீடித்த காலப்பணிக்காக, ஆனால் மிகச் சிறப்பான திறமையாலும் தகுதியாலும் புகழ் பெற்றிருந்தால் மட்டுமே கொடுக்கப்படும்.

(5) பராக்கிரமத்துக்காக அளிக்கப்படும் பதக்கமானது, அடியிற் குறிப்பிட்டுள்ள விகிதங்களின்படியும் நிபந்தனைகளுக்குட்பட்டும், பணப்படிகளைக் கொடுக்கும். அவற்றின் செலவுகள் சம்பந்தப்பட்ட மாநில வருவாயிலிருந்து கொடுக்கப்படும். மற்றும் மைய காவல் பாதுகாப்பு படை அமைப்பானது தனது படையினர்க்கு ஏற்றுக் கொள்ளும்.

(a) பராக்கிரமத்துக்காக அரசின் காவல் தீயணைப்பு படை பதக்கமாவது, அப்பதக்கமும் ஒரு பட்டையும் அல்லது பட்டைகளுமாவது, ஏற்கனவே கொடுக்கப் பெற்றிருக்கும் அலுவலர் ஒருவர் மீண்டும் செய்த ஒரு வீரச்செயலுக்காகப் பிற்பாடு குடியரசுத் தலைவரின் காவல் தீயணைப்புப் படை பதக்கத்தைப் பெற்றால், அவருக்கு முதல் படியோடு கூடுதலாகப் பிற்பட்ட பதக்கத்தின் பட்டைக்குரிய பணப்படி கொடுக்கப்படுமேயன்றி அந்தப் பதக்கத்துக்கே ஏற்பட்ட முழுப் படியும் கொடுக்கப்படமாட்டாது. பராக்கிரமத்துக்காக இந்தியக் காவல் பதக்கம ஏற்கனவே கொடுக்கப் பெற்றிருக்கும் அலுவலர் ஒருவர், மீண்டும் செய்த ஒரு வீரச் செயலுக்காகப் பிற்பாடு குடியரசுத் தலைவரின் காவல் தீயணைப்புப் படைப் பதக்கம் பெற்றால், அவருக்கு முதல் படியோடு கூடுதலாகப் பிற்பட்ட பதக்கத்துக்குரிய முழுப்படியும் கொடுக்கப்படும்.

(b) படியானது கொடை எச்செயலுக்காக அளிக்கப்படுகிறதோ அச்செயல் நடந்த தேதி முதற்கொண்டு கொடுக்கப்பட்டு, தவறான நடத்தைக்காக அது பறிமுதல் செய்யப்பட்டாலொழிய மற்றபடி மரணம் வரைக்கும் தொடர்ந்து கொடுக்கப்படும்.

(c) ஒருவர் தன்னுடைய மரண காலத்தில் படியைப் பெற்று வருகையில், படியினை அவருடைய விதவைக்கு (முதலில் மணந்த மனைவிக்கு முதன்மையான உரிமையளித்து) அவளது ஆயுள் காலம் அல்லது மறு மணம் வரைக்கும் கொடுக்க வேண்டும். ஒரு பதக்கம் (அ) ஒரு பட்டை ஒருவர் இறந்தபின்னர் அளிக்கப்படும் விஷயத்தில், எச்செயலுக்காகக் கொடை அளிக்கப்படுகிறதோ அச் செயலின் தேதி முதற்கொண்டு படியினை இறந்தவரின் மனைவிக்கு (முதலில் மணந்த மனைவிக்கு முதன்மையான உரிமையளித்து) அவளது ஆயுள் காலம் அல்லது மறு மணம் வரைக்கும் கொடுக்கவேண்டும்.

(d) வீரதீரச் செயல்களுக்கு பதக்கம் பெற்ற அனைவருக்கும் கிரம நிலை பொருட்டன்றி சீரான வீதத்தில் பணப்படிக்கு உரியவராவார். பதக்கத்திற்கு திங்கள் தோறும் ரூ.60/- வீதம் மற்றும் பதக்கத்திற்கான பட்டைக்கு ரூ.30/- வீதம் ஆகும்.

(6) பதக்கம் பெற்றவர் துரோகம், நடவடிக்கையில் கோழைத்தனம், அல்லது குடியரசுத்தலைவரின் கருத்தில் படைக்கு மதிப்புக் குறைவு உண்டாக்கும் எனத் தோன்றும் குற்றத்தைச் செய்திருக்கையில், மேற்கண்ட பதக்கம் பறிமுதலாவதற்குட்பட்டிருக்கும்.



(7) முதல்தரமான பணிக்கான வெகுமதிகள் ஜனவரி 26 (குடியரசு நாளன்றும்), ஆகஸ்ட் 15 (சுதந்திர நாளன்றும்) விளம்பரம் செய்யப்படுவதற்கென்று செய்யப்படும் பரிந்துரைகளை இந்திய அரசாங்கத்து உள்துறை அமைச்சரவைச் செயலாளருக்கு ஆண்டுதோறும் முறையே நவம்பர் 26-க்கும் ஜூன் 15-க்கும் பிந்தாமல் சேரும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

## காவல் பதக்கம்

1. பிரபல பராக்கிரமம் எனும் காரணமாகக் கொடுக்கப்படும் வெகுமதிகளுக்கான பரிந்துரைகளை பிரபல பராக்கிரமம் காட்டப்பட்ட சமயத்துக்குப் பின்னர் கூடிய விரைவில் செய்ய வேண்டும். மேலும் தனிப்பட்ட நேர்வுகளில் உடனடியாகக் கொடுப்பதற்கென்று இதர காரணங்களின் மேல் அளிக்கப்படும் வெகுமதிகளுக்கான பரிந்துரைகளை எச்சமயத்திலேனும் செய்துகொள்ளலாம்.

2. ஒவ்வொரு பரிந்துரையும் பரிந்துரை செய்யப்படும் நபரின் பெயர், பதவி, அவர் உறுப்பினராக இருக்கும் அல்லது இருந்த காவல் படை அல்லது தீயணைப்புப் படையின் பெயர், எந்த நடவடிக்கை அல்லது பணிக்காகப் பதக்க வெகுமதி பரிந்துரை செய்யப்படுகிறதோ அதன் விவரங்கள், ஆகியவற்றைக் கூறவேண்டும்.

3. ஓராண்டில் அளிக்கப்படும் பதக்கங்களின் எண்ணிக்கை (பட்டை நீங்கலாக) நூற்று எழுபத்தைந்துக்கு மேற்படலாகாது. ஆனால் ஏதேனுமொரு ஆண்டில் நூற்று எழுபத்தைந்துக்கு மேற்பட்ட பதக்கங்கள் அளிக்கப்படுவதைப் பொருத்தமாக்கும் சிறப்புச் சூழ்நிலை இருப்பதாக குடியரசுத்தலைவர் கருதினால், எண்ணிக்கை இருநூற்றுக்கு மேற்படலாகாது.

4. பதக்கமானது-

(i) பிரபல பராக்கிரமத்துக்காக, (வெகுமதிக்குக் காரணமாயிருக்கும் நிகழ்ச்சிக்குப்பின் கூடிய விரைவில் பராக்கிரமத்துக்கான வெகுமதிகள் வழங்கப்படும்).

(ii) திறமை, யோக்கியதை, வாய்ந்த நீடித்த காலப்பணி, உள்பட்டு செயல்முறை சாமர்த்தியம், கடமைப் பக்தி, ஆகியவற்றின் ரீதியான அரும்பணிக்காகக் கொடுக்கப்படும்.

5. (அ) பராக்கிரமத்துக்காக அளிக்கப்படுகையில், பதக்கமானது, குடியரசுத்தலைவரின் காவல் தீயணைப்புப் படை பதக்கத்திற்காகக் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, பராக்கிரமத்துக்கு ஏற்பட்ட குடியரசுத்தலைவரின் காவல் தீயணைப்புப் படை பதக்கத்துக்காக அனுமதிக்கப்பட்ட பணப்படித் தொகையில் அரைப்பங்கு வீதங்களின் படியுள்ள பணப்படித் தொகையைக் கொடுக்கும். அதன் செலவுகள் மாநில வருவாயிலிருந்து கொடுக்கப்படும்.

(ஆ) பராக்கிரமத்துக்காக இந்திய காவல் பதக்கமாவது அப்பதக்கமும் பட்டையும் அல்லது பட்டைகளுமாவது ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கும் அலுவலர் ஒருவர் மீண்டும் செய்த ஒரு வீரச்செயலுக்காகப் பிற்பாடு காவல் பதக்கத்தைப் பெற்றால், அவருக்கு முதல் படியோடு கூடுதலாகப் பிற்பட்ட பதக்கத்தின் பட்டைக்குரிய பணப்படி கொடுக்கப்படுமேயன்றி அந்தப் பதக்கத்துக்கே ஏற்பட்ட முழுப்படியும் வழங்கப்படமாட்டாது. பராக்கிரமத்துக்காக அரசின் காவல் தீயணைப்புப் படை பதக்கம் ஏற்கனவே கொடுக்கப் பெற்றிருக்கும் அலுவலர் ஒருவர் மீண்டும் செய்த வீரச் செயலுக்காகப் பிற்பாடு காவல் பதக்கத்தைப் பெற்றால், அவருக்கு முதல்படியோடு கூடுதலாகப் பிற்பட்ட பதக்கத்துக்குரிய முழுப் படியையும் கொடுக்க வேண்டும்.

6. பராக்கிரமத்துக்குரிய பதக்கத்தை முதல்தரமான பணிக்குரிய குடியரசுத்தலைவரின் காவல் தீயணைப்புப் படை பதக்கத்துக்குப் பின் நேரடியாக அடுத்து அணிந்துகொள்ள வேண்டும்.

7. இப்பதக்கத்தைக் கொடுப்பது பிற்பாடு " குடியரசுத் தலைவரின் காவல் தீயணைப்புப் படை பதக்கம்" அளிக்கப்படுவதைத் தடைசெய்யப்பட்டது.

Scanned by CamScanner

8. பதக்கம் பெற்றவர் துரோகம், நடவடிக்கையில் கோழைத்தனம், குடியரசுத்தலைவரின் கருத்தில் படைக்கு மதிப்புக் குறைவு உண்டாக்கும் நடத்தை எனத் தோன்றும் அல்லது குற்றத்தைச் செய்திருக்கையில் மேற்கண்ட பதக்கம் பறிமுதலாவதற்குட்பட்டிருக்கும்.

9. புகழத்தக்க பணிக்கான வெகுமதிகளை ஜனவரி 26 (குடியரசு நாள்) அன்றும், ஆகஸ்டு 15 (சுதந்திர நாள்) அன்றும் விளம்பரம் செய்யப்படுவதற்கென்று செய்யப்படும் பரிந்துரைகளை இந்திய அரசாங்கத்து உள்துறை அமைச்சரவைச் செயலாளருக்கு ஆண்டு தோறும் முறையே நவம்பர் 26-க்கும், ஜூன்15க்கும் பிந்தாமல் சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

## PSO 60 - வேற்றுப் பணியில் அதிகாரிகள் – பதக்கத்திற்கு பரிந்துரை தொடர்பான நடைமுறை.–

### Officers on deputation-Procedure regarding recommendation of medal-

C.B.I. மற்றும் I.B. போன்ற அமைப்புகளில் வேற்றுப் பணியில் இருக்கும் அதிகாரிகளின் நேர்வில் அந்த அமைப்புகளே பரிசீலனை செய்திடல் வேண்டும். அத்தகையவாறு பரிசீலனை செய்திடும் போது, அந்த அமைப்புகள் இந்திய அரசிற்கு பரிந்துரை செய்வதற்கு முன்னர் மாநில அரசின் இசைவிற்கு சாட்டி அனுப்புதல் வேண்டும். மாநில அரசானது DGP யின் கருத்துக்களை கோரும்; DGP அதிகாரிகளின் தனிநபர் மந்தண கோப்புகளை கூர்ந்தாய்வு செய்து தனது கருத்துக்களை தெரிவிப்பார்.

(a) இம்மாநிலத்தில் உள்ள அதிகாரிகளுக்கு பதக்கத்திற்கான பரிந்துரைகள் செய்திடும் போதெல்லாம், வேற்றுப் பணியில் உள்ள அதிகாரிகள் விடுபடாமல் உள்ளதை உறுதி செய்திடும் பொருட்டு, அதிகாரியின் மூத்தவர்கள் C.B.I. மற்றும் IB போன்ற அமைப்புகளில் வேற்றுப் பணியில் உள்ளனரா என்பதை ஆய்வு செய்திட வேண்டும். அதிகாரியின் மூத்தவர்கள் வேற்றுப்பணியில் இருப்பின், தொடர்பான அமைப்பிற்கு இளையவர் பதக்கத்திற்காக பரிந்துரை செய்யப்படுவதைப் பற்றி தெரிவிக்க வேண்டும்; அதன் மூலம் அந்த அமைப்பு விரும்பினால் அது மூத்தவரை பதக்கப் பரிந்துரைக்கு பரிசீலனை செய்திட முடியும்.

## PSO 61 - மற்ற மாநிலங்களில் பணி–பதக்கங்களைப் பரிந்துரைச் செய்வதற்கு முன்னர் விஷயங்களைச் சரிபார்த்தல்.

### Service in other States. - Verification before medals are recommended :-

ஒரு காவல் அலுவலர் தனது சொந்தமான மாநிலத்தைத் தவிர மற்றொரு மாநிலத்தில் செய்த ஊழியம் காரணமாக, குடியரசுத் தலைவரின் காவல் தீயணைப்புப் படை பதக்கமாவது அல்லது காவல் பதக்கமாவது பரிந்துரை செய்யப்படுகையில், அந்த நிகழ்ச்சியைக் குறித்த விஷயங்களைச் சம்பந்தப்பட்ட மாநில காவல் துறைத் தலைவருக்குச் சரிபார்த்தலுக்காகத் தெரிவித்து அக்காவல் துறைத் தலைவரது தணிக்கைச் சான்றைப் பரிந்துரையுடன் அனுப்பி வைக்க வேண்டும்.



## PSO 62 - காவல் மற்றும் பிற பதக்கங்களின் முந்துகை வரிசை

### Order of Precedence for Police and other awards .–

The Order of precedence wearing of various medals and decorations as determined by the President of India (vide President's Secretariat Notification No.41 Pres./76, dated 16th June, 1976) is reproduced below.

**(1) President's Police and Fire Services Medal for gallantry.**

**(2) President's Police Medal for gallantry.**

**(3) Police Medal for gallantry.**

**(4) Wound Medal.**

**(5) Poorvi Star**

**(6) Paschimi Star.**

**(7) Raksha Medal 1965.**

**(8) Sangram Medal.**

**(9) Police (Special Duty) Medal 1962.**

**(10) President's Police and Fire Service Medal for distinguished service.**

**(11) President's Police Medal for distinguished service.**

**(12) Police Medal for meritorious service.**

**(13) Indian Independence Medal 1947.**

**(14) Independence Medal 1950.**

**(15) 25th Independence Anniversary Medal.**

Scanned by CamScanner
Scanned with CamScanner

# அத்தியாயம் - 9

## அரசிதழ் பதிவுறா அலுவலர்கள் மீது குற்றவழக்கீடு, காவல் அலுவலர்களுக்கு சட்ட உதவி மற்றும் அரசு எதிர்வழக்குரை தொடங்குதல்

## PROSECUTION OF NON-GAZETTED OFFICERS, LEGAL ASSISTANCE TO POLICE OFFICERS AND THE INSTITUTION OF DEFENCE OF SUITS BY THE GOVERNMENT

### PSO 63 - காவல் அலுவலர்கள் மீது குற்ற வழக்கிட ஒப்பளிப்பு.– Sanction to prosecute police officers .–

ஒரு காவல் அலுவலர் தனது அலுவல் வழி முறையில் செய்த ஓர் குற்றத்துக்காக அவர் மீது ஓர் காவல் கண்காணிப்பாளர் பதவிநிலைக்கு குறையாத ஓர் அலுவலரின் முன் ஒப்பளிப்பின்றி யாதொரு குற்றவியல் குற்றவழக்கீடு தொடரலாகாது. இது அத்தகைய நடவடிக்கைகளை தொடர்வதற்கு நடுவர்களுக்கோ அல்லது தனிப்பட்ட நபர்களுக்கோ உள்ள உரிமையைப் பாதிக்காது.

### PSO 64

காவல் துறைத் தலைவரின் முன் அனுமதி இன்றி, யாதொரு காவல் அலுவலர் தனது தனிப்பட்ட முறையில் மற்றொரு காவல் அலுவலர் மீது (a) அவர் அலுவல் முறையில் தனக்கு செய்த தவறுகள் தொடர்பாக அல்லது (b) அலுவல் முறையில் அல்லது தனிப்பட்ட முறையில் தனக்கு எதிராக செய்த குற்றங்களுக்காக யாதொரு உரிமையியல் அல்லது குற்றவியல் குற்ற வழக்கீடு தொடரலாகாது.

### PSO 65 - சிறு குற்றங்களுக்காக காவல் சட்டத்தின் கீழ் குற்ற வழக்கீடு.– Prosecution under Police Act for minor offences .–

தமிழ்நாடு மாவட்ட காவல் சட்டம் 1859 (1859 / XXIV)ஐச் சேர்ந்த 10வது பிரிவின்படி துறை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டிய சிறு குற்றங்களுக்காக, அச்சட்டத்தின் கீழ் காவல் அலுவலர்கள் மீது குற்ற வழக்கிடுவது சட்டமுரணானதாகும்.

### PSO 66 - குற்றவாளியென தீர்வுக்குட்பட்ட பின்னர் தண்டனை.– Punishment after conviction.–

(1) தவறான நடத்தை உள்ளிட்ட குற்றம் ஒன்றிற்காக, குற்றவாளியென தீர்வுக்குட்பட்டு, சிறைத்தண்டனை விதிக்கப் பெற்ற காவல் அலுவலர் ஒருவரை, காவல் துறைத் தலைவரின் சிறப்பு ஆணையின் பேரில் பணியில் இருத்தி வைக்கப்பட்டாலன்றி, மற்றபடி சாதாரணமாக பணியறவு அல்லது பணிநீக்கம் செய்திடலாம். ஒரு காவல் அலுவலர் கெட்ட நடத்தை அல்லாத ஒரு குற்றம் செய்ததாக தீர்வுக்குட்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பெற்ற நேர்வுகளில், தகுதிவாய்ந்த அலுவலர் அவரைப் பணியிலிருந்து கட்டாய ஓய்வு அளித்திடலாம்.

(2) அபராதத் தண்டனை மட்டும் விதிக்கப் பெற்ற அல்லது குற்றவாளிகள் கண்காணிப்புச் சட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட ஒரு காவல் அலுவலரை பணியறவு (அ) பணி நீக்கம் (அ) கட்டாயப் பணி ஓய்வு செய்திட வேண்டியதில்லை. நீக்குதல் ஆணை பிறப்பிக்கத் தகுதியுள்ள அலுவலரானவர், அவர் நீக்குதலுக்கோ (அ) பணியறவுக்கோ (அ) கட்டாய பணி ஓய்வுக்கோ அல்லது வேறு ஏதேனும் குறைவான தண்டனைக்கோ உரியவரா என முடிவு செய்து அதற்கிணங்க செயல்படுவார்.

(3) (1) வது & (2) வது உட்கூறுகளில் எது எவ்வாறு இருப்பினும், ஒரு காவல் அலுவலர் சென்னை மதுவிலக்குச் சட்டம் 1937ன் 4, 4-A, 5 அல்லது 7வது பிரிவுகளின் கீழ் ஒரு குற்றத்திற்காக தண்டனை தீர்ப்புக்குள்ளாகும் காவல் அலுவலருக்கு தண்டனையாக பணியறவு அல்லது பணிநீக்கம் செய்யப்படும்.



(4) குற்றவாளியென தண்டனை தீர்ப்புக்குட்பட்டதன் விளைவாக பணியறவு (அ) பணி நீக்கம் (அ) கட்டாய பணி ஓய்வு ஆணை தேவைப்படின், அத்தகைய ஆணை முதல் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பின் பேரில் உடனடியாக பிறப்பிக்க வேண்டும். தண்டிக்கப்பட்ட அரசு ஊழியர் மேல் நீதிமன்றங்களில் தனக்குள்ள மேல்முறையீட்டு உரிமைகளையெல்லாம் பயன்படுத்தி தீர்க்கும் வரையில், ஆணை பிறப்பித்தலை தள்ளி வைத்தலாகாது.

(5) மேற்காண் ஆணையின் கூறுகள் (1) முதல் (4) வரையில் குறிப்பிடப்பெற்ற அனைத்து நேர்வுகளிலும் தண்டனை விதிப்பு உத்தரவு பிறப்பிக்குமுன்னர் தண்டனைக்கான காரண விளக்க அறிவிப்பு வழங்கப்பட வேண்டும் மற்றும் ஏதேனும் விளக்கம் பெறப்படின் அதனைப் பரிசீலனையில் கொள்ள வேண்டும். ஆனால் பிற நேர்வுகளில் போன்று விரிவான நடைமுறையினைக் கடைப்பிடிக்க வேண்டியதில்லை, அதாவது வாய்மொழி விசாரணை முதலியன.

### PSO 67 - குற்ற விடுதலைக்குப் பின்னர் நடைமுறை.– Procedure after Acquittal.–

குற்றவியல் வழக்கு நிலுவையில் பணியிடை நீக்கத்திலிருக்கும் அரசு ஊழியர் ஒருவரை மீளப்பணியமர்வு செய்வது குறித்தும் மற்றும் குற்றச் சாட்டுக்கு அடிப்படையான பொருண்மைகளின் மேல் ஏற்கனவே ஒரு குற்றவியல் நீதிமன்றத்தால் விசாரணைக்குட்பட்ட அலுவலர் ஒருவரின் நடத்தையைப் பற்றி துறை விசாரணை நடத்துவது குறித்தும், அரசினர் கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பித்துள்ளனர்.

(1) ஒரு காவல் அலுவலர் ஒரு குற்றவியல் நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்பட்டு விடுதலைத் தீர்ப்புக்குள்ளாக்கப்பட்டோ அல்லது அவரது தண்டனையானது மேல்முறையீட்டின் பேரில் இல்லையாக்கப்பட்டிருக்கையில், சாதாரணமாக அவரை மீளப்பணியமர்வு செய்திடலாம்.

(2) (a) ஒரு குற்றவியல் நீதிமன்றமானது அதே நிகழ்வுகளை முழுமையாக ஆராய்ந்து ஒரு உறுதியான முடிவுக்கு வந்திருந்து, அம்முடிவு நேர்மாறாக்காமல் அல்லது திருத்தாமல் இருக்கையில், குற்றவியல் நீதிமன்ற நடவடிக்கைகளை தவறாகப் புரிந்து கொண்டதன் பேரில் அல்லது தீர்ப்பு தவறானது எனும் அடிப்படையில் துறை நடவடிக்கை தொடர்வது உகந்ததல்ல, ஆயினும்.

(b) குற்றச்சாட்டைப் பாதிக்கும் சில பொருண்மைகள் நீதிமன்றத்தின் முன் வைக்கப்படாமல் இருப்பின் அல்லது அவ்வழக்கின் உறுதியான அம்சம் ஒன்று நீதிமன்றத்தால் ஆலோசிக்கப்படாமல் இருப்பின், விடுதலையானது நுட்பக்கூறு சார்ந்த அடிப்படையில் அதாவது ஒப்பளிப்பு இன்மை, நடைமுறையில் சில நுட்பக்கூறு சார்ந்த, தவறுகள் முதலியன அல்லது நீதிமன்றத்தால் மெய்ப்பிக்கப்பட்ட பொருண்மைகள் குற்றவியல் குற்றமாக உருவாக போதாது. ஆனால் துறை சார்ந்த முறைகேடாகும் போது, துறை அதிகாரிகள் தொடர்பான செய்திகள் பொருண்மைகள் குறித்து துறை விசாரணை நடத்துவதில் ஆட்சேபணை இல்லை.

(3) அத்தகைய நேர்வுகளனைத்திலும் சட்டப்படியான சந்தேகத்தின் காரணங்களை முன்னிட்டு ஒரு துறை விசாரணையை நடத்தும்படி ஆணையிடுவதற்கு காவல் துறை அதிகாரிகள் உரிமையுற்றிருப்பதாக எண்ணிவிடக்கூடாது என அரசாங்கம் விரும்புகிறது. எனினும் காவல் துறை அதிகாரிகள் நீதிமன்றம் வந்துள்ள முடிவுகளுக்கு, அத்தகைய நீதிமன்றத்தின் முன்புள்ள சாட்சியத்திலாவது, நடைமுறையிலாவது இடைவெளிகளையோ குறைபாடுகளையோ, புதிய சூழ்நிலைகள் வெளிப்படுத்தினாலன்றி, மற்றபடி முடிவுகளிலிருந்து மாறுபடக்கூடாது என அரசினர் வலியுறுத்த விரும்புகின்றனர்.

(4) நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட அரசு ஊழியருக்கு எதிராக துறை நடவடிக்கை தேவையெனத் துறை அதிகாரிகள் கருதும் அத்தகைய ஒவ்வொரு நேர்விலும், வழக்கு பற்றிய விபரங்கள் தீர்ப்புரை தேதியிலிருந்து ஒரு திங்களுக்குள் (நகல் பெறுவதான காலம் நீங்கலாக) ஆணைகளுக்காக அரசிற்கு அறிக்கையிட வேண்டும். அறிக்கையிடப்படும் ஒவ்வொரு நேர்விலும் குற்றவியல் வழக்கில் தீர்ப்புரை நகல் இணைக்கப்படுதல் வேண்டும்.

(5) குற்றவியல் நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்புக்குள்ளாக்கப்பட்டதன் அடிப்படையில் காவல் அலுவலர் ஒருவர் தண்டிக்கப்பட்டிருப்பின், மற்றும் மற்றொரு நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பு பின்னர் நீக்கறவு செய்யப்பட்டால், தண்டனை வழங்கிய அதிகாரிகளுக்கு கீழ்நிலை அல்லாத உயர்நிலை அதிகாரியால் அல்லது குற்றத்தைப் பொறுத்து அதிகாரியின் மேல்முறையீடு (அ) மனுவை சீராய்வு செய்த அதிகாரியினால் தண்டனை நீக்கறவு செய்யப்படலாம்.

## PSO 68 - குற்றவியல் குற்றச்சாட்டுகளிலும், உரிமையியல் வழக்குகளிலும் காவல் அலுவலர்களைப் பாதுகாத்தலுக்கான விதிகள்.– Rules for the defence of Police Officers in Criminal prosecutions and Civil suits.–

(1) (a) காவல் அலுவலர்கள் நல்லெண்ணத்துடன் செயலாற்றியிருப்பதாக அரசினருக்குத் தோன்றுகையில், அவர்களுக்கு எப்பொழுதும் ஆதரவளிக்கப்படும். ஆனால், அப்படியில்லாதிருக்கையில் அவர்களது எதிர்வாதத்தை ஏற்றுக்கொள்ள அரசினர் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளமாட்டார்கள்.

(b) அரசினர் எதிர்வாதம் செய்ய மறுக்கையில், சம்பந்தப்பட்ட அலுவலர் அவரது சொந்த செலவில் அவருக்கு என்ன நடவடிக்கைகள் அவசியமெனத் தோன்றுமோ அவற்றை எடுத்துக் கொள்வது அவரைப் பொருத்ததாகும். ஆனால், நீதிமன்றத் தீர்ப்பு அவருக்கு சாதகமாயிருந்தால், சாதாரணமாக அரசினர் அவரது செலவுகளைத் திருப்பிக் கொடுத்து விடுவார்கள். ஆயினும், நியாயமான செலவுகளையன்றி வேறு எதையேனும், அரசினர் ஏற்றுக்கொள்வதில்லை என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

(c) ஒரு காவல் அலுவலர் மீது குற்றவியல் நடவடிக்கைகள் அரசினராலோ அல்லது அவர்களது அனுமதியுடனோ தொடரப்பட்டால் அரசினர் ஒரு பொது விதிப்படி அவரது எதிர்வாதத்தை ஏற்றுக் கொள்ள மறுப்பார்கள். ஆயினும், தனிப்பட்ட விஷயங்களில் காவல் அலுவலர் நிதி அல்லது மற்ற நியாயமான காரணங்கள் முன்னிட்டு தனது சொந்த செலவில் எதிர்வாதம் செய்வதற்கான நடவடிக்கையை எடுக்க முடியாமல் இருக்கையில், அரசினர் எதிர்வாதத்துக்கு ஒப்புறுதியளிக்கலாம் எனினும், (1) அவ்வழக்கு மேற்கண்ட காவல் அலுவலருக்கு அனுகூலமாய் முடியாவிட்டால், அவரது எதிர்வாதத்தை நடத்துவது சம்பந்தமாய் அரசினர் செலவழித்த தொகையனைத்தையும் அவர் திருப்பிக் கொடுப்பதாக வாக்குக் கொடுக்க வேண்டும். (2) அன்றியும், அப்படிப்பட்ட தொகையை மேற்கண்ட காவல் அலுவலரிடமிருந்து வசூலிக்கத்தக்க எதிர்கால வாய்ப்பைப்பற்றி அரசினர் உளநிறைவடைந்திருக்க வேண்டும்.

(d) இவ் விதிகளுக்கு இணங்க, ஒரு காவல் அலுவலர் தனது எதிர்வாதத்துக்கென்று ஒரு வழக்குரைஞரை அமர்த்தினாலாவது அமர்த்த அனுமதி பெற்றிருந்தாலாவது, எதிர்வாதத்துக்கென்று அரசினர் பொருத்தமான சட்ட அலுவலரை அமர்த்தியிருந்தால் அவர்கள் என்ன செலவினை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்குமோ அதற்கு அதிகமாக அத்தகைய எதிர்வாதத்துக்காக செலவழித்த செலவினைத்தரும்படி செய்யப்படும் யாதொரு கோரிக்கையையும் அரசினர் ஏற்கமாட்டார்கள்.

(e) கூறு (d) பொருந்தும் ஒவ்வொரு விஷயத்திலும், தகுந்த அரசாங்கச் சட்ட அலுவலருக்குக் கட்டணங்கள் கொடுப்பதை முறைப்படுத்தும் பொருத்தமான விதிகளை மேற்கண்ட காவல் அலுவலரின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும்.



(f) ஒரு காவல் அலுவலரை அரசாங்கச் செலவில் பாதுகாப்பதை அனுமதிப்பதற்கு முன்பு அவர் ஒரு தனிப்பட்ட வழக்குரைஞரை அமர்த்திக் கொண்டால், அரசாங்கம் அவருக்குச் செலவைத் திருப்பிக் கொடுப்பதை மறுக்கவோ, அல்லது அவர்களது எண்ணத்தில் மேற்கண்ட தனிப்பட்ட வழக்குரைஞருக்குக் கொடுக்கத்தக்க நியாயமான கட்டணங்கள் எதுவோ அதை மட்டும் அனுமதிக்கவோ, அரசாங்கத்தின் விருப்புரிமையைப் பொறுத்து மேற்கண்ட தனிப்பட்ட வழக்கறிஞருக்கு காவல் அலுவலர் கொடுத்த முழுக் கட்டணத்தையோ அல்லது முழு ஒழுங்குத் திட்டக் கட்டணத்தையோ கொடுப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

### கொடுக்க வேண்டிய தகவல்

(2) குற்றப் புலனாய்வுத் துறை (C.I.D.) அல்லது சென்னை மாநகர காவலை சேர்ந்தவர்களைத் தவிர மற்ற காவல் அலுவலர்களுக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டு அல்லது உரிமையியல் வழக்கு தொடரப்படுகையில் சம்பந்தப்பட்ட அலுவலர் தான் பணிபுரிந்து கொண்டிருக்கும் மாவட்டத்தின் காவல் கண்காணிப்பாளருக்கு உடனே தெரிவிக்க வேண்டும். குற்றப் புலனாய்வுத் துறை பிரிவு சென்னை மாநகர காவல், இவர்கள் விஷயத்தில் முறையே குற்றப் புலனாய்வுத் துறை காவல் துறை துணைத் தலைவருக்கும் சென்னை காவல் ஆணையருக்கும் அறிக்கை செய்யவேண்டும்.

### காவல் அலுவலர்கள் மீது உரிமையியல் வழக்குகள் அல்லது குற்றவியல் குற்றச்சாட்டு

(3) ஒரு காவல் அலுவலர் மீது அவரது பதவிக்குரிய கடமையை நிறைவேற்றுதல் சம்பந்தமான ஒரு உரிமையியல் வழக்கு அல்லது ஒரு குற்றவியல் குற்ற வழக்கு தொடரப்படும் நேர்வில் பின்வரும் நடைமுறையைக் கையாள வேண்டும்.

#### உரிமையியல் வழக்குகளில் நடைமுறை

(a) (i) ஒரு காவல் அலுவலர் மீது அவரது பதவி முறைமையில் செய்ததாகப் பொருள்படுகிற எதையேனும் குறித்து தமிழ்நாடு மாவட்ட காவல் சட்டம் 1859-ன் 53-வது பிரிவில் கண்டுள்ள கால அளவு முடிந்த பின்பாவது, உரிமையியல் நடைமுறை விதித்தொகுப்பு, 1908-ன் 80-வது பிரிவின் படி தேவையான அறிவிப்பு, அவருக்குக் கிரமப்படி சேர்ப்பிக்கப்படாமல் இருக்கையிலாவது, யாதொரு உரிமையியல் வழக்கு தொடரப்பட்டால், அவர் ஒரு விதிமுறைப்படி மேற்கண்ட பிரிவுகளின் காப்புரைகளுக்கு முரணாக அவ்வழக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறதெனும் காரணத்தின்மேல் அதைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். ஆயினும் மேற்கண்ட பிரிவுகளில் காப்புரைகள் நிறைவேற்றப்பட்டிருந்தால், அவர் உடனடியாகத் தனது மேலதிகாரிக்கு வழக்கைப்பற்றி ஒரு கருத்து கொள்வதற்குத் தேவையான அனைத்து சூழ்நிலை விவரங்களையும் அறிக்கை செய்யவேண்டும். அவ்வறிக்கை காவல் கண்காணிப்பாளருக்கு வந்து சேர்ந்தவுடனே அவர் தேவையாயிருக்கும் எந்த விசாரணையையாவது செய்தபின்பு, பொருண்மைகள் முற்றிலும் தனது பரிந்துரைகளுடன், சேர்த்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை செய்ய வேண்டும்; ஆட்சியர் அரசாங்க வழக்கறிஞரைக் கலந்தாலோசித்த பின்னர் அவ்வறிக்கையை காவல் துறை இயக்குநரின் உத்தரவுகளுக்காக அனுப்பி வைக்கவேண்டும், காவல் கண்காணிப்பாளர் தனது அறிக்கை நகல் ஒன்றைச் சரக காவல் துறை துணைத் தலைவர் மூலமாக காவல் துறை இயக்குநருக்கு அவரது தகவலுக்காக அனுப்பிவைக்க வேண்டும்.

(ii) எதிர்வாதத்துக்காக நியமிக்கப்படும் வழக்கறிஞரின் கட்டணம் வழக்கு முழுவதற்கும் ரூ.300 உச்ச வரம்புக்கு மேற்படாத வழக்குகளில் காவல் துறை இயக்குநர் தானே எதிர்வாதத்துக்கு ஒப்புதலளிக்கலாம். மற்ற அனைத்து நேர்வுகளிலும் அவர் அறிக்கையைத் தனது பரிந்துரைகளுடன் ஆணைக்காக அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கவேண்டும். வழக்கறிஞருக்குக் கொடுக்க வேண்டிய

Scanned by CamScanner

கட்டணத்தின் அளவுத் திட்டம், அரசாங்க வழக்கறிஞர் விஷயத்தில் ஒழுங்குத் திட்டக்கட்டணமும், தனிப்பட்ட வழக்கறிஞர் நேர்வில் காவல் துறை இயக்குநர் நிர்ணயிக்கும் மேற்கண்ட ஒழுங்குத் திட்டக் கட்டணத்துக்கு மேற்படாததும் தனது ஒப்புதல் அதிகார வரம்புக்குட்பட்டதுமான ஓர் கட்டணமாய் இருக்கும்.

(iii) பொதுச் செலவில் அலுவலர்களின் எதிர்வாதம் அனுமதிக்கப்பட்ட உரிமையியல் வழக்குகளில், காவல் அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட சட்டச் செலவை, அது திரும்பப் பெறமுடியாததாய் இருந்தால், காவல் துறை இயக்குநர் ஒவ்வொரு வழக்கிலும் ரூ.300 வரையறை வரைக்கும் தள்ளுபடி செய்ய அதிகாரம் பெற்றிருக்கிறார்.

### குற்றவியல் வழக்குகள்

(b) (i) ஒரு காவல் அலுவலர் மீது, அவரது பதவி முறைமையில் அவர் செய்த எந்த செயல் சம்பந்தமாக யாதொரு குற்றவியல் வழக்குத் தொடரப்பட்டால், அத்தகைய வழக்கானது தமிழ்நாடு மாவட்ட காவல் சட்டம், 1859-ன் (1859ல் XXIV) 53-வது பிரிவிலாவது தமிழ்நாடு மாநகர காவல் சட்டம், 1888-ன் (சென்னைச் சட்டம், 1888-ல்III) 81-வது பிரிவிலாவது விதிக்கப்பட்ட காலவரம்பால் தடை செய்யப்பட்டிருக்கிறதா என்று அவர் கவனிக்க வேண்டும்; அவ்வாறு தடைப்பட்டிருந்தால், அவர் வழக்கானது மேற்கண்ட பிரிவுகளின் காப்புரைகளுக்கு மாறாகப் போடப்பட்டதென்ற காரணமாக அதைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று, உடனடியாக நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும்.

(ii) குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு, 1973-ன் 197-வது பிரிவானது, அலுவலர்களில் சில வகுப்பார்மீது குற்றவியல் குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக ஒரு தனிப்பட்ட நடைமுறையை குறிப்பிடுகிறது. அவ்வழக்குகளில் அலுவலரின் எதிர்வாதத்தை ஏற்றுக்கொள்வது பற்றி அரசாங்க உத்தரவுகளைப் பெறப் போதுமான கால அளவு எப்பொழுதும் இருக்கும்; சம்பந்தப்பட்ட அலுவலர் பொருண்மைகளை முற்றிலும் காவல் கண்காணிப்பாளருக்கு அறிக்கை செய்ய வேண்டும்; காவல் கண்காணிப்பாளர் தேவையாயிருக்கக்கூடிய எந்த விசாரணையையாவது செய்த பின்பு அவைகளை ஆட்சியருக்கு அறிக்கை செய்ய வேண்டும்; மாவட்ட ஆட்சியர் அரசாங்கக் குற்றவியல் வழக்கறிஞரைக் கலந்தாலோசித்த பின்பு, சம்பந்தப்பட்ட காவல் துறை துணைத் தலைவர், காவல் துறைத் தலைவர், இவர்களின் மூலம், ஆணைக்காக அரசாங்கத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும். காவல் அலுவலர்களில் இதர வகுப்பார் மீதுள்ள குற்றவியல் குற்றச்சாட்டுகள் விஷயத்தில், நீதிமன்ற நடவடிக்கைகள் தொடங்கப்படுவதற்கு முன்பு அரசாங்க உத்தரவுகளை அடிக்கடி பெற இயலாமல் இருக்கலாம். அவ்வாறான நேர்வில் எதிர்வாதத்துக்கு அமர்த்தப்படும் வழக்கறிஞரின் கட்டணம் நாள் ஒன்றுக்கு ரூ.25 வீதத்துக்கு மேலாவது வழக்கு முழுவதற்கும் ஒரு உச்சத் தொகையான ரூ.150-க்கு மேலாவது அதிகப்படாவிட்டால் அரசாங்கம் எதிர்வாதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமா வேண்டாமா என்பதை காவல் கண்காணிப்பாளரைக் கலந்தாலோசித்த பின் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு ஆட்சியருக்கு விடப்படும். எதிர்வாதச் செலவு மேற்கண்ட வரம்புகளுக்கு அதிகப்படக்கூடியதாயிருந்தால் அல்லது எதிரியான காவல் அலுவலரின் எதிர்வாதம் குறித்து ஆட்சியருக்கும் காவல் கண்காணிப்பாளருக்கும் இடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டால், ஆட்சியர் அரசாங்கக் குற்றவியல் வழக்கறிஞருக்கு, ஆரம்ப நடவடிக்கைகளில் எதிரியான அலுவலருக்காக ஆஜராகவேண்டுமென்றும், அரசாங்கச் செலவில் அவருக்காக எதிர்வாதம் செய்ய வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரும் வரைக்கும் வழக்கை மேற்கொண்டு விசாரிக்காமல் ஒத்திவைக்கும்படி, நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்றும், தகவல் கொடுக்க வேண்டும். தல அதிகாரிகள் கையாளத் தீர்மானித்திருக்கும் நடைமுறையைப்பற்றிய தகவலானது காவல் கண்காணிப்பாளர், சரக காவல் துறை துணைத் தலைவர் மூலம் காவல் துறை இயக்குநருக்கு அனுப்பிவைக்கும் அறிக்கை நகலில் தரப்பட்டிருக்க வேண்டும்.



(iii) பொதுச் செலவில் அலுவலர்களின் எதிர்வாதம் அனுமதிக்கப்பட்ட குற்றவியல் வழக்குகளில் காவல் அலுவலர்களுக்கு அளிக்கப்படும் இழப்பீட்டினை, அது திரும்பப்பெற முடியாததாய் இருந்தால், ஆட்சியர்கள் ஒவ்வொரு வழக்கிலும் ரூ.150 உச்ச வரம்புக்குட்பட்டு தள்ளுபடி செய்ய அதிகாரம் பெற்றிருக்கிறார்கள்.

### தலைநகரல்லாத புறப்பகுதி நீதிமன்றங்களில் வழக்குகள்

(c) (i) தலைநகரல்லாத புறப்பகுதி நீதிமன்றங்களில் இருப்புப் பாதை காவல் குற்றப் புலனாய்வுத் துறை (C.I.D.) அல்லது நகர காவல் இவற்றைச் சேர்ந்த அலுவலர்கள் மீது தொடரப்படும் வழக்குகளில், வழக்கு தொடரப்பட்டுள்ள மாவட்டத்தின் ஆட்சியரானவர் இவ்விதியின் நோக்கத்திற்காக ஆட்சியராகக் கருதப்படுவார்.

### சென்னை மாநகரத்தின் நீதிமன்றங்களில் வழக்குகள்

**(ii) உரிமையியல் வழக்குகள்:–**

சென்னை நகரத்தில் இருப்புப் பாதை காவல் அல்லது குற்றப் புலனாய்வுத் துறை (C.I.D.) அலுவலர்கள் மீது தொடரப்படும் உரிமையியல் வழக்குகள் விஷயத்தில், ரயில் குற்றப் புலனாய்வுத் துறை, காவல் துறைத் துணைத் தலைவர்கள் மாவட்டங்களில் ஆட்சியர்களுக்குப் பகிர்ந்துகொடுத்துள்ள அதிகாரங்களைச் செலுத்தி அரசாங்க வழக்கறிஞரைக் கலந்தாலோசிக்க வேண்டும். சென்னை, மாநகர காவல் அலுவலர்கள் மீதுள்ள வழக்குகள் நேர்வில், காவல் ஆணையர் அரசாங்க வழக்கறிஞரைக் கலந்தாலோசித்த பின்பு (3) (a) விதியில் கண்டுள்ளபடி காவல் துறை இயக்குநரின் அதிகாரங்களைச் செலுத்தவேண்டும்.

### குற்றவியல் குற்றச்சாட்டுகள்

இருப்புப் பாதை காவல் அல்லது குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்கள் மீதுள்ள குற்றச்சாட்டுகள் விஷயத்தில் முறையே ரயில், குற்றப் புலனாய்வுத் துறை காவல் துறை துணைத் தலைவர்களும். சென்னை மாநகர காவல் அலுவலர்கள் மீதுள்ள வழக்குகள் விஷயத்தில் சென்னை காவல் ஆணையரும், (3) (b) விதியில் கண்டுள்ளபடி மாவட்டங்களில் ஆட்சியர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துள்ள அதிகாரங்களைச் செலுத்தி, கடமைகளைச் செய்து, தாங்கள் கையாளத் தீர்மானித்துள்ள செயல் முறையை காவல் துறை இயக்குநருக்கு அறிவிக்க வேண்டும்.

### (4) உரிமையியல் வழக்குகளிலும் குற்றவியல் குற்றச்சாட்டுகளிலும் பொதுவான விதிமுறைகள்

(a) அரசாங்கமாவது அவர்கள் சார்பில் செயல்படும் தல அதிகாரிகளாவது ஒரு அலுவலரின் எதிர்வாதத்தை அனுமதித்தால், சாதாரணமாக அரசாங்கச் செலவில் ஒரு அரசாங்க வழக்கறிஞரையோ அல்லது ஒரு அரசாங்கக் குற்ற விசாரணை வழக்கறிஞரையோ நியமித்தால் போதுமானதாய் இருக்கும். எதிர்வாதத்துக்கு ஒப்பளிப்பு அளிக்க அதிகாரம் பெற்றுள்ள ஆட்சியர் அல்லது காவல் அலுவலர் வழக்கறிஞர் கட்டணத்துக்குக் கூடுதலாக ரூ.50 வரையறை வரைக்கும் இடைநிகழ்ச் செலவுகளைக் கொடுப்பதற்கு ஒப்பளிப்பு அளிக்கலாம். இடைநிகழ்ச் செலவுகள் ரூ.50 வரையறைக்கு அதிகப்பட்டால், அரசாங்க ஒப்புறுதியைப் பெறவேண்டும். ஒரு தனியான வழக்கறிஞரை அமர்த்த வேண்டியிருக்கும் குற்றவியல் வழக்குகளில், முறையே ஆட்சியர் ரயில் குற்றப் புலனாய்வுத் துறை காவல் துறைத் துணைத் தலைவர் அல்லது சென்னை காவல் ஆணையர், வழக்கு முழுவதற்குமான ஒரு உச்சத் தொகைக்குட்பட்டு ஒரு தினக் கட்டணத்தை முன்னதாகவே நிச்சயிக்க வேண்டும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

அத்தகைய வழக்கறிஞருக்குக் கொடுக்கத்தக்க கட்டணவிகிதமானது, அடியில் குறிப்பிட்டுள்ள தலைநகரல்லாத புறப்பகுதி அரசாங்கக் குற்ற விசாரணை வழக்கறிஞர்களுக்குக் கொடுக்கத்தக்க விகிதங்களுக்கு மேற்படலாகாது:-

| தலைமையிடங்களில் நடத்தப்படும் வழக்குகளுக்காக- | வெளியே உள்ள தலைநகரல்லாத புறப்பகுதி நிலையங்களில் நடத்தப்படும் வழக்குகளுக்காக |
|---|---|
| ஒரு நாளில் நீதிமன்றத்தில் மூன்று மணி நேரம் அல்லது அதற்கு மேல் ஆகும் வேலைக்கு -ரூ.35. | நீதிமன்றத்தில் செலவழித்த அல்லது பயணத்துக்கு எடுத்துக்கொண்ட ஒவ்வொரு நாளுக்கும்-ரூ.50 |
| ஒரு நாளில் நீதிமன்றத்தில் மூன்று மணி நேரத்துக்குக் குறைவான வேலைக்கு-ரூ.15. | |

ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகளில் அரசாங்கக் குற்ற விசாரணை வழக்கறிஞரும் அமர்த்தப்படும்போது முழு நாளுக்கும் அவருக்குக் கொடுக்கத்தக்க உச்சக் கட்டணம் சாதாரணமாக ரூ.50-க்கு மேற்படலாகாது.

ஒரு தனிப்பட்ட வழக்கறிஞர் அமர்த்த வேண்டியிருக்கும் உரிமையியல் வழக்குகளில் நேர்விற்கேற்ப, காவல் துறை இயக்குநராவது அல்லது சென்னை காவல் ஆணையர் வழக்கு முழுவதற்குமான ஒரு உச்சத் தொகைக்குட்பட்ட தினக் கட்டணத்தை முன்கூட்டியே நிர்ணயிக்க வேண்டும்; அந்த உச்சத் தொகையானது காவல் நிலை ஆணை எண்.68 (3) (a) (ii) -ல் குறிப்பிட்டுள்ள ஒழுங்காற்று கட்டணத்துக்கு மேற்படலாகாது. அற்ப வழக்குகளில் நேரில் ஆஜராவது பல சமயங்களில் மிகவும் போதுமானதாயிருக்கலாம்; அப்படியிருக்குமிடத்து ஒரு வழக்கறிஞரை நியமித்தல் மிகையாகும்.

**குறிப்பு.**- இடைநிகழ்ச் செலவு சம்பந்தமாக மேலே குறிப்பிட்ட ரூ.50 வரம்பானது காவல் துறை இயக்குநர் நேர்வில் ரூ.100-க்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

(b) அலுவலர் வழக்கில் வென்று சட்டச் செலவுகளைப் பெறுவதுமன்றி (தனக்குரிய சொந்த ஈடாகவோ மற்றபடியோ) நஷ்ட ஈட்டினையேனும் கொடுக்கப் பெற்றால், அத்தகைய செலவு, நஷ்ட ஈடு, அல்லது ஈட்டிலிருந்து அரசாங்கத்துக்கு ஏற்பட்ட செலவின் அளவு வரைக்கும் அவர் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

**குறிப்பு.**- சாதாரணமாக, வழக்கறிஞர் கட்டணமும் இடைநிகழ்ச் செலவும் நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட சட்டச் செலவுகள் வசூலான பின்புதான் அனுமதிக்கப்படும். ஏனெனில், சட்டச் செலவுகளைத் திரும்பப் பெறுவதற்கான செய்முறையிலும் கூட வழக்கறிஞர் கொஞ்சம் செலவு செய்ய நேரிடும், அனைத்துச் செலவையும் சேர்த்து அனுமதிப்பது எளிதாய் இருக்கும். நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட சட்டச் செலவினை திரும்பப் பெறுவதற்கு முன் செலவினை அனுமதிக்கத் தக்க காரணங்கள் இருந்தால், அவ் விஷயத்தைத் தெளிவாக விளக்க வேண்டும்.

(5) ஒரு காவல் அலுவலர் மீதுள்ள ஒரு உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கையில் நீதிமன்றம் அவருக்கு அனுகூலமாகத் தீர்ப்பளித்திருந்து, ஆனால், அத்தீர்ப்பின்மேல் ரத்தோ திருத்தமோ பெறும் பொருட்டு ஒரு மேல் முறையீடாவது இதர நடவடிக்கையாவது தாக்கல் செய்யப்பட்டால் அத்தகைய மேல் முறையீட்டையோ நடவடிக்கையையோ அரசாங்கச் செலவில் எதிர்க்கவேண்டுமா எனும் பிரச்சனையை முன் சொன்ன விதிகளின் பிரகாரம் முடிவு செய்ய வேண்டும்.

(6) ஒரு அலுவலரின் எதிர்வாதத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள ஒரு வழக்கில் நீதிமன்றத் தீர்ப்பு அவருக்கு எதிராக இருந்தால்,



(a) அத் தீர்ப்பின்மேல் ரத்து அல்லது மாற்றம் பெறும் பொருட்டு அரசாங்கச் செலவில் ஒரு மேல் முறையீட்டினைத் தாக்கல் செய்ய வேண்டுமா அல்லது வேறெந்த நடவடிக்கையேனும் எடுத்துக் கொள்ளவேண்டுமா;

(b) வாதிக்கு அளிக்கப்பட்ட எந்த நஷ்ட ஈட்டினையாவது அலுவலர் மீது விதிக்கப்பட்ட எந்த அபராதத்தையாவது அரசாங்கம் செலுத்த வேண்டுமா; எனும் பிரச்சனைகளை மேற்கண்ட விஷயத்தில் சம்பந்தப்பட்ட அலுவலரின் விண்ணப்பத்தின் பேரில் அவருக்கு அடுத்த மேலதிகாரி எடுக்கும் நடவடிக்கையின்மேலாவது, அவரது மேலதிகாரியின் முறையீட்டின்மேலாவது, அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும். எதுவாயினும், அரசாங்க உத்தரவுகளைப் பெற்றுக்கொண்டு, நேர்விற்கேற்ப, மேற்கூறிய (3) (a) அல்லது (3) (b) கூறுகளில் கண்டுள்ள நடைமுறையை மற்ற அனைத்து விஷயங்களிலும் பின்பற்ற வேண்டும்.

(7) ஒரு காவல் அலுவலர் அவரது பதவி முறைமையில் செய்த செய்கைகளுக்காக அவர் மீது ஓர் உரிமையியல் அல்லது குற்றவியல் வழக்குத் தொடரப்பட்டு, அத்தகைய வழக்கின் எதிர்வாதம் அனுமதிக்கப்பட்டிருந்தால், அது சம்பந்தமாக அவர் மேற்கொள்ளும் பயணத்துக்கு அவர் தரத்துக்கு நிகரான அலுவலரின் சுற்றுப் பயணத்துக்கு ஏற்றுக் கொள்ளத்தக்க பயணப்படியை அவருக்குக் கொடுக்கலாம்.

(8) ஓய்வு பெற்ற ஒரு காவல் அலுவலர் மீது அவர் பதவி முறைமையில் செய்திருந்த செய்கைகளுக்காக உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் எவையேனும் தொடரப்பட்டு அத்தகைய நடவடிக்கைகளின் எதிர்வாதம் அனுமதிக்கப்பட்டிருக்கும் விஷயத்தில், அத்தகைய நடவடிக்கைகள் சம்பந்தமாக அவர் செய்த பயணங்களுக்கு, அவர் ஓய்வு பெறும் காலத்தில் சுற்றுப் பயணங்களுக்கு என்ன விகிதங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கவையோ அவ் விகிதங்களின்படி அவர் பயணப்படியை வாங்கிக் கொள்ளலாம்.

(9) காவல் அலுவலர்கள் மீது வரும் சட்ட நடவடிக்கைகள், குறிப்பாக உரிமையியல் வழக்குகள், அவர்கள் ஆற்றும் பொது அலுவல்களுக்கு இடையூறாயிருப்பதுடன் அவர்களுக்கு அலைக்கழிவு விளைவிக்கக்கூடியதாயிருப்பதால், அத்தகைய நடவடிக்கைகளைக் கூடிய விரைவில் நடத்தும்படி நீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று, மாவட்ட ஆட்சியர் சம்பந்தப்பட்ட அலுவலருக்காக ஆஜராகும் வழக்கறிஞருக்கு மனதில் பதியுமாறு செய்திட வேண்டும்.

## PSO 69

அரசாங்கப் பணியாளர் சரியாகக் கடமைகளையாற்றுகையில் அவர்களைக் கலவரப்படுத்தி தடங்கல் செய்யும் பொருட்டு அவர்கள்மீது இலஞ்சம் வாங்கினதாகப் பொய்யான தீய எண்ணமுள்ள குற்றச்சாட்டுகள் அடிக்கடி செய்யப்படுகின்றன. அத்தகைய குற்றச்சாட்டுகளினின்று தங்களது பணியாளரைப் பாதுகாக்கும் பொருட்டு, சம்பந்தப்பட்ட அரசாங்கப் பணியாளருக்கு, குற்றம் சாட்டுபவர்கள் மீது அவர் வன்மையான நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையாயிருக்கக்கூடிய சட்ட உதவியைக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது. ஒரு அரசாங்கப் பணியாளர் மீது செய்யப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய்யானவையென்றோ தீயகருத்துள்ளவையென்றோ நம்புவதற்கு நல்ல காரணம் இருக்கையில் அவைகளைச் செய்பவர்கள் மீது அவர் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விரும்பினால், மாநிலத் தலைமை நகரத்தில் காவல் துறைத் தலைவரும் தலைநகரல்லாத புறப்பகுதியில் மேற்கண்ட அரசாங்கப் பணியாளர் பணிபுரியும் அலுவலகத்தின் மாவட்டத் தலைவரும் (மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து) பொருத்தமான அரசாங்கச் சட்ட அலுவலரை மேற்கண்ட அரசாங்கப் பணியாளருக்குத் தேவையான சட்ட அறிவுரையைக் கொடுக்கும்படியும் அவர் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகும்படி ஆவண செய்யவேண்டும். துறைத் தலைவர் அல்லது மாவட்டத் தலைவரே அவதூறு செய்யப்பட்டவராயிருக்கையில் நேர்விற்கேற்ப, மாநில அரசாங்கமாவது, மாவட்டத் தலைவருக்கு அடுத்த மேல்நிலை அதிகாரியாவது ஒப்புதலளிக்க வேண்டும்.

Scanned by CamScanner

## PSO 70 - குற்றவியல் குற்றச்சாட்டுகளை நடத்த அரசாங்க குற்ற விசாரணை வழக்கறிஞர்களைத் தவிர மற்ற வழக்கறிஞர்களுக்குக் கட்டணங்கள்.– Fees to pleaders other than Public Prosecutors appointed to conduct criminal prosecutions.-

(1) குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு, 1973 பிரிவு 24ன் கீழ் குற்றச்சாட்டுகளை நடத்துவதற்கு நியமிக்கப்படும் அரசாங்கக் குற்ற விசாரணை வழக்கறிஞர்களைத் தவிர மற்ற வழக்கறிஞர்களுக்கு நீதிமன்றத்தில் ஒரு நாளன்று மூன்று மணி நேரம் அல்லது அதற்குமேல் ஆகும் வேலைக்காக நாளொன்றுக்கு ரூ.35-க்கு அதிகப்படாத ஓர் விகிதப்படியும், அத்தகைய வழக்கறிஞருக்கு நீதிமன்றத்தில் ஒரு நாளன்று மூன்று மணி நேரத்துக்குக் குறைவான வேலைக்காக நாளொன்றுக்கு ரூ.15 விகிதப்படியும், அரசாங்கத்துக்கு எழுதிப் பார்வைக்கு அனுப்பாமல், ஆட்சியர் ஒப்பளிப்பு அளிக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்; எனினும், ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகளில் அத்தகைய வழக்கறிஞர் அமர்த்தப்பட்டிருக்கும்போது, முழு நாளுக்கும் அவருக்குக் கொடுக்கத்தக்க உச்சக் கட்டணம் ரூ.50-க்கு மேற்படலாகாது. வெளியூர் நிலையங்களில் நடத்தும் குற்றவியல் வழக்குகளுக்காக, அத்தகைய வழக்கறிஞர்களுக்கு நீதிமன்றத்தில் அல்லது பயணத்தில் செலவழித்த ஒவ்வொரு நாளுக்கும் ரூ.50 கட்டணம் அனுமதிக்கப்படும். அத்தகைய ஊதியம் காரணமாகக் கொடுக்கப்படும் பட்டிகளை அடியிற்கண்ட படிவத்தின்படியுள்ள ஒரு சான்று ஆதரிக்க வேண்டும்:-

"அரசாங்கக் குற்ற விசாரணை வழக்கறிஞருக்கோ குற்றத்துறை அரசாங்க உதவி வழக்கறிஞருக்கோ பொது நலனை முன்னிட்டு விசாரணையில் ஆஜராவதற்கு வெகு சங்கடமாயிருந்ததென்றும், பொது நலன் காரணமாக அந்த வழக்கை ஒத்திவைக்க முடியவில்லையென்றும் உறுதி கூறுகிறேன்."

### சிறப்பு மற்றும் உள்ளூர் சட்டங்களின்கீழ் குற்றச்சாட்டுகளை நடத்த அமர்த்தப்படும் வழக்கறிஞர்களுக்குக் கட்டணங்கள்

(2) சிறப்பு மற்றும் உள்ளூர் சட்டங்களின்கீழ் குற்றச் சாட்டுகளை நடத்த வழக்கறிஞர்கள் அமர்த்தப்படும் வழக்குகளில், வருவாய் வாரியத்தினரும் ஆட்சியர்களும் அடியிற்கண்ட வரையறைகளுக்குட்பட்டு நாளொன்றுக்கு ரூ.25-க்கு அதிகப்படாத ஒரு விகிதத்தின்படி கட்டணங்களை அனுமதிக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்கள்.

(i) வருவாய் வாரியத்தின் ஒவ்வொரு வழக்கிலும் ரூ.300 வரைக்கும்.

(ii) ஆட்சியர்கள் ஒவ்வொரு வழக்கிலும் ரூ.75 வரைக்கும்.

(3) குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பின் 24-வது பிரிவின்கீழ் குற்றச் சாட்டுகளை நடத்த அமர்த்தப்படும் அரசாங்கக் குற்ற விசாரணை வழக்கறிஞர்களைத் தவிர மற்ற வழக்கறிஞர்கள் தமிழ்நாடு பயணப்படி விதிகளின் VIII-வது பிற்சேர்க்கை (6) விதியின்கீழ் ஏற்கத்தக்க பயணப்படியை பெற்றுக் கொள்வார்கள். யாதொரு தினப்படிக்கும் அவர்களுக்கு உரிமை கிடையாது.

### மரண தண்டனைக் குற்றங்கள் சாட்டப்பெற்ற ஆட்களுக்காக எதிர்வாதம் செய்ய அமர்த்தப்படும் வழக்கறிஞர்களுக்கு கட்டணங்கள்

(4) அமர்வு நீதிபதிகள் அரசாங்கத்தின் பார்வைக்கு அனுப்பாமல் ஒவ்வொரு வழக்கிலும் ரூ.250 வரையறைக்குட்பட்டு நாளொன்றுக்கு ரூ.25-க்கு அதிகப்படாத ஒரு விகிதத்தின்படி கட்டணங்களை அனுமதிக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்கள்.



## PSO 71 - அரசாங்கச் செலவில் காவல் அலுவலர்கள் உரிமையியல் வழக்குகளை அல்லது குற்றவியல் குற்ற வழக்குகளை தொடர்தல் விதிகள்.– Institution at the cost of the State of civil suits or criminal prosecutions by Police Officers–Rules.-

அரசாங்கச் செலவில் காவல் அலுவலர்கள் உரிமையியல் வழக்குகளையாவது குற்றவியல் குற்றவழக்குகளையாவது தொடர்வதற்கு ஒவ்வொரு வழக்கிலும் அரசாங்க ஒப்பளிப்பை பெறவேண்டும். அத்தகைய ஒப்பளிப்புக்காக மனு செய்கையில், ஆணை எண்.68-ன் (3)-வது விதியில் கண்டுள்ள நடைமுறையை அது பொருந்தக்கூடிய வரைக்கும் பின்பற்ற வேண்டும். ஒரு வழக்கு அல்லது குற்றச்சாட்டிலிருந்து எழும் மேல் முறையீடுகள் அல்லது இதர நடவடிக்கைகள் சம்பந்தமாக அரசாங்க ஒப்பளிப்பை தனியாக பெற்றுக் கொள்ளவேண்டும்.

## PSO 72 - உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் தொடர்வதாக அச்சுறுத்தல்.– Threat of civil or criminal proceedings.-

(1) ஒரு காவல் அலுவலர் அவரது பதவி முறையில் செய்த செய்கைகளுக்காக அவர் மீது உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்போவதாக அச்சுறுத்தும் செய்தியறிவிப்பு ஏதேனும் வரப்பெற்றால், அவர் உடனடியாக அத்தகைய அறிவிப்பின் நகலொன்றை நேரிய வழி மூலம், அவ்வறிவிப்புக்குப் பதில் கொடுக்க விரும்புகிறாரா என்ற குறிப்புடன், மேலனுப்பி வைக்க வேண்டும். அவர் ஒரு பதிலனுப்ப உத்தேசித்தால், அவர் உத்தேசித்திருக்கும் பதிலின் நகல் ஒன்றை,

(a) அச்சுறுத்தும் நடவடிக்கைகள் உரிமையியல் நடவடிக்கைகளாயிருக்கும் நேர்வில் அவர் சென்னை மாநகர காவல் அலுவலராயிருந்தால் சென்னை காவல் ஆணையருக்கும், அவர் மாவட்ட காவல் அல்லது இருப்பூர்தி காவல், அல்லது குற்றப் புலனாய்வுத் துறையினைச் சேர்ந்த அலுவலராயிருந்தால் காவல் துறைத் தலைவருக்கும்,

(b) அச்சுறுத்தும் நடவடிக்கைகள் குற்றவியல் நடவடிக்கைகளாயிருக்கும் நேர்வில் (i) அவர் அரசாங்க ரயில் காவல் அலுவலராயிருந்தால் D.I.G. (ரயில்வே) சென்னை அல்லது (ii) குற்றப் புலனாய்வுத் துறை (C.I.D.) அலுவலராயிருந்தால் அல்லது குற்றப் புலனாய்வுத் துறை காவல் துறை துணைத் தலைவருக்கும் (iii) அவர் சென்னை மாநகர காவல் அலுவலராயிருந்தால் சென்னை மாநகர காவல் ஆணையருக்கும் (iv) அவர் மாவட்ட காவல் அலுவலராயிருந்தால் மாவட்ட ஆட்சியருக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

(2) அத்தகைய செய்தியறிவிப்பை பெறப்பெறும் காவல் அலுவலர் காவல் துறை இயக்குநர், சென்னை காவல் ஆணையர் அல்லது சென்னை ரயில், அல்லது குற்றப் புலனாய்வுத் துறை காவல் துறை துணைத் தலைவராயிருந்தால் அவர் உடனடியாக அத்தகைய செய்தியறிவிப்பின் நகலொன்றை (சென்னை ரயில் அல்லது குற்றப் புலனாய்வுத் துறை காவல் துறை துணைத் தலைவர் அதை காவல் துறைத் தலைவர் மூலம்) அரசாங்கத்துக்கு அவர் அறிவிப்புக்கு பதிலனுப்ப விரும்புகிறாரா என்பதைக் குறிப்பிட்டு அவர் அனுப்ப உத்தேசிக்கும் யாதொரு பதிலின் நகலுடன், அனுப்பி வைக்க வேண்டும்.

(3) நேர்விற்கேற்ப, காவல் துறை இயக்குநர், காவல் ஆணையர் ரயில் அல்லது குற்றப் புலனாய்வுத் துறை காவல் துறைத் தலைவர்கள் அல்லது மாவட்ட ஆட்சியர் பதில் ஒன்று அனுப்ப உத்தேசித்தால், அப்பதில் வரைவினைபரிசீலனை செய்து, அதில் தேவையெனக் கருதும் திருத்தம் எதையேனும் செய்து, அந்த அலுவலருக்குத் தாம் அவசியம் எனக் கருதும் கட்டளைகளை அனுப்ப வேண்டும். ஐயத்திற்கிடமான நேர்வுகளில், அரசாங்கத்துக்கு முடிவு கேட்டு ஒரு அறிக்கை அனுப்ப வேண்டும். நேர்விற்கேற்ப காவல் துறை இயக்குநர், காவல் ஆணையர் அல்லது ரயில் குற்றப் புலனாய்வுத் துறை காவல் துறை துணைத் தலைவர்கள் ஆட்சியர் அல்லது அரசாங்கம், அதற்கென அங்கீகரிக்கப்பட்ட அல்லது அனுப்பப்பட வேண்டிய முறையில், ஒரு பதிலை அனுப்ப வேண்டும்.



Scanned by CamScanner
Scanned with CamScanner

(4) மேற்படி (1) & (3) உட்பிரிவுகளின் காப்புரைகளின்படி செயல்படுவதில் ஒரு அலுவலர் எந்தத் தவறுதலேனும் இருந்தால் அது ஒழுங்கீனமாக கருதப்பட்டு, உள்ளபடியாகவே நடவடிக்கைகள் அவர்மீது தொடரப்பட்டால் அரசினரிடமிருந்து சட்ட உதவியைப் பெற அவரை உரிமையற்றவராக்கும்.

(5) சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் போவதாக அச்சுறுத்தும் அறிவிப்பு ஒன்றை வரப்பெற்ற காவல் அலுவலரைப் பொது செலவில் பாதுகாப்பது குறித்த கேள்வியை சாதாரணமாக நடவடிக்கைகள் உண்மையாகவே தொடரப்படும் வரை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை. ஆயினும் காவல் ஆணையர் ரயில் அல்லது குற்றப் புலனாய்வுத் துறை காவல் துறை துணைத் தலைவர்கள் அல்லது மாவட்ட ஆட்சியர் குற்றவியல் வழக்குகளிலும் நேர்விற்கேற்ப காவல் துறைத் தலைவர் அல்லது காவல் ஆணையர் உரிமையியல் வழக்குகளிலும், ஒரு காவல் அலுவலர், மீது நடவடிக்கைகள் அநேகமாய்த் தொடரப்படும் என்று கருதினால் அவர் மேற்படி (1)-வது உட்பிரிவில் குறிப்பிட்ட செய்தியறிவிப்பின் நகலொன்றை வாப்பெற்றவுடனேயே அக் கேள்வியைப் பரிசீலனை செய்யலாம்.

## PSO 73 - அரசினரால், அல்லது அவர்கள் மீது, உரிமையியல் வழக்குகள்.– Civil suits by or against the State.-

(1) அரசினராலோ அல்லது அவர்கள் மீதோ ஒரு உரிமையியல் வழக்கைத் தொடர வேண்டுமானால், அரசாங்க ஒப்பளிப்பைப் பெறவேண்டும். அரசாங்க ஒப்பளிப்புக்கென்று அவர்களுக்கு அனுப்பப்படும் அத்தகைய வழக்குகள் அனைத்திலும் காவல் அலுவலர்களால் அல்லது அவர்கள் மீது போடப்படும் வழக்குகளிலும், வழக்குரைகள், எழுத்து வாக்குமூலங்கள் ஆகியவற்றை, அவசரங்களில் தவிர மற்ற நேர்வுகளில் தாக்கல் செய்வதற்கு முன்பு, அரசாங்கத்தால் அங்கீகாரம் அளிக்கப் பெற்றுக் கொள்ளவேண்டும். அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர், காவல் துறைத் தலைவர் அரசாங்கம் சார்பில் வழக்குரைகளை ஒப்பமிட்டும் வழக்கின் விஷயங்களை அறிந்திருந்தால் எழுத்து வாக்கு மூலங்களைச் சரிபார்த்தும் மேற்கொண்டு செயலாற்றலாம். காவல் துறையை ஒட்டிய ஓர் விஷயம் சம்பந்தமாக அரசினருக்கு எதிராக ஒரு உரிமையியல் வழக்கு தொடரப்பட்டால் காவல் கண்காணிப்பாளர் அவ்விஷயத்தை ஆணைக்கென்று காவல் துறைத் தலைவருக்கு மேலனுப்ப வேண்டும். சாதாரணமாக அத்தகைய வழக்குகளின் எதிர்வாத பொறுப்பு மாவட்ட அரசாங்க வழக்கறிஞரைச் சார்ந்ததால் காவல் துறை இயக்குநர் அவரது சேவையினை ஆட்சியர் மூலம் பெறவேண்டும்.

**அரசினரைப் பாதிக்கும் வழக்குத் தொடர்பு சம்பந்தமாக சட்ட உதவியைப் பெற வேண்டியது**

(2) அரசினரைப் பாதிக்கும் வழக்குத் தொடர்பு சம்பந்தமான சட்ட உதவி விஷயத்தில் அரசாங்கம் பின்வரும் ஆணைகளை வெளியிடுகின்றது:-

(a) அரசினர் சார்பில் ஒரு வழக்கைத் தொடரும் முன்போ அல்லது ஒரு வழக்கின் எதிர்வாதத்தை ஏற்றுக்கொள்ளும் முன்போ சட்ட அறிவுரையைப் பெற வேண்டுமென்ற பொது விதி எதுவும் அமுலில் இல்லை என்று அரசாங்கத்தின் கவனத்துக்கு வந்திருக்கிறது. அரசினரால் அல்லது அவர்கள் மீது தொடரப்படும் வழக்குகள் சம்பந்தமாக அத்தகைய அறிவுரையை எப்போதும் பெற்றுக் கொள்வது விரும்பத்தக்கதென்று மாநிலஅரசினர் கருதுகின்றனர். உரிமையியல் நடைமுறை விதித் தொகுப்பின் 80-வது பிரிவின்கீழ் கொடுக்கப்படும் வழக்கு அறிவிப்பு சம்பந்தமாக முக்கியமான விஷயங்களில் சட்ட அறிவுரையைப் பெறுவது அறிவிப்பைக் கவனிக்கும் அதிகாரி விரும்பக் கூடியதாய் இருந்தாலும், அரசினருக்கு எதிராக அறிவிப்புக் கொடுக்கப்பட்டுள்ளமை மட்டுமே காரணமாக அத்தகைய அறிவுரையைப் பெறுவது அவசியமில்லை. அரசினர் சார்பில் வழக்குகளை தொடர அல்லது வழக்குகளை எதிர்த்து வாதாட ஒப்பளிப்பு அளிக்க அதிகாரமுள்ள அலுவலர்கள், அவர்கள் பெறக்கூடிய சட்ட அறிவுரையை ஏற்க மறுத்தால் அவர்களது தீர்மானத்துக்கான



காரணங்களை தெளிவாக எழுதி வைக்க வேண்டியிருந்த போதிலும், சட்ட அறிவுரையைக் கையாளவேண்டுமென்ற கட்டாயமில்லை. இவ் விதிமுறைகளுக்குட்பட்டு, ஒரு வழக்கு அல்லது மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வதற்கு அல்லது அனுமதிப்பதற்கு முன்பு, அந்த வழக்காவது மேல் முறையீடாவது சட்டப்படி ஆதரிக்கத்தக்கதா என்பதற்குப் பொருத்தமான சட்ட ஆலோசகரின் கருத்தினைப் பெறவேண்டியது ஒவ்வொரு அலுவலரின் கடமையாகும். ஆட்சியர்கள் அல்லது இதர மாவட்ட அலுவலர்கள் விஷயத்தில், மாவட்ட சட்ட வழக்கறிஞரைக் கலந்தாலோசித்து, அப்படி கலந்த விஷயத்தை உயர்நிலை அதிகாரிக்கு அனுப்பும் எந்த அறிக்கையிலும் குறிப்பிடவேண்டும். வருவாய் வாரியம் மற்றும் இதர துறைத் தலைவர்கள், ஆகியோர் விஷயத்தில் சென்னை அரசாங்க வழக்கறிஞரைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

(b) சென்னை மாநகரத்தில் காவல் துறை இயக்குநருக்கு (மாநில அரசாங்கத் தலைமை வழக்கறிஞர்) இதர சட்ட அலுவலர்கள், ஆகியவர்களின் அறிவுரையைப் பெற உரிமையுண்டு, ஆனால் அவர் மாநில அரசு தலைமை வழக்கறிஞரின் கருத்தைப் பெற வேண்டுமானால் நிர்வாகத் துறையில் அரசாங்கத்தை எழுதிக்கேட்க வேண்டும்; அறிவுரைத் தரும்படி அவரை நேரடியாக கேட்கக்கூடாது.

(3) சென்னை மாநகர காவல் நீதிமன்றங்களில் வழக்குகளை நடத்துவதற்குத் தன்வசமுள்ள குற்ற விசாரணை வழக்கறிஞர் தொகுதியானது போதாததாகவோ தகுதியற்றதாகவோ இருக்கும் விஷயங்களில் காவல் துறை இயக்குநர் அரசாங்க குற்ற விசாரணை வழக்கறிஞரின் சேவையினைப் பெற அதிகாரம் பெற்றிருக்கிறார்.

(4) ஏதொரு மத்திய சட்டத்தின் செல்திறன் முதலியவற்றை உட் படுத்தும் பிரச்சனை அடங்கிய ஒரு வழக்கின் அறிவிப்பு சேர்ப்பிக்கப்பட்டவுடனடியாக இந்திய அரசாங்கத்தில் சம்பந்தப்பட்ட ஆட்சித் துறைக்கும் முக்கியமாய்த் தொடர்புடைய மத்திய அரசாங்க அதிகாரிக்கும் உதாரணமாக பம்பாய் கைத்தறி ஆணையருக்கும் விண்ணப்பம், உறுதி மொழிப் பத்திரம் ஆகியவற்றின் நகல் ஒன்றை அனுப்பி வைக்க வேண்டும் மேலும் எதிர் ஆணையுறுதி ஆவணத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான விளக்கவுரையைத் தரும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டு, மேற்கண்ட வழக்கை மாநில அரசாங்கத்தில் செயற்படுத்தி வரும் யாதொரு சட்ட அலுவலருடன் அவர்கள் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளும் பொருட்டு அவர்களுக்கு மேற்கண்ட அலுவலரைத் தெரியப்படுத்த வேண்டும். அத்தகைய செய்தியறிவிப்பின் நகல் ஒன்றை சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

## PSO 74 - காவல் அலுவலர்களுக்கு விளைவித்த துன்பம் பொருட்டு ஊழிய இழப்பிற்கு பொது மக்களுக்கு எதிராகக் கோரப்படும் உரிமைகள்.– Claims for loss of Service against members of the public for the injury caused by them to Police Officers –

பொது மக்களில் ஒருவர் அல்லது மக்களின் அசட்டை காரணமாக காவல் அலுவலர்கள் அலுவல் புரியும்போதோ ஓய்வில் இருக்கும்போதோ ஏற்பட்ட காயத்தைக் குறித்த முழு விஷயங்களை அவர்கள் தங்கள் மேல்நிலை அதிகாரிகள் மூலம் காவல் துறை இயக்குநருக்கு உடனடியாக அறிக்கை செய்ய வேண்டும். காயத்துக்குப் பொறுப்பாளியாயிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கட்சியினர் மீது ஊழிய நஷ்டத்துக்காக ஒரு உரிமை வாதம் தொடர்வது பற்றிய பிரச்சனையை அரசாங்கம் ஒவ்வொரு விஷயத்திலும் தங்கள் சட்ட ஆலோசகரைக் கலந்தாலோசித்துத் தீர்மானிக்கும்.

❋❋❋❋❋❋

Scanned by CamScanner

# அத்தியாயம் - 10

## அரசிதழ் பதிவுறா அலுவலர்களைத் தண்டித்தலும் அவர்களது மேல்முறையீடும்

## PUNISHMENT OF AND APPEAL FROM NON-GAZETTED OFFICERS

### PSO 75

(1) தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணியாளர் தொகுதிக்காகவும் தமிழ்நாடு சிறப்புக் காவல் சார்நிலைப் பணியாளர் தொகுதிக்காகவும் அரசாங்கம் வெளியிட்ட ஒழுங்கு & மேல் முறையீடு விதிகள் தநா. பணியாளர் நடைமுறை நூல் தொகுதி - IVல் அச்சிடப்பட்டுள்ளன.

(2) யாதொருவர் சம்பந்தமாக தொடங்கப்பட்டுள்ள நடவடிக்கைக்கு எதிராக அவர் தற்காத்துக்கொள்ளப் போதுமான வாய்ப்பு அவருக்குக் கொடுக்கப்பட்டாலன்றி மற்றபடி அவரைத் தண்டிக்கலாகாது என்பது ஒழுங்கு முறையின் அடிப்படைக் கொள்கை.

### PSO 76 - கீழ்படிநிலைக்கு இறக்குதல்.– Reduction to lower rank.-

(1) மிகத் தனிப்பட்ட விஷயங்களில் மட்டும், அதுவும் கீழ்படிநிலையிலிருந்து உயர்த்தப்பட்டவர்களிலிருந்து மாத்திரமே, கீழ்படிநிலைத் தரத்துக்கு இறக்க வேண்டும்;

(2) குற்றப் பட்டியல்களின் மேல் ஒரே சமயத்தில் பல தரங்களுக்கு அல்லது பல சம்பள உயர்வுப் படிகளுக்குக் கீழே இறக்கித் தண்டிக்கக் கூடாது. கடுமையான குறைத்தல்கள் விதிகளின் சொல்லளவில் சரியாயிருக்கலாம். ஆனால் கருத்தளவில் அவை பொருத்தமற்றவை. எவ்வாறு நோக்கினும், அவற்றை விதிப்பது விரும்பத்தக்கதல்ல.

### PSO 77 - நிலை பேறிலாப் பணி அலுவலர்களைத் தண்டித்தல் – தண்டனை அளிக்கத்தருந்த அதிகாரிகள்.–

### Punishment of officiating officers - officers competent to award.-

ஒரு அலுவலர் ஒரு அலுவல் அல்லது பதவிப் பொறுப்பில் (அப்பதவியில் அவர் பதிலியாக நியமிக்கப்பட்டிருத்தலுக்கு மாறாக) அமர்த்தப்பட்டிருத்தல், ஒழுங்கு & மேல் முறையீடு விதிகளின் 3-வது விதியில் பற்பல அதிகாரிகளுக்குக் கொடுத்துள்ள தண்டனை அதிகாரங்களைப் பாதிக்காது. நிலை பேறில்லாப் பணி அலுவலர் ஒருவரை அவரது பதவியில் ஒரு நிலையான அதிகாரியை நடத்தும் வண்ணமே நடத்த வேண்டும்.

### PSO 78 - சம்பளப் பிடித்தம்.– Recovery from pay.-

(1) அசட்டையால், அல்லது ஆணைகளை மீறுதலால், அரசாங்கத்துக்கு விளைவித்த பணநஷ்டம் முழுவதையுமோ ஒரு பகுதியையோ சம்பளத்திலிருந்து திரும்பப் பெறும்படியான தண்டனையை விதிக்கும் அதிகாரி ஒழுங்கு & மேல் முறையீடு விதி 3 (a) யில் குறிப்பிட்டுள்ள நடைமுறையை அனுசரிக்க வேண்டும்.

(2) அரசுக்கு ஏற்பட்ட பண இழப்புக்கு அரசு ஊழியர் பொறுப்பு என அதிகாரி முடிவு செய்திடும் போது இயன்றவரை முழு அல்லது பகுதி தொகையினை மீளப்பெற வேண்டும். வேறு ஏதேனும் வகை ஒழுங்கு நடவடிக்கை தவிர்க்கப்பட வேண்டும்; ஒரே குற்றத்திற்கு இரு தண்டனைகள் விதிப்பது சட்டமுறையாக இருந்தாலும் இயற்கை நீதிக்கு முரணானதாகும்.



(3) பண இழப்பானது அரசு ஊழியரின் கவனக்குறைவு அல்லது அசட்டையின் காரணம் மற்றும் குற்றமுறு எண்ணம் இல்லை என முடிவு செய்யப்பட்டால், இயன்ற அளவு முழு அல்லது பகுதி இழப்புத் தொகையினை பிடித்தம் செய்தல் போதுமானதாகும், மற்றும் அத்தகைய நேர்வுகளில் மீளப் பெறுதல் போதுமான தண்டனையாகும். ஆயினும் சில நேர்வுகளில் முழுமையாக அல்லது பகுதியாக மீளப்பெற இயலாதவிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரியானவர் குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் மீது தான் பொருத்தமெனக் கருதும் தண்டனையினை விதிக்கலாம்.

(4) குற்றமுறு எண்ணம் தெளிவாக இருக்கிறவிடத்து, நீதிமன்றத்தில் குற்ற வழக்கு தொடரப்பட வேண்டும்; தொகை அற்பமாக இருக்கும் போது உரிய துறை வழியிலான தண்டனை விதிக்கலாம்.

(5) மீளப் பெற வேண்டிய தொகையினை முடிவு செய்திடும் போது, இழப்பிற்கான சூழ்நிலைகள் மட்டுமேயன்றி அரசு ஊழியரின் நிதி நிலைமையினையும் பரிசீலிக்க வேண்டும். ஏனெனில் விதிக்கப்படும் தண்டனையானது அவரது எதிர்கால பணித் திறனைப் பாதிக்கலாகாது.

### PSO 79 - ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம்.– Recovery from pension.-

(1) (a) (i) ஓய்வு பெறும் அரசு ஊழியர் ஓய்வு பெறுவதற்கு முன்னர் அவரிடமிருந்து அரசுக்கு சேர வேண்டிய நிலுவைத் தொகை ஏதும் இல்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அத்தகைய நிலுவைத் தொகை ஏதேனும் காரணத்திற்காக பெறப்படவில்லை (அ) மதிப்பீடு செய்யப்படாதிருக்கும் போது, ஓய்வு பெறும் அரசு அலுவலர் ஒரு பொருத்தமான அரசு ஊழியரின் பிணையமளிக்க வேண்டுறுத்தப்பட வேண்டும் அல்லது பொருத்தமான ரொக்கத்தொகை வைப்பீடு செய்திட வேண்டும் அல்லது அவருக்கு கொடுக்கப்பட வேண்டிய பணிக்கொடையிலிருந்து, போதுமான தொகை நிலுவை சரிகட்டப்படும் வரை நிறுத்தி வைக்கப்பட வேண்டும் அல்லது பணி ஓய்வு தேதியிலிருந்து ஆறு திங்கள் காலம் வரை எது முன்னரோ அது வரை அளிக்கப்பட வேண்டிய ரொக்க வைப்பீட்டுத் தொகை அல்லது நிறுத்தம் செய்யப்பட வேண்டிய பணிக்கொடைத் தொகையானது, நிலுவையில் உள்ள மதிப்பீட்டுத் தொகையுடன் 25 விழுக்காடு சேர்த்த தொகையினை விட கூடுதலாக இருத்தல் கூடாது. பிடித்தம் செய்யப்பட வேண்டிய தோராயமான தொகை மதிப்பீடு செய்ய இயலாத நேர்வில், வைப்பீடு செய்து கொள்ளப்பட வேண்டிய தொகை (அ) நிறுத்தம் செய்யப்பட வேண்டிய பணிக்கொடைத் தொகை, பணிக்கொடையில் 10 விழுக்காடு (அ) ரூ.1000/- எது குறைவோ அதற்குள் வரையறைகுட்பட்டிருக்கும் தொடர்பான அதிகாரியின் பணிஓய்வு தேதியிலிருந்து, ஆறு திங்களுக்கு மேற்படாத காலத்திற்குள் அரசுக்கு சேரவேண்டிய தொகை பிடித்தம் (அ) சரிகட்டல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அத்தகைய காலத்திற்குள் அந்த அதிகாரிக்கு எதிராக அரசு நிலுவைத் தொகைக்கு உரிமை கோரிக்கை செய்யப்படவில்லையெனில், அந்த அரசு ஊழியருக்கு எதிராக யாதொரு நிலுவைக் கோரிக்கை இல்லையென ஊகம் கொள்ளப்படும்.

(ii) ஓய்வு பெற்ற அரசு ஊழியரிடமிருந்து, பிடித்தம் செய்யப்பட வேண்டிய ஏதேனும் நிலுவைத் தொகை பற்றி அவர் ஓய்வு பெற்ற பிறகு இரு வருடம் கழித்து தெரியவந்தால், அந்நேரத்தில் சாதாரணமாக பிணையம் விடுவிக்கப்பட்டிருக்கும் அல்லது ரொக்க வைப்பீடு அல்லது பணிக்கொடையிலிருந்து நிறுத்தம் செய்யப்பட்ட தொகை திரும்பக் கொடுக்கப்பட்டிருக்கும்; பிடித்தம் செய்யப்படாத தொகை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமா (அ) காலத்திற்குள் மதிப்பீடு செய்யாத மற்றும் பிடித்தம் மேற்கொள்ளச் செய்திடாத பொறுப்புள்ள அரசு ஊழியரிடமிருந்து பிடித்தம் செய்திட வேண்டுமா எனும் வினா தகுதிப்பாடுகளின் கீழ் பரிசீலனை செய்யப்படும்.

(b) ஆயினும் ஒரு அலுவலரது பணியானது முற்றிலும் உளநிறைவுகரமாயில்லாதிருக்குமிடத்து ஓய்வூதியத் தொகையை நிரந்தரமாகக் குறைப்பதற்கு குடிமைப்பணி அலுவலர் விதிகளின் 470(b) பிரிவு அனுமதிக்கிறது; ஒரு அலுவலரின் ஓர் குறிப்பிட்ட மோசடி அல்லது அசட்டை உதாரணத்தைச் சான்றாக்கிக் கொண்டு அதன் அடிப்படையில், ஓய்வூதியத்தைக் குறைக்கும் நோக்கத்திற்காக

Scanned by CamScanner
Scanned with CamScanner

மேற்கண்ட பிரிவின் பொருளுக்கு ஏற்ப, அவரது பணி முழுவதும் திருப்தியற்றதாய் இருந்திருக்கிறதென்று அரசாங்கம் ஓர் தீர்ப்பு செய்வது நியாயமானதாகும், ஆகையால், அத்தகைய நேர்வுகளில், காவல் துறைத் தலைவரின் பரிந்துரையுடன் ஓய்வூதியக் கட்டுகளை மாநில தலைமைக் கணக்காயர் மூலம் உத்தரவுகளுக்கென்று அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

(2) (a) மாறாக அரசுக்குச் சேரவேண்டிய தொகையானது, அலுவலருக்குரிய கடைசிச் சம்பளம் அல்லது விடுப்பு ஊதியத்தை விட அதிகமாக இருப்பின், PSO 79(1) (a)வில் விதிக்கப்பட்டுள்ளவாறு தொகையினை திரும்பப் பெற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(b) எப்படியாயினும், ஓய்வுபெறும் அரசுப் பணியாளர் செலுத்த வேண்டிய தொகை நிலுவையாக இருப்பின் ஒரு நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக நடவடிக்கை தொடரவோ, அல்லது அத்தகைய செயல் முறையைக் கையாளுவது பயனற்றதெனக் கருதினால் நஷ்டத்தை அரசாங்க கணக்கில் தள்ளுபடி செய்திட, நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(3) 1938-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ம் தேதியன்றோ அதற்குப் பின்னரோ பணியில் சேர்ந்த ஒரு அலுவலரின் ஓய்வூதியத்திலிருந்து, அவரது பணிக் காலத்தில் அவரது அசட்டை அல்லது மோசடியினால் அரசாங்கத்துக்கு நேர்ந்ததென நீதிமன்ற அல்லது காவல் துறை நடவடிக்கைகளில் முடிவு செய்யப்பட்ட நஷ்டங்களின் நிமித்தம் யாதொரு தொகையைத் திரும்பப் பெறும்படி உத்தரவிடும் உரிமையை அரசாங்கம் தங்களிடமே வைத்திருக்கிறது.

வரம்புரையாக -

(a) அத்தகைய துறை நடவடிக்கைகள், மேற்கண்ட அலுவலர் பணியில் இருக்கையில் தொடரப்படாமலிருந்தால்,

(i) அரசாங்க ஒப்பளிப்பு இன்றி தொடரப்படலாகாது;

(ii) நடவடிக்கை தொடங்குவதற்கு முன்பு 4 ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி சம்பந்தமாக இருத்தல் வேண்டும்;

(iii) அத்தகைய அதிகாரியினால் மற்றும் அரசு நெறியுறுத்தும் அத்தகைய இடத்தில், அலுவலர் பணியில் இருக்கும் போது பணி நீக்க உத்தரவு பிறப்பிக்க மேற்கொள்ளும் துறை நடவடிக்கை நடைமுறைகளுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(b) அத்தகைய நீதிமன்ற நடவடிக்கைகள், அலுவலர் பணியிலிருக்கும் போது தொடங்கப்படவில்லையெனில், அத்தகைய தொடங்கப்படுதலுக்கு முன்னர் 4 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட நிகழ்வு (அ) வழக்கு மூலம் காரணமாக தொடங்கப்படுதல் கூடாது.

(c) இறுதி உத்தரவுகள் பிறப்பிப்பதற்கு முன்னர் TNPSC யுடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

**விளக்கம் :** குற்றச்சார்த்து விவர அறிக்கை வழங்கப்பட்ட தேதி முதல் துறை நடவடிக்கை தொடங்கப்பட்டதாகக் கருதப்படும். நீதிமன்ற நடவடிக்கை (i) குற்றவியல் வழக்கில் குறையீடு (அ) காவல் அதிகாரி அறிக்கையின் பேரில் குற்றவியல் நடுவர் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் தேதி முதல் மற்றும் (ii) உரிமையியல் வழக்குகளில் நீதிமன்றத்தில் வழக்குரை தாக்கல் செய்யப்படும் தேதி முதல் தொடங்கப்பட்டதாக கருதப்படும்.

## PSO 80 - பணி நிலை இறக்கம், கட்டாய பணி ஓய்வு, பணியறவு அல்லது பணி நீக்கத்திற்கு முன்பு நடைமுறை.– Procedure prior to Reduction, Compulsory Retirement, Removal or Dismissal:-

(1) பணி நிலை இறக்கம், கட்டாய பணி ஓய்வு, பணியறவு அல்லது பணி நீக்க தண்டனைகள் விதிப்பதற்கு முன்பு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் ஒழுங்கு & மேல்முறையீடு விதிகள் 3 (b) இல் குறிப்பிடப்பட்டுள்ளன.



(2) (a) ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட்ட நிகழ்வு ஒன்று நேரிட்டதன் மேல், அந்நிகழ்வு அறிவிக்கப்பட்டிருக்கும் பொறுப்பான அலுவலர், சொல்லப்பட்ட விஷயங்களை முதல் நோக்கில் உண்மையை நிலைநிறுத்துவதற்கு அவர் தேவையெனக் கருதும் விசாரணை எதையேனும் செய்ய வேண்டும். ஒழுங்கு நடவடிக்கைக்குத் தேவைப்பட்ட குற்ற வழக்கானது முதல் நோக்கில் இருப்பதாக முதல் விசாரணையில் வெளியானால், தண்டனை விதிப்புக்கு ஆரம்ப ஏற்பாடான முழு நடைமுறையையும் செயற்படுத்த வேண்டுமா என்பதைப்பற்றி, மேற்கண்ட அலுவலர், அவர் ஆய்வாளர் அல்லது அதற்கு மேற்பட்ட பதவியாளராயிருக்கும் நேர்வில் அவரோ அல்லது அவருக்கு அடுத்த மேல் நிலை அதிகாரியோ, ஒரு முடிவுக்கு வர வேண்டும். மேலும் அவர், அக்குற்றத்திற்கு ஒரு வாய்மொழி விசாரணை தேவையாயிருக்குமா என்று தீர்மானிக்க வேண்டும். தண்டனை விதிப்புக்கு ஆரம்ப ஏற்பாடான முழு நடைமுறையைச் செயல்படுத்தத் தீர்மானித்தால், முதல் விசாரணையில் பதிவான சாட்சியத்தின் ஆதாரத்தைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட குற்றச்சாட்டு அல்லது சாட்டுகளை வனையவேண்டும்.

(b) ஒரு தண்டனையை விதிக்க அதிகாரமுள்ள அலுவலரே குற்றச்சாட்டுகளை வனைய வேண்டுமென்றோ, அல்லது அத்தகைய அலுவலரே விசாரணையையும் கூட நடத்தவேண்டுமென்றோ அவசியமில்லை தண்டனையை விதிக்க அதிகாரமுள்ள அதிகாரியின் உத்தரவின்படி செயலாற்றும் எந்த அலுவலரேனும் குற்றச்சாட்டை உருவாக்கலாம். விசாரணையையும் நடத்தலாம். ஆயினும் இது வேறெந்த அலுவலராவது குற்றச்சாட்டுகளை உருவாக்கி விசாரிக்கக்கூடாதென்று பொருள்படாது. அலுவலர் ஒருவர் எச்சமயத்திலேனும், தண்டனை விதிக்க அதிகாரமுள்ள அதிகாரியின் குறிப்பிட்ட சட்ட இசைவின்றி தனக்கு நேராகச் சார்நிலைபணியாளர்மீது, அவர் ஒரு தண்டத்தை விதிக்க அதிகாரமற்றவராயிருப்பினும், குற்றச்சாட்டை வனையவோ, நடத்தையைப் பற்றி விசாரணை செய்யவோ முடியும்.

(c) குற்றச்சாட்டு அல்லது சாட்டுகளை கவனமாக வனைய வேண்டுமென்பது மிகவும் முக்கியமானது; அப்படிச் செய்கையில் பின்வரும் குறிப்புகளைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

(i) குற்றச்சாட்டு சுருக்கமாயும் தெளிவான சொற்களில் சொல்லப்பட்டதுமாய் இருத்தல் வேண்டும். யாதொரு நிச்சயமின்மையும் தவிர்க்கவேண்டும். குற்றச்சாட்டில், எங்கேனும் கூடியவரை, நிகழ்ச்சி நேரிட்ட தேதிக்கு இடமளிக்க வேண்டும்; சரியான தேதி கிடைக்காவிட்டால் கிட்டத்தட்ட சரியான தேதியையோ கால அளவையோ குற்றச்சாட்டில் குறிப்பிட வேண்டும்.

(ii) கையூட்டு பெறுதல் என்பது போன்ற ஒரு பொதுத்தன்மையுள்ள தனிக் குற்றச்சாட்டு ஒன்றைப் போதிய அளவு திட்டமானதென்று கருதமுடியாது. சொல்லப்படும் இலஞ்சம் வாங்குதலைப் பற்றி விசாரணை செய்வது சம்பந்தமாக, ஒவ்வொரு நிகழ்வின் இலஞ்சம் விஷயத்தைக் குறித்தும் ஒரு தனிக் குற்றச்சாட்டை அமைத்துக் கொள்ளவேண்டும். ஆயினும், குறிப்பான விஷயங்களின் மேல் உள்ள ஒரு தொடரான குற்றச்சாட்டுகளை அவ்விஷயங்களே சான்றாகவுள்ள இலஞ்சம் வாங்குதல் அல்லது திறமையின்மை எனும் ஓர் பொதுக் குற்றச்சாட்டோடு சேர்த்துக் கொள்ளலாம். உதாரணமாக அப்போதைக்கப்போது நிகழும் ஒரு தொடரான காலந்தாழ்ப்புக் குற்றச்சாட்டுகளின் விளைவுகளை சரியான விசாரணைக்குப் பின்பு நடத்தைப் பதிவேட்டில் குறித்துக்கொண்டு, அவற்றின் அடிப்படையாக, திறமையின்மை அல்லது பிடிவாதமான காலந்தாழ்ப்பு எனும் ஓர் பொதுக் குற்றச்சாட்டை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

(iii) மேற்கண்ட குற்றச்சாட்டு அல்லது ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கு ஆதாரமான நிகழ்மைகளைக் குறித்த ஓர் நிறைவானதும் தெளிவானதுமான அறிக்கையை மேற்படி குற்றச்சாட்டு அல்லது சாட்டுகளோடு சேர்த்து குற்றவாளிக்கு அனுப்பவேண்டும்.

(iv) குற்றச்சாட்டை மெய்ப்படுத்தும் சாட்சிகள் (வா. சா. என்று அழைக்கப்படுபவர்களின்) பெயர்கள் அதில் குறிப்பிடப்படும். இதைக் கீழ்க்கண்ட வடிவத்தில் அமைத்துக்கொள்ள வேண்டும்.

"அடியிற்கண்டவர்கள் இது சம்பந்தமாய் விசாரிக்கப்படவுள்ள சில சாட்சிகளாவர். அவ்வப்போது தேவைப்படுகிறபடி மற்றவர்களும் விசாரிக்கப்படுவர்."

Scanned by CamScanner
Scanned with CamScanner

**சாட்சிகள் எதை மெய்ப்படுத்துவார்கள் என்று குறிப்பிட வேண்டியதில்லை**

(V) குறிப்பிட்ட ஒரு போதிய கால அளவுக்குள் அவரது எழுத்து மூல வாக்குமூலத்தைச் சமர்ப்பிக்கும்படியும், அத்துடன் அவர் தர உள்ள ஆவணங்களின் பட்டியலையும் அவரது எதிர்வாதத்துக்கான சாட்சிகளின் பட்டியல் ஒன்றை ஒவ்வொருவரும் எந்தக் குறிப்புகளின்மேல் சாட்சியம் சொல்லப்போவதாக அவர் எதிர்பார்க்கிறாரோ அக்குறிப்புகளுடன் தாக்கல் செய்யும்படியும் குற்றஞ் சாட்டப்பட்டவருக்குக் கட்டளையிட வேண்டும்.

ஆயினும், வாதிக்கட்சியானது தனது எதிர்வாத சாட்சிகளைக் கலைத்துவிடுமென்று பயந்து குற்றஞ்சாட்டப்பட்டவர் எதிரி சாட்சிப்பட்டியல் ஒன்றைத் தனது எழுத்துமூல வாக்குமூலத்துடன் சமர்ப்பிக்க மறுத்துவிட்டால், விசாரணை நடக்கும்போது அவர் தனது சாட்சிகளை முன்னிலைப்படுத்துவதில் யாதொரு தடையும் இருக்கமாட்டாது. ஏனெனில், அவர்களின் பட்டியலை ஏற்கனவே கொடுக்க மறுத்துவிட்டாரென்பதன் காரணமாக அவர்களை விசாரிக்கக் கூடாதெனும் வினா எழாது.

அவர் வாய்மொழி விசாரணையை விரும்புகிறாரோ அல்லது நேரில் கேட்கப்படுவதை மட்டும் விரும்புகிறாரா என்பதை ஒரு நியாயமான கால அளவுக்குள் திட்டமாய் எழுத்துமூலம் அறிவிக்கவேண்டுமென்று அவருக்குக் கட்டளையிட வேண்டும். ஒவ்வொன்றும் என்ன கருத்துள்ளது என்று அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

(d) குற்றச்சாட்டுகளின் நகல்கள் இரண்டையும் ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் அடிப்படையான குற்றங்களையும் வழக்கின்மேல் இறுதி ஆணைகள் பிறப்பிப்பதற்கு முன்பு கருதவேண்டியிருக்கும். வேறெந்த சூழ்நிலைகளையும் அடங்கியுள்ள அறிக்கைகளோடு தயாரிக்கவேண்டும். ஒரு நகலைக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அவர் சொந்த பயனுக்கென்று அளித்துவிட்டு, இன்னொரு நகலை அவர் பெற்றுக் கொண்டதாக அதன்மேல் ஒப்பமிட்டு உடனே திருப்பியனுப்பும்படி அவருக்குக் கட்டளையிடப்படும்; இந்த நகலை நடவடிக்கைக் கோப்போடு சேர்த்துக்கொள்ள வேண்டும்.

(e) குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு ஆங்கிலம் தெரியாவிட்டால் அவரது, சொந்த மொழியில் குற்றச்சாட்டு(கள்), சாட்சியத்திலுள்ள பொருண்மைகள் அவருக்கு அனுப்பப்பட்ட செய்தியறிவிப்புகள், ஆகியவற்றின் மூலார்த்த மொழி பெயர்ப்பு ஒன்றை அவருக்குக் கொடுக்க வேண்டும். அவசியமாயின் நடவடிக்கைக் குறிப்புகளும் கூட தமிழில் வழங்கப்பட வேண்டும்.

(f) குற்றச்சாட்டு(களு)க்கு குற்றஞ்சாட்டப்பட்டவர் எழுதியனுப்பிய பதிலைப் பெற்றவுடன் அனைத்து குறிப்புகளுக்கும் சரியான பதிலளிக்கப்பட்டுள்ளனவா என்று அதை கவனமாகப் பரிசீலனை செய்யவேண்டும். ஒரு வாய்மொழி விசாரணை அவசியமென கருதினால், அதற்காக ஒரு தேதியை நிர்ணயிக்க வேண்டும். சாட்சிகளை வரவழைத்து அவர்களுக்குப் பயணப்படி கொடுக்கலாம். அரசாங்கச் சாட்சிகளுக்கு வருகைச் சான்றுகள் கொடுக்கவேண்டும்.

(g) சென்னை வருவாய்த்துறை விசாரணைகள் சட்டம், 1893-ன் 2-வது பிரிவின்கீழ் அரசாங்கம், அப்படிப்பட்ட யாதொரு பொதுப்பணியாளரின் நடத்தை குறித்து விசாரணை செய்வதற்காகத் தங்கள் பிரதிநிதியாக அனுப்பும் எந்த அதிகாரிக்கும், அத்தகைய அதிகாரிமுன் யாதொருவர் ஆஜராகி சாட்சியம் சொல்லவோ அல்லது ஆவணங்களை தாக்கல் செய்யவோ, உத்தரவிடும் அதிகாரத்தை ஆணை மூலம் கொடுக்கலாம். விசாரணை செய்யும் அதிகாரி இதற்கென்று அரசாங்கத்தால் அனுப்பப்படாமல் சட்ட முறையான விதிகளால் அவருக்குக் கொடுத்துள்ள அதிகாரங்களின்படி செயல்படும் ஓர் நேர்வில் இச்சட்டம் பொருந்தாது. ஆயினும் அரசாங்கம், அத்தகைய அதிகாரியை குறிப்பிட்ட வகையில் மேற்கண்ட அரசாங்கப் பணியாளரின் நடத்தையைப்பற்றி விசாரணை செய்ய அனுப்புவதிலும், மேற்கண்ட சட்டத்தின் 2-வது பிரிவின் கீழ் தேவையான அதிகாரங்களை அவருக்கு கொடுப்பதிலும் யாதொரு ஆட்சேபணையும் கிடையாது. இந்த நடைமுறையை, விசாரிக்கும் அதிகாரி, சாட்சிகளைச் சாட்சியம் கொடுப்பதற்காவது ஆவணம் தாக்கல் செய்வதற்காவது வரவழைக்கச் சட்டப்பூர்வமான அதிகாரங்கள் வைத்திருத்தல் உண்மையாகவே அவசியமென்று காணப்படும் நேர்வுகளில், கையாளவேண்டும். விசாரிக்கும் அதிகாரி சட்டமுறையான விதிகள் மூலம் தனக்குக் கொடுத்துள்ள அதிகாரங்களை விசாரணை முடிவுக்குப்பின்பும் செலுத்தலாம்.



(3) (a) (i) வாய்மொழி விசாரணை (அ) நேரில் கேட்பு தேவைப்படும் அனைத்து நேர்வுகளிலும் அரசிதழ் பதிவு பெற்ற காவல் அதிகாரியினால் நடத்தப்பட வேண்டும். கா.நி.ஆ. 80(2) (a) வில் விதிக்கப்பட்டுள்ள முதனிலை விசாரணையை நடத்திய அதிகாரி வாய்மொழி விசாரணையை நடத்தக் கூடாது. ஆனால் இது மற்றொரு அதிகாரியால் நடத்தப்பட வேண்டும்.

(ii) காவல் ஆய்வாளர்களுக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கையில் வாய்மொழி விசாரணை அல்லது நேர்முகக் கேட்டலைத் தேவைப்படும் நிகழ்வுகள் அனைத்திலும் உரிய அதிகாரி சாதாரணமாக காவல் கண்காணிப்பாளர் அல்லது காவல் இணைக்கண்காணிப்பாளர் பதவி வகித்திருப்பவராயிருக்கவேண்டும்.

(b) வாய்மொழி விசாரணையை நடத்தி சாட்சியத்தை மதிப்பிடும் அதிகாரி சாதாரணமாக நிகழ்ச்சிப் பதிவை எழுதவேண்டும். யாதொரு காரணத்தை முன்னிட்டு மேற்கண்ட அலுவலர் விசாரணையை முடிக்க இயலாமல் போனால், மற்றொரு அலுவலர் விசாரணையைத் தொடர்ந்து நடத்தி, முந்திய அலுவலர் பதிவு செய்த சாட்சியத்தைக் கொண்டோ அல்லது; அவரால் பதிவு செய்யப்பட்ட ஒரு பகுதிச் சாட்சியத்தையும் தனனால் பதிவு செய்யப்பட்ட ஒரு பகுதிச் சாட்சியத்தையும் கொண்டோ நிகழ்ச்சிக் குறிப்பை எழுதலாம். ஆயினும், ஏற்கனவே சாட்சியம் பதிவு செய்யப்பட்ட சாட்சிகள் எவரையேனும் மேற்கொண்டு விசாரிப்பது நியாயப்படி அவசியமென்று மேற்கண்ட அலுவலர் கருதினால் அவர் அத்தகைய சாட்சி எவரையேனும் மறுபடியும் வரவழைக்கலாம்; அவர் அனுமதிக்கக்கூடிய மேல் விசாரணை, குறுக்கு விசாரணை, மறுவிசாரணை எதையேனும் செய்தபின்பு அந்த சாட்சியை திரும்ப விட்டுவிட வேண்டும்.

(4) (a) குற்றஞ் சாட்டப்பட்டவர் வாய்மொழி விசாரணைக்கு ஆஜராகையில் விசாரிக்கும் அதிகாரி கீழ்க்கண்ட கேள்வியைக் கேட்டு, அதையும் அதன் பதிலையும் (அடியிற் குறிப்பிட்ட அனைத்து மேற் கேள்விகள் பதில்கள் விஷயத்தில் உள்ளபடி) வாய்மொழி விசாரணைக்கோப்பில் எழுத்தில் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

கே- "நீர் குற்றச் சாட்டின் (சாட்டுகளின்) நகல் ஒன்றையும் சாட்சியத்திலுள்ள விஷயங்களையும் பெற்றுக்கொண்டு, உமது விளக்கத்தைச் சமர்ப்பித்திருக்கிறீர். நான் இந்த வாய்மொழி விசாரணையைத் தொடர்ந்து நடத்தும் முன்னர் நீர் ஏதாவது கூடுதலாக சொல்ல வேண்டியதிருக்கிறதா ?"

ப :- ---- ---- ---- ---- ----

இப்படியான கேள்வியையும் பதிலையும் (சகல மேற்கேள்விகள் பதில்கள் விஷயத்தில் உள்ளபடி) குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு (தேவையானால் மொழி பெயர்த்து) படித்துக்காட்டி அவரது கையெழுத்தையும் விசாரிக்கும் அதிகாரியின் கையெழுத்தையும் அத்துடன் சேர்க்க வேண்டும். உபயோகிக்க வேண்டிய படிவமாவது:-

"என்னால் பதிவு செய்யப்பட்டது; குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு (மொழி பெயர்த்து) படித்துக்காட்டப்பட்டு சரியென்று அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

(b) வாதிதரப்பு சாட்சியத்தை அதன் பின்னர் எடுத்துக் கொள்ள வேண்டும். முதல் விசாரணையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்ட வாதிதரப்பு சாட்சிகளின் சாட்சியத்தை மறுபடியும் பதிவு செய்யவேண்டிய அவசியமில்லை. அல்லது பதிவு செய்யப்பட்ட சாட்சியத்தை குற்றஞ்சாட்டப்பட்டவர் முன்பு

Scanned by CamScanner
Scanned with CamScanner

படித்துக்காட்டி விசாரிக்கும் அதிகாரி அப்படிச் செய்யப்பட்டதென்று நடவடிக்கைகளில் உறுதிகூறி, அத்தகைய சாட்சிகளை, குற்றஞ்சாட்டப்பட்டவர், முதல் விசாரணையில் ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்திருந்தாலும் இல்லாவிட்டாலும் குறுக்கு விசாரணை செய்ய அவருக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தால் போதுமானதாயிருக்கும் வாதிதரப்புச் சாட்சிகளைக் குற்றஞ்சாட்டப்பட்டவர் மறுபடியும் குறுக்குக்கேள்வி கேட்க விரும்பினாலன்றி மற்றபடி மறுபடியும் அழைக்க வேண்டியதில்லை. ஆயினும், முதல் விசாரணையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் இல்லாதிருக்கையில் எந்த சாட்சியாவது விசாரிக்கப்பட்டிருந்தால் அந்த சாட்சியைக் குற்றஞ்சாட்டப்பட்டவர் விரும்பும் பட்சத்தில் (முதல் விசாரணையில் கொடுத்த சாட்சியத்தைப் படித்துக்காட்டுவதற்குப் பதிலாக) அவர் முன்னிலையில் முதன்மை விசாரணை செய்து மேற்கண்ட குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அச்சாட்சியைக் குறுக்குக் கேள்வி கேட்பதற்கு ஒரு வாய்ப்பையும் கொடுக்கவேண்டும். வாதிதரப்பானது தான் அவசியமெனக் கருதும் வாதிதரப்புச் சாட்சிகளை மறு விசாரணை செய்து அதன் பின்னர் மேற்கொண்டு கேள்வி கேட்பதற்கு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு மீண்டும் ஒரு வாய்ப்புக் கொடுக்கவேண்டும்.

(c) வாய்மொழி விசாரணையில் முதல் தடவையாக வரவழைக்கப்படும் வாதிதரப்புச் சாட்சிகளை விசாரிக்கவேண்டும். அவர்களைக் குறுக்கு கேள்வி கேட்க விரும்புகிறாரா என்று குற்றஞ்சாட்டப்பட்டவரைக் கேட்க வேண்டும். வாதிதரப்புச் சாட்சிகளை எந்த வரிசையில் விசாரிக்கவேண்டுமென்று விசாரிக்கும் அலுவலர் கருதுகிறாரோ அந்த வரிசையில் விசாரிக்கலாம். இயன்ற வரையில் முதன்மை விசாரணையைச் செய்து முடித்து உடனடியாகக் குறுக்கு விசாரணையைச் செய்ய வேண்டும். ஆயினும், குறுக்கு விசாரணையை ஒதுக்கி வைத்துக்கொள்ள குற்றஞ்சாட்டப்பட்டவர் விரும்பினால், விசாரிக்கும் அதிகாரி, கொடுக்கப்பட்ட காரணங்கள் போதுமானவையென்று மனநிறைவின்பேரில் அக்கோரிக்கையை அனுமதிக்கவும், அவை உளநிறைவுகரமாக இல்லையெனில் எழுத்துமூல பதிவின் பேரில் அப்படிச் செய்யாமல் மறுக்கவும், வேண்டும்.

(d) ஒவ்வொரு வாக்கு மூலத்துத் தலைப்பில், சாட்சியின் பெயரையும் பதவியையும் குறிக்க வேண்டும்; உதாரணமாக, வா. சா. 1, தலைமைக் காவலர் (பெயர்) எண்.516 நிலையம்.

(e) முடிவடைந்த ஒவ்வொரு சாட்சி வாக்கு மூலத்தின் அடியிலும், உட்கூறு (4) (a)-ல் கண்டுள்ள குறிப்பைச் செய்து, விசாரிக்கும் அதிகாரியும், சாட்சியும் குற்றஞ்சாட்டப்பட்டவரும் ஒப்பமிட வேண்டும். வாக்கு மூலம் ஒரு பக்கத்துக்கு மேற்பட்டு இருந்தால் கடைசி பக்கம் தவிர மற்றப் பக்கங்களெல்லாவற்றிலும் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களனைவரும் சுருக்கொப்பமிடவேண்டும்.

(f) வாதிதரப்புச் சாட்சிகளின் வாக்குமூலங்கள் அனைத்தையும் அவர்களுக்கென்றே ஒரு கோப்பில் வைத்திருக்கவேண்டும்.

(g) வாதிதரப்பு ஆவணங்களை காட்சிப்பொருள்கள் வா-1, வா-2, முதலியன போல் குறித்து, அவைகளுக்குரிய கோப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்; அந்தக் கோப்புக்கு காட்சிப்பொருள்குறி, அதன் பொருள் சுருக்கம் அதைத்தாக்கல் செய்தவர், ஆகிய விவரங்களைக்காட்டும் அட்டவணை ஒன்று வேண்டும்.

(h) வாதிதரப்பின் விசாரணை இப்போது முடிவுபெற்றது. வாய்மொழி விசாரணைக் கோப்பின்மேல் விசாரிக்கும் அலுவலர் குற்றஞ்சாட்டப்பட்டவரைக் கீழ்க்கண்ட கேள்வியைக் கேட்டு அதைக் குறித்துக் கொள்ள வேண்டும்:-

கே.- உமக்கு எதிரான சாட்சியத்தை நீர் கேட்டிருக்கிறீரே. உம் எதிர்வாதத்தரப்பில் நீர் விசாரிக்க விரும்பும் சாட்சிகள் உண்டா? அதன் பொருட்டு நீர் தாக்கல் செய்ய விரும்பும் ஆவணங்கள் உண்டா?

ப :- — — — —



(i) பட்டியலை உருவாக்கித் தாக்கல் செய்வதற்காக அவருக்கு நியாயமான கால அளவைக் கொடுக்க வேண்டும். பொருத்தமற்றவைகளால் விசாரணையை நீட்டிப்பதையோ அல்லது தொல்லை தருவதற்கென்றே சாட்சிகளை அழைப்பதையோ தவிர்க்கும் பொருட்டு, விசாரிக்கும் அதிகாரி என்ன நோக்கத்திற்காக ஒவ்வொரு சாட்சியும் தேவையென்று அவரைக்கேட்கலாம். அவர் போதுமான காரணங்களுக்காக ஒரு குறிப்பிட்ட சாட்சியை விசாரிக்கவோ, அல்லது யாதொரு குறிப்பான ஆவணத்தைத் தாக்கல் செய்வதை அனுமதிக்கவோ, மறுக்கலாம். ஆனால், அவர் அத்தகைய மறுப்புக்கான காரணங்களை அதே கோப்பில் எழுதி வைக்கவேண்டும். அப்படிக் காரணங்களை எழுதிவைக்கத் தவறுதல் விசாரணையைப் பாதிக்கும்.

(j) அதன்பின்பு "எ.சா." என்று அழைக்கப்படும் எதிர் தரப்பு சாட்சிகள் குற்றஞ்சாட்டப்பட்டவரால் முதன்மை விசாரணை செய்யப்பட்டு எவ்வளவுதான் குற்றஞ்சொல்லப்பட்டிருந்த போதிலும் விசாரணையின் இதர சாட்சிகளால் அல்லாமல், விசாரிக்கும் அதிகாரியால் மட்டுமே தேவையானால் குறுக்கு விசாரணை செய்யப்படுவர். குற்றஞ்சாட்டப்பட்டவர் அவர் அவசியமெனக்கருதும் எதிர் தரப்புச் சாட்சிகளை மறு விசாரணை செய்த பின்னர், வாதி தரப்பானது மறுபடியும் எதிர்தரப்புச் சாட்சிகளை மேற்கொண்டு கேள்விகேட்கலாம். மேற்கண்ட நடைமுறையானது பத்தி 80 (4) (b) முதல் ("h"யும் உள்ளடக்கி) உள்ளபடியே இருக்கும். பத்தி 80 (h) (f) ல் சொல்லியுள்ளபடி எதிர்தரப்புச் சாட்சியத்துக்காக ஒரு தனிக்கோப்பை பராமரித்துவர வேண்டும்.

(k) எதிரி தரப்பு ஆவணங்கள் காட்சிப்பொருள்கள் எ-1, எ-2, முதலியனபோல் குறிக்கப்படும். ஆணை எண் 80 (4) (g) -ல் கண்டுள்ள நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.

(l) குற்றஞ்சாட்டப்பட்டவர் தான் குறிப்பிட்டிருந்த எதிர்தரப்பு சாட்சிகள் எவரையேனும், விட்டொழித்தால் அதன் விபரம் எதிர்தரப்புச் சாட்சிகள் கோப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவரும் விசாரிக்கும் அலுவலரின் கையொப்பத்தின் கீழ், பதிவு செய்து கொள்ளவேண்டும்.

(5) (a) விசாரணையானது ஒரு தனி ஆள் அல்லது குழுமத்தின் வழக்குரைமேல் நடைபெற்றால், அத்தகைய விசாரணையில் ஒரு எதிரி நிலையில் இருக்கும் குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரை குறுக்குக் கேள்வி கேட்கும்படி அந்த வாதிக்கு அனுமதியளிக்கலாகாது, ஆனால் குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் தற்காப்புக்காக ஆஜர்படுத்தப்படும் சாட்சிகளைக் கேட்கவேண்டிய கேள்விகளை மேற்கண்ட வாதி விசாரிக்கும் அதிகாரிக்குத் தெரியப்படுத்தலாம். அல்லது, விசாரிக்கும் அதிகாரி தனது விருப்புரிமையின்படி வாதிக்கு சாட்சிகளைக் குறுக்குக் கேள்வி கேட்க அனுமதிக்கலாம்.

(b) (i) காவல் துறை விசாரணையை நடத்தும் ஒரு அதிகாரியை அந்த விசாரணையில் ஒரு வாதி தரப்பு சாட்சியாக அழைக்க முடியாது. ஆயினும், குற்றஞ்சாட்டப்பட்டவர் அவரை எதிர் தரப்பில் சாட்சி சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டால், என்ன குறிப்புகளை விளக்குவதற்காக மேற்கண்ட அதிகாரி சாட்சியாக அழைக்கப்பட்டிருக்கிறார் என்பதை எழுத்து மூலம் தெரிவிக்கும்படி குற்றஞ்சாட்டப்பட்டவரைக் கேட்கவேண்டும். தானே ஒரு எதிர்தரப்பு சாட்சியாக விசாரிக்கப்படுவது அவசியமில்லையென்று விசாரிக்கும் அதிகாரி கருதினால், அவர் அவ்விண்ணப்பத்தின்மேல் தனது குறிப்புகளை எழுதிவிட்டு அதை விசாரணைப் பதிவுக் கோப்போடு கோர்த்துக் கொள்ளவேண்டும்; பொருத்தமாயிருந்தால் அவர் அவ்விண்ணப்பத்தில் கண்ட தகவலையும் தனது குறிப்புகளையும் நிகழ்ச்சிப் பதிவில் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஆயினும், எதிர்தரப்பு சாட்சியாக தன்னை விசாரித்துக் கொள்வது உண்மையாகவே அவசியமென்று அவர் கருதும் விஷயத்தில் தன்னைக் கேட்கப்போகிற விஷயங்களைப் பற்றித் தான் கொடுக்கப் போகும் பதில்கள் விசாரணை முடிவைப் பாதிக்கத்தக்க தன்மையுள்ளதல்லவென்று தெரிந்தால், அவர் இன்னும் விசாரணையைத் தானே நடத்தலாம். அத்தகைய நேர்வுகளில் அவர் குற்றஞ்சாட்டப்பட்டவரின் கேள்விகளையும் தனது பதில்களையும் மொழி பிறழாமல் பதிவு செய்துகொண்டு, வாக்கு மூலத்தில் அனைத்து பக்கங்களிலும் இருவருமாக ஒப்பமிடவேண்டும்.

Scanned by CamScanner

(ii) மேற்கண்ட அதிகாரி கொடுக்கவேண்டிய சாட்சியமானது இன்றியமையாததாயும், விசாரணை முடிவுக்குத் தொடர்பு கொள்ளக் கூடியதாகவும் இருக்கும் விஷயங்களில், விசாரணையை அவ்வதிகாரி நடத்தாமல் மற்றொரு அலுவலர் நடத்தவேண்டும்.

(6) எதிர்வாதம் முடிந்த பின்பு, விசாரிக்கும் அதிகாரி "வாய்மொழி விசாரணைக் கோப்பில்" குறிப்புகளைப் பின்வருமாறு தொடர்ந்து பதிவுசெய்ய வேண்டும்:-

கே:- "உமது எதிர்வாத சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர்; நீர் வேண்டுமென்று கோரிய ஆவணங்கள் (இந்த நடவடிக்கைகளில் காட்டப்பட்ட காரணங்களுக்காக முன்னரே குறித்துள்ளபடி நான் நிராகரித்த ஆவணங்கள் நீங்கலாக மற்றவைகள்) தாக்கல் செய்யப்பட்டு காட்டி வைக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டு நீர் கோருவதற்கோ கூறுவதற்கோ ஏதேனும் உண்டா? மேற்கொண்டு ஒரு எதிர்வாத எழுத்து வாக்கு மூலத்தை நீர் விரும்பினால், தாக்கல் செய்ய உமக்கு உரிமையுண்டு"

ப:- ___ ___ ___ ___

அவரது பதிலையும் கேள்வியையும் பதிவுசெய்து, படித்துக்காட்டி, தேவையானால் மொழி பெயர்த்து, மேலே சொல்லியுள்ளபடி அவரும் விசாரிக்கும் அதிகாரியும் சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பமிட வேண்டும்.

முதற் கேள்வியைப் பொறுத்து குற்றஞ்சாட்டப்பட்டவர் சில சாட்சிகளை மறுகுறுக்கு விசாரணைக்காக அழைக்க விரும்புவதாகச் சொன்னால், அப்படிச் செய்வதற்கு அவருக்கு அனுமதியளிக்க வேண்டும். ஆனால், விசாரணையை நடத்தும் அதிகாரி, கேள்விகள் தொடர்பானவையா என்று தானே உளநிறைவடையும் பொருட்டு, இந்த சாட்சிகளை மேற்கொண்டு என்ன கேள்விகள் கேட்க விரும்புகிறாரென்று குற்றஞ்சாட்டப்பட்டவரை எப்போதும் கேட்கவேண்டும்; தொடர்பற்றவையென்று தெரிந்தால், அவர் எழுத்துமூல காரணங்களின் பதிவின் பேரில் அத்தகைய சாட்சிகளைத் திரும்பவும் அழைக்க மறுத்துவிடலாம்.

(7) (a) விசாரணையை நடத்தும் அதிகாரி கண்டிப்பான ஒரு நிலையுள்ளவராயிருக்க வேண்டும். சட்ட முறையான விதிகளிலும், ஆணைகளிலும் உள்ள விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் நடவடிக்கைகள் நடத்துவது குற்றஞ்சாட்டப்பட்டவரின் மனதில் நடுநிலையற்ற மனப்பான்மையில் விசாரணை நடத்தப்படவில்லையென்ற எண்ணம் எழச்செய்தல் கூடாது என்பது இன்றியமையாததாகும்.

(b) காவல் துறை விசாரணையைத் தாமதமின்றி கூடிய விரைவில் முடிக்கவேண்டும். காலந்தாழ்த்துவதை தவிர்ப்பதில் கருத்தாயிருப்பதுமன்றி, விசாரணையின் வாய்தாவையோ கடத்திவைத்தலையோ கவனத்தோடும், அவசியமாயிருந்தால் மட்டுமே, அனுமதிக்கவேண்டும். ஒரு அலுவலர் விசாரணை நிலுவையில் பணியில் தொடர்ந்து இருப்பது விரும்பத்தகாததெனும் காரணமாக அவர் நடத்தைப் பற்றிய விசாரணை முடியும் வரை அவரை பணியிடை நீக்கத்தில் வைத்திருக்கும் போது, அந்த விசாரணையை விரைவில் முடித்து இயன்ற விரைவில் ஆணைகளைப் பிறப்பிப்பது இன்னும் அதிக அவசியமானதாகும்.

(c) ஆயினும் விதிவிலக்கான நேர்வுகளில் சட்டமுறையான ஆணைகளின் வேண்டுறுத்தல்களை சரியாக கடைபிடிப்பதில் இடுக்கண் இருப்பின் அவ்வாணைகளின் காப்புரைகள் அனைத்தையுமோ எதையேனுமோ ஒத்திப் போட உத்தேசித்திருக்கையிலும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அநீதியின்றி மேற்கண்ட வேண்டுறுத்தல்களை விட்டுக்கொடுக்க முடியுமானால் அதன் காரணத்தை எழுத்து மூலம் பதிய வேண்டும்; காரணங்களை அவ்வாறு பதியத் தவறுதல் விசாரணையைப் பாதிக்கும்.



(8) (a) ஒரு அலுவலர் மீதுள்ள குற்றச்சாட்டுகளின் மெய்த்தன்மை பற்றியோ மற்றபடியோ ஒரு முடிவுக்கு வருகையில் அவரது முன்வரலாற்றை கருத்தில் கொள்ளக்கூடாது; ஆயினும் உறுதியான குற்றச்சாட்டுகள் மெய்ப்பிக்கப்பட்ட பின்பு விதிக்க வேண்டிய தண்டனையைக் கணிக்கையில் அதைக் கணக்கில் கொள்ளலாம்; அப்படிச் செய்ய விரும்பினால் பின்வரும் நடைமுறையை பின்பற்ற வேண்டும். உறுதியான குற்றச்சாட்டு அல்லது சாட்டுகள் மெய்ப்பிக்கப்பட்ட பின்பு மேற்படி அலுவலரின் முந்தைய வரலாற்றின் அடிப்படைமேல் இன்னும் ஒரு குற்றச்சாட்டை உருவாக்கி, குறிப்பிட்டுள்ள நடைமுறையை அக்குற்றச்சாட்டு சம்பந்தமாகப் புதிதாய் நிறைவேற்றி, அதன்மேல் முடிவுக்கு வரவேண்டும். அத்தகைய கூடுதல் குற்றச்சாட்டைச் சார்ந்துள்ள குற்றங்களை எதிர்கொள்ள தேவையான வசதிகளை அவருக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

(b) ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவர், அவரது விளக்கத்தில், ஏற்கனவே அவருக்கு அளிக்கப்பட்ட தண்டனைகளின் பொருத்தத்தை ஆட்சேபிக்கக்கூடாது. ஏனெனில், அவை மேல்முறையீடு மூலம் முடிவு செய்யப்பட்டிருக்கலாம். (அல்லது செய்யப்பட்டிருக்கக்கூடும்). ஆயினும், அவர் குற்றத்திற்கான கடுமை தனிப்பைக் குறைக்கும் சூழ்நிலைகளைக் கோரலாம்.

(9) பணியறவு, பணிநீக்கம், கட்டாய ஓய்வு அல்லது முதுநிலைப் பட்டியலில் கீழ்ப்படிநிலைக்கு இறக்கம் (அ) கீழ்ப் பதவிக்கு (அ) காலசம்பள ஏற்ற முறையில் (அ) ஒத்த சம்பள ஏற்ற முறையில் கீழ்நிலைக்கு இறக்கம் போன்றவை உள்ளிட்ட வழக்குகளில் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளுடன், தண்டனை விதிக்கும் அதிகாரி குற்றஞ்சாட்டப்பட்ட அரசு அலுவலரைப் பொறுத்து பணி நியமன அதிகாரிக்கு படி நிலையில் சார்நிலை கொண்டவர் அல்ல என்பதற்கான சான்றிதழ் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். விசாரணை முடிந்துவிட்டது என்றும் தண்டிக்கும் அதிகாரி விதிக்கப்பட வேண்டிய தண்டனைப் பொறுத்து ஒரு தற்காலிக முடிவுக்கு வந்து விட்டார் என்றும், குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலருக்கு தற்காலிக முடிவின் அடிப்படை குறித்து அறிக்கை நகல் வழங்கப்பட்டுள்ளதென்றும் விதிக்கப்பட வேண்டிய தண்டனை குறித்து அவரிடம் குறிப்பிட்ட காலத்திற்குள் விளக்கம் கேட்டு குறிப்பாணையும் அனுப்பப்பட்டுள்ளதென்று குறிப்பாக குறிப்பிட வேண்டும்.

(10) ஒரு அலுவலர், குற்றஞ்சாட்டப்பட்டவரேனும் தீர்ப்புக்குட்பட்டு ஒரு குற்றவியல் நீதிமன்றத்தால் அபராத தண்டனை விதிக்கப்பெற்றதன் பேரில், அவரை பணியறவு, பணிநீக்கம் அல்லது பணிநிலை இறக்கும் ஆணை ஒன்று அவருடைய தீர்ப்புக்குக் காரணமாயிருந்த பொருண்மைகளை சார்ந்திருக்கக் கூடாது; ஏனெனில், அத்தகைய தீர்ப்பும் தண்டனையும் மட்டுமே மேற்கொண்டு காவல் துறை மேலும் தண்டனை விதிப்பதற்கு உரிய காரணமாக கொள்ளப்படமாட்டாது. காவல் நிலை ஆணைகள், தொகுதி I, ஆணை எண் 81-ல் உள்ள விதிமுறைகளின் செயற்பரப்பிற்குள் வராத இத்தகைய நேர்வில் அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர் ஒருவர் காவல் துறை தண்டனை அளிக்க வேண்டுமென்று ஆணை எண் 66(2)-ன் கீழ் தீர்மானிக்கையில் அவர், ஒரு குற்றச்சாட்டையும், குற்றஞ்சாட்டப்பட்டவர் தீர்ப்பு, தண்டனை, ஆகிய விஷயம், மேற்கொண்டு காவல் துறை நடவடிக்கை எடுப்பதற்காக அடிப்படையான காரணங்கள், ஆகியவை அடக்கியுள்ள குற்ற அறிக்கையையும், உருவாக்கிக் கொள்ள வேண்டும்; அவரது மேல் விசாரணையானது இவ்வாணையின் வேண்டுறுத்தல்களின்படி இருத்தல் வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவரான அலுவலர் விவாதிப்பதற்கு இடமில்லாத நீதிமன்றத் தீர்ப்புகள் அத்துறை விசாரணையின் நோக்கெல்லையில் வராது, ஆனால், அவருக்கு குற்றத்தைப்பற்றி ஒரு கனிவு நோக்கு கொள்வதற்குப் பொருத்தமாயிருக்கக்கூடிய, குற்ற கடுமையைத் தணிக்கத்தக்க அல்லது மற்றைய வாய்ப்புகளை எடுத்துக் கூறிமெய்ப்படுத்த அவருக்கு உரிமையுண்டு, விசாரித்த நீதிமன்றம் குற்ற விஷயத்துக்குப் பொருத்தமான கருத்துரைகளின் மேல் அளித்த தீர்ப்புகளைத் தவிர அதன் மற்றைய கருத்துக் குறிப்புகளை, அவை குற்றச்சாட்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டு அவற்றிற்கு அடிப்படையான சான்றானது காவல்துறை விசாரணைக் கட்டுக்குள் கிரமமாகக் கொண்டுவரப்பட்டிருந்தாலன்றி, மற்றபடி, ஒரு தண்டனை ஆணையை நியாயப்படுத்தவோ வலுப்படுத்தவோ நிகழ்ச்சிப் பதிவுக்குள் கொண்டுவரலாகாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

## PSO 81 - குற்றவியல் ஒழுங்கீனத்துக்குட்பட்ட அரசாங்கப் பணியாளர்கள் மீது காவல் துறை நடவடிக்கைகளும் குற்ற வழக்குத் தொடர்வுகளும்.– Departmental proceedings and prosecutions of Government Servants involved in Criminal misconduct.-

(1) அரசாங்கப் பணியாளரைக் குறித்துச் சொல்லப்படும் ஒழுங்கீனம் விஷயங்களில் வழக்கமாய்க் கையாளவேண்டிய நடைமுறை பின்வருமாறு:-

ஒழுங்கீனக் குற்ற விஷயங்களை ஆய்வு செய்கையில், அத்தகைய விசாரணையை நடத்துவது, அத்துறையானாலும் சரி (தனி காவல் பணியாளர் தொகுதி உள்ளிட்ட) காவலரானாலும் சரி, போதுமான சான்று கிடைத்த உடனே, பொருத்தமான ஒழுங்குமுறை விதிகளின்கீழ் உடனடியாக ஒழுங்கு நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டும். அத்தகைய துறை நடவடிக்கைகள், காவல் விசாரணையில் குறுக்கிட வேண்டியதில்லை; தேவையாயிருக்குமிடத்து காவல் விசாரணையைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு போகலாம். துறை நடவடிக்கைகளை முடித்துவிட்டு, அதன் விளைவாக ஏதேனும் தண்டனையை விதித்த பின்பு, குற்றச்சாட்டு வழக்கைத் தொடரவேண்டுமா எனும் கேள்வியை, மேற்கண்ட விசாரணையின் விளைவாகக் கிடைக்கக்கூடிய பொருள் வகையின் ஆதாரத்தைக் கொண்டு ஆராயவேண்டும்.

இந்த அறிவுரைகளின் நோக்கத்திற்கிணங்க, **"குற்றவியல் ஒழுங்கீனம்"** எனும் சொற்றொடரானது ஊழல் தடுப்புச் சட்டம் 1988 (மத்திய சட்டம் 1947-ன்) 13-வது பிரிவில் சொல்லியுள்ள பொருளையே உடையதாகும்; அப்பிரிவின் நகல் ஒன்று கீழ் குறிப்பிட்டிருக்கிறது:-

**பிரிவு 13. பொது ஊழியரின் குற்றமுறு கெட்ட நடத்தை :**

(1) பொது ஊழியர் ஒருவர்

(அ) அவர் வாடிக்கையாகச் சட்டபடியான ஊதியமல்லாத கைக்கூலி எதையும் பிரிவு 7 இல் கூறியுள்ளவாறு ஒரு வெகுமதியாக அல்லது சன்மானமாகத் தமக்காகவோ, அல்லது வேறு யாருக்காகவோ எவரிடமிருந்தேனும் ஏற்றுக் கொள்வதை (அ) பெறுவதை அல்லது ஏற்றுக் கொள்ள ஒப்புக்கொண்டால் (அ) பெற முயற்சித்தால்; அல்லது

(ஆ) அவர் வாடிக்கையாகத் தாம் அறிந்த எவராலும் நடத்தப்படுகிற அல்லது நடத்தப்பட இருக்கிற அலுவல் எதிலேனும் சம்பந்தப்பட்டிருந்திருப்பவராக அல்லது சம்பந்தப்பட்டிருப்பதாக, அல்லது அநேகமாகச் சம்பந்தப்பட்டிருக்கக் கூடுமென்று தாம் அறிந்துள்ள அல்லது தம்முடைய அல்லது தாம் சார்நிலையாகப் பணிபுரிகிற அந்தப் பொது ஊழியருடைய அலுவல் வழிப் பணிகளுடன் தொடர்புடைய எவரிடமிருந்தேனும், அல்லது அவ்வாறு சம்பந்தப்பட்டவரிடம் அக்கறை கொண்டுள்ளவரென்று, அல்லது அவருக்கு உறவினரென்று தாம் அறிந்துள்ள எவரிடமிருந்தேனும், தமக்காகவோ அல்லது வேறு யாருக்காகவோ, மறுபயன் இன்றியோ அல்லது போதுமானதன்று என்று தாம் அறியும் ஒரு மறுபயனுக்காகவோ விலையுயர்ந்த பொருள் எதையேனும் ஏற்றுக்கொள்வதை அல்லது பெறுவதை அல்லது ஏற்றுக் கொள்ள ஒப்புக் கொண்டால் அல்லது பெற முயற்சிப்பதை வாடிக்கையாகக் கொண்டிருப்பின்; அல்லது

(இ) தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அல்லது பொதுஊழியர் என்ற முறையில் தம் கட்டுப்பாட்டில் விடப்பட்டுள்ள சொத்து எதையும் நேர்மையற்ற முறையில் அல்லது மோசடியாக செய்தி அல்லது வேறு விதமாகத் தம் சொந்த உபயோகத்திற்கென மாற்றிக் கொள்ள அல்லது அவ்விதம் செய்வதற்கு வேறு எவரையேனும் அனுமதிப்பாராயின் அல்லது

(ஈ) அவர் -

(i) விலையுயர்ந்த பொருள் அல்லது பணமதிப்புள்ள பயன் (Pecuniary Advantage) எதையேனும் ஊழல் அல்லது சட்டவிரோதமான வழிகளால் தமக்காகவோ அல்லது வேறு யாருக்காகவோ பெற்றுக் கொள்வாராயின் அல்லது



(ii) பொது ஊழியர் என்ற முறையில் தமது அலுவலகப் பதவியைத் தவறாக பயன்படுத்துவதன் மூலம் விலையுயர்ந்த பொருள் அல்லது பணமதிப்புள்ள பயன் எதையேனும் தமக்காகவோ அல்லது வேறு யாருக்காகவோ பெற்றுக் கொள்வாராயின்; அல்லது

(iii) பொது ஊழியராகப் பதவி வகிக்குங்கால் விலையுயர்ந்த பொருள் அல்லது பணமதிப்புள்ள அனுகூலம் எதையேனும் பொது நலனுக்கன்றி, வேறு யாருக்காகவோ பெற்றுக் கொள்வாராயின்; அல்லது

(உ) அவர் தனது பதவிக் காலத்தில் தம் வசமோ அல்லது அவர் சார்பாக வேறு எவரேனும் ஒருவர் வசமோ அறிந்த வருமான வழிவகைகளுக்குப் பொருந்தாத வீதத்தில் நிதிவளமை கொண்டிருப்பின் (Pecuniary advantage) அல்லது சொத்து வைத்திருந்து அவற்றிற்கு அவர் திருப்திகரமாகக் கணக்குக் காட்ட முடியாமல் இருப்பாராயின் குற்றமுறு கெட்ட நடத்தைக் குற்றம் புரிந்தவராகிறார்.

**விளக்கம் :**

இப்பிரிவின் நோக்கங்களின் பொருட்டு **"அறிந்த வருமான வழிவகைகள்"** (known sources of income) என்றால் சட்டப்படியான வழி ஏதேனுமொன்றிலிருந்து பெறப்பட்ட வருவாய் எனப் பொருள்படும். மற்றும் பொது ஊழியர் ஒருவருக்கு அவ்வப்போது பொருந்தக்கூடிய சட்டம் ஏதேனுமொன்றின் வகையங்கள், விதிகள் அல்லது ஆணைகள் ஆகியவற்றை ஒட்டி அத்தகைய வருவாய்க்குத் தகவலும் கொடுத்திருக்க வேண்டும்.

(2) குற்றமுறு கெட்ட நடத்தை என்னும் குற்றத்தைப் புரியும் பொது ஊழியர் எவரொருவரும் ஒரு வருட கால அளவுக்குக் குறையாமலும் ஏழு வருடங்கள் நீட்டிக்கக் கூடிய சிறைத் தண்டனையையும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

(3) (a) துறை மற்றும் குற்றவியல் நடவடிக்கைகளை ஒரே நேரத்தில் எடுப்பதற்கு தடையேதும் இல்லை. நடவடிக்கைகளை தடையுறுத்தும் நீதிமன்ற ஆணை எதனையும் வேண்டுமென்றே மீறுகை இல்லாது கவனத்துடன் உறுதி செய்து கொள்ள வேண்டும். அத்தகைய தடையுறுத்தும் ஆவண இல்லாத போது, ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி தனது சட்டமுறை அதிகாரங்களை சுதந்திரமாகச் செயலுறுத்தலாம். பொருத்தமான நேர்வுகளில் அதன் பின்னர் குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டும். அத்தகைய நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு முன்பு, அரசாங்க வழக்கறிஞரிடமிருந்தும், முக்கியமான வழக்குகளில் மாநில அரசாங்கத் தலைமை வழக்கறிஞர் (Advocate - General) இடமிருந்தும் கருத்துரையைப் பெறவேண்டும். ஒரு அலுவலரின் நடத்தையானது ஓர் குற்றவியல் தன்மையுள்ள கடுமையான குற்றத்தை வெளிப்படுத்தினால், ஒரு விதிவிலக்காக அல்லாமல் விதிமுறைப்படி, குற்றவியல் குற்றச்சாட்டு வழக்கைத் தொடரவேண்டும். அதிகாரமுள்ள அலுவலர் ஒருவர், அத்தகைய அதிகாரி மீது நியாயமாய் மெய்ப்படுத்தக் கூடிய குற்றவியல் வழக்கு எதுவும் இல்லையெனத் திருப்தியடைந்திருக்கையில், அவசியமாகவே குற்றவியல் குற்றச்சாட்டை மேற்கொள்ளலாகாது. ஆனால், மேற்கண்ட வழக்கானது ஒருவேளை விடுதலையில் முடியக்கூடும் எனும் காரணத்தால் மட்டுமே குற்றவியல் குற்றச்சாட்டைத் தவிர்க்கலாகாது.

(b) நேர்விற்கேற்ப விசாரித்த நீதிமன்றம் அல்லது மேல் தீர்ப்பு மன்றத்தின் தீர்ப்பானது குற்றஞ்சாட்டப்பட்டவரின் விடுதலையில் முடிவானால், காவல் துறை நடவடிக்கைகளின் விளைவாக தொடக்கத்தில் செய்த முடிவை மறுஆய்வு செய்யவேண்டியது அவசியமாயிருக்கலாம். அத்தகைய மறு ஆய்வில், சட்டப்படியான நடவடிக்கைகளும் துறை நடவடிக்கைகளும் ஒரே சமமான அடிப்படையில் உள்ளடங்கி இருந்தனவா எனும் ஓர் விஷயத்தை ஆலோசிக்க வேண்டியதாகும். அப்படியில்லாமல், சட்டப்படியான நடவடிக்கைகளில் ஒன்று அலலது இரண்டு குற்றச் சாட்டுகள் மட்டும் சம்பந்தப்பட்டிருந்து, அதாவது, காவல் துறை நடவடிக்கைகளில் ஆராயப்பட்ட விஷயங்களனைத்தும், கவனிக்கப்படாமலிருந்தால், ஏற்கனவே எடுத்துக்கொண்ட தீர்மானத்தை மாற்ற வேண்டியது அவசியம் ஏற்படாமல் இருக்கலாம். தவிரவும், நீதிமன்றமானது வழக்கின் விஷயங்களினின்று

Scanned by CamScanner
Scanned with CamScanner

சட்டப்படி ஒரு குற்றம் உருவாகாது என்று தீர்மானித்திருக்கையில், அதிகாரமுள்ள அலுவலர் காவல் துறை நடவடிக்கைகளில் மேற்கண்ட அரசாங்கப்பணியாளர் துறை சம்பந்தமான ஒழுங்குத் தவறு எனும் குற்றம் செய்திருப்பதாகவும் அவரது பதவியில் ஒருவர் நடந்து கொள்ளவேண்டிய முறையில் அவர் நடந்து கொள்ளவில்லையென்றும், நியாயமான ரீதியில் ஒரு முடிவுக்கு வரலாம்.

(c) ஒரு மாநில குடிமைப்பணியின் உறுப்பினராகவோ, அல்லது ஒரு மாநிலத்தின் கீழ் ஒரு குடிமைப்பதவியை வகித்திருப்பவராகவோ, உள்ள எந்த நபரையேனும், அவர் மீது எடுக்க உத்தேசித்த நடவடிக்கையை எடுக்கலாகாது என்பதற்குக் காரணம் காட்ட அவருக்கு நியாயமான வாய்ப்புக் கொடுக்கப்படும் வரை பணியறவு அல்லது பணிநீக்கம் அல்லது பணிநிலை இறக்கமோ கூடாது என்று அரசியல் அமைப்பின் 311 (2)-வது விதியில் கண்டிருக்கிறது. அதிகாரமுள்ள அலுவலர் 311 (2)-வது விதியானது தேவைப்படுத்தும் விஷயங்களனைத்திலும் அதன் சட்டமுறையான விதி முறைகளைக் கண்டிப்பாய் பின்பற்ற வேண்டும். ஆயினும், அவ்விதியின் விலக்கு நிபந்தனையைச் சேர்ந்த (a), (b), அல்லது (c) உட்பிரிவுகளில் அடங்கியுள்ள விஷயங்களில் இத்தேவைகளை நிறைவேற்ற வேண்டியதில்லை. எனினும், ஒரு நீதிமன்றத்தினது குற்றத் தீர்ப்பின் பேரில் ஒருவர் மீது இவ்விலக்கு நிபந்தனையின் (c) உட்பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அத் தீர்ப்பானது, மேல் முறையீட்டின் பேரில் ரத்து செய்யப்பட்டிருக்கையில், மேற்கண்ட விலக்கு நிபந்தனையின் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் தாமாகவே செல்திறனற்றுபோய்விடும் அவர்மீது காவல் துறை நடவடிக்கை எடுப்பது விரும்பத்தக்கதென்று கருதப்பட்டால், பொருத்தமான ஒழுங்குமுறை விதிகளின் ஏற்பாடுகளையும், தேவையாயிருக்குமிடத்து, 311 (2)-வது விதியின் உறுதியான காப்புரைகளையும், பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

## PSO 82 - ஒரு விசாரணையில் ஆஜராகத் தவறுதல்.– Failure to attend an enquiry-.

(1) ஒரு அலுவலரது நடத்தை குறித்து விசாரணை நடக்கும் காலத்தில் அவர் விடுப்பில் இருக்கையில் ஒரு குறிப்பிட்ட தேதியில் விசாரணைக்கு ஆஜராகும்படி அவருக்கு இடப்பட்ட ஓர் வாய்மொழி அல்லது எழுத்து உத்தரவை போதிய காரணமின்றி அவர் கீழ்ப்படியத் தவறினால், அவரது விடுப்பு ரத்து செய்யப்படுவதற்கும், பணியிடை நீக்கத்தில் வைக்கப்படுவதற்கும் குற்றச்சாட்டோ, சாட்டுகளோ முடிவடையாமல் இருக்கும் நிலையில் அவர் தலைமறைவாயிருப்பதாகக் கருதப்படுவதற்கும் உட்பட்டிருப்பார். குற்றஞ்சாட்டப்பட்டவரான அலுவலர் பணியிடை நீக்கத்தில் இருந்தாலும் அல்லது விடுப்பில் இருந்தாலும் தனது முகவரியை மாவட்ட காவல் அலுவலகத்தில் அல்லது விசாரணையை நடத்தும் அதிகாரியிடமாவது விட்டுப்போவதுமன்றி, முகவரி மாற்றம் எதனையும் தெரியப்படுத்தவும், கடமைப்பட்டிருக்கிறார். உத்தரவுகளை சேர்ப்பிக்க குற்றஞ்சாட்டப்பட்டவரான அதிகாரி கொடுத்த முகவரிக்கு அனுப்பவேண்டும். எந்த அறிவிப்பையும் பெற்றுக்கொள்வதற்கு ஆவண ஏற்பாடுகள் செய்துகொள்வது அவரது பொறுப்பாகும் இவ்விஷயத்தை அக்காலத்தில் அவரது கவனத்துக்குக் கொண்டு வரவேண்டும். அப்பொழுது, உத்தரவுகளை அவர் பெற்றுக்கொள்ளாமல், விசாரணையில் ஆஜராகத் தவறியமை அவருடைய குற்றமாவதுடன் மேற்சொன்ன நடவடிக்கைகளுக்கு உட்பட்டிருப்பார்.

(2) அவருக்கு ஏதேனும் தகவலை சார்வு செய்திடும் போது கீழ்க்காண் தேவையான நடைமுறை ஒன்றினைப் பின்பற்றலாம் :

(a) ஒப்புகையின் சீழ் நேரில் கொடுத்தல்

(b) அவரின் அறிந்த இறுதி வசிப்பிடத்தில் (அ) அவருடன் தங்கியுள்ள குடும்பத்தின் மூத்த உறுப்பினரிடம் கொடுத்தல்,

(c) ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சலில் அவருக்கு அனுப்புதல்

(d) அவர் தனது விடுப்பு ஊதியம் (அ) பிழைப்பூதியத்தினை பெற வரும் நேரத்தில்

(e) மேற்காண் எந்த வழிவகையிலும் இயலாவிடின் அவரின் அறிந்த இறுதி வசிப்பிடத்தில் காட்சிக்கு தெரியும் இடத்தில் ஒட்டி வைத்தல்



(3) அவர் உடல் நலக் குறைவின் நிமித்தம் விசாரணையில் ஆஜராக முடியவில்லையெனக் கோரினால், அத்தகைய கோரிக்கையானது, அவரது மருத்துவரால் கொடுக்கப்பட்ட உடல் நிலைச் சான்றிதழாவது விசாரணை நடத்தும் அதிகாரி விரும்பக்கூடியவாறு, மாவட்ட மருத்துவ அதிகாரியோ அல்லது அருகாமையிலுள்ள அரசாங்க மருத்துவ அலுவலரோ எவர் முன்பு ஆஜராகும்படி மேற்கண்ட அதிகாரி கட்டளையிடுவாரோ அவரால் அளிக்கப்பெற்ற உடல் நிலைச் சான்றாலாவது மெய்ப்படுத்தப்பட்டாலன்றி மற்றபடி, அது நிராகரிக்கப்படும். ஆயினும் அவர், தலைமறைவாயிருப்பதாகக் கருதப்பட்டதன் காரணமாக அவருக்கு எதிரான நடவடிக்கைகள் முடிவடைவதை தடுக்கும் அளவுக்கு தந்திரமாக நடந்து கொண்டால், அவர் ஒரு காவல் நிலையத்துக்கோ அல்லது ஒரு மாவட்ட காவல் அலுவலகத்துக்கோ சம்பளம் பெறுவதற்காக வரும் சமயம் உத்தரவுகளை அவருக்குச் சேர்ப்பிப்பது ஒரு நிச்சயமான முறையாகும். விசாரணை நடத்தும் அதிகாரி, மேற்கண்ட உத்தரவுகளைக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அவர் சம்பளம் வாங்குகையில் சேர்ப்பிக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.

## PSO 83 - நேர்முகக்கேட்டல் – நடைமுறை.– Being heard in person- Procedure.-

(1) அவர் நேரில் கேட்கப்பட வேண்டுமென்று விரும்பினால் விசாரிக்கும் அதிகாரி கீழ் குறிப்பிட்டுள்ள நடைமுறையினைப் பின்பற்ற வேண்டும்.

(2) அரசுத் தரப்பு சாட்சிகளின் உரிய அனைத்து வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் ஒரு பக்கம் மற்றும் எதிர்தரப்பு சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் குற்றம் சாட்டப்பட்ட அலுவலரின் வாக்குமூலத்துடன் மற்றொரு பக்கம் ஒரு சேர சேகரிக்கப்பட்டு சுருக்கக் குறிப்பு இடப்பட வேண்டும். குற்றத்தினை தாங்கிடும் வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்களை குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் படிப்பதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும். இந்த நிலையில் ஏதேனும் அரசு தரப்பு வாக்குமூலத்தின் நம்பகத்தன்மை அல்லது துல்லியம் குறித்து அவர் கேள்வி எழுப்பினால், அவர் முறையான வாய்மொழி விசாரணை வேண்டலாம்; அந்நேர்வில் அந்த நிலையிலிருந்து FSO 80ல் விதிக்கப்பட்டுள்ள நடைமுறை பின்பற்றப்படும். ஆயினும் அவர் அவ்வாறு கோரவில்லையெனில், விசாரணைக்கான அரசுத் தரப்பு ஆவணங்களில் அதிகாரி அக்கேள்வியினைப் பதிவு செய்து அரசுத் தரப்பு வழக்கினை குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் நன்கு அறிந்துள்ளார் என்று அதற்கு சான்றாக அலுவலரின் கையெழுத்து பெற்றிடுவார். குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் ஒரே ஒரு நேர்முக முறையீட்டை செய்திட உரிமை கொண்டவராவார்; அதனை விசாரணை அதிகாரி எழுத்துருவில் கொணர்வார் அல்லது எதிரி அலுவலரை அவ்வாறு செய்திட வேண்டுறுத்துவார். இந்த நிலையில் சாட்சிகளை (அ) ஆவணங்களை குறிப்பிட வேண்டும் என்ற கேள்வியில்லை; ஏனெனில் அவை எல்லாம் குற்றச்சாட்டுக்கு அளித்த விளக்கத்திலேயே கண்டிருக்க வேண்டும். விசாரணை அதிகாரி இருதரப்பு ஆவணங்கள் மற்றும் எதிரி அலுவலரின் நேர்முக முறையீட்டையும் ஆய்வு செய்த பின்னர் முடிவு ஒன்றினை மேற்கொள்வார்.

(3) மேற்காண் நடைமுறை எதிரி அலுவலர் வாய்மொழி விசாரணைக்கு பதிலாக நேர்முக விசாரணை தேர்வு செய்திடும் போது உரியனவாகும். வேறு ஏதேனும் சூழமைவில் நேரில் கேட்டறிதல் என்பது ஒழுங்கு நடவடிக்கையின் போது எதிரி அலுவலரிடம் விசாரணை அதிகாரி நேரில் கேட்டறிதலாகும்; அதனை அவர் பதிவு செய்திடுவார்; அது எதிர்தரப்பு (அ) கடுமை தணிப்பு சூழலில் சொல்லப்படுவதாகும்.



Scanned by CamScanner

## PSO 84 - அரசாங்கப் பணியாளர்களுக்கு எதிராக துறை நடவடிக்கைகள் நிலுவையில் இருக்கையில் பணிதுறப்பு அல்லது ஓய்வு பெறல், முதலியன நடைமுறை.–

## Resignation or Retirement of Government Servants when Departmental Proceedings are pending against them etc. – Procedure –

(1) அடிப்படை விதி 56-ன் (a) மற்றும் (c) உட்கூறுகளில் என்ன சொல்லியிருந்த போதிலும், ஒழுங்கீனக் குற்றச்சாட்டின் பேரில் பணியிடை நீக்கத்திலிருக்கும் அரசாங்கப் பணியாளரை, அவர் கட்டாயமாய் ஓய்வு பெறும் தேதியை அடைந்ததன் பேரில் ஓய்வு பெறும்படி கட்டளையிடவோ அல்லது அனுமதிக்கவோ கூடாது. ஆனால், ஒரு தகுதிவாய்ந்த அலுவலர் மேற்கண்ட குற்றச்சாட்டின்மேல் விசாரணையை முடித்து, அதன் மேல் ஓர் இறுதி ஆணையைப் பிறப்பிக்கும் வரை அவரை பணியில் வைத்துக்கொள்ளவேண்டும். அத்தகைய அலுவலருக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் மேல் இறுதி ஆணைகள் பிறப்பிக்கப்படும்வரை அவருக்கு பிழைப்பூதியம் அனுமதிக்க வேண்டும். மேற்கண்ட அரசாங்கப்பணியாளர் இறுதியில் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டால் அவர் வழக்கம்போல் பணியினின்று ஓய்வு பெற்றிருந்தால் என்ன ஓய்வூதியத்துக்கு உரிமையுள்ளவராயிருந்திருப்பாரோ அந்த ஓய்வூதியத்தை மட்டும் அவர் முதிர் வயதடைந்த தேதியிலிருந்து அமுல்படுத்தப்பட்டவாறு வாங்கிக்கொள்ளும்படி அனுமதித்து ஏற்கனவே கொடுக்கப்பட்ட படியை ஏற்றுக்கொள்ளத்தக்க ஓய்வூதியத்துக்கு நேராகச் சரிகட்ட வேண்டும்.

(2) முதிர்வயதடையும் அரசாங்கப் பணியாளர்களுக்கு எதிராக துறை நடவடிக்கைகள் முடிவடையாமல் இருக்கையில், அக் குற்றச் சாட்டுகள் பணியிடை நீக்கத்தைத் தேவைப்படுத்தக்கூடிய அளவில் கடுமையாயில்லாமல் அதாவது, பணியறவு அல்லது பணிநீக்கம் விளைவிக்கத்தக்க குற்றச்சாட்டுகளாயில்லாமல் இருப்பின், அவர்களை ஒரு தற்காலிக ஓய்வூதியத்தின் பேரில் ஓய்வு பெற அனுமதிக்கலாம். பிறப்பிக்கும் இறுதி ஆணைகளில், தேவையானால், ஓய்வூதியத்தைப் பொருத்தமானபடி குறைத்துக்கொள்ளலாம்.

(3) மேலும், ஒரு அரசாங்கப் பணியாளர் மீது துறை நடவடிக்கைகள் முடிவடையாமலோ அல்லது எதிர்நோக்கி இருப்பின் அவரை ஓய்வு பெற அனுமதிக்கலாகாது.

## PSO 85 - ஆய்வாளர்கள், சேமப்படை ஆய்வாளர்கள், முதலியவர்களை பணியறவு பணிநீக்கம் கட்டாய ஓய்வு பெறச் செய்தல், அல்லது பணிநிலை இறக்கம் ஆகியவற்றை பற்றிய நிகழ்ச்சிப் பதிவு.–

## Minutes for Dismissal, Removal, Compulsory Retirement or Reduction of Inspectors, Reserve Inspectors, etc. –

(1) காவல் துறைத் தலைவரால் முதலில் நியமிக்கப்பட்ட ஒரு சார்நிலை காவல் அலுவலர் கட்டாய ஓய்வு பெறலுக்கோ, பணியறவுக்கோ பணிநீக்கத்திற்கோ பரிந்துரை செய்யப்பட்டிருக்கையில், ஆணை எண் 86க்கிணங்க கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஓர் முழுமையான நிகழ்ச்சிப் பதிவை எழுதவேண்டும். அத்துடன் தேவையான ஆவணங்களனைத்தையும், ஒவ்வொன்றுக்கும் காட்சிப் பொருள் எண் கொடுத்து, அந்தப்படியே நிகழ்ச்சிப் பதிவில் குறிப்பிட்டு, மேல் அனுப்பவேண்டும். அத்தகைய ஆவணங்களின் பட்டியல் ஒன்றையும் அனுப்ப வேண்டும்.

(2) அடியிற்கண்ட பதிவுருக்கள் சேர்க்கப்படும்:-

(a) குற்றஞ்சாட்டப்பட்டவர் பணியில் சேர்க்கப்பட்ட தேதியிலிருந்து வகித்து வந்த பதவிகள் அனைத்தையும் தேதிகளுடன் காட்டும் பட்டியல் ஒன்று.

(b) அவரது அசல் தனிக்கோப்பு



(3) மேற்கண்ட வழக்கின் மேல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், காவல் துறை துணைத் தலைவர், இவர்களின் குறிப்புகளும் பரிந்துரைகளும் அடங்கிய சேர்ப்புக் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்படும். அதில், ஆணை எண் 80-ல் கண்டுள்ளபடி ஒரு முறையான பதிவு செய்யப்பட்ட விசாரணை நடைபெற்றதா என்று குறிப்பிட வேண்டும்.

குறிப்பு :- மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பரிந்துரை செய்யும் ஓர் தண்டனையை காவல் துறை துணைத் தலைவரே விதிப்பதற்குத் தகுந்த அதிகாரமுள்ளவராயிருக்கையிலும் இவ்விதி முறைகளைக் கையாளவேண்டும்.

## PSO 86 - தண்டனைப் பட்டியல் கோப்பு.–

## Punishment Roll File.-

(1) தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணியாளர் தொகுதி ஒழுங்கு & மேல்முறையீடு விதிகள், 1955-ன், 2-வது விதியில் கண்ட தண்டனை ஒன்று விதிக்கப்படும் நேர்வுகள் அனைத்திலும் ஒரு நிகழ்ச்சிப் பதிவை எழுதிவைக்க வேண்டும்.

(2) (a) நிகழ்ச்சிப் பதிவை எழுதுவதையும், பிற்பாடு அதை நிர்வகிப்பவர்கள் படிப்பதையும் எளிதாக்கும் பொருட்டு, அனைத்து கோப்புகளையும் இனவாரியாகப் பிரித்து, அவற்றிற்கு அட்டவணைகளை, உதாரணமாக, குற்றச்சாட்டு, குற்றஞ்சாட்டப்பட்டவரின் எழுத்து-வாய்மொழி வாக்கு மூலங்கள் என்பன போல் தயாரித்து, அவற்றுடன் சேர்த்து வைக்க வேண்டும்.

(i) குற்றச் சார்த்து மற்றும் குற்றம் சாட்டப்பட்ட அலுவலரின் விளக்கம்

(ii) வாய்மொழி விசாரணைக் கோப்பு (கேள்விகளும் பதில்களும் கொண்டது)

(iii) வாய்மொழி விசாரணையின் போது எதிரி அலுவலரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் அதனின் மீதான உத்தரவுகள்

(iv) அரசுத் தரப்பு சாட்சிகளின் விவர அறிக்கை

(v) எதிர் தரப்பு சாட்சிகளின் விவர அறிக்கை

(vi) அரசுத் தரப்பு ஆவணங்கள்

(vii) எதிர் தரப்பு ஆவணங்கள்

(viii) அரசுத் தரப்பு (அ) எதிர் தரப்பிற்கு தொடர்பற்ற பிற முக்கிய ஆவணங்கள்-அதாவது விட்டோடிகளின் காலங்கடந்த மருத்துவச் சான்றிதழ்கள், கடவுச் சீட்டுகள், தீர்ப்புரை நகல்கள் மற்றும் விளக்கவுரையில் எதிரி அலுவலரால் குறிப்பிடப்பட்டுள்ள குற்ற எண்கள் தொடர்பான வழக்கு, நாட்குறிப்பு கோப்புகள், மேலுமான எதிர்தரப்பு எழுத்துமூல விவர அறிக்கை, மேல்முறையீடுகள் முதலியன (அ) தண்டிக்கும் அதிகாரியின் குற்ற குறிப்பாணை நிகழ்ச்சிக் குறிப்பு மற்றும் உத்தரவுகள் (அ) தண்டனைப் பட்டியல் தொடர்பான வேறு ஏதேனும் முக்கிய பதிவுருக்கள்

(ix) மேற்காண் அடங்காத பல்வகை கோப்பு

(b) வாக்கு மூலப்பக்கங்களுக்கு எண் கொடுத்து காட்சிப் பொருள்களுக்கு எழுத்துக் குறி அளித்து, அவற்றின் பட்டியல் ஒன்றைப் பதிவில் சேர்த்துக் கொள்ளவேண்டும். நிகழ்ச்சிப் பதிவில் நேர்விற்கேற்ப, பக்க எண்ணால், எழுத்தால் அல்லது இலக்கத்தால், வாக்கு மூலங்கள் அல்லது காட்சிப் பொருள்களைக் குறிப்பிட வேண்டும்.

(c) கடைசியாக, விசாரணைக் கட்டாக அமைந்துள்ள பதிவுகளனைத்தையும் அவற்றின் பெயர்ச்சுருக்கத்தைக் காட்டும் அட்டவணையுடன் பொழிப்புக் குறிக்க வேண்டும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

(3) (a) நிகழ்ச்சிப் பதிவுக்குத் தனிக்கட்டு உண்டு; அதை அடியில்கண்ட தலைப்புகளின் கீழ் எழுத வேண்டும்:-

(i) குற்றச்சாட்டின் அறிக்கைகள்

(ii) நிகழ்மைகள் சாட்சியம், இவற்றின் சுருக்கம்

(iii) எதிர்வாதத்தின் சுருக்கமும், அதை மெய்ப்படுத்துவதற்கான சாட்சியமும்

(iv) குற்றச் சாட்டின் மேல் தீர்மானம்

(v) ஆணை (அதை அளிக்க அதிகாரமுள்ள அதிகாரியால்)

(b) சாட்சிகளின் தோற்றத்தை, அது விஷயமாய் விசாரணை காலத்தில் பதிவுகளில் ஒரு குறிப்பு செய்யப்பட்டிருந்தாலன்றி மற்றபடி நிகழ்ச்சிப் பதிவில் குறிப்பிடலாகாது. நிகழ்ச்சிப் பதிவை எழுதும் விசாரணை அதிகாரிகள் தங்கள் நினைவுகளிலிருந்து சாட்சிகளின் தோற்றத்தைப் பற்றி சொல்லலாகாது என்பதன் பொருட்டு இது அவசியமாகிறது.

(c) நிகழ்ச்சி குறிப்பின் (2)-வது (3)-வது தலைப்புகளின் கீழ் உள்ள சுருக்கத்தில், உள்ளபடியாக வழக்குப் பொருளாக உள்ள விஷயங்களைப் போதிய அளவு விவாதிப்பதற்கு இன்றியமையாத சாட்சியம் எதுவோ அதை மட்டுமேயன்றி சாட்சியம் முழுவதையும் எடுத்து எழுதலாகாது. குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஏற்பும் எதிர்ப்புமான சாட்சியத்தை நிகழ்ச்சிப் பதிவோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தீர்மானத்துக்கு ஆதாரமான தெளிவான காரணங்கள் நிகழ்ச்சிப் பதிவில் கண்டிருக்க வேண்டும்.

(4) முடிவுகள்:- விசாரணையை நடத்தும் அதிகாரி குற்றச்சாட்டுக்கும் எதிர்வாதத்துக்கும், ஆதாரமான சாட்சியத்தை கவனமாய் ஆராய்ந்த பின்னர் ஒவ்வொரு குற்றச்சாட்டின் மேலும் தனியாகத் தனது தீர்மானத்தை எழுதவேண்டும். பல குற்றச்சாட்டுகள் இருக்கும் நிலைகளில், வழக்கமாக அத்தகைய விஷயங்களில் எதிர்ப்படும் இடுக்கண்களைத் தவிர்க்கும் பொருட்டு துணை குற்றச்சாட்டுகளை "B" "C" "D" என்று ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக்கொண்டு வகை செய்ய வேண்டும். அவசியமானால் கடைசியில் அனைத்து குற்றச்சாட்டுகளையும் உள்ளடக்கி ஒரு முழு இறுதித் தொகுப்பினை தரலாம். தண்டனை விதிப்பதற்கென்று உயர்நிலை அதிகாரிக்கு அனுப்பப்படும் இனங்களில் விசாரணை அலுவலர் தானே எடுத்துக்கொண்ட வழக்குகள் பொருத்தவரை விதிக்க வேண்டிய தண்டனை குறித்து பரிந்துரை ஒன்றைச் செய்யலாம்; ஒரு விசாரணையை நடத்தும்படி அவர் கட்டளையிடப்பட்டிருக்கும் இனங்களில் அத்தகைய பரிந்துரை செய்யும்படி அவருக்கு விசாரணையைக் கட்டளையிட்ட அதிகாரி உத்தரவிடுவது அவ்வதிகாரியின் விருப்பத்தைப் பொருத்ததாகும்.

(5) மேல்முறையீடு செய்யத்தக்க சிறிய தண்டனைகள் பொருத்தவரை, நிகழ்ச்சிப்பதிவானது தெளிவுக்கு மாறாது எவ்வளவு சுருங்கி இருக்கலாமோ அவ்வளவு சுருக்கமாய் இருத்தல் வேண்டும்.

குறிப்பு:- குற்றச்சாட்டுகள் தெளிவாகவும் திட்டமாயும் இருக்க வேண்டியதுமன்றி, விசாரணை தொடர்ந்து நடக்கையில், அவற்றை மாற்றவோ, விரிவுபடுத்தவோ, பிரிக்கவோ கூடாது. ஒவ்வொரு குற்றச்சாட்டும், தன்னில் உள்ளடக்கியதாயும், தனித்ததாயும் பிழையின்றி இருத்தல் வேண்டும்.

(6) தகுதிவாய்ந்த அலுவலர் மட்டுமே தண்டனையை விதிக்கும் ஆணையை எழுதலாம்; கெட்ட முன் வரலாறு எனும் குற்றம் சாட்டப்பட்டிருந்தால், மேற்கண்ட அலுவலர், அதையும் அதன் சம்பந்தமாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர் கொடுத்த விளக்கத்தையும், குறிப்பிடவேண்டும். மேலும் அவர் குற்றஞ்சாட்டப்பட்டவரின் முறையீடுகளை, பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதாகவும் குறிப்பிட வேண்டும்.



விளக்கம்:- ஒரு மாவட்டத்தில் ஒரு குற்றம் புரிந்த குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர், குற்றப்பட்டியலின் மேல் உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் காலத்தில் அந்த மாவட்டத்தைவிட்டு மாற்றலாகி இருந்தால், அவர் முன்பு அலுவல் செய்த மாவட்டத்தில் காவல் கண்காணிப்பாளருக்கு குற்றப்பட்டியலின் மேல் ஆணைகள் பிறப்பிக்க அதிகார வரம்பு கிடையாது; ஆகையால் அவரது ஆணையானது செல்லுபடியற்றதாய் விடும். ஆகவே, அத்தகைய நேர்வுகளில், குற்றப்பட்டியல்களை அதிகாரமுள்ள அலுவலருக்கு, அதாவது தண்டனை விதிக்கப்படும் காலத்தில் எந்த காவல் கண்காணிப்பாளர் ஆட்சிவரம்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் உண்மையாகப் பணிபுரிந்து வருகிறாரோ அந்த கண்காணிப்பாளர் அல்லது காவல் துறைத்துணைத் தலைவருக்கு இறுதி ஆணைகளுக்கென்று அனுப்பி வைக்கவேண்டும் - ஆயினும் அத்தகைய நேர்வுகளில் குற்றம் நடந்த மாவட்டங்களில் உள்ள அலுவலர்கள் குற்றப்பட்டியலை வரைந்து, குற்றஞ்சாட்டப்பட்டவர் உண்மையாய் பணிபுரிந்து வரும் ஆட்சி வரம்பில் உள்ள அதிகாரிக்கு குற்றப்பட்டியலின் மேல் இறுதி ஆணைகளைப் பிறப்பிப்பதற்கென்று, கட்டுகளை அனுப்பி வைக்க வேண்டும்.

புதிய விசாரணை எதுவும் நடத்த வேண்டியதில்லை. ஆனால், அதிகார வரம்புள்ள சம்பந்தப்பட்ட அலுவலர், வேறு காவல் கண்காணிப்பாளரால் பதிவு செய்யப்பட்ட சாட்சியத்தின் மேல் தனது சொந்த முடிவுக்கு வரும் உரிமை உடையவராய் இருத்தல் வேண்டும். வரம்புரையாக தநா. காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு & மேல்முறையீடு) விதி 2ல் குறிப்பிடப்பெற்ற சிறு தண்டனைகளை தகுதி வாய்ந்த அதிகாரியினால் தன் கீழ் பணியாற்றும் போது தவறிழைத்த குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் மீது விதிக்கப்படலாம் மற்றும் அவரது வழியுரிமை அதிகாரியும் இதில் உள்ளடங்குவார்.

## PSO 87

(1) விதிக்கப்படவுள்ள தண்டனையானது, பணிநிலை இறக்கம் பணியறவு, பணிநீக்கம் அல்லது கட்டாய ஓய்வு பெறல், ஆக இருக்கும் நேர்வுகளில், தண்டனையை விதிக்க அதிகாரமுள்ள அலுவலர் விதிக்க வேண்டிய தண்டனை குறித்து ஒரு தற்காலிக முடிவுக்கு வரும் முன்னர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு நிகழ்ச்சிப்பதிவின் நகல் ஒன்றை வழங்கி, சாதாரணமாக ஒரு மாதத்துக்கு மேற்படாத ஓர் நியாயமான காலத்துக்குள், விதிக்கப்பட உள்ள தண்டனையை ஏன் விதிக்கலாகாது என்பதற்குக் காரணம் காட்டும்படி கட்டளையிட வேண்டும். இது தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டவர் சமர்ப்பித்த முறையீடு எதையேனும் இறுதி ஆணை பிறப்பிப்பதற்கு முன்பு ஏற்றவாறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பு:- மேற்படி ஆணையில் கண்டவாறு விதிக்கப்பட உள்ள குறிப்பான தண்டனையை ஏன் விதிக்கலாகாது என்பதற்குக் காரணம் காட்டும் படியான வாய்ப்பை, தண்டனையை விதிக்க அதிகாரமுள்ள அலுவலராவது, அல்லது, அவரது கட்டளைபின்படி விதிக்கப்பட்டுள்ள மேற்கண்ட தண்டனையைப் பெறப்போகிற அலுவலரது பதவிக்கு மேற்பட்டவரும் அவருக்கு கீழ்நிலையில் உள்ள ஒரு அலுவலராவது, கொடுக்கலாம்.

(2) திறமையின்மைக்காக அடிப்படை விதி 56(2) அல்லது தமிழ்நாடு ஓய்வூதிய விதி 3(2)ன் கீழ் அகவை ஐம்பது எட்டிய பின் அல்லது 25 ஆண்டு தகுதி பணிக்காலம் முடிவடைந்தபின் கட்டாயமாய் ஓய்வு பெறுபவர்களின் நேர்வுகள் அனைத்திலும் ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதிகளில் 3 (b) விதியில் கண்ட, தெளிவான குறிப்பிட்ட குற்றச்சாட்டு வரைதல் உள்ளிட்ட, விரிவான நடைமுறையை பின்பற்ற வேண்டியதில்லை.

(3) குடிமை மருத்துவ விதித் தொகுப்பு விதிகளின் கீழ், மருத்துவ அலுவலர்கள், எந்த அரசாங்கப் பணியாளருக்கேனும், அக்காலத்தில் அவர் பணிபுரிந்து கொண்டிருக்கும் அலுவலகத்தின் அல்லது துறையின் தலைவர் அறிந்துள்ளவாறு அல்லது அவரது வேண்டுகோளின்படியன்றி மற்றபடி உயர்பணிக்குத் தகுதியற்றவரெனும் சான்றைக் கொடுக்கக் கூடாது. ஒரு மருத்துவ அலுவலர் காவல் அலுவலர் ஒருவருக்கு இயலாமை ஓய்வூதியம் பரிந்துரை செய்து, அதற்கென்று ஒரு வேண்டுகோள் அனுப்பும்படி அலுவலகத் தலைவரை

Scanned by CamScanner
Scanned with CamScanner

கேட்டுக்கொண்டால், மேற்கண்ட தலைவர், சம்பந்தப்பட்டவருக்கு எதிராக ஏதேனும் காவல் துறை விசாரணை நிலுவையில் அல்லது எதிர்பார்க்கப்பட உள்ளதா என்று பார்த்துக்கொண்டு, அப்படியிருந்தால், கேட்கப்பட்ட வேண்டுகோளை மறுத்துவிட்டு, மருத்துவ அலுவலருக்கு வழக்கு நிகழ்மைகளைத் தெரிவித்து, அவரை அவசியமானால் விசாரணை முடியும்வரை விடுப்பு பரிந்துரை செய்யும்படிக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

## PSO 88 - நிகழ்ச்சிப்பதிவுக்கு நகல் கொடுத்தல்.– Granting copies of minutes.-

(1) பணி நிலை இறக்கம், பணியிடைநீக்கம், கட்டாய ஓய்வுபெறல், பணியறவு பணிநீக்கம் ஆகிய நேர்வுகளில் பாதிக்கப்பட்ட அலுவலருக்கு நிகழ்ச்சிப்பதிவின் நகல் ஒன்றை உடனே கொடுக்க வேண்டும். மற்றைய நேர்வுகளில் அது மனுவின் மேல் தான் கொடுக்கப்படும்.

### (2) காவல் துறை விசாரணைகளில் இதர பதிவுகளுக்கு நகல் அளித்தல்

(a) சாதாரணமாக, மேலே குறிப்பிட்டவைகளையும், ஆணை எண் 80-ல் குறிப்பிட்ட குற்றச்சாட்டு, குற்றங்களின் அறிக்கை, ஆகியவற்றின் நகல்களையும் தவிர மற்றபதிவுகளை, ஒழுங்கீனத்தவறுக்காக காவல் துறை மூலம் குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர்களுக்குக் கொடுக்கலாகாது. ஆனால், விசாரணைக்கு முன்பாவது பின்பாவது, மேல் முறையீட்டுக்காகவும் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் மேல், அவர்களுக்கு, வழக்குச் சம்பந்தப்பட்ட பதிவுகள் எல்லாவற்றையுமேனும் அல்லது அவற்றுள் எவைமட்டுமேனும் கவனத்துடன் படிக்கவோ அல்லது அவர்களது எதிர்வாதத்துக்குத் தேவையான யாதொரு ஆவணப்பகுதிகளின் பாகங்களுக்கு நகல்களையாவது சுருக்கங்களையாவது எழுதிக்கொள்ளவோ, அனுமதியளிக்க வேண்டும்:-

(i) அவர்களுடைய விண்ணப்பங்களில் அவர்கள் படிப்பதற்குத் தேவையான பதிவுகளைக் குறிப்பிட்டு, அவற்றைப் படிப்பதற்கு ஏன் அனுமதியளிக்கவேண்டும் என்பதற்கு நியாயமான காரணத்தைச் கூறவேண்டும்.

(ii) அவர்களுக்கு அத்தகைய உரிமையை சன்கானிப்பின் கீழ் மட்டுமே அனுமதிக்க வேண்டியதுமன்றி, பதிவுக்கட்டுகளை தங்களுடன் வெளியே எடுத்துச்செல்ல அனுமதியளிக்கலாகாது.

(iii) யாதொரு ஆவணம் அல்லது பதிவின் மொழியை அறியாத சார்நிலைப் பணியாளர்கள் நேர்வில் பதிவுகளின் பொறுப்பில் உள்ள அலுவலரின் ஏற்புடன் அவர்களுக்கு உதவியாக மேற்கண்ட மொழியைத் தெரிந்த எவரையேனும் அவர்களுடன் வைத்துக்கொள்ள அனுமதிக்கலாம்.

(b) எந்த விஷயத்திலாவது, குற்ற அதிகாரிகளுக்குத் தேவைப்பட்ட ஏதோ ஒரு பதிவானது பொது நலனை முன்னிட்டோ அல்லது சரியெனக் காட்டக்கூடிய வேறெந்த சாரமான காரணங்களை முன்னிட்டோ, அவர்களுக்குக் கொடுக்க அல்லது வெளிப்படுத்தக்கூடாதெனக் கருதப்பட்டால், விசாரணை அதிகாரி அவர்களுக்கு அவ்வாறு தெரிவித்துவிட்டு, அப்படி மறுத்த விஷயத்தை அதற்கான, காரணங்களோடு எழுதிவைத்துக் கொள்ள வேண்டும் அத்தகைய நேர்வுகளில் குற்ற அலுவலர்களின் வேண்டுகோளுக்கு இணங்காதிருத்தல் காரணமாக, தண்டிக்கும் அதிகாரியின் உத்தரவுகள், இயற்கை நீதிய தத்துவங்களை சரியானபடி ஆலோசித்த பின் பிறப்பிக்கப்பட்டிருந்தால் செல்லுபடியற்றதாகாது.

## PSO 89 - கீழ் கிரம நிலை (அ) கீழ் பதவிக்கு பணி இறக்கம் (அ) கால சம்பள ஏற்ற முறையில் கீழான நிலைக்கு இறக்கம்.– Reduction to lower grade or post or lower stage in the time scale of pay:-

(1) கீழ் கிரம நிலை (அ) கீழ் பதவிக்கு இறக்கம் (அ) கால சம்பள ஏற்ற முறையில் கீழான நிலைக்கு இறக்கம் செய்து உத்தரவிடும் அதிகாரி, குறைப்பு எவ்வளவு காலம் செயல் விளைவு கொண்டிருக்கும் என்பதை குறிப்பிடுவார் (அ) குறிப்பிடாமல் இருந்திடுவார்; ஆனால் காலம்



குறிப்பிடப்பட்டிருக்கிறவிடத்து, சீராக்கத்திற்குப் பின்னர் குறைப்புக் காலம் வருங்கால ஊதிய உயர்வுகளைத் தள்ளிப் போடுமா என்பதை குறிப்பிட வேண்டும்; அவ்வாறாயின் எத்தனைக் காலத்திற்கு ? சில நேர்வுகளில் காலம் குறிப்பிடப்பட்டிருக்காதவிடத்து, தண்டனையானது குறிப்பிடப்படாத காலத்திற்கு என்பதே முடிவாகும்.

(2) பணி இறக்க உத்தரவு ஒவ்வொன்றும் எந்த தேதியிலிருந்து செயல் விளைவு மற்றும் குறிப்பிட்ட காலத்திற்கு குறைப்பு எனில் தண்டனை செயல் விளைவு காலம் (வருடங்கள் மற்றும் மாதங்கள்) மற்றும் குறைப்பானது விடுப்பு துய்ப்புக் கால இடைவெளி நீங்கலாக என்பதனையும் குறிப்பிட வேண்டும்.

(3) குறிப்பிடப்படாத காலத்திற்கு அல்லது நிரந்தர வகையில் கால சம்பள ஏற்ற முறையில் கீழ் நிலைக்கு இறக்கமானது இவ்விதிகளின் கீழ் அனுமதிக்கப்படாது. ஒவ்வொரு கிரமநிலை உத்தரவும் கீழ்க் குறிப்பிட்டவற்றை குறிப்பிட வேண்டும்.

(a) உத்தரவு அமல் தேதி மற்றும் தண்டனையின் செயல் விளைவுக் காலம் (வருடங்கள் & மாதங்கள்)

(b) அரசு ஊழியர் கால சம்பள ஏற்ற முறையில் இறக்கம் செய்யப்பட்டுள்ள நிலை (ரூபாய்)

(c) வருங்கால ஊதிய உயர்வுகளை பாதிக்குமெனில் எந்த அளவுக்கு (வருடங்கள் & மாதங்கள்)

(d) குறைப்பானது விடுப்பு துய்ப்புக் காலம் நீங்கலாக என்பது பற்றி

குறிப்பு:- கீழ்நிலை (அ) பதவிக்கு குறிப்பிட்ட காலத்திற்கு குறைப்பு உத்தரவு என்பதனால் நபரொருவரை அவர் இறக்கப்பட்ட நிலை (அ) பதவிக்கு மறுபதவி உயர்வுக்கு பரிசீலனைக்கு தடை செய்திடாது, வரம்புரையாக பின்னிட்டு நல்ல வேலை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

## PSO 90 - பணியிடை நீக்கம்.– Suspension.-

(1) (a) விதி 3 (e) தமிழ்நாடு காவல் சார்நிலைப்பணியாளர் தொகுதி (ஒழுங்கு & மேல்முறையீடு) விதிகள், 1955 (பின்சேர்க்கைIII)-ன் கீழ், பணியாளர் தொகுதியின் உறுப்பினர் ஒருவரை,

(i) அவருக்கு எதிராக கடுமையான குற்றச்சாட்டுகளைப்பற்றி ஒரு விசாரணை செய்ய இருப்பின், அல்லது விசாரணை முடியாகாமலோ இருக்கையில், அல்லது

(ii) அவருக்கு எதிராக யாதொரு குற்றவியல் குற்றத்தைப் பற்றி ஒரு முறையீடு காவல் விசாரணையிலாவது நீதிமன்ற விசாரணையிலாவது இருப்பதுமன்றி, பொது நலனுக்கு அத்தகைய பணியிடை நீக்கம் அவசியமாய் இருக்கையில், பணியிலிருந்து தற்காலிகமாக விலக்கிவைக்கலாம்.

(b) ஒரு குற்றவியல் குற்றச்சாட்டின் மேலோ மற்றபடியோ நாற்பத்தெட்டு மணி நேரத்துக்கு மேற்பட்ட ஓர் கால அளவுக்கு சிறைவைக்கப்பட்ட அரசாங்கப் பணியாளர் ஒருவர் (ஒழுங்கு & மேல்முறையீடு) விதிகளின் 3 (2) விதியின்படி பணியிடை நீக்கத்தில் வைக்கப்பட்டிருப்பவராகக் கருதப்படவேண்டும்.

(c) ஆணை (1) (a)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஒரு பணியிடை நீக்க உத்தரவினை, அதைப் பிறப்பித்த அதிகாரியாவது அல்லது அவருக்கு மேற்பட்ட எந்த அதிகாரியாவது எச்சமயத்திலேனும் ரத்து செய்யலாம்.

(d) (ஒழுங்கு & மேல்முறையீடு) விதிகள் 3 (e) விதியின் கீழ் பணியிடை நீக்க உத்தரவு பிறப்பிக்கையில் ஆணை எண் 80-ல் கண்ட நடைமுறையை பின்பற்ற வேண்டிய அவசியம் இருக்கக் கூடாது.

Scanned by CamScanner

(2) (a) ஒரு அலுவலர் பணியிடை நீக்கத்திலிருந்து கடைசியில், விடுவிக்கப்பட்டு மீண்டும் பணியில் அமர்த்தப்படுகையில், அவர் நன்மதிப்புடன் விடுதலை செய்யப்படாவிட்டால் காவல் ஆய்வு அல்லது விசாரணை முடியும்வரை பணியினின்று விலக்கி வைக்கப்பட்ட காலத்தை அவர் பெறத் தகுதியுடைய விடுப்பாக கருதி வகை செய்யவேண்டும். ஆனால் அவ்வாறான ஒரு நேர்வில் பணியிடை நீக்கத்திலிருந்து விடுதலையைக் கட்டளையிட்ட அதிகாரியின் விருப்பத்தேர்வின்படி ஊதிய உயர்வு நிறுத்தம் அல்லது குறைத்தல் போன்ற, குறிப்பிட்ட தற்காலிக விலக்கத்தைத் தவிர வேறொரு நிலையான தண்டனையைக் கொடுக்கலாம். மேற்கண்ட அலுவலர் நன்மதிப்புடன் விடுவிக்கப்பட்டால் காவல் ஆய்வு அல்லது விசாரணை முடியும்வரை பணியிலிருந்து விலக்கிவைக்கப்பட்ட முழுக் காலத்தையும் பணிக்காலமாக கருத வேண்டும்.

(b) ஒரு அலுவலருக்கு எதிராக காவல் துறைக் குற்றச்சாட்டுகளின் மேல் நடந்த ஒரு விசாரணையின் விளைவாக அவர் பணியறவு செய்யப்பட்டால் அந்த உத்தரவானது பிறப்பிக்கப்பட்ட தேதி முதற்கொண்டு அமுலுக்கு வரவேண்டும்.

(3) (a) பணியிடை நீக்கமானது பாதிக்கப்பட்ட அலுவலர், விடுப்பு எடுக்காமல் வராதவராயிருந்தாலன்றி மற்றபடி, அவர் கட்டளையை பெற்றுக்கொண்ட தேதி முதற்கொண்டு அமுலுக்கு வர வேண்டும்; விடுப்பு எடுக்காமல் வராதவர் நேர்வில் அவர் அலுவலுக்கு வராத தேதி முதற்கொண்டு அது அமுலுக்கு வரும்.

(b) பணியிடை நீக்கத்தில் உள்ள காவல் அலுவலர் ஒருவர், நேர்முக விசாரணைக்காவது துறை விசாரணைக்காவது ஆஜராகும்படி கட்டளையிடப்பட்டிருக்கையில், அவர் கட்டளையைப் பெற்றுக் கொண்டதிலிருந்து இருபத்தொரு நாட்களுக்குள் ஆஜராகாவிட்டால் அவரை ஒரு விட்டோடியாக நீக்கிவிடலாம்; அவர் உடல் நலக்குறைவின் நிமித்தம் ஆஜராக முடியவில்லையென்று கோரினால், அவரது நேர்வில் ஆணை எண் 82-ன் காப்புரைகள் பொருந்தும்.

(4) பணியிடை நீக்கத்தில் உள்ள அலுவலர் ஒருவரை, அவர் இடத்தைவிட்டுப் போவதற்கு முன்பு தனது முகவரியைக் கொடுத்ததன் பேரில், அங்கே விசாரணைக்கு அவர் தேவையாயிருந்தாலன்றி மற்றபடி, சாதாரணமாக அவரை இடத்தைவிட்டுப்போக அனுமதிக்க வேண்டும்.

(5) பணியிடை நீக்கத்தை உத்தரவிட அதிகாரம் பெறாத அலுவலர்கள் அத்தண்டனையைக் கட்டளையிடல் - நடைமுறை

கடுமையான ஒழுங்கீன நேர்வுகளில் காவல் ஆய்வாளர் அல்லது சேமப்படை காவல் ஆய்வாளரைக் கண்காணிப்பாளரும், ஆய்வாளர் பதவிக்குக் குறையாத பதவி வகித்து வருகிற எந்த காவல் அலுவலரையேனும் காவல் உட்கோட்ட அலுவலரும், அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் காவல் விசாரணை அல்லது ஆய்வு செய்யப்பட்டு முடியும்வரை பணியிடை நீக்கம் செய்திடலாம். ஆயினும் மேற்கண்ட அவ்வாறான அனைத்து நேர்வுகளிலும் மேற்கண்ட தண்டனையை விதிக்க அதிகாரமுள்ள அலுவலரின் ஏற்பினைக் கோரி உடன் விண்ணப்பிக்க வேண்டும்.

(6) காவல் கண்காணிப்பாளர்களும், உட்கோட்ட அலுவலர்களும் முந்தின உட்பிரிவின் கீழ் பணியிடை நீக்கம் செய்த அலுவலர்களை விடுவிக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்கள்.

(7) பணியிடை நீக்கத்தில் உள்ள அலுவலர்கள், பட்டயங்களையும், உடுப்புப்பையையும் ஒப்படைத்தல்

அனைத்து காவல் அலுவலர்களும், பணியிடை நீக்கத்தில் வைக்கப்பட்டிருக்கையில், அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தங்களுடைய பட்டயங்களையும் உடுப்புப்பையையும் தங்களுக்கு அடுத்த மேல்நிலை அதிகாரியிடம் கொடுத்துவிட வேண்டும்.



(8) அனைத்து ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளும் குறிப்பாக அலுவலர்கள் பணியிடை நீக்கத்தில் உள்ளவைகள் விரைந்து முடிவு செய்யப்பட வேண்டும். கீழ்க்கான் காலவரையறை கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (i) | புலனாய்வு, குற்றச்சார்த்து வனைதல் மற்றும் வழக்கினை யார் கையாள்வது என்பது குறித்த முடிவு அதாவது துறை, ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயம் (அ) நீதிமன்றம் | - | 4 திங்கள் |
| (ii) | விசாரணை அதிகாரிகளினால் விசாரணை நடத்தப்படுதல் | - | 6 திங்கள் |
| (iii) | தண்டிக்கும் அதிகாரிகளிலிருந்து விசாரணை அதிகாரி வேறுபட்டு இருக்கிறவிடத்து, விசாரணை அதிகாரியிடமிருந்து அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் உத்தரவு பிறப்பித்தல் | - | 2 திங்கள் |
| | மொத்தம் | | 12 திங்கள் |

DIG திங்கள்தோறும் ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளின் முன்னேற்றம் குறித்து கண்காணிக்க வேண்டும் மற்றும் தனிப்பட்ட குறுக்கீடு மூலம் மேற்கான் காலவரையறை குறிப்பாக பணியிடை நீக்கத்தில் உள்ள அலுவலர்கள் வழக்கில் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதனை உறுதி செய்திடல் வேண்டும்.

## PSO 91 - வசைகள்.– Reprimands.-

(1) ஒழுங்கு & மேல்முறையீடு விதிகளின் கீழ், உதவி ஆய்வாளர் படிநிலை அதற்கு மேற்பட்ட படிநிலை கொண்ட சார்நிலை காவல் அலுவலர்களுக்கு வசையை ஓர் தண்டனையாக விதிக்கலாம். அத்தண்டனையை விதிக்கக்கூடிய மிகக் குறைந்த படிநிலை அதிகாரி DSP / ASP அல்லது அவருக்கு நிகரான பதவி வகித்துவரும் ஓர் அலுவலர் ஆவார்.

(2) வசையானது கண்டனத்தைவிட ஒரு குறைந்த தண்டனையாகும். ஆகையால், குற்றமானது ஒரு கண்டனத்துக்குத் தகுதியற்றதாயிருக்கையில் அதை விதிக்க வேண்டும்.

(3) ஒரு வசையை அளிக்க உத்தேசித்திருக்கும் நிலை ஒவ்வொன்றிலும் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு தண்டனையை விதிக்கலாகாதென்பதற்குக் காரணம் காட்டும்படி ஒரு நியாயமான வாய்ப்பைக் கொடுக்க வேண்டும். வாய்மொழி விசாரணைத் தேவையில்லை. அது ஒரு மேல் முறையீடு செய்யத்தக்க தண்டனையாகும்.

(4) ஒரு அலுவலருக்கு நல்ல முன்வரலாறு இருக்கையில், மூன்றிலிருந்து ஆறுமாதத்துக்கு உட்பட்ட ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு வசையை நிறுத்தி வைக்கலாம்; ஒத்திவைத்த கால அளவுக்குள் மேற்கண்ட அலுவலர் பணிபுரிகையில் நன்னடத்தையுள்ளவராயிருந்து வந்தால், அக்கால முடிவில் தண்டனைக் கட்டளை ரத்து செய்யப்படும். ஒத்திவைத்த கால அளவுக்குள் எப்போதேனும் மேற்கண்ட அலுவலரின் நடத்தை உளநிறைவுகரமாயில்லாவிட்டால் மேற்கண்ட வசையானது உடனடியாக உறுதிப்படுத்தப்படலாம். ஒருவசையானது பிற்பாடு உறுதிப்படுத்தப்பட்டால், அது அதற்குத் தொடர்புள்ள குற்றத்தேதியிலிருந்து அமுலுக்கு வரும்.

(5) ஒரு வசையானது கடமை தவறியவர் தாளிலும், பணிப்பதிவேட்டிலும் குறிக்கப்படும்.

## PSO 92 - கண்டனம்.– Censure.-

குற்றமானது அலுவலரின் பண்பையோ, அவர் துறைக்குத் தகுதியாக இருப்பதையோ, கடுமையான வகையில் பாதிக்கக்கூடியதாய் இருந்தால் மட்டும் ஒரு கண்டனத்தை விதிக்கவேண்டும். ஒரு கண்டனத்தை அளிக்கவிருக்கும் நிலை ஒவ்வொன்றிலும், சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அத்தண்டனையை விதிக்கலாகாதென்பதற்குக் காரணம் காட்டும்படி ஒரு நியாயமான வாய்ப்பைக் கொடுக்கவேண்டும். வாய்மொழி விசாரணை தேவையில்லை.

Scanned by CamScanner

## PSO 93 - ஒழுங்கீனக்குறி எவருக்கு பொருந்தத்தக்கது.– Blackmark to whom applicable.–

உள்ளூர் காவல் ஆயுத சேமப்படை மற்றும் ஆயுத காவற் படையில் உள்ள தலைமைக் காவலர் மற்றும் அந்தப் படிநிலைக்கு கீழ் உள்ள அனைத்து காவல் அதிகாரிகளுக்கும் ஒழுங்கீனக் குறி முறை பொருந்துவனவாகும்.

## PSO 94 - ஒழுங்கீனக்குறிகள் விதிகள்.– Blackmark – Rules

ஒழுங்கீனக்குறிகள் மூலம் தண்டனையளிக்கும் முறையை முறைப்படுத்தும் விதிகள் பின்வருமாறு:

(1) ஒரு குறிப்பிட்ட தண்டனை, ஒரு ஒழுங்கீனக்குறி, இவை இரண்டையும் அளித்து ஒரு குற்றத்தைத் தண்டிக்கலாகாது.

(2) ஒரு ஒழுங்கீனக்குறி அற்பக் குற்றங்களுக்காகக் கொடுக்கலாகாது; அவற்றிற்கு தண்டனைக்கவாத்து, கூடுதலான காவல் அலுவல், கூடுதல் வேலை அல்லது அலுப்பு அலுவல் போதுமானதாக இருக்கலாம்.

(3) எந்த ஒரு குற்றத்துக்கும் ஒரு ஒழுங்கீனக்குறிக்கு மேற்பட்டதைக் கொடுக்கலாகாது.

(4) ஒழுங்கீனக்குறிகள், வேறு வகையாய்க் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, குற்றத்தேதி முதற்கொண்டு அமுலுக்கு வரும்.

(5) எந்த விஷயத்திலேனும் மேற்சொன்ன விதிகளைப் பயன்படுத்துவது குற்றஞ்சாட்டப்பட்டவருக்குப் பெருங் கஷ்டத்தை விளைவிக்கும் என்று ஒழுங்கீனக்குறியை, அளிக்கும் அதிகாரி கருதினால் அவ்விஷயத்தை சம்பந்தப்பட்ட காவல் துறை துணைத் தலைவரின் ஆணைக்கென்று எழுதிக்கேட்க வேண்டுமேயன்றி மற்றபடி கண்டிப்பாய் நிறைவேற்ற வேண்டும்.

## PSO 95 - விட்டோடுதல்.– Desertion.–

(1) விடுப்பில்லாமல் 21 நாள் வேலைக்கு வராதிருத்தல் "விட்டோடுதல்" குற்றத்தை நிறைவு செய்யும்; அதன் பிறகு வழக்கமாக அலுவலரின் பெயரை வராத தேதி முதற்கொண்டு நீக்கிவிட வேண்டும்.

(2) விட்டோடி என்று அடித்துவிடப்பட்ட அலுவலர் ஒருவர் மறுநியமனத்துக்காகக் கொடுக்கும் விண்ணப்பமானது, விடுப்பில்லாமல் வராத காலம் தொடங்கின தேதியிலிருந்து இரண்டு மாதத்துக்குள், எந்த காவல் கண்காணிப்பாளரின் கீழ் மேற்கண்ட சார்நிலை அலுவலர் பணி செய்து வந்தாரோ அந்த கண்காணிப்பாளரை, அல்லது அவரது பதவிக்கு நிகரான பதவியை வகித்து வரும் ஓர் அதிகாரியைச் சேர்ந்தாலன்றி மற்றபடி, அதை ஏற்றுக்கொள்ளலாகாது. நேர்விற்கேற்ப காவல் கண்காணிப்பாளராவது அல்லது அவருக்கு நிகரான பதவிவகித்து வரும் ஒரு அலுவலர் விட்டோடியவர் ஒருவரை,

(a) மேற்கண்ட நேர்வில் பரிசீலனை செய்யும் அதிகாரி நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குப் பிந்தாமல் அவர் ஆஜராகி, அவர் விடுப்பின்றி வராமலிருந்ததற்கு அவரது சமாதானத்தைக் கொடுக்கும் வரை.

(b) மேலும், நேர்விற்கேற்ப, காவல் கண்காணிப்பாளராவது அவருக்கு நிகரான பதவி வகித்துவரும் ஓர் அலுவலராவது தேவையாயிருக்கக்கூடிய வகைப்படியுள்ள விசாரணையைச் செய்த பின்பு மேற்கண்ட விஷயம் மறுபரிசீலனைக்குத் தகுதியுள்ளதென்று உளநிறைவடைந்தாலன்றி மற்றபடி, மறுபடியும் பணியில் அமர்த்தலாகாது.



இரண்டு மாத முடிவில், மறு நியமனத்துக்கான விண்ணப்பம் வரப்பெற்றிராவிட்டாலும், விட்டோடி இருக்கும் இடம் தெரியாவிட்டாலும், விஷயத்தைப் பரிசீலனை செய்யும் அதிகாரி பணியறவுக்கு காரணம் காட்டும்படி ஒரு வாய்ப்பை விட்டோடிக்குக் கொடுப்பது, நியாயமாய் சாத்தியமில்லையென்று தான் உளநிறைவடைந்து கொண்டதற்கான காரணங்களை எழுதிவைத்துவிட்டு, அதன் பின்னர் பணியறவை உறுதிப்படுத்த வேண்டும். மற்றைய நேர்வுகளில் பணியறவை உறுதிப்படுத்துவதற்கு முன்போ, அல்லது விட்டோடியை தண்டனையுடன் அல்லது தண்டனையின்றி மீண்டும் பணி அமர்த்துவதற்கு முன்போ, ஒரு குற்றச்சாட்டை வனைந்து ஆணை எண் 80-ல் குறிப்பிட்ட நடைமுறையை பின்பற்றவேண்டும்.

## PSO 96 - விடுப்பின்றி வராமை.– Absence without leave.-

20 நாள் வரைக்கும் விடுப்பின்றி வராதிருத்தலை ஒழுங்கு & மேல்முறையீடு விதிகளில் குறிப்பிட்டுள்ள எத்தண்டனையையேனும் விதித்து நெறிப்படுத்தலாம். விடுப்பில்லாமல் வராதிருந்த கால அளவுகளுக்கு ஊதியத்துடன் விடுப்பு ஏற்கத்தக்கதாயிருந்தாலுங்கூட அடிப்படை விதி 85(B) ஊதியமில்லாத விடுப்பை அளிக்கலாம்; மிகைப்பட்ட இடங்களில் சென்னை மாவட்ட காவல் சட்டம், 1859 (1859-ன் XXIV)-ன் கீழ் வழக்குத் தொடர்தல் மூலம் வகை செய்யலாம். அடிக்கடி விடுப்பில்லாமல் வராமலிருக்கும் அலுவலர் நிரந்தரமாக வராதவர்கள் என்று பணியறவுக்கு உள்ளாவர்.

## PSO 97 - தள்ளி வைத்த தண்டனைகள்.– Deferred punishments.–

(1) சிறிய குற்றங்களிலும் சிறிது பெரிய ஒழுங்கீனக் குற்றங்களிலும், ஒரு மனிதனுடைய முன்வரலாறு நல்லதாயிருக்கையில், மூன்று முதல் ஆறு மாதத்துக்குட்பட்ட ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு தண்டனையை தள்ளிவைக்கலாம்; தள்ளிவைத்த கால அளவின் நடப்பில் மேற்கண்ட அலுவலர் அலுவலில் இருக்கையில் நன்னடத்தையுள்ளவராயிருந்தால் மேற்கண்ட கால அளவின் இறுதியில் அத்தண்டனை உத்தரவு ரத்து செய்யப்படும். தள்ளிவைத்த கால அளவின் நடப்பில் எப்போதேனும் மேற்கண்ட குற்றஞ்சாட்டப்பட்டவரின் நடத்தை உளநிறைவற்றதாய்க் காணப்பட்டால் உடனடியாக மேற்கண்ட தண்டனையை உறுதி செய்யலாம். ஒரு தள்ளிவைக்கப்பட்ட தண்டனையானது உறுதி செய்யப்பட்டால் கடமை தவறியவர் தாளில் குறிக்கப்படும்; மற்றபடி குறிக்கப்படமாட்டாது.

குறிப்பு:- ஒரு வசை அல்லது கண்டனத் தண்டனை உத்தேசிக்கப்பட்டுள்ள இரண்டாவது குற்றமானது முதல் தண்டனை தள்ளிவைக்கப்பட்டிருக்கும் காலத்தில் செய்யப்பட்டால், இரண்டாம் தண்டனை விதிக்கப்படுகையில் முதலாம் வசை அல்லது கண்டனத் தண்டனை உறுதிப்படுத்தப்படுவதற்கு உட்பட்டிருக்கும். தள்ளிவைத்த தண்டனை ஒரு கண்டனமாயிருந்தாலும், இரண்டாம் குற்றத்துக்காக ஒரு வசைத் தண்டனை மட்டுமே உத்தேசித்திருந்தாலும் பாதகம் எதுவும் இல்லை. உத்தேசித்துள்ள தண்டனையானது தள்ளி வைக்கப்பட்ட கண்டனமாகயிருக்கும் போது, தள்ளி வைக்கப்பட்ட வசையானது, உறுதி செய்வதற்கு உட்பட்டிருக்கும்.

ஆயினும், குற்றஞ்சாட்டப்பட்டவரின் முன் வரலாறு நல்லதாயிருந்தால், அல்லது குற்றமானது சிறியதாயிருந்தால் மட்டுமே, ஒரு தண்டனையை தள்ளிவைக்க வேண்டும் என்பதைச் சந்தேகமறப் புரிந்துகொள்ள வேண்டும். வசையை ஒரு நிலையான தண்டனையாக ஏற்படுத்தியிருப்பதால், சாதாரணமாக ஒரு சிறிய குற்றத்துக்காக ஒரு தள்ளிவைத்த கண்டனத்தை அளிக்க வேண்டிய அவசியமிருக்கக்கூடாது.

(2) தள்ளிவைக்கப்பட்ட தண்டனையானது ஒரு பிழைக்குறி, கண்டனம், அல்லது வசையாயிருக்கையில், கால அளவு ஆறு மாதத்துக்கு மேற்படலாகாது. அந்த பிழைக்குறி, வசை, அல்லது கண்டனமானது பிற்பாடு உறுதி செய்யப்பட்டால் அது தொடர்புள்ள குற்றத் தேதியிலிருந்து அமுலுக்கு வரும்.

Scanned by CamScanner

(3) கூறு (1)ல் குறித்துரைக்கப்பட்ட ஒத்திவைக்கப்பட்ட காலத்திற்கு பின்னர் உறுதி செய்யப்பட்டாலன்றி, தள்ளி வைக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக யாதொரு மேல்முறையீடு எழாது. தண்டனை உறுதி செய்யப்படின், தள்ளி வைக்கப்பட்ட தண்டனை உறுதி உத்தரவினை எதிர்த்தும் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட காலத்தில் ஊழியரின் நடத்தை உள நிறைவு கொள்ளத்தக்க வகையில் இல்லை என்பதனால் பின்னிட்டு விதிக்கப்பட்ட தண்டனை உத்தரவினை எதிர்த்து இரண்டிற்கும் மேல்முறையீடு எழும்.

## PSO 98

தண்டனையை ஒத்திவைக்கும் முறையானது சார்நிலை காவல் அலுவலர்களைத் தவிர மற்ற அலுவலர்களுக்குப் பொருந்தாது.

## PSO 99 - தண்டனைகள் அமுலுக்கு வரும் தேதி.– Date of effect of punishments.-

பிழைக்குறி நீங்கலாக மற்ற தண்டனைகள் (ஆணை எண்.94-(4) ஐக் காண்க) உத்தரவில் தேதி குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி மற்றபடி, பாதிக்கப்பட்டவர் உத்தரவைப் பெற்றுக்கொண்ட தேதி முதற்கொண்டு அமுலுக்கு வரும்.

## PSO 100 -கடமை தவறியவர் குறிப்புத்தாளில் தண்டனையைக் குறித்தல்.– Entry of punishment in Defaulter sheet.-

பொது காவல் படையைச் சேர்ந்த காவல் ஆய்வாளர்கள், சேமப்படை ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் ஆகிய இவர்களுக்கும் சுபேதார், மேஜர் உள்பட்ட சுபேதார்களுக்கும், தனி காவலைச் சேர்ந்த ஜமேதார் துணைவர் (adjutant) உள்பட்ட ஜமேதார்களுக்கும் அளிக்கப்படும் கண்டனம் உள்பட்ட சகல தண்டனைகளும் அவர்களது பணிப்பதிவேடுகளிலும், இதர சார்நிலை காவல் அலுவலர்களுக்குச் செய்யப்படுவது போல், அவர்களுக்கென்று வைத்துவரப்படும். கடமை தவறியவர் குறிப்பு தாள்களிலும் கூட, பதிவு செய்யப்படும். சார்நிலைகளிலுள்ள அலுவலர்கள் விஷயத்தில், தண்டனை கவாத்து, கூடுதலான காவல் அலுவல், கூடுதல் வேலை, அலுப்பு அலுவல், இவைகள் நீங்கலாக மற்ற அனைத்து தண்டனைகளும், பணிப்பட்டியலின் ஓர் பாகமாக அமைந்துள்ள கடமை தவறியவர் குறிப்புத் தாளில் பதிவு செய்யப்படும். ஒரு காவல் அலுவலரென்று சம்பந்தப்பட்ட அலுவலருக்குள்ள பண்பைப் பாதிக்கும் நீதிமன்ற தண்டனைகளை கடமை தவறியவர் குறிப்புத் தாளிலும், பணிப்பதிவேடு ஒன்று வைத்துவரப்பட்டிருந்தால் அதிலும் பதிவு செய்ய வேண்டும்.

## PSO 101 -இரவல் அலுவலர்கள்.– Lent Officers.-

(1) ஒரு துறை அல்லது அலுவலகம் மற்றொன்றுக்கு இரவலாகக் கொடுத்த அலுவலர்கள் நேர்வில் அலுவலர் அச்சமயத்திற்கு வகித்து வந்த பதவி சம்பந்தமாக ஒழுங்கு முறை அதிகாரமுள்ள அலுவலர் ஒழுங்கு மேல்முறையீடு விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டாய ஓய்வு பெறல், பணியறவு, பணிநீக்கம் இவற்றைத் தவிர மற்றைய தண்டனைகள் எவற்றையேனும் விதிக்கலாம், ஆனால் அத்தகைய அதிகாரி அப்படிப்பட்ட தண்டனை எதையேனும் விதிப்பதற்கு முன்பு இரவல் கொடுத்த அதிகாரியை அது விஷயமாய் கலந்தாலோசிக்க வேண்டும்; சாதாரணமாக இரவல் கொடுத்த அதிகாரியின் கருத்து மேலோங்கியிருக்கும். கட்டாய ஓய்வு பெறல், பணியறவு அல்லது பணிநீக்கம் தண்டனையைத் தேவைப்படுத்தும் நேர்வுகளில் இரவல்பெற்ற அதிகாரி விசாரணையை முடித்துவிட்டு, தன்னுடைய முடிவுகளுடன் பதிவுக் கட்டுகளை இரவல் கொடுத்த அதிகாரிக்கு அனுப்பிவிட வேண்டும்; இரவல் கொடுத்தவர் தான் பொருத்தமெனக் கருதும் உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும்.



(2) தநா. காவல் சார்நிலைப் பணியினைச் சார்ந்த (அ) தநா. சிறப்புக் காவல் சார்நிலைப் பணியினைச் சார்ந்த (அ) தநா. காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு & மேல்முறையீடு) விதிகள் பொருந்தக்கூடிய பதவி வகிக்கும் உறுப்பினர் ஒருவரின் பணிகள் ஏதேனும் நிறுவனம், கழகம் அல்லது அமைப்பு (அ) உள்ளாட்சி அமைப்பின் கீழ் பொறுப்புத் தீர்வுக்கு வைக்கப்பட்டிருக்கிறவிடத்து, அவ்வாறு பணிகள் வைக்கப்படுவதற்கு முன்னர் அவர் செய்த செய்கை (அ) தவறுகை, அந்த விதிகளின் 2வது விதியில் குறிப்பிடப்பெற்ற ஏதேனும் தண்டனைகளுக்கு அவரை உட்படுத்தினால், அத்தகைய தண்டனையினை அந்நபர்/உறுப்பினர் மீது விதி 4ன்கீழ் விதிக்கத் தகுதி வாய்ந்த அதிகாரி மட்டுமே ஒழுங்கு நடவடிக்கைகளை தொடங்கிடவும், மற்றும் விதி 2ன்கீழ் குறிப்பிடப்பெற்ற தான் பொருத்தமெனக் கருதும் தண்டனைகளை விதிக்க அதிகாரங் கொண்டவராவார் மற்றும் அந்நடவடிக்கைகளை துவங்கிடும் நேரத்தில் அவர் எந்த அதிகாரியின் கீழ் பணியாற்றுகிறாரோ அந்த இரவல் பெற்ற அதிகாரி அனைத்து தகுந்த ஏற்பாடுகளும் நடவடிக்கை நடத்திடும் அதிகாரிக்கு செய்திட கட்டுப்பட்டவராவார்.

**விளக்கம்:-** மேற்சொன்ன பணியினைச் சார்ந்த நபர் (அ) சொல்லப்பட்ட விதிகள் பொருந்திடும் பதவி வகிக்கும் நபர் ஒவ்வொருவரும் மற்றும் அவரது பணிகள் நிறுவனம், கழகம் அல்லது அமைப்பு அல்லது உள்ளாட்சி அமைப்பு பொறுப்புக்கு வைக்கப்பட்டிருப்பின், இவ்விதிகளின் நோக்கத்திற்காக அத்தகைய பணியின் உறுப்பினராகக் கருதப்படுவார் (அ) மாநில அரசுத் தொகுதி நிதியன்றி வேறு ஆதாரத்திலிருந்து ஊதியம் பெற்றுக் கொண்டிருப்பினும் அவர் அப்பதவியினை வகிப்பதாகக் கருதப்படுவார்.

## PSO 102 -தகுதிகாண் பருவத்தினர்கள், தற்காலிக அலுவலர்கள், மற்றும் ஒப்பந்த அலுவலர்கள்.– Probationers, Temporary Officers and Officers on Contract.-

(1) தகுதிகாண் பருவத்தினர் ஒருவரை அவரது தகுதிகாண் பருவகாலத்திலும், ஒப்பந்தத்தின் கீழ் அல்லாமல் மற்றபடி ஒரு தற்காலிக பதவி வகித்து வரும்படி நியமிக்கப்பட்ட ஒருவரை அவரது அலுவல் முடிவடைந்த பின்பும், ஒரு ஒப்பந்த அலுவலரை அவரது ஒப்பந்த நிபந்தனைகளின் படியும் பணியிலிருந்து நீக்குவது, ஒழுங்கு முறை விதிகளின் பொருளுக்கு ஏற்ப பணிநீக்கம் அல்லது பணியறவு என பொருள்படாது. ஆனால் ஒரு தகுதிகாண் அலுவலரோ, அல்லது தற்காலிக அலுவலரோ, அல்லது ஒப்பந்த அலுவலரோ, சம்பந்தப்பட்ட பணியாளர் தொகுதியின் ஓர் உறுப்பினராகவோ இருப்பதுடன், ஒழுங்குமுறை விஷயங்களில் அத்தகைய பணியாளர் தொகுதியின் இதர உறுப்பினர்கள் போலவே சாதாரண ஒழுங்கு முறை விதிகளுக்கு உட்பட்டிருப்பார்கள்.

(2) ஒரு தகுதிகாண் பருவத்தினரின் பருவகாலத்தை அதன் இறுதியிலேனும், குறிப்பிட்ட தகுதிகாண் பருவகாலம் முடிவடைவதற்கு முன்பு எச்சமயத்திலேனும், முடிவுறச் செய்யலாம். தகுதிகாண் பருவ காலத்தை முடிக்கப்பெறுதல், ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதிகளின்படி ஒரு தண்டனையாக இல்லாதிருப்பினும், அதை ஒரு குறிப்பிட்ட குற்றத்துக்காக விதிக்கலாம். ஒரு தகுதிகாண் பருவத்தினர் பொருத்தவரை ஒரு குறிப்பிட்ட குற்றத்துக்காக கண்டன நடவடிக்கை தேவையாயிருக்கையில், அவர்மீது ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதிகளில் நிர்ணயித்துள்ள தண்டனைகளில் எதையேனும் விதிப்பதற்கு முன்பு, அவர் தகுதிகாண் பருவ காலத்தில் தொடர்ந்து பணியில் இருக்கும் தகுதியைக் குறிப்பிட்ட வகையில் ஆராய்ந்து, ஒரு முடிவினை பதிவுசெய்ய வேண்டும். அவருடைய தகுதிகாண் பருவ காலத்தை மட்டும் முடிவுறச் செய்யும்படி இருப்பின் தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணியாளர் தொகுதிக்கும் தனி காவல் சார்நிலைப்பணியாளர் தொகுதிக்கும் உள்ள தனி விதிகளில் கண்ட நடைமுறையை பின்பற்ற வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக எடுக்கப்பட உள்ள நடவடிக்கையை அதன் காரணங்களுடன் அவருக்குத் தெரியப்படுத்தி, அந்நடவடிக்கை எடுக்கலாகாதென்பதற்கான அவர் செய்ய விரும்பும் முறையீடு எதையேனும் செய்து கொள்வதற்கான நியாயமான வாய்ப்பு ஒன்றை அனுமதிக்க வேண்டும்.

Scanned by CamScanner

(3) ஒரு தகுதிகாண் பருவத்தினருக்கு தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணியாளர் தொகுதி ஒழுங்கு மற்றும் மேல்முறையீட்டு விதிகளில் 2-வது விதியின் (d), (h), (i), (j), உட்பிரிவுகளில் குறிப்பிட்ட தண்டனைகளில் எவற்றையேனும் அவர்மீது ஏன் விதிக்கலாகாது என்பதற்குக் காரணம் காட்டும்படி ஒரு நியாயமான வாய்ப்பைக் கொடுத்து, அந்த ஒழுங்கு நடவடிக்கைகளின் முடிவில் தகுதிகாண் பருவகாலத்தை முடிவுறச் செய்ய வேண்டுமென்று அப்போதைக்கான ஓர் முடிவுக்கு வந்திருக்கையில், குறிப்பாக தகுதிகாண் பருவகாலத்தை முடிவுபெறச் செய்யலாகாதென்பதற்குக் காரணம் காட்டும்படி அவருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பைக் கொடுக்க வேண்டியதில்லை.

## PSO 103 -மேல்முறையீடுகளுடன் அனுப்ப வேண்டிய பதிவுருக்கள்.– Appeals-Records to accompany –

(1) சட்டமுறையான மேல்முறையீடுகளுடன் கீழ்க்கண்ட பதிவுருக்கள் அனுப்பப்படல் வேண்டும்.

(a) தொடர்புடைய தண்டனைப் பட்டி கோப்பு வரிசை எண் இடப்பட வேண்டும்.
(b) மேல்முறையீட்டாளரின் தனிநபர் மந்தணக் கோப்பு
(c) மேல்முறையீட்டாளரின் பணிப்பதிவேடு
(d) தவறுகைத் தாள் நபர்
(e) பத்திவாரியான குறிப்புரைகள்
(f) தாமதத்திற்கான காரணங்களுடன் மேல்முறையீட்டின் முறையான படிவம்

(2) தொடர்பான D.I.G. மூலம் மேல்முறையீடுகள் பணிந்தனுப்ப வேண்டும்; அவர் அதனை தொடர்புடைய சரக தண்டனைப் பட்டியல் கோப்பிற்கும் அனுப்பிடுவார்.

## PSO 104 -மேல்முறையீடுகளுக்குக் கால வரம்பு.– Time-limit for appeals.-

நிகழ்ச்சிப் பதிவின் நகலுக்காகக் கொடுத்த விண்ணப்பத்தின் தேதிக்கும் மேல் முறையீட்டு வாதி அதைப் பெற்றுக்கொண்ட தேதிக்கும் இடையே வரும் கால அளவை, ஒழுங்கு & மேல்முறையீடு விதிகளின் 9-வது விதியில் கூறியுள்ள மேல் முறையீடுகளுக்கான கால வரம்பின் கணக்கீட்டிலிருந்து விலக்கி விட வேண்டும்.

## PSO 105 -காலாவதியான மேல் முறையீடுகளை ஆராய்தல்.– Consideration of time-expired appeals.-

நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பின் முடிவுக்குப் பின்பு காவல் துறை இயக்குநருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எந்த சட்டப்படியான (appeal) மேல் முறையீட்டையும் ஒரு சட்ட முறையான மேல் முறையீட்டைத் தவிர வேறு முறையீட்டையும், ஒரு நீதி தவறுதல் ஏற்பட்டுவிட்டதென்று அவர் கருதினாலன்றியும், அல்லது மற்ற தனிப்பட்ட காரணங்களாலன்றியும் அவர் பரிசீலனை செய்யமாட்டார்.

## PSO 106 -தேவையில்லா மேல்முறையீடுகள்.– Unnecessary appealings.-

(1) ஒரு தண்டனையை விதிக்கும் எந்த உத்தரவுக்கும் எதிராக சட்டப்படியான ஓரே ஒரு மேல்முறையீட்டை மட்டும் செய்துகொள்ள சார்நிலை காவல் அலுவலர்களுக்கு உரிமையுண்டு என்று அவர்கள் எச்சரிக்கப்படுகின்றனர். இரண்டாம் மேல் முறையீடுகள், ஆணை எண் 105-ல் கண்ட நிபந்தனைக்குட்பட்டு தடை செய்யப்பட்டிருக்கின்றன.

(2) காவல் அலுவலர்கள் மற்ற அரசாங்கப் பணியாளர்களுக்குச் சமமாக மனுக்களைச் சமர்ப்பிக்கும் சுதந்திரமுள்ளவர்களாயிருக்கையில் மேல் நிலை அதிகாரிகளின் தீர்மானங்களுக்கு எதிராக - மேலே குறிப்பிட்டுள்ள மேல் முறையீட்டுக்கு முற்றிலும் வேறான மனுக்களை அவசியமில்லாமல் செய்து கொள்வது மரியாதைக் குறைவான நடத்தையென்று கருதப்படும்.



## PSO 107 -மேல்முறையீடுகளுடன் பதிவுக் கட்டுகளை அனுப்புதல்.– Forwarding records with appeals.-

(1) ஒவ்வொரு மேல்முறையீடும், எந்த அதிகாரியின் உத்தரவுகளுக்கு எதிராக மேல் முறையீடு கொணரப்படுகிறதோ அந்த அதிகாரியால், ஒரு கருத்துக் குறிப்புடனும், வாக்கு மூலங்களின் பிழையின்மை அவற்றிலிருந்து ஊகித்துக் கொண்ட அனுமானங்கள், இவைகளைக் குறித்து தேவையான அத்தகைய குறிப்புகளுடனும், மேல் முறையீட்டு அதிகாரிக்கு அனுப்பப்பட வேண்டும். மேல்முறையீடுகளை அனுப்புகையில், எதிராக மேல்முறையீடு செய்யப்படும் ஆணைக்குச் சம்பந்தப்பட்ட பதிவுக்கட்டுகளை முதன் முதல் அனுப்பவேண்டியதில்லை. சாட்சியமானது சரியான ஒழுங்கில் வைக்கப்பட்டிருந்தால், மேல்முறையீட்டதிகாரி அநேக விஷயங்களில் மேல்முறையீட்டு வாதியின் விவாதங்கள் எவ்வளவு தூரம் ஆதாரம் பெற்றிருக்கிறதென்று மதிப்பிடக்கூடியவராய் இருக்க வேண்டியதுடன், மேல்முறையீட்டு விண்ணப்பம் அத்துடன் வந்துள்ள ஆணை நகல் நிகழ்ச்சிப் பதிவின் நகல், இவைகளை முற்றிலும் படித்துப் பார்த்ததன் பேரில், ஆணை எண் 103-ன் படி அவர் மேல்முறையீட்டை முடிவு செய்வதும் நியாயமானதாகும்.

(2) மேற்கொண்டு பரிசீலித்தல் அவசியமாகத் தோன்றினால், பதிவுக் கட்டுகளைத் தருவிக்க வேண்டும்; அவைகளை அனுப்புகையில் சார்நிலை அலுவலர் மேலும் எந்த குறிப்புரைகளையேனும் கொடுக்க வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றித் தனது உளத்தேர்வை பயன்படுத்த வேண்டும்.

(3) மேல் முறையீட்டதிகாரி பதிவுக் கட்டுகளைப் படித்துப் பார்த்து எந்தத் திட்டமான விஷயங்களின் மேல் ஒரு அறிக்கை தேவையெனக் கண்டுபிடிக்கும் வரை ஒரு தனி அறிக்கையைக் கேட்கலாகாது.

(4) (a) ஒரு மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டதின் பேரில் மேல் முறையீட்டதிகாரி, தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணியாளர் தொகுதி ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு விதிகள், 1955-ன் 3-வது விதியின் தேவைகள் நிறைவாக்கப்பட்டனவா என்று தான் உறுதிசெய்துகொண்டு, நடைமுறையில் எவையேனும் குறைபாடுகள் இருந்தால், நடைமுறைக் குறைபாடுகளின் நிமித்தம் முறைகேடுள்ளதாகக் காணப்பட்ட முன் ஆணையை ரத்து செய்த பின்னர் குறைபாடுகளை சீர்திருத்துவதற்காக மூல ஆணையைப் பிறப்பித்த அதிகாரிக்கு அவ்வழக்கைத் திருப்பி அனுப்பிவிட வேண்டும். இந்த ஏற்பாட்டின் கீழ் பணியறவு, பணிநீக்கம் அல்லது கட்டாய ஓய்வு பெறலுக்காகவோ, பிறப்பிக்கப்பட்ட ஆணை ரத்து செய்யப்படுகையில் வழக்கமாகக் குறைபாடுகளைச் சீர்திருத்தும் புதிய நடவடிக்கைகளை முடிவு செய்யும் வரை குற்றஞ்சாட்டப்பட்டவரை பணியிடை நீக்கத்திலிருந்து விலக்கி வைக்கவேண்டும். ஒரு கீழ்நிலை இடத்துக்குத் திருப்பியோ அல்லது குறைத்தோ பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்று இந்த ஏற்பாட்டின் கீழ் ரத்து செய்யப்படுகையில், குறைபாடுகளைச் சீர்திருத்தும் புதிய நடவடிக்கைகளை முடிவு செய்யப்படும் வரை குற்றஞ்சாட்டப்பட்டவரை முதல் பதவியில், மறுபடியும் அமர்த்தவேண்டும். மற்றைய தண்டனைகள் நேர்வில், முதல் ஆணை மூலம் விதிக்கப்பட்ட தண்டனையானது அதனால் ரத்து செய்யப்படமாட்டாது. ஆனால், மேற்கண்ட விஷயத்தில் புதிய ஆணை பிறப்பிக்கப்படும் வரை அது தொடர்ந்து அமுலில் இருக்கும்.

(b) விட்டோடிகளின் நேர்வில், பணியறவு (அ) பணிநீக்க உத்தரவு நடைமுறை முறைகேட்டினால் மேல்முறையீடு (அ) உயர் அதிகார ஆய்த்தினால் நீக்கறவு செய்யப்பட்டிருக்கிறவிடத்து, மற்றும் குறைகள் களைந்திட வேணடியும், சுட்டியுரைக்கப்பட்ட குறைகள் சரிசெய்திடவும் புதிய உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டியும் பதிவுருக்கள் தண்டிக்கும் அதிகாரிக்கு அனுப்பபட்டிருக்கிறவிடத்து காவல் நிலை ஆணை 107 (4) (a) ன் காப்புரைகள் பொருந்தாது. அத்தகைய நேர்வில் குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆதியில் பணியறவு செய்யப்பட்ட தேதி முதல் புதிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் தேதி வரை தொடர்ந்து மாறாத விட்டோடியாக இருப்பார்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

(5) ஏற்றுக்கொள்ளத்தக்க மேல் முறையீடு ஒன்றை அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கையில், விசாரணைப் பதிவுக்கட்டின் பகுதியாக அமைந்துள்ள எழுத்துச் சான்று வாய்மொழிச் சான்று - இவையனைத்தையும் மேல் முறையீட்டுடனும், அதில் கண்ட குறிப்பிடத்தக்க விஷயங்களின் மேல் துறைத் தலைவரின் குறிப்புகளுடனும், சமர்ப்பிக்க வேண்டும்.

(6) மேல் முறையீட்டு வாதி ஒருவர், இவ்வத்தியாயத்தில் கண்ட விதிகள் பின்பற்றப்படவில்லையென்று சொல்லும் இனங்களில், எதிரான மேல் முறையீடு செய்யப்படும் ஆணைகளைப் பிறப்பித்த அதிகாரி மேற்கண்ட குற்றச்சாட்டுகளின் மேல் குறிப்பிட்ட வகையில் அறிக்கை செய்ய வேண்டும். மேற்கண்ட குற்றங் கூறலை மேல் முறையீட்டதிகாரி குறிப்பிட்ட வகையில் ஆராயவேண்டும்.

(7) மேல் அனுப்பிடும் அதிகாரியானவர் மேல்முறையீட்டினில் எழுப்பப்படும் புதிய பொருள்கள் ஏதேனும் இருப்பின், அது குறித்து மட்டுமே ஆய்வு செய்ய வேண்டியதால் புதிய பொருள்கள் பற்றி தனது குறிப்புரைகளுடன் தொடர்பான அசல் ஆவணங்களை விரைந்து மேல் அனுப்புவதில் இடர்பாடு இருக்காது. ஆதலால் மேல்முறையீட்டினை மேலனுப்புவதில் ஒரு திங்களுக்கு மேற்பட்ட காலத்தாழ்வுக்கு காரணங்கள் மேலனுப்பிடும் அறிக்கை (அ) மேற்குறிப்பில் விளக்கப்பட வேண்டும். மேல்முறையீட்டினை மேலனுப்புவதில் இரு திங்களுக்கு மேற்பட்ட காலத்தாழ்வு ஏற்படின், மேல்முறையீட்டு அதிகார ஆயம் அதற்கான காரணங்களை மேலனுப்பிடும் அதிகாரியிடம் முறைப்படியாகக் கோருவார்.

(8) அனைத்து மேல்முறையீட்டு அதிகாரிகளும், மேல்முறையீட்டின் முன் பிரதி கிடைக்கப் பெற்றவுடன் உரிய பதிவுருக்களுடன் அசல் மேல் முறையீட்டு பெறுகையினைக் கண்காணிக்க வேண்டும். தேவையெனில் காலமுறை நினைவூட்டுகளை அனுப்பிட வேண்டும்.

❋❋❋❋❋



# அத்தியாயம் - 11

## அலுவலர்களின் தனிப்பட்ட நடத்தை
## PERSONAL CONDUCT OF OFFICERS

### PSO 108 - அலுவலர்களின் தனிப்பட்ட நடத்தை.– Personal conduct of Officers.-

இந்திய காவல் பணியாளர் தொகுதியின் உறுப்பினர்களுக்கு பயன்படும் விதிகள், மத்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டபடி, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு காவல் பணியாளர் தொகுதியின் அலுவலர்களுக்குப் பயன்படும் விதிகள் அப்போதைக்கப்போது திருத்தியபடி, அ.ஆ.எண்.2226 பொது (பணித் தொகுதி) 18/8/1973 இல் வெளியிடப்பட்டன. தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணியாளர் தொகுதிக்கும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படை பணியாளர் தொகுதிக்கும் பயன்படும் விதிகள் "தமிழ்நாடு சார்நிலைக் காவல் பணி அலுவலர்களின் நடத்தை விதிகள் 1964" என்று அழைக்கப்படுகின்றன. இவை அனைத்து காவல் நிலைய அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டு, தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்களுக்கான வழிகாட்டி புத்தகத்திலும் சேர்க்கப்பட்டுள்ளன.

### PSO 109

ஆயுத காவல் படைப் பொறுப்பிலுள்ள சேமப்படை ஆய்வாளர்களும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை பொறுப்பிலுள்ள அலுவலர்களும், வேறு இடங்களில் காவல் உதவி ஆய்வாளர்களும், தங்களுக்கு சார்நிலைப் பணியாளர்களுக்குப் பொருத்தமான விதிகளை அவர்களுக்குத் தெளிவாகத் தெரியப்படுத்துவதற்குப் பொறுப்பாயிருக்கிறார்கள். அடியிற்கண்ட விஷயங்களுக்குச் சம்பந்தப்பட்ட விதிகளை அவர்களது குறிப்பான கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும்.

(1) நன்கொடைகள், பணிக்கொடைகள், பரிசுகள், இவைகளை ஏற்றுக் கொள்ளுதல்;

(2) அரசாங்கப் பணியாளர்களைக் கௌரவிக்கும் பொருட்டு செய்யப்படும் பொதுக் கொண்டாட்டங்கள்;

(3) சந்தா வசூல் ;

(4) கடன் கொடுத்தலும் வாங்குதலும் ;

(5) வீடுகள். மற்ற பெறுமானமுள்ள சொத்து, இவற்றை வாங்குதல் அல்லது விற்றல்;

(6) அசையாச் சொத்தினைக் கைக்கொள்ளல், அல்லது வைத்திருந்தல் ;

(7) வாணிகச் சூதாட்டம் ;

(8) நொடிப்பும், வழக்கமாகக் கடன் பட்டிருத்தலும் ;

(9) அரசாங்கப் பத்திரங்கள் அல்லது செய்தியை அறிவித்தல் ;

### PSO 110 - காவல் துறையினர் நடத்தை பற்றிய கோட்பாடுகள்.– Principles of Police Conduct.-

(1) காவல் துறையினர் இந்திய அரசமைப்பு சட்டத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்களாகவும் மற்றும் அதன்கீழ் குடிமக்களுக்கு பொறுப்புறுதியாக அளிக்கப்பட்ட உடைமைகளை மதித்தும் நடக்க வேண்டும்.

(2) காவல் துறையானது ஓர் முதன்மையான சட்டத்தினை செயலுறுத்தும் முகமையாகும். ஏதேனும் இயற்றுச் சட்டத்தின் சட்டசீலம் அல்லது அவசியத்தினைப் பற்றி கேள்வி எழுப்புதல் கூடாது. அவர்கள் ஒருதலைச் சார்பின்றி, பயமின்றி அல்லது ஆர்வப் பற்றின்றி, தீய எண்ணம் பழி வாங்கும் எண்ணத்துடன் அல்லாமல் சட்டத்தினை உறுதியாக செயலுறுத்த வேண்டும்.



Scanned by CamScanner

(3) காவல் துறையினர் தங்களது அதிகார வரம்பு மற்றும் செய்கடமைகளைப் பொறுத்து உணர்ந்திருத்தல் வேண்டும். அவர்கள் நீதியமுறை செய்கடமைகளை பறித்தல் கூடாது அல்லது பறிப்பதைப் போல இருக்கவும் கூடாது மற்றும் வழக்குகளின் தீர்ப்புரையில் குறுக்கிடவோ கூடாது; தனிப்பட்ட நபர்களை பழிவாங்குதல் கூடாது மற்றும் குற்றமிழைத்தவரை தண்டிக்கவும் கூடாது.

(4) சட்டத்தினை பின்பற்றச் செய்வதிலும் அல்லது ஒழுங்கினை நிலைநாட்டுவதிலும் காவல்துறையினர் வற்புறுத்தல், அறிவுரை மற்றும் எச்சரிக்கை வகையிலான வழிமுறைகளைப் பயன்படுத்திட வேண்டும். இவைகள் தோல்வியுறும் போது மற்றும் வலுவினைப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாத நிலையில், சூழல்களின் வேண்டுறுத்தலின்படி குறைந்தபட்ச வலுவினை மட்டும் பயன்படுத்த வேண்டும்.

(5) குற்றம் மற்றும் சட்ட ஒழுங்கு குலைவினை தடுப்பதே காவல் துறையினரின் தலையாய கடமையாகும் மற்றும் அவை இரண்டும் இல்லாதிருப்பது அவர்களுடைய திறனை வெளிப்படுத்துமேயன்றி, அவற்றினை கட்டுப்படுத்தும் காவல்துறையின் வெளிப்படையான நடவடிக்கைகள் அல்ல.

(6) காவல்துறையினர் பொதுமக்களில் அங்கமாய் இருப்பவர்கள் என்பதையும் ஒரேயொரு வேறுபாடு யாதெனில், சமூக நலனில் அக்கறை செலுத்தும் பொருட்டு அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர் மற்றும் அதற்கு முழுக் கவனமும் செலுத்த வேண்டும்.

(7) காவல் துறையினர் தங்கள் பணியினில் சிறந்த செயலாக்கத்துக்கு பொது மக்களிடமிருந்து உடனடியாக அவர்கள் பெறும் ஒத்துழைப்பைப் பொறுத்தது என்பதை உணர வேண்டும். இது மாற்று வகையில், அவர்கள் தங்கள் செயல்கள் மற்றும் நடத்தைக் குறித்து பொது மக்களிடமிருந்து ஏற்பளிப்பு பெறக்கூடிய தன்மையைப் பொறுத்ததாகும் மற்றும் பொது மக்களின் மதிப்பும், நம்பிக்கையும் பெற்று அதை தக்க வைத்துக் கொள்வதைப் பொறுத்ததாகும். பொது மக்களிடமிருந்து ஒத்துழைப்புப் பெறுவதில் அவர்கள் பெறும் வெற்றியானது அவர்தம் கடமையினை ஆற்றிடும் போழுது வலுவந்தம் அல்லது உடற்வலுவினைப் பயன்படுத்தும் தேவையினை வீதப்படியான அளவில் குறைத்திடும்.

(8) காவல் துறையினர் அனைத்து மக்களையும் கருணையுடனும், பரிவுடனும் இருத்தல் வேண்டும் மற்றும் அவர்தன் நலனை மனதில் கொள்ள வேண்டும். அவர்கள் அனைத்து மக்களுடனும் செல்வ நிலை மற்றும் சமூக நிலையினைக் கருத்தில் கொள்ளாமல் நட்புறவுடன் தனிப்பட்ட பணியினை செய்வதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(9) காவல் துறையினர் எப்பொழுதும் தம்நலனை விட கடமையினை முன் நிறுத்தி இருத்தல் வேண்டும், இடர் எதுவாயினும் அல்லது ஆத்திரமூட்டப்பட்டாலும் நல்ல மனநிலையில் இருத்தல் வேண்டும். மற்றும் பிறரை காப்பாற்றுவதற்காக தங்கள் இன்னுயிரை ஈந்திட ஆயத்தமாக இருத்தல் வேண்டும்

(10) காவல் துறையினர் எப்பொழுதும் பணிவுடனும், நல்சமூக நடத்தையுடனும் அவர்கள் நம்பத் தகுந்தவர்களாகவும், பற்று அற்றவர்களாகவும்; மதிப்புடையவர்களாகவும், துணிவு கொண்டவர்களாகவும் மற்றும் மக்கள் நடத்தையினை பண்படுத்துபவர்களாகவும், நம்பிக்கை பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(11) உயர்ந்த நிலையிலான நேர்மை காவல்துறையின் தன்மதிப்புக்கு அடிப்படையாகும். இதனைக் கருத்திற்கொண்டு காவல்துறையினர் தங்கள் தனிப்பட்ட வாழ்வில் தவறுதலற்றவராகவும், தனிப்பட்ட மற்றும் அலுவல் வாழ்க்கையில் கருத்திலும், செயலிலும் உண்மையாகவும் இருப்பதன் மூலம் பொதுமக்கள் அவர்களை முன்மாதிரியான குடிமகன்களாக கருத இயலும்.

(12) காவல் துறையினர் உயர்ந்த நிலை ஒழுக்கத்தினை பேணுவதன் மூலம் மேலதிகாரிகளுடன் மாசற்ற பணிவு மற்றும் படைக்கு பற்றுறுதியுடனும் மற்றும் தங்களை நிலையான பயிற்சியுடன் ஆயத்த நிலையில் இருப்பதன் மூலம் மட்டுமே நிர்வாகத்திற்கும், நாட்டிற்கும் தங்கள் பயன்பாட்டினை மேம்படுத்த முடியும்.



## PSO 111 - காவல் அதிகாரிகள் அரசுடன் நேரடியாக தொடர்பு கொள்ளத் தடை.– Police cfficers addressing Government direct, etc., prohibited.-

(1) காவல் துறை இயக்குநரின் அப்போதைக்கப்போது வெளியிடப்படும் விதிகளிலும் ஆணைகளிலும் வகை செய்யப்பட்டிருந்தாலன்றி மற்றபடி காவல் அலுவலர்கள் தங்களது அரசாங்கக் கடமைகள் சம்பந்தமான எந்த விஷயத்திலேனும் அரசாங்கத்துடன் நேராய்க் கடிதத் தொடர்பு வைத்துக் கொள்ளலாகாது. அவர்கள் எக்காரணத்தாலும் தங்களது சொந்த விஷயங்களைப் பற்றி அரசாங்கத்துக்கு நேராக எழுதிக் கேட்கலாகாது. இத்தகைய எழுத்து முறையீடுகளை, அலுவல் வழிமுறையின் மூலம்தான் அனுப்பி வைக்கவேண்டும்.

(2) (a) அனைத்து வகுப்புகளைச் சேர்ந்த காவல் அலுவலர்களும் தங்களுடைய தனிப்பட்ட உரிமை கோரிக்கைகளை வற்புறுத்தவோ, அல்லது குறைகளுக்குப் பரிகாரம் பெறவோ, இதர துறைகளின் அலுவலர்களையும் அரசாங்கப் பணியாளர் அல்லாதாரையும் அணுகுதல் ஆகாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

(b) காவல் அலுவலர்கள் தங்களுடைய குறைகளைச் சட்டப் பேரவைகளில் இடைக்கேள்விகளின் பொருளாகக் கொணரும் பொருட்டு, சட்டமன்ற (அ) மக்களவை உறுப்பினர்களை அணுகுதல் ஆகாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

(c) மேலே 2 (அ) கூறில் சொன்ன தடை விதிப்பானது எழுதுபவருக்கோ அல்லது அலுவல் முறையில் அவருக்குத் தெரிந்தவாறு, செய்யப்பட்ட குறிப்பிட்ட சேவையைக் குறித்து சம்பந்தப்பட்ட காவல் கண்காணிப்பாளருக்கு எழுதப்பட்ட சான்றிதழ்கள் அல்லது அலுவல் வழிமுறையின் கடிதங்களைத் தவிர மற்ற சான்றிதழ்களையோ அல்லது பரிந்துரை கடிதங்களையோ பெறுதலுக்கு பொருந்துவனவாகும்.

(3) காவல் அலுவலர்கள் துறைத் தலைவரது முன் அனுமதியின்றி அமைச்சர்களையோ அல்லது அரசாங்கச் செயலாளர்களையோ நேரில் காணல் ஆகாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது

(4) அனைத்து வகுப்புகளைச் சேர்ந்த காவல் அலுவலர்களும் காலியிடங்கள் நேர்கையில் நேரடியாகவோ அல்லது தங்களது மேல்நிலை அதிகாரிகள் மூலமோ பதவி உயர்வுக்காக மனு செய்து கொள்ளலாகாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது; மேலும் அலுவலர்கள் சார்நிலைப் பணியாளர்களைக் குறிப்பிட்ட பதவிகளுக்காக, விதிகளில் கண்டுள்ளபடி வகை செய்யப்பட்டிருந்தால் அன்றியும், அல்லது அத்தகைய பதவிகளை நிரப்புவதற்கு அதிகாரம் வகுத்துள்ள அலுவலரால் அப்படிச் செய்யும்படி கட்டளையிடப்பட்டிருந்தால் அன்றியும், பரிந்துரை செய்யலாகாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

(5) காவல் அதிகாரிகள் எவரும் தன் பணித் தொடர்பான பொருள்கள் குறித்து தன்னுடைய நலனை மேம்படையச் செய்வதற்காக உயர் அதிகாரி எவரிடமும் ஏதேனும் அரசியல் அல்லது வேறு வெளிச் செல்வாக்கைக் கொண்டு செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இக்காப்புரையின் மீறுகை ஏதேனும், தொடர்பான காவல் அலுவலருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் மற்றும் அவ்வாறான வெளிச்செல்வாக்கை கொண்டு வந்ததற்கு தான் பொறுப்பல்ல என்று மெய்ப்பிக்கும் சுமை அலுவலரின் மீது இருக்கும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

## PSO 112 - அசையாச் சொத்து விவர அறிக்கைகள்.– Returns of immovable property.-

(1) ஆணை எண் 108-ல் கண்ட நடத்தை விதிகளில் குறிப்பிட்ட அசையாச் சொத்து விவர அறிக்கைகளை ஜனவரி 15-ம் தேதிக்கு முன்பு அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள் வழக்கமான அலுவல் முறையில் காவல் துறை இயக்குநருக்கும் சார்நிலைக் காவல் அலுவலர்கள் நேர்விற்கேற்ப, காவல் கண்காணிப்பாளருக்கு (அ) தங்களது உடன் மேல்நிலை அலுவலருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(2) (a) (i) இவ்விவர அறிக்கைகளை நிலையான பதிவுக் கட்டாகத் தனியாய் வைத்துக் கொள்ள வேண்டும்; சார்நிலை அலுவலர்களுக்குச் சம்பந்தப்பட்டவைகளை, பணிப்பதிவேடுகள் பணிப் பட்டியல்கள் இவைகளுக்கென்று விதிக்கப்பட்ட முறைப்படி முடிவு செய்ய வேண்டும்.

(ii) இந்திய குடியிருப்பு கொண்டிராத இந்திய காவல் படை உறுப்பினர்கள் இவ்விவர அறிக்கைகளை அனுப்ப வேண்டியதில்லை.

(iii) அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களால் அனுப்பப்படும் “ஏதுமில்லை” அறிக்கைகள் உள்பட்ட அறிக்கைகளில் கண்ட விவரங்கள் காவல் துறை இயக்குநரது அலுவலகத்தில் பொருத்தமான நடத்தை விதிகளில் குறிப்பிட்டுள்ள படிவத்தின் படி பேணி வரப்படும் பதிவேடு ஒன்றில் குறிக்கப்படும்.

(iv) சார்நிலைப் பணியாளர்கள் அனுப்பும் “ஏதுமில்லை” விவர அறிக்கைகள் உள்பட அறிக்கைகளில் கண்ட விவரங்கள் தமிழ்நாடு சார்நிலைக் காவல் அலுவலர்களின் நடத்தை விதிகள் 1964-ல் குறிப்பிட்டுள்ளதும், பணிப் பதிவேடுகளிலும் பணிப்பட்டியல்களிலும் அச்சிடப்பட்டுள்ளதுமான படிவத்தில் குறிக்கப்படும்.

(b) எதற்கேனும் பதிவுகளைக் கடைசி விவர அறிக்கையில் கண்டுள்ளபடி ஆண்டுதோறும் திருத்திக்கொள்ள வேண்டும்; தவிரவும் அதில் ஒவ்வொரு பதிவை அல்லது மாற்றத்தை அலுவலகத் தலைவர் ஏற்றவாறு சான்றொப்பம் செய்ய வேண்டும்.

(3) அலுவலகத் தலைவர் பணிப் பதிவேடுகள் மற்றும் பணிப்பட்டியல்களை சரிபார்த்திடும் போது இப்பதிவேடு முறையாக பேணப்பட்டு வருகிறதா எனப் பார்க்க வேண்டும்.

## PSO 113 - இராணுவப் பகுதிகளில் பட்டியலில் சேர்க்கை.– Enrolment in Army Units.-

காவல் அலுவலர்கள், மாநிலப் படையிலாவது, இந்திய துணைப் படையிலாவது, இந்திய படை அலுவலர்களின் ரிசர்விலாவது பதிவு செய்து கொள்ளவும் அல்லது இந்திய படையின் (இறக்கப்பட்ட) அலுவல் குதிரைப் படைகளிலாவது ஆட்கள் திரட்டலின் மேல் அமைக்கப்படும் இந்திய காவற்படை அலுவல் கம்பெனிகளிலாவது ஊதியத்துக்கென்று பதிவு செய்து கொள்ளவும், அனுமதிக்கப்படவில்லை.

## PSO 114 - பண்பு சான்றிதழ்களை வழங்கிடத் தடை.– Issue of certificates of character forbidden.-

(1) காவல் அலுவலர்கள் தங்களது சார்நிலைப் பணியாளர்களுக்குக் குறிப்பிட்ட படிவத்தின்படி தரவேண்டிய விடுவிப்புச் சான்றிதழ் தவிர மற்ற பண்பு அல்லது நடத்தைச் சான்றிதழ்களை அளிக்கலாகாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

(2) மேலும் காவல் அலுவலர்கள் தங்கள் தனிப்பட்ட முறையில் பண்பு சான்றிதழ்களை தனியார்களுக்கு அளிக்கலாகாது என்றும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

******



# அத்தியாயம் - 12

## பணியாளர் மந்தணக் கோப்புகள், இரகசியத் தாள்களைப் பராமரித்து வருதலும், மற்றும் அலுவலர்களைப் பற்றி காலமுறை அறிக்கைகளைச் சமர்ப்பித்தலும்

## MAINTENANCE OF PERSONAL FILES, CONFIDENTIAL SHEETS AND SUBMISSION OF PERIODICAL REPORTS ON OFFICERS

## PSO 115 - பணியாளர் மந்தணக் கோப்புகள்.– Personal Files.-

தலைமைக் காவலர் பதவியும் அதற்கு மேற்பட்ட பதவியும் வகித்து வரும் ஒவ்வொரு அலுவலருக்காகவும், தலைமைக் காவலராக உயர்த்தப்படத் தகுதியெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு காவலருக்காகவும், அவர் நியமிக்கப்பட்டவுடனே ஒரு பணியாளர் மந்தணக் கோப்பு திறக்கப்படும். இக்கோப்பில் மேற்கண்ட அலுவலர் அரசினர் பணியில் இருக்கையில் அவரது வேலை, நடத்தை இவற்றைப் பற்றிய ஓர் தொடர்ந்த வரலாறு அடங்கியிருக்கும்; இதை எப்போதும் ஒரு மந்தணப் பதிவுருவாக கருதப்பட வேண்டும்.

## PSO 116 - பணியாளர் மந்தணக் கோப்புகளின் உள்ளடக்கம்.– Contents of personal files.-

(1) இக்கோப்பானது கால முறையான அல்லது தனி மந்தணம் அல்லது மற்றப்படியான அனைத்து அறிக்கைகளின் மூலப் பிரதிகளை அல்லது மெய்யொப்பமிட்ட நகல்களையும், மேற்கண்ட அலுவலரைத் தரப்படுத்தின. அவரது வேலை அல்லது நடத்தையைப் பாராட்டி, அல்லது அதிருப்தி காட்டி, அல்லது குறை கூறி, அல்லது அவருக்குப் பரிசளித்து, அல்லது தண்டனையளித்து, அரசாங்கம் காவல் துறை இயக்குநர் மற்றும் உயர் அலுவலர்கள், ஆகிய இவர்கள் (மூலக் கடிதப் போக்குவரத்துக்கு அனுசரணையாகப்) பிறப்பித்த அனைத்து உத்தரவுகளின் அல்லது அறிவிப்புகளின் மூலப் பிரதிகளை அல்லது மெய்யொப்பமிட்ட நகல்களையும் உள்ளடக்கி உள்ளதாய் இருக்கும். நீதிமன்றங்கள் அல்லது குற்றவியல் நடுவர்கள் மேற்கண்ட அலுவலரின் வேலையைப் பற்றி பிரதிகூலமாகவோ பாராட்டியோ விளக்கம் கூறியுள்ள நீதிமன்ற உத்தரவுகள் அல்லது தீர்ப்புகள் அல்லது செய்தியறிவிப்புகளின் மெய்யொப்பமிட்ட நகல்கள் அனைத்தையும் கூட இக்கோப்புக்குள் வைக்கவேண்டும்.

(2) அரசிதழ் பதிவுபெறா அலுவலர்களைப் பற்றிய கோப்புகளில் முந்திய பத்தியில் கூறியுள்ளவைகளுக்குக் கூடுதலாகக் கீழ்கண்ட பதிவுகள் அடங்கியிருக்கவேண்டும்.

(a) மேற்காண் கூறு (1)ல் பட்டியலிடப்பட்டவாறு அனைத்து இரகசிய அறிக்கைகள், குறிப்பு உரைகள் முதலியனவற்றின் நகல்கள்

(b) கடமை தவறியவர் குறிப்புத்தாளின் பிரதிகள் (படிவம் எண்.3)

(c) பணிப்பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ளபடி, பரிசுகள், திறமைப் பணிப்பதிவுகள், இவைகளின் பட்டியல்.

(d) தொடர்பான அனைத்து பல்வகைத் தாள்கள்

(3) கூறு (2)-ன் (a), (b), (c) மற்றும் (d) உட்கூறுகளில் பதிவுகளை தனி படிப்புத் தாள்களில் வைத்து பணியாளர் மந்தணக் கோப்புகளில் வைக்கவேண்டும். இப்பதிவுகளில் குறிப்புகளைச் செய்யவேண்டியிருக்கும்போது, அவை அடங்கியுள்ள படிப்புத் தாள்களை பணியாளர் மந்தணக் கோப்புகளிலிருந்து நீக்கிவிட்டு, பணியாளர் மந்தணக் கோப்பினை வைத்து வரும் அலுவலரின் நேர் மேற்பார்வையின் கீழ் ஒரு எழுத்தர் பதிவுகளைச் செய்யலாம்.

(4) காலமுறைப்படியோ அல்லது மற்றப்படியோ உள்ள அறிக்கைகளை, பொழிப்புக்குறித்து பக்கங்களுக்கு மையில் எண் கொடுத்து; ஒரு அலுவலரின் பணியாளர் மந்தணக் கோப்பைச் சேர்ந்த இதர பத்திரங்களிலிருந்து பிரித்துவைக்க வேண்டும்; கோப்பிலுள்ள மற்றைய பத்திரங்களையும் தனியாகப் பொழிப்புக்குறித்து பக்கங்களுக்கு மையில் எண் கொடுக்கவேண்டும். கோப்பிலுள்ள ஒவ்வோர் வகைப் பதிவுக்கும் கடைசியாக வந்த பிற்சேர்க்கைகளை, அக்கோப்பினை ஓர் புத்தகம்போல் படிப்பதற்கு ஏற்றவாறு, அதன் இறுதியில் கோத்து வைக்கவேண்டும்.

(5) வெகுமதிகள் மற்றும் தவறுகைகள் பட்டியலில் தேதியுடன் சுருக்கொப்பமிட்டு ஒவ்வொரு அரை ஆண்டிலும் நாளிது வரைக்கு சான்றாக செய்திட வேண்டும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

**PSO 117 - பணியாளர் மந்தணக் கோப்புகளின் காப்புப் பொறுப்பு – அதிகாரிகள்.– Custody of Personal Files.- Officers.-**

*(1)* பணியாளர் மந்தணக் கோப்புகள் (நிலைபேறுள்ள அல்லது நிலைபேறில்லா பணிநியமனம் கொண்டவர்களாயினும்) ஆய்வாளர் / சேமப்படை ஆய்வாளர் கிரம நிலைக்கு மேற்பட்ட அதிகாரிகளின் பணியாளர் மந்தணக்கோப்பு காவல்துறை இயக்குநரால் பேணப்படும்.

*(2)* (a) கீழ்காண் அட்டவணையில் கலம் (1)ல் குறிப்பிடப்பெற்றவர்கள் கலம் (2)ல் குறிப்பிடப்பட்ட அலுவலர்களின் பணியாளர் மந்தணக் கோப்புகளை பேணுவதற்கும், காப்புப் பொறுப்பு கொள்வதற்கும் பொறுப்புடையவராவர்.

| | Officers having custody of Personal File (1) | Officers in respect of whom the File is to be kept. (2) |
|---|---|---|
| (a) | Inspector-General of Police, Planning and Co-ordination | Inspectors of Police, Police Radio Branch; Inspectors of Police, Police Computer wing and Police Research Centre, Sub-Inspectors of Police, Computer Wing and Police Research Centre |
| (b) | Commissioner of Police | Inspectors and Reserve Inspectors |
| (c) | Deputy Inspector-General of Police | Inspectors and Reserve Inspectors |
| (d) | Superintendents / Deputy Commissioners of Police, Chennai City | Sub-Inspectors and Reserve Sub-Inspectors; |
| (e) | Superintendent of Police, Special Branch C.I.D. | Sub-Inspectors and Reserve Sub-Inspectors of Special Branch, Special Branch Photographers and Junior Reporters of Shorthand Bureau. |
| (f) | Superintendent of Police Crime Branch, C.I.D., Chennai | Sub-Inspectors in the Crime Branch C.I.D. |
| (g) | Superintendent of Police, Commercial Crime Investigation Wing, Chennai. | Sub-Inspectors in the Commercial Crime Investigation Wing |
| (h) | Superintendent of Police Special Cell, C.I.D., Chennai | Sub-Inspectors in Special Cell, C.I.D. |
| (i) | Commandant, Tamil Nadu Special Police Battalion | Inspectors including Inspectors Adjutant, and Sub-Inspectors. |
| (j) | Sub-Divisional Officers | Head Constables (Taluk Police). |



| | Officers having custody of Personal File (1) | Officers in respect of whom the File is to be kept. (2) |
|---|---|---|
| (k) | Deputy Superintendents of Police, Crime Branch, C.I.D. | Head Constables, Grade-I, Police Constables and Police Constables in the promotion list in the Crime Branch, C.I.D. |
| (l) | Deputy Superintendents of Police, Special Branch, C.I.D. | Head Constables, Grade-I Constables and Constables in the promotion list in the Special Branch, C.I.D. |
| (m) | Deputy Superintendent of Police, Police Computer Wing | Grade-I Constables and Constables in the promotion list in the Police Computer Wing. |
| (n) | Deputy Superintendents of Police, Armed Reserve | Head Constables (Armed Reserve) (In the Armed Reserves, where there is no post of Deputy Superintendents of Police, Armed Reserve, the Reserve Inspector concerned should maintain the personal file. |
| (o) | Assistant Commandants, Tamil Nadu Special Police Battalion | Havildars, Naiks and Constables in the promotion list. |
| (p) | Principal, Police Training College, Chennai. | Reserve Sub-Inspectors and Sub-Inspectors of the Police Training College, Chennai. |
| (q) | Principals of Police Recruits School | Reserve Sub-Inspectors; Sub-Inspectors and Head Constables in the Police Recruits School. |
| (r) | Director, Police Tele-Communication, Chennai | Sub-Inspectors; and Technical Assistants (Non-gazetted). |
| (s) | P.A. to Police Telecommunication, Chennai | Head Constables, Grade-I Police Constables and Constables in the promotion list. |
| (t) | Technical Assistant to Police Radio officer (Gazetted) | Radio Supervisors |
| (u) | Technical Assistant (Non-gazetted) | Radio Technician |
| (v) | Inspectors of Police | Constables included in the promotion list. |
| (w) | Reserve Inspectors of Police, Armed Reserve | Naiks, Lance Naiks and Constables included in the promotion list serving under them. |
| (x) | Deputy Inspector-General, C.I.D. (Intelligence) | Senior Reporters of Shorthand Bureau. |

Scanned by CamScanner
Scanned with CamScanner

குறிப்பு : அட்டவணையில் கண்டுள்ள D.I.G. என்பது D.I.G. (நுண்ணறிவு), சி.ஐ.டி. குற்றப்பிரிவு, சி.ஐ.டி. உணவு வழங்கல், சி.ஐ.டி. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மற்றும் பயிற்சி முதலானவற்றோரை உள்ளடக்கும்.

(b) மேற்காண் அட்டவணையில் உட்படாத அலுவலர்களின் நேர்வில், அவர்களை பணிநியமனம் செய்ய அதிகாரம் கொண்டுள்ள அதிகாரியினால் தொடர்பான அலுவலர்களின் பணியாளர் மந்தணக் கோப்புகள் பேணி வரப்படும். பதவி உயர்வுப் பட்டியலில் சேர்க்கப்படாத காவலர்களின் பணியாளர் மந்தணக் கோப்புகள் பேணப்பட வேண்டியதில்லை.

## PSO 118 - பதவி உயர்வு, முதலியவற்றின் பேரில் பணியாளர் மந்தணக் கோப்புகளை மாற்றுதல்.–
## Transfer of Personal Files on Promotion etc.-

(1) ஒரு மேல் நிலைக்கு, பதிலியாக அல்லது நிலையாக உயர்த்தப்பட்டதன் மேல் மேலே ஆணை எண்.117 பிரிவு 2-ல் உள்ள அட்டவணையின் 2-வது கட்டத்தில் காட்டியுள்ள சம்பந்தப்பட்ட அலுவலரின் பணியாளர் மந்தணக் கோப்பினை நிறுத்திவைத்துக்கொள்ளவோ அல்லது மேற்கண்ட அட்டவணையில் 1வது கட்டத்தின் வேண்டுறுத்தல்களின்படி அதை பேணிவர அதிகாரம் பெற்றுள்ள அலுவலருக்கு அனுப்பிவிடவோ வேண்டும்; ஒரு பதிலி அலுவல் அற்றுப் போனதன் பேரில் மேற்கண்ட கோப்பினை நேர்விற்கேற்ப வைத்துக் கொள்ளவோ, அல்லது அதை வைத்துவர அதிகாரம் பெற்றுள்ள அலுவலருக்கு அனுப்பிவிடவோ வேண்டும்.

(2) ஒரு ஆய்வாளர் தமிழ்நாடு காவல் பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப்பட்டதன் மேல், அந்த அலுவலரின் பணியாளர் மந்தணக் கோப்பினை இரகசியமாக ஒரு உறைமேல் காவல் துறை உதவித்தலைவரின் பெயர் குறித்த முகவரியை எழுதி அதன் பொறுப்புக்குரிய காவல்துறைத் துணைத் தலைவருக்கு அனுப்பவேண்டும். இப்பதிவுருவில் சுருக்க குறிப்பு இட்டு பணியாளர் மந்தணக் கோப்பில், மேற்கண்ட அலுவலரின் தமிழ்நாடு காவல் பணியாளர் தொகுதியின் பணிக்குச் சம்பந்தப்பட்ட பதிவுக் கட்டிலிருந்து தனியாக வைக்கவேண்டும்.

(3) ஒரு பதிலி துணைக் கண்காணிப்பாளர் காலியிடம் ஏற்படாததன் நிமித்தம் தனது நிலையான அலுவலுக்குத் திரும்புகையில், அவருடைய அரசிதழ் பதிவு பெறாத பணிக்குச் சம்பந்தப்பட்ட பணியாளர் மந்தணக் கோப்பின் பகுதியை அவர் திரும்பும் சரகத்துக்குரிய துறை துணைத் தலைவருக்கு அனுப்பிவிட்டு, அவரது அரசிதழ்பெற்ற பணிக்குச் சம்பந்தப்பட்ட பகுதியை அவர் மீண்டும் உயர்த்தப்படும் வரைக்குமோ அல்லது அவர் பணி முடியப்பெறும் வரைக்குமோ காவல் துறை இயக்குநர் வைத்துக்கொள்ள வேண்டும், ஒரு பதிலி துணைக் கண்காணிப்பாளர் தகுதியின்மை காரணமாக ஆய்வாளர் பதவிக்கு நிலையாகத் திரும்புகையில், அவரது முழு பணியாளர் மந்தணக் கோப்பும் அவர் திரும்பும் சரகத்துக்குரிய துறை துணைத் தலைவருக்கு அனுப்பப்படும்.

## PSO 119 - பணியாளர் மந்தணக் கோப்புகளை எழுதுதல்.–
## Writing up of Personal Files.-

(1) பணியாளர் மந்தணக் கோப்புகளைக் கூடியவரையில் நிறைவாகவும் முழுமையாகவும் வைத்துக்கொள்ளும் பொருட்டு, அவற்றை ஒவ்வொரு அரை ஆண்டிலும், சம்பந்தப்பட்ட சார்நிலை அலுவலரின் அடுத்த உயர் நிலை அலுவலர் மாற்றுதலாகும்போதும், பூர்த்திசெய்ய வேண்டும்.

(2) இரகசியத் தாள்களிலும் பணியாளர் மந்தணக் கோப்புகளிலும் உள்ள குறிப்புகள், சம்பந்தப்பட்ட அலுவலரின் பண்பு, திறமை முதலியதைப் பற்றி ஒரு திருத்தமான மதிப்பீடு செய்வதற்கு ஏற்றவையாயிருக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியமானதாகும். சம்பந்தப்பட்ட அலுவலரின் பொதுப்பண்பைப் பற்றிய குறிப்புகளை, அவரைப்பற்றி கொஞ்சம் அனுபவ அறிவு, கிடைத்தபின்னரும், வழக்கமாக நேர்விற்கேற்ப அவரது நிலையத்தையோ, வட்டத்தையோ அல்லது மற்ற பொறுப்பையோ ஆய்வு செய்தபின்னரும், பதிவு செய்ய வேண்டும்.



(3) குறிப்பிட்ட நிகழ்வுகளைக் கூடியவிரைவில் பதிவு செய்ய வேண்டும்.

(4) பண்பு, நடத்தை அல்லது நேர்மையைக் குறித்து பணியாளர் மந்தணக் கோப்புகளில், இரகசியத்தாள்களில் அல்லது இரகசிய அறிக்கைகளில் எழுதப்படும் குறை உரையானது பதிவு செய்துள்ள கருத்துக்கு வந்ததன் காரணங்களையும், கூடுமானால் திட்டமான அடிப்படை விஷயங்களையும், சார்ந்து இருத்தல் வேண்டும். ஒரு அலுவலர் குறிப்பான பதவி ஒன்றுக்குத் தகுதியற்றவரென்று செய்யப்படும் மதிப்பீடானது அத்தகைய கருத்துக்கான காரணங்களையும், கூடுமானால், அதற்கு ஆதாரமான விஷயங்களின் அறிக்கை ஒன்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். அது பொது தோற்றத்தின் அடிப்படை மேல் மட்டும் இருத்தலாகாது.

(5) உயர் நிலை அதிகாரிகள் தங்களுக்கீழுள்ள அலுவலர்களுக்கு பிரதிகூலமான குறிப்புகளை அறிவிப்பதற்காக கீழே ஆணை எண் 120ல் கண்ட கோட்பாடுகளைக் கருத்தில் கொண்டு பதிவுகளைச் செய்ய வேண்டும்; ஆணை எண். 120ல் கண்ட கோட்பாடுகள் தேவைப்படுத்தும் குறிப்புகளையோ அல்லது அவற்றின் வேண்டிய அளவு சாராம்சத்தையோ சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய குறிப்பு ஒன்று அறிவிக்கப்பட்டிருக்கிறது எனும் விஷயத்தை நேர்விற்கேற்ப பணியாளர் மந்தணக் கோப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

(6) காவல்கண்காணிப்பாளர்கள், சென்னை காவல் பயிற்சிக் கல்லூரி முதல்வர், தமிழ்நாடு சிறப்புக் காவல் படை தளவாய், உட்கோட்ட அலுவலர்கள், காவல் பயிற்சிப் பள்ளிகளின் முதல்வர்கள் குற்றப் புலனாய்வு துறையினைச் சேர்ந்த துணைக் கண்காணிப்பாளர்கள், தமிழ்நாடு காவல் வானொலி அலுவலர், ஆய்வாளர்கள், சேமப்படை ஆய்வாளர்கள், ஆகிய இவர்கள் வைத்துவரும் பதிவுக்கட்டுகளை காவல்துறை துணைத் தலைவரும், காவல் உட்கோட்ட அலுவலர்கள், காவல் பயிற்சிப் பள்ளிகளின் முதல்வர்கள், புலனாய்வு தனிப்பிரிவு. குற்றப்பிரிவு, துணைக் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள், ஆயுத சேமப்படை ஆய்வாளர்கள் ஆகிய இவர்கள் வைத்துவரும் பதிவுக்கட்டுகளை, நேர்விற்கேற்ப சம்பந்தப்பட்ட கண்காணிப்பாளர் அவை சரியாகவும் ஒழுங்காகவும் வைத்து வரப்படுகின்றனவா என்று அறியும் பொருட்டு தங்களது ஆய்வுகளில் ஆய்ந்துபார்க்க வேண்டும். ஆய்வு அறிக்கைகளில் இப்பதிவுகள் எவ்வாறு எழுதப்பட்டுள்ளனவென்று கண்டிருக்கவேண்டும் நேர்விற்கேற்ப, காவல் துறை துணைத்தலைவரோ அல்லது காவல் கண்காணிப்பாளரோ அல்லது உட்கோட்ட அலுவலரோ சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அடுத்த மேல் நிலை அதிகாரி இரகசியத் தாளில் செய்த ஓர் பதிவுக்கு ஒத்திராவிட்டால், கோப்பில் தனது கருத்துக்களையும் கூட எழுதிவைப்பது அவருடைய உரிமை மட்டுமின்றி அவரது கடமையுமாகும். உரிய காலத்தில் அப்படிச் செய்ய தவறுதல் சம்பந்தப்பட்ட உயர்நிலை அதிகாரி மேற்கண்ட அலுவலரைப் பற்றி அடுத்த உயர்நிலை அதிகாரி செய்துள்ள பதிவுக்கு ஒத்திருப்பதாகப் பொருள்படும். ஆகையால் ஆய்ந்து பார்க்கும் அதிகாரிகள் பணியாளர் மந்தணக் கோப்புகளில் உள்ள எந்த பதிவுக்காவது ஒத்திராத விஷயங்களில், மிக முந்திய வாய்ப்பில் தங்களது சொந்தக் கருத்துக்களை அக்கோப்புகளில் எழுதிவைக்க வேண்டும், மேலும் அவர்கள் கீழே சுருக்கொப்பமிடும் பதிவுகள் யாவற்றையும் சரியென ஏற்றுக்கொண்டால், அல்லது தங்களது குறிப்பையும் செய்துவிட்டால் அன்றி மற்றப்படி ஒரு அறிக்கையை சுருக்கொப்பம் மட்டும் செய்யவோ அல்லது அதில் "குறிப்புகள் இல்லை" என்று பதிவு செய்யவோ கூடாது.

(7) (a) காவல் கண்காணிப்பாளர்கள், சென்னை காவலர் பயிற்சிக் கல்லூரி முதல்வர், தமிழ்நாடு சிறப்புக் காவல் படை தளவாய் ஆகிய இவர்கள் வருடத்திற்கு ஒரு முறை மாற்றலாகி பொறுப்பினை ஒப்புவிப்பதற்கு முன்பும், அல்லது விடுப்பில் செல்லும் போதும்,

Scanned by CamScanner
Scanned with CamScanner

(i) தாங்களே வைத்து வரவேண்டிய பணியாளர் மந்தணக் கோப்புகள், டிசம்பர் 31ஆம் தேதியன்று நாளிதுவரை இரகசியத் தாள்கள் அனைத்தையும் எழுதி முடித்துவிட்டதாகவும், மற்றும்

(ii) (a) தங்களுக்குக்கீழுள்ள அலுவலர்கள் எவரேனும் வைத்துவந்த கோப்புகளையும் தாள்களையும் தாங்கள் கூர்ந்தாய்வு செய்து விட்டதாகவும், சான்றிதழ் அளிக்க வேண்டும்.

(b) வருடாந்திர சான்றிதழ்கள் பிப்ரவரி 15ஆம் தேதியன்று சம்பந்தப்பட்ட காவல் துறை துணைத் தலைவருக்குச் சேரவேண்டும்.

## PSO 120 - தகாத குறிப்புரைகள் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தெரிவிப்பது பற்றிய அறிவுறுத்தல்கள்.– Instructions for communication of unfavourable remarks to officer concerned.-

(1) சார்நிலை அலுவலர்களைப் பற்றிய இரகசிய அறிக்கைகளில் அவர்களுடைய மேல்நிலை அதிகாரிகள் எழுதியுள்ள தகாத குறிப்புரையை அவர்களுக்கு அறிவிப்பது விஷயமாய் மத்திய அரசாங்கம் செய்துள்ள கீழ்க்கண்ட விதிகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அனைவரும் கையாள வேண்டும் :-

(a) ஒரு அறிக்கையானது துறையின் வெவ்வேறு மேல்நிலை அலுவலர்களால் தரவரிசைப்படி அவர்களுடைய தனிப்பட்ட கருத்துக்களின் மேல் உருவாக்கபட்டிருக்கையில் அவர்களுக்குள் மிக உயர்ந்த அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தினை மட்டுமே அறிவிக்கத் தக்கதெனக் கருதவேண்டும்.

(b) ஒரு பொது விதிமுறையாக, ஒரு அலுவலரைப் பற்றி அவருடைய மேல்நிலை அதிகாரிகள் போதிய அளவு அனுபவ அறிவு அடைந்த பின்னர் அதிருப்தி கொண்டிருப்பதை எவ்விஷயத்திலேனும் யாதொரு நீண்ட கால அளவுக்கு அவருக்கு ஒன்றுமே தெரிவிக்காமல் வைத்திருக்கலாகாது. ஒரு குறிப்பான குற்றத்தை ஒரு எச்சரிப்பானது ஒழிக்கவோ அல்லது ஒழிக்க உதவியாகவோ இருக்கக் கூடிய விஷயங்களில் உடனடியான அறிவிப்பு எவ்வளவு நலமானதென்பது வெளிப்படை; தகாத குறிப்புரையை நிறுத்தி வைத்திருக்க வேண்டியபோது, அறிக்கையை ஆராயும் அலுவலர் அறிவிப்பை நிறுத்திவைக்க வேண்டிய கால அளவை குறித்து, சர்ச்சை செய்யப்பட்ட குறைபாட்டின் தன்மையை அனுசரித்து, தனது காரணங்களடங்கிய விளக்கத்தை எழுதிவைக்க வேண்டும்.

(c) திறமையின்மை அல்லது அறிவின்மை போன்ற தகாத குறிப்புரைகளை தெரிவிப்பதில் யாதொரு பயனுமில்லையாதலால் திருத்தக் கூடிய குறைபாடுகளை மட்டுமே குறிப்பிடவேண்டும்.

(d) தொழில்நுட்ப அலுவலர்களைப் பற்றிய தகாத குறிப்புரையை அறிவிப்பதில் கஷ்டங்கள் ஏற்படும் விஷயங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு குறை உரைஅறிவிக்கவேண்டியது வழக்கமான முறைப்படியா அல்லது மற்றப்படியா என்பதைத் தீர்மானிக்கும் விருப்புரிமை மேல்நிலை அலுவலர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அத்தகைய குறிப்புகள் வழக்கப்படி அறிவிக்கப்படாமல் இருக்கையில் அவற்றை முறைசார்ந்த வகையில் அறிவிக்கத்தக்க சமயத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.

(e) அறிக்கை செய்யும் அலுவலர் அறிக்கையில் சொல்லப்பட்ட குறைபாடுகள் வேறெந்த சந்தர்ப்பத்திலாவது சம்பந்தப்பட்ட அலுவலரின் கவனத்திற்கு ஏற்கனவே கொண்டு வரப்பட்டனவா என்று குறிப்பிட வேண்டும்.

(f) அரசாங்கமாவது துறைத்தலைவராவது மற்ற அலுவலராவது தீர்ப்பை நிறுத்தி வைத்திருக்கும் விஷயங்களில் குறிப்புரையை அறிவிக்கலாகாது.

(g) எச்சரிக்கை (அ) கண்டனம் அளிக்கப்படுவதானது வாய்மொழியாக அல்லது எழுத்துருவில் இருப்பினும், அது வழங்கப்படும் முறை அல்லது தெரிவிக்கும் முறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும்; தொடர்பான அதிகாரியின் மனப்பாங்கு அலுவலருக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பதை உறுதி செய்திடும்.



(h) மந்தணஅறிக்கை (கமுக்கமான அறிக்கை)களில் அல்லது பணியாளர் மந்தணக் கோப்பில் குறை குறிப்புரைகளை பதிவு செய்த அதிகாரியின் அடையாளத்தினை வெளிப்படுத்தத் தேவையில்லை. ஏனெனில், அரசு ஊழியர் தனது பணியில் மற்றும் நடத்தையில் உயர் அதிகாரி கண்ட குறைபாடு பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமேயன்றி, மந்தண அறிக்கையில் பதிவு செய்த குறிப்பிட்ட உயர் அதிகாரி யார் என்பது அல்ல. இத்துடன் அல்லாமல் உயர் அதிகாரியின் அடையாளத்தினை வெளிப்படுத்துவதானது, மன வருத்தத்தினையும் மற்றும் தனிப்பட்ட பகைமையினை வளர்த்திடும். ஆதலால், தொடர்பான அரசு ஊழியரிடம் குறை குறிப்புரைகளை தெரிவிக்கும் போது அதனை பதிவு செய்த உயர் அதிகாரியின் அடையாளத்தினை வெளிப்படுத்தாமல் இருப்பது விரும்பத்தக்கதாகும். ஆயினும், குறிப்பிட்ட ஒரு நேர்வில் உயர் அதிகாரியின் அடையாளத்தினை வெளிப்படுத்துவது அவசியமெனில் முறையீட்டை பரிசீலனை செய்யும் அதிகாரி தனது விருப்புரிமையின்படி அடையாளத்தினைத் தெரிவிக்க அனுமதிக்கலாம்.

(2) ஒரு அலுவலரின் நேர்மையைப் பற்றிய சந்தேகமானது தெளிவாகத் தெரியும் காரணங்களை, உதாரணமாக அவருடைய குறிப்பிட்ட செயல் அல்லது அவர் சம்பந்தப்பட்டிருந்த ஒரு நிகழ்ச்சியை சார்ந்து இருந்து அது உள்ளடங்கிய பொருளாகவோ வெளிப்படையாகவோ கூறப்பட்டுள்ள குறிப்புரை விஷயத்தில், அத்தகைய ஒரு செயல் அல்லது நிகழ்ச்சியானது அவர் நேர்மையாக இல்லையெனும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறதென்றும், அப்படி அவர் அறிவிக்கப்பட்டிருக்கும் விஷயம் பதிவுகளில் குறிக்கப்பட்டிருக்கிறதென்றும், அவருக்குத் தெரியப்படுத்த வேண்டும். மற்ற விஷயங்களில் உதாரணமாக, அத்தகைய குறிப்புகள் மேற்கண்ட அலுவலர் பிறருடனும் எதிரெதிர் மாறாக கொண்டுள்ள மனப்பான்மையினை மட்டுமே சார்ந்திருக்குமிடத்து, மேற்கண்ட குறிப்புக்களை அவருக்கு அறிவிக்க வேண்டியதில்லை.

(3) இரகசிய அறிக்கைகளிலுள்ள தகாத குறிப்புரைகளை சட்டப்பூர்வமான விதிகளின்படி தண்டனைகள் அல்ல; இது காரணமாக அத்தகைய குறிப்புகளுக்கு எதிராக யாதொரு மேல் முறையீடும் நிற்காது. அத்தகைய அறிக்கைகளில் அறிக்கை செய்யும் அலுவலரின் கருத்து மட்டுமே சொல்லப்படுகிறது. ஆனால் அதே சமயத்தில் ஒரு அலுவலருக்கு அறிவிக்கப்பட்டிருக்கும் யாதொரு குறிப்புரையின் சாராம்சமானது சரியெனக் காட்டத்தகாதென்று அவர் நினைக்கையில் அதற்கு எதிராக ஒரு முறையீட்டைச் செய்துகொள்ள அவருக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் அத்தகைய முறையீடுகளை மேற்கண்ட அலுவலரின் பணியாளர் மந்தணக் கோப்பினை கூர்ந்தாய்வு செய்யும் பொறுப்புடைய அதிகாரியிடம் செய்து கொள்ள வேண்டும். ஆயினும், பிரதிகூலமான குறிப்பை ஆய்ந்து பார்க்கும் அதிகாரியே செய்திருக்கையில், அம்முறையீட்டை அடுத்த மேல்நிலை அதிகாரியிடம் செய்து கொள்ளலாம். அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் கருணை விண்ணப்பங்கள் குறிப்பிட்ட தண்டனைகள் சம்பந்தமான கருணை விண்ணப்பங்கள் விஷயத்தில் எப்படியோ அதே முறைப்படியும் அதே அளவுக்கும் ஆராயப்படும்.

(4) (a) சாதகமற்ற குறை குறிப்புரைகள் அவை மறு ஆய்வு/மேலொப்பமிடும் அதிகாரியினால், அதனை காலத்திற்குள் தெரிவிக்க பொறுப்புடைய அவர்கள் அவை பெறப்பட்ட தேதியிலிருந்து ஒரு திங்களுக்குள் தெரிவிக்கவேண்டும். சாதகமற்ற குறை குறிப்புரைகள் கவனத்தில் வந்த தேதி அல்லது கவனத்திற்குக் கொண்டு வந்த தேதியிலிருந்து மூன்று வருடம் அல்லது மூன்று வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்குத் தொடர்புடையதாக இருந்து மற்றும் தொடர்பான அதிகாரிக்கு அவை தெரிவிக்கப்படாமல் இருக்கும் போது பதவி உயர்வு, பணி உறுதியாக்கம் முதலியவற்றின் போது முழுமையாக நிராகரிக்கப்படும். அந்த நிலையில் அவை தெரிவிக்கப்பட வேண்டியதில்லை. ஒரு வருடத்திற்கு மேற்பட்ட சாதகமற்ற குறை குறிப்புரைகள் அதாவது மறுஆய்வு / மேலொப்பமிடும் அதிகாரியினால் பெறப்பட்ட தேதியிலிருந்து ஆனால் மூன்று வருடத்திற்கு குறைவானது பிந்தைய அதிகாரி குறைகள் ஏதுமில்லை எனக் கருதுவாராயின், தெரிவிக்க வேண்டியதில்லை. அம்மாதிரியான நேர்வில் அவர் அது பற்றி ஓர் குறிப்புரையை பணியாளர் மந்தணக் கோப்பில் தனது அடுத்த உயர் அதிகாரியின் தகவலுக்காக எழுதிடுவார்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

இதன் மூலம் உயர் அதிகாரி தேவையான மேல் நடவடிக்கையினை எடுத்திட இயலும். அத்தகைய குறை குறிப்புரைகள் தெரிவிக்கப்பட்டு மற்றும் முறையீட்டின் பேரில் அவை மாற்றப்படாமல் அல்லது நீக்கப்படாமல் இருக்கிறவிடத்து, மறுஆய்வு / மேலொப்பமிடும் அதிகாரி குறிப்பாக பரிசீலனை செய்து பின்வரும் ஆண்டில் குறைகள் சீர் செய்யப்பட்டதா, இல்லையா என்பதைப் பற்றி அறிக்கையிட வேண்டும். மறுஆய்வு/மேலொப்பமிடும் அதிகாரி அறிக்கையிடுவதில் மௌனம் காப்பாராயின், குறைகள் சீர்செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

(b) சாதகமற்ற குறிப்புரைகள் தெரிவிக்கப்பட்டது தொடர்பான குறிப்பாணையின் மாற்றினப்படி நகல் (Duplicate) ஒப்புகை மேலொப்பமிடப்பட்டது தொடர்பான தனிநபரின் பணியாளர் மந்தணக் கோப்பில் கோர்த்து வைக்கப்பட வேண்டும்.

(5) தொடர்பான அதிகாரிக்கு சாதகமற்ற குறை குறிப்புரைகள் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள் செய்து கொள்ளப்படாத எந்த முறையீடும் உரிய அதிகாரியினால் பரிசீலனை செய்யப்பட மாட்டாது. முறையீடு பெறப்பட்டதிலிருந்து ஆறு திங்களுக்குள் இறுதியாக முடிவு செய்யப்பட வேண்டும்; தவறினால் அலுவலரின் பதவி உயர்வு முதலியனவற்றிற்கு எதிராக அச்சுறைபாடுகள் கருத்தில் கொள்ளப்படாது.

## PSO 121 - இரகசிய அறிக்கைகளைப் பயன்படுத்தும் முறை.– Use to which confidential reports on Officers can be put.-

இப்போது அலுவலர்களைப் பற்றிய இரகசிய அறிக்கைகள் அவர்களைக் குறித்து பற்பல நோக்கங்கள் ஆலோசிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. அத்தகைய அறிக்கைகளின் பயன்பாட்டிற்கு யாதொரு தடைக்கட்டும் செய்யலாகாது. எனினும் சாதாரணமாக ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளைத் தீர்க்கும் தீர்ப்பாயங்கள் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளின் மேல் தங்களுடைய தீர்மானங்களுக்கு வந்த பின்னரே மேற்கண்ட அறிக்கைகளை ஆலோசிக்க வேண்டுமென்ற கொள்கையைக் கைக்கொள்ள வேண்டும்.

## PSO 122 - கால முறை அறிக்கைகள் – காவல் துறை துணைத் தலைவர்கள் மற்றும் காவல் கண்காணிப்பாளர்கள் மீதான ஆண்டு அறிக்கைகள் .– Periodical reports – Annual reports on Deputy Inspector Generals and Superintendents.-

(1) இந்திய பணியாளர் தொகுதியின் அலுவலர்கள் இவர்களைப் பற்றிய இரகசிய அறிக்கைகளின் தயாரிப்பையும் அறிவிப்பையும் குறித்து அடியிற்கண்ட விதி முறைகளை மத்திய அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது :-

(a) அறிக்கை செய்யும் அதிகாரிகள் இரகசிய அறிக்கைகளில் சொல்லப்படும் அலுவலர்கள் உயர்வுக்குத் தகுதியாயிருத்தலைக் குறித்து தங்களது கருத்தினைக் கூற வேண்டும். அறிக்கை செய்யும் அதிகாரிகள் அறிக்கைக்கு அடிப்படையான அலுவலர்களின் சிறந்த அல்லது மோசமான பணி அல்லது நடத்தையைக் காட்டும் உதாரணங்களைச் சொல்ல வேண்டியதில்லை; எழுதப்பட்ட கருத்தினைச் சரியெனக் காட்டுவதற்காக அறிக்கை செய்யும் அதிகாரிகள் தங்களுடைய தனிப்பட்ட அனுபவத்தின் கால அளவையோ, வகையையோ குறிப்பிட வேண்டியதுமில்லை. அலுவலர் தனது சக அலுவலர்களோடும் பொது மக்களோடும் கொண்டுள்ள தொடர்பைப் பற்றிக் குறிப்பாய்ச் சொல்ல வேண்டும். இரகசிய அறிக்கைகள் ஒரு அலுவலரின் ஆளுமை அம்சங்கள் அனைத்தையும் உள்ளடக்கும் வகையில் சரியாகவும் நேர்மையாகவும் எழுதப்பட வேண்டும்.

(b) ஒரு அலுவலரின் உயர்வுக்குரிய தகுதியைப் பற்றி விசாரித்துக் கேட்டதன் மேலோ, அல்லது அவருடைய நடத்தை ஆட்சேபிக்கப்பட்ட விஷயங்களிலோ, அனுப்பப்படும் தனி அறிக்கைகளை பணியாளர் மந்தணக் கோப்பில் உள்ளடக்க வேண்டும்,



(c) ஒவ்வொரு அலுவலருக்கும் அவருடைய இரகசிய அறிக்கையிலிருந்து அவருடைய கவனத்துக்குக் கொண்டுவரப்படும் குறைபாட்டை அது திருத்தக் கூடியதானாலும் சரி கூடாததானாலும் சரி, அவருக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஒரு அலுவலருக்கு முந்திய ஆண்டொன்றில் அறிவிக்கப்பட்ட குறைபாடுகளைத் திருத்துவதற்கு அவர் முயற்சிகள் எடுத்திருக்கிறாரென்று ஒரு அதிகாரியின் குறிப்புரையில் ஏதேனும் கண்டிருந்தால், அவருடைய சீர்திருத்தத்துக்கென்று செய்யப்பட்ட முயற்சிகளும் கவனிக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிந்துகொள்ளும் பொருட்டு மேற்கண்ட குறிப்பையும் அவருக்கு அறிவிக்க வேண்டும்.

(2) அனைத்து இந்திய பணிகள் (மறையப் பட்டியல்கள்) விதிகள் 1970ன் விதி 4-ன் படி அறி.எண்.2933 பொது (சிறப்பு -A) துறை நாள் 13/11/1973ல் தெரிவிக்கப்பட்டவாறு, இந்திய அரசு அறிவிக்கை எண்.24/471 AIS தொகுதி I நாள் 11/9/1973ல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில், D.I.G. COP மற்றும் A.I.G. பதநிலை கொண்ட IPS அதிகாரிகளைப் பொறுத்து வருடாந்திர மந்தண அறிக்கையினை குறிப்பிட்ட ஆண்டின் ஏப்ரல் முதல் தேதி முதல் தொடர்ந்து வரும் ஆண்டின் மார்ச் 31 வரையிலான காலத்திற்கு தயாரித்து ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 15ஆம் தேதிக்குள் அரசிடம் சேர்த்திடுவார். இவ்வறிக்கைகள் மூன்று பிரதிகளாக எழுதப்பட்டு, இரு பிரதிகள் அரசிற்கு அனுப்பப்படும், மற்றொரு பிரதி அதிகாரியின் பணியாளர் மந்தணக் கோப்பில் வைக்கப்படும். (அறி.எண்.2160 உள்துறை நாள் 03/09/1974)

(3) (a) அனைத்து DIG க்கள் COP உட்பட மற்றும் ADGP காவல் கண்காணிப்பாளர்களுக்கான ஆண்டு மந்தண அறிக்கையினை குறிப்பிட்ட ஆண்டின் ஏப்ரல் முதல் தேதி முதல் தொடர்ந்து வரும் ஆண்டின் மார்ச் 31 வரையிலான காலத்திற்கு தயாரித்து ஏப்ரல் 15ஆம் தேதிக்குள் DGP யிடம் சேர்த்திடுவர். அறிக்கையானது மூன்று பிரதிகளாக அனுப்பப்பட வேண்டும். அறி.எண்.2933 பொது (சிறப்பு-A) துறை நாள் 13/11/1973ல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஆண்டு மந்தண அறிக்கையினை SP படிநிலை கொண்ட IPS அதிகாரிகளுக்கும், IPS அல்லாத பிற அதிகாரிகளுக்கு அரசினால் குறித்துரைக்கப்பட்ட படிவம் பயன்படுத்தப்பட வேண்டும். அதே தேதியில் DGP ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரிடமிருந்து அவருடைய மாவட்டத்தின் காவல் கண்காணிப்பாளர் பற்றிய குறிப்புரைகளை மூன்று பிரதிகளில் DGP இரகசியமாகப் பெற்றிடுவார். ஒவ்வொரு அறிக்கையின் மாவட்ட ஆட்சியரின் அறிக்கை உட்பட இருபிரதிகள், ஒவ்வொரு அதிகாரி பற்றி தனது சொந்த குறிப்புரைகளை DGP எழுதி, அரசிற்கு மே முதல் தேதி சேருமாறு பணிந்தனுப்பிடுவார். மற்றொரு பிரதி (ஆட்சியரின் அறிக்கை உட்பட) அதிகாரியின் பணியாளர் மந்தணக்கோப்பில் வைக்கப்படும்.

(b) சம்பந்தப்பட்ட அலுவலரின் அடுத்த உயர் நிலை அலுவலரில் மாறுதல் எப்பொழுதாகிலும் ஏற்படும் போதும் ஆண்டு அறிக்கையின் தவணைத் தேதிக்கு முன்பு மேற்கண்ட அலுவலர் மாவட்டத்துக்கு வெளியே மாற்றலாகியோ விடுப்பில் புறப்பட்டோ, தனது நிலையான அலுவலுக்குத் திருப்பப்பட்டோ செல்லும்போதும், அத்தகைய அறிக்கைகளை அனுப்பி வைக்கவேண்டும்.

## PSO 123 - JSP, ASP, ADSP மற்றும் DSP களின் மீதான அரையாண்டு மந்தண அறிக்கை .– Half-yearly confidential reports on Joint Superintendent of Police Assistant Superintendent of Police, Additional Superintendent of Police, Deputy Commandants and Deputy Superintendents of Police.-

(1) காவல் கண்காணிப்பாளர்கள், தளவாய்கள், சென்னை காவலர் பயிற்சிக் கல்லூரி முதல்வர் மற்றும் காவல் தொலைத் தொடர்பு இயக்குநர் ஆகியோர் ஒவ்வொரு JSP/ASP க்கும் மார்ச் 31 வரை முடிந்த காலத்திற்கும் மற்றும் செப்டம்பர் 30 வரை முடிந்த காலத்திற்கும் மந்தண அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். மார்ச் 31 வரையிலான அறிக்கையானது அக்டோபர் 1 முதல் அடுத்த

Scanned by CamScanner
Scanned with CamScanner

வருட மார்ச் 31 வரையிலான காலத்திற்கும் மற்றும் செப்டம்பர் 30 வரையிலான அறிக்கையானது ஏப்ரல் 1 முதல் செப்டம்பர் 30 வரையிலான காலத்தினைக் கொண்டதாக இருக்க வேண்டும். அ.நி. எண்.2933 பொது (சிறப்பு-அ) நாள் 13/11/1973ல் குறித்துரைக்கப்பட்ட படிவம் பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் அறிக்கையானது மூன்று பிரதிகளில் தொடர்பாக ஆட்சியர் மற்றும் DIG மூலமாக அவர்களின் குறிப்புரைகளுடன் அனுப்பப்பட வேண்டும். ADSP மற்றும் உதவி தளவாய்கள் மீதான அறிக்கை அரசினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் மூன்று படிகளில் தொடர்பான ஆட்சியர் / DIG மூலமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். JSP, ASP, ADSP, DSP மற்றும் உதவி தளவாய்களின் மீதான அறிக்கையின் இரு படிகள் அரசிற்கு அனுப்பப்படும்; மற்றோர் பிரதி அதிகாரிகளின் பணியாளர் மந்தணக் கோப்பில் வைக்கப்படும். DSP வகை 1, 2, 3 இவர்களின் மீதான அறிக்கைகளும் அரசினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் தொடர்பான ஆட்சியர் / DIG மூலமாக அவர்களின் குறிப்புரைகளுடன் அனுப்பப்படும் மார்ச் 31 வரை முடிந்த காலத்திற்கு ஏப்ரல் 15ஆம் தேதிக்குள், செப்டம்பர் 30 வரை முடிந்த காலத்திற்கு அக்டோபர் 15ஆம் தேதிக்குள் DGP க்கு சென்றடைய வேண்டும். சென்னை காவலர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியில் உள்ள அதிகாரிகளின் நேர்வில் மற்றும் ஆயுத காவற் படைப் பிரிவுகளில் பணியாற்றும் அதிகாரிகள் அதாவது துணை தளவாய், DSP வகை 3 மற்றும் இரயில்வே காவற் படை DSP களின் நேர்வில் அறிக்கையானது ஆட்சியர் மூலமாக செல்ல வேண்டியதில்லை.

(2) மாவட்ட அலுவலர்கள், சம்பந்தப்பட்ட அலுவலரின் அடுத்த உயர் நிலை அலுவலரில் எப்பொழுதாகிலும் மாறுதல் ஏற்படும்போதும், அரையாண்டு அறிக்கைகளின் தவணைத் தேதிக்கு முன்பு மேற்கண்ட அலுவலர் மாவட்டத்துக்கு வெளியே மாற்றலாகியோ, விடுப்பில் புறப்பட்டோ, தனது நிலையான அலுவலுக்குத் திருப்பப்பட்டோ, செல்லும்போதும் கூட, அரையாண்டு அறிக்கைகளை அனுப்பிவைக்க வேண்டும்.

(3) இரகசிய அறிக்கைகள் ஒரு அலுவலரின் ஆளுமை அம்சங்கள் அனைத்தையும் உள்ளடக்கும் வகையில் சரியாகவும் நேர்மையாகவும் எழுதப்படவேண்டும்.

(4) (மேற்கண்ட தகுதிகாண் பருவகாலத்தை நிறைவு செய்தவர்கள் நீங்கலாக) தகுதிகாண் பருவத்திலாவது பதில் பார்த்துக் கொண்டாவது இருக்கும் அலுவலர்கள் விஷயத்தில் காவல் துறைத்தலைவர் மேற்கண்ட அறிக்கைகளை அரசாங்கத்தால் குறிப்பிட்டுள்ள படிவம் (படிவம் எண் 7)ன் படி அட்டவணையிட்டு, தேவையான இடங்களில் எல்லாம் தனது குறிப்புகளைச் சேர்த்துவிட்டு, அவற்றை மே 1ம் தேதிக்குள்ளும் நவம்பர் 1 ஆம் தேதிக்குள்ளும் சேரும்படி அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(5) இந்திய அரசானது அனைத்து இந்திய பணிக்கு தெரிந்தெடுக்கப்படும் IPS அதிகாரிகளைப் பொறுத்து அவர்களின் முதல் 5 வருடப் பணியினை மதிப்பீடு செய்திட ஒரு மதிப்பீடு அறிக்கையினை வரையறுத்துள்ளது; இவ்வறிக்கை UPSC க்கு அனுப்புவதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளின் பணித்தரம் ஆய்வு செய்திடவும், தேர்வு/தெரிவு முறைகளை திறம்பட திருத்தம் செய்திடவும் இயல்விக்கிறது. IPS அதிகாரிகளைப் பொறுத்து மதிப்பீடு அறிக்கையானது நிதி ஆண்டின் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தொடர்ந்து வரும் ஆண்டின் மார்ச் 31 தேதி வரையிலான காலத்திற்கு எழுதப்பட வேண்டும். காவல் கண்காணிப்பாளர்கள் அகில இந்திய பணிக்கு தெரிந்தெடுக்கப்பட்ட IPS தகுதிகாண் பருவத்தினரைப் பொறுத்து முதல் 5வருடப் பணி மதிப்பீடு அறிக்கையினை படிவத்தின் பாகம் Iல் தயாரித்து சரக DIGக்கு வருடத்தின் ஏப்ரல் முதல் தேதியில் பணிந்தனுப்ப வேண்டும். காவல் கண்காணிப்பாளர்கள் மதிப்பீட்டு அறிக்கைகளுக்கு மதிப்பீடு அதிகாரிகளாவர். DIG அறிக்கையின் பாகம் Iல் உள்ள மெய் நிகழ்ச்சி சார்பினை ஏற்பளிப்பு செய்து ஏப்ரல் 15 தேதிக்குள் தனது அறிக்கையினை சமர்ப்பிப்பார். DGP மறு ஆய்வு அதிகாரியாவார். DGP மற்றும் முதுநிலை உயர் காவல் அதிகாரிகளை உறுப்பினர்களைக் கொண்ட அரசுச் செயலாளர் உள்துறை தலைமையாகக் கொண்ட குழு ஒவ்வொரு வருடம் மே 20ஆம் தேதியில் மதிப்பீடு அறிக்கைகளை மறுஆய்வு செய்திடும்.



## PSO 124

மேற்காண் ஆணை எண்.123 பத்தி (1) மற்றும் (5)ல் குறித்துரைக்கப்பட்ட அறிக்கைகளுடன் கூடுதலாக சிறப்பு அறிக்கை ஒன்று தொடர்பான DIG மூலமாக, DSP மற்றும் அதற்கு மேற்பட்ட படிநிலை கொண்ட அலுவலர்கள் தங்களது குறித்துரைக்கப்பட்ட தகுதிகாண் பருவம் முடித்தது பற்றி மற்றும் அவர் தகுதிகாண் பருவம் முடித்திட அனுமதிக்கலாமா என்பது குறித்து உறுதியான பரிந்துரையுடன் DGP க்கு அனுப்பப்பட வேண்டும்.

## PSO 125 - தமிழ்நாடு காவல் பணியாளர் தொகுதியில் சேர்க்கப்படுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வாளர்களைப் பற்றிய ஆண்டு அறிக்கைகள்.– Annual reports on Inspectors selected for admission to the Tamil Nadu Police Service.-

(1) TNPSC யினால் தமிழ்நாடு காவல் பணியாளர் தொகுதியில் சேர்க்கப்படுவதற்குத் தகுதியெனக் கருதப்படும் ஆய்வாளர்களை முந்துரிமை வரிசையில் ஒழுங்குப்படுத்தியுள்ள பட்டியலானது அனைத்து காவல் துணைத் தலைவர்களுக்கும் காவல் துறை இயக்குநரால் அனுப்பப்படும்; அவர்கள் மேற்கண்ட ஆய்வாளர்கள் பணிபுரிந்து வரும் மாவட்டங்களைப் பார்வையிடுகையில் முக்கியமாக மேற்கண்ட ஆய்வாளர்களின் வேலையை கூர்ந்தாய்வு செய்திட வேண்டும். ஆண்டுதோறும் ஒவ்வொரு காவல் துறை துணைத்தலைவரும், துணைக் கண்காணிப்பாளர் பதவி உயர்வுக்குத் தகுதியான ஆய்வாளர்களின் பட்டியலில் தேர்ந்தெடுத்துச் சேர்ப்பதற்குத் தகுதியெனக் கருதப்படும் ஆய்வாளர்களைப் பற்றியும், ஏற்கனவே பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள ஆய்வாளர்கள் விஷயத்தில் அவர்களை முந்துரிமை வரிசையில் மாற்றவேண்டுமா அல்லது பட்டியலிலிருந்து நீக்கிவிட வேண்டுமா என்பதற்கான முழு விவரக் காரணங்களையும், குறிப்பிட்ட (படிவம் எண் 6) படிவத்தில இரகசியமாக மே 1-ம் தேதிக்குள் சேரும்படி காவல் துணைத்தலைவருக்கு அனுப்பிவைக்க வேண்டும். அங்கீகாரமான பட்டியலில் உள்ள ஆய்வாளரின் முதுநிலையை மாற்றுவதற்காகவோ அல்லது அவரைப் பட்டியலினின்று நீக்குவதற்காகவோ அறிக்கை செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு ஆய்வாளரின் முந்திய ஆண்டின் வேலை, நடத்தை, இவற்றைப் பற்றி குறிப்பிட்டு அறிக்கை செய்யவேண்டும்; மேலும் அவர்களுடைய சிறந்த அல்லது மோசமான பணியின் விவரங்களையும் அதில் பதிவு செய்யவேண்டும்.

(2) காவல் கண்காணிப்பாளர், அவருக்கு ஒரு காவல் ஆய்வாளரின் பணிகுறித்து, அம்மாவட்டத்தின் ஆட்சியர் குறைகூறி தமக்குத் தெரிவிக்கப்பட்ட அத்தகைய குறை குறிப்புரைகளையும், மேற்காண் அத்தகைய அறிக்கையில் சேர்த்திடுவார்.
**(அ.நி. எண்.739 உள்துறை நாள் 1/4/1981)**

## PSO 126 - தகுதி காண் பருவத்தினர் உட்பட சில அலுவலர்களைப் பற்றிய அரையாண்டு அறிக்கைகள் .– Half-yearly reports on certain officers including probationers.-

(1) மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் அரையாண்டு தோறும் ஜூலை 15ம் தேதிக்குள்ளும் ஜனவரி 15-ம் தேதிக்குள்ளும் சேரும்படி இரகசிய அறிக்கை ஒன்றை ஜனவரி 1 முதல் ஜூன் 30 வரை மற்றும் ஜூலை 1 முதல் டிசம்பர் 31 வரை முறையே கீழ்க்கண்ட வகுப்பினரைப் பற்றி சம்பந்தப்பட்ட காவல் துணைத் தலைவருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

(a) குறிப்பிட்ட தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்யாத பதிலி ஆய்வாளர்கள்.

(b) குறிப்பிட்ட தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்யாத சேமப்படை ஆய்வாளர்கள்

(c) ஆய்வாளர் பதவி உயர்வுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவி ஆய்வாளர்கள்

(d) சேமப்படை ஆய்வாளர் பதவியில் சேர்ப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சேமப்படை உதவி ஆய்வாளர்கள்.

Scanned by CamScanner

(e) காவல் கண்காணிப்பாளர், அவருக்கு ஒரு காவல் ஆய்வாளரின் பணிகுறித்து, அம்மாவட்டத்தின் ஆட்சியர் குறைகூறி தமக்குத் தெரிவிக்கப்பட்ட அத்தகைய குறை குறிப்புரைகளையும், மேற்காண் அத்தகைய அறிக்கையில் சேர்த்திடுவார். **(அ.நி. எண்.739 உள்துறை நாள் 1/4/1981)**

(2) ஆய்வாளர்கள் மற்றும் சேமப்படை உதவி ஆய்வாளர்கள் மீதான அறிக்கை படிவம் 9A விலும் மற்றும் ஏனைய பிறருக்கு படிவம் 9லும் இருத்தல் வேண்டும்

(3) இவ்வறிக்கைகளைச் சம்பந்தப்பட்ட அலுவலரின் அடுத்த மேல் நிலை அலுவலரில் எப்பொழுதாகிலும் மாறுதல் ஏற்படும் போதும், அரையாண்டு அறிக்கைகளின் தவணைத் தேதிக்கு முன்பு மேற்கண்ட அலுவலர் மாவட்டத்துக்கு வெளியே மாற்றலாகியோ, விடுப்பில் புறப்பட்டோ, தனது நிலையான அலுவலுக்குத் திருப்பப்பட்டோ செல்லும்போதும்கூட, அனுப்ப வேண்டும்.

(4) தகுதிகாண் பருவத்தில் உள்ள சேமப்படை உதவி ஆய்வாளர்கள் விஷயத்தில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை தளவாய் மாதந்தோறும் இரகசிய அறிக்கை ஒன்றைப் படிவம் எண் 9-ல் காவல் துறைத் துணைத் தலைவருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். காவல் கண்காணிப்பாளர்கள் அதேபோன்ற அறிக்கைகளை மூன்றுமாதத்துக்கொரு முறை சம்பந்தப்பட்ட காவல் துறை துணைத்தலைவருக்கு அனுப்பவேண்டும்.

(5) (a) PSO 126(1)ல் குறிப்பிடப்பட்ட அரையாண்டு அறிக்கைகளுக்குக் கூடுதலாக ஒரு அலுவலர் தனக்குக் குறிப்பிடப்பட்ட தகுதிகாண் பருவகாலத்தை முடித்துவிட்ட பின்பு அவர் தகுதிகாண் முடிக்கப்படுத்தப்படுவதற்குத் தகுதியா என்பதைப் பற்றி தனிப்பட்ட அறிக்கை ஒன்று திட்டமான ஓர் பரிந்துரையுடன் சம்பந்தப்பட்ட காவல் துறை துணைத் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும்.

(b) அனைத்து அதிகாரிகளும் தகுதிகாண் பருவத்தினரின் தகுதிகாண் பருவகாலம் முடிவடையும் வரை காத்திருக்காமல், அவர்களின் தகுதி பொருத்தம் குறித்து முன்னரே மறுஆய்வு செய்திட வேண்டும்; இதன் மூலம் அவர்களின் தகுதிகாண் பருவகாலம் முடிவடைதற்கு முன்னர், தகுதிகாண் பருவம் நீட்டிப்பு அல்லது முடிவுறுத்தம் தொடர்பாக இறுதி ஆணைகள் பிறப்பிக்க முடியும். இந்நோக்கத்திற்காக, தனிப்பட்ட நபர் தனது தகுதி காண் பருவம் முடிவினை எதிர்நோக்கியுள்ள மாதத்திற்கு நான்கு திங்களுக்கு முன்னர் நடவடிக்கைகள் தொடங்கிடலாம். ஆயினும், இறுதி ஆணைகள், தனிப்பட்ட நபரின் இறுதி ஆணை பிறப்பிக்கப்படும் தேதி வரையில் அவரின் நடத்தையைக் கணக்கில் கொண்டு, பிறப்பிக்கப்பட வேண்டும்.

(c) இந்த சிறப்பு அறிவிக்கைகள் கிடைக்கப் பெற்றவுடன் DIG அல்லது COP நேர்விற்கேற்ப, ஆய்வாளர்கள் மற்றும் சேமப்படை ஆய்வாளர்களுக்கு தகுதிகாண் பருவ முடிவு விளம்புகை (அ) செயல்முறை ஆணைகளை பிறப்பிப்பார். ஆயினும், அவர்கள் இந்நடவடிக்கை பிரதிகளை தலைமை அலுவலகத்தில் பதிவுருக்களில் வைத்திடும் நோக்கத்திற்காக DGPக்கு அளித்திடுவார்.

(6) முதல் அறிக்கையைத் தவிர மற்ற ஒவ்வொரு அறிக்கையிலும் சம்பந்தப்பட்ட அலுவலர் அவருடைய அலுவலில் தகுதிகாண் முடிக்கப்படுவதற்கு தகுதியா என்பதைப்பற்றி உறுதியாகக் குறிப்பிட வேண்டும்.

(7) நேரடியாகச் சேர்க்கப்பட்ட சேமப்படை சார்பு ஆய்வாளர்களைப் பொறுத்தவரை தகுதி காண் பருவத்தினர் தனது சார்நிலைப் பணியாளர்களையும் மற்றவர்களையும் நடத்தும் முறையைப் பற்றிய விஷயத்தையும், அத்தகைய அலுவலர் எவரேனும் தன்னடக்கத்தில் குறைவுள்ளவராகவும் பொது மக்களை முரட்டுத்தனமாய் நடத்துபவராகவும் இருந்தால் அந்த காரணத்தினாலேயே அவர் காவல் படைக்குத் தகுதியற்றவரென்று அறிக்கை செய்துவிட வேண்டும். இப்பொருளின் மேல் RSI களுக்கென்று வெளியிடப்பட்ட தனி அறிவுரையின் நகல் ஒன்றை மேற்கண்ட RSI ஒவ்வொருவருக்கும் அவருடைய முதல் நியமனம் போது வழங்க வேண்டும்.



(8) இவ்வாணையின் (1)வது கூறில் (a) முதல் (d) வரை உள்ள இனங்களில் குறிப்பிட்ட அரையாண்டு அறிக்கைகளை காவல் துறை துணைத்தலைவர் அல்லது ஆணையர் ஒவ்வொரு அலுவலருடைய அறிக்கையின் மேல் தனது சொந்தக் குறிப்புகளை எழுதிவைத்து, ஆகஸ்ட் 1-ம் தேதிக்குள்ளும் ஜனவரி 1-ம் தேதிக்குள்ளும் சேரும்படி காவல் துறை துணைத் தலைவருக்கு அனுப்பவேண்டும். காவல் துறை இயக்குநர் இவ்வறிக்கைகளைப் படித்துப் பார்த்த பின்பு, சம்பந்தப்பட்ட சார்நிலைப் பணியாளரின் பணியாளர் மந்தணக் கோப்பில் பதிவு செய்து கொள்வதற்காகவும், மாவட்ட அதிகாரிகளுடைய அறிக்கைகளின் மேல் அவசியமாயிருக்கக்கூடிய உத்தரவுகள் எவற்றையேனும் வெளியிடுவதற்காகவும், சம்பந்தப்பட்ட காவல் துறை துணைத் தலைவருக்கு அல்லது ஆணையருக்கு திருப்பி அனுப்பிவிட வேண்டும்.

(9) தமிழ்நாடு சிறப்பு காவல் படை தளவாய் ஆயுதப்படை காவல் துறை துணைத்தலைவருக்கு ஜூலை 15ம் தேதிக்குள்ளும் ஜனவரி 15ம் தேதிக்குள்ளும் ஜனவரி 1 முதல் ஜூன் 30 வரை மற்றும் ஜூலை 1 முதல் டிசம்பர் 31 வரையிலான காலத்திற்கு சேரும்படி தகுதி காண் பருவகாலத்தை நிறைவு செய்யாத பதிலி ஆய்வாளர் & பதிலி உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் பதவிக்கு உயர்த்தப்படுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சார்பு ஆய்வாளர் ஆகிய இவர்களைப் பற்றி அரையாண்டு இரகசிய அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும். காவல் துறை துணைத் தலைவர் இவ்வறிக்கைகளைப் படித்துப் பார்த்துவிட்டு சம்பந்தப்பட்ட அலுவலரின் பணியாளர் மந்தணக் கோப்பில் பதிவு செய்து கொள்வதற்காக மேற்கண்ட தளவாய்க்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும்.

## PSO 127 - காவல் ஆய்வாளர்கள் பற்றிய ஆண்டு அறிக்கை.– Annual report on Inspectors.-

(1) காவல் கண்காணிப்பாளர்கள் சம்பந்தப்பட்ட காவல் துறை துணைத் தலைவருக்கு அல்லது ஆணையருக்கு ஆண்டுதோறும் ஜனவரி 1ம் தேதிக்குள் சேரும்படி, ஆணை எண்.126ன் கீழ் அரையாண்டு அறிக்கை குறிப்பிடப் பெறாத ஒவ்வொரு ஆய்வாளரைப் பற்றியும் ஒரு இரகசிய அறிக்கையைப் படிவம் எண் 11 ல் அனுப்ப வேண்டும். இந்த ஆண்டறிக்கை ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரையிலான காலத்திற்கு உரியதாகும.

(2) காவல் துறை துணைத் தலைவர் அல்லது ஆணையர் தான் அவசியமெனக் கருதும் குறிப்புகளுடன் மேற்கண்ட அறிக்கையை காவல் துறைத் தலைவருக்கு அனுப்பவேண்டும். காவல் துறைத் தலைவர் பார்வையிட்டு எவையேனும் குறிப்புகளையோ உத்தரவுகளையோ வெளியிட்ட பிறகு, சம்பந்தப்பட்ட சார்நிலைப் பணியாளரின் பணியாளர் மந்தணக் கோப்பில் பதிவு செய்து கொள்வதற்காக, காவல் துறை துணைத் தலைவர் அல்லது ஆணையர் மேற்கண்ட அறிக்கையைத் திருப்பி அனுப்பிவிட வேண்டும்.

(3) அவைபோன்ற ஆண்டு அறிக்கைகளை, தமிழ்நாடு சிறப்பு காவல் படை, தளவாய், ஆயுதப்படை காவல் துறை துணைத் தலைவருக்கு, ஆணை எண்.126ல் கண்டவர்கள் நீங்கலாக தமிழ்நாடு சிறப்புக் காவல் படை ஆய்வாளர்கள் பற்றி சமர்ப்பிக்க வேண்டும். ஆயுதப்படை காவல் துறை துணைத் தலைவர் இவ்வறிக்கைகளைப் பார்வையிட்டு சம்பந்தப்பட்ட அலுவலரின் பணியாளர் மந்தணக் கோப்பில் பதிவு செய்து கொள்வதற்காக, தளவாய்க்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும்.



Scanned by CamScanner
Scanned with CamScanner

**PSO 128 - சார்பு ஆய்வாளர்கள் மற்றும் சேமப்படை சார்பு ஆய்வாளர்கள் பற்றிய அரையாண்டு அறிக்கைகள்.–**
**Half-yearly reports on Sub-Inspectors and Reserve Sub-Inspectors.-**

(1) காவல் கண்காணிப்பாளர்கள் சம்பந்தப்பட்ட காவல் துறை துணைத் தலைவருக்கு அரையாண்டு தோறும் மே 15-ம் தேதிக்குள்ளும் நவம்பர் 15-ம் தேதிக்குள்ளும் சேரும்படி படிவம் எண் 9-ல் முறையே அக்டோபர் 1 முதல் மார்ச் 31 முடிய மற்றும் ஏப்ரல் 1 முதல் செப்டம்பர் 30 முடிந்த காலத்திற்கு ஒரு இரகசிய அறிக்கையைத் தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்யாத அனைத்து சார்பு ஆய்வாளர்கள், சேமப்படை சார்பு ஆய்வாளர்கள் ஆகிய இவர்களைப் பற்றி சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அறிக்கைகளைத் தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்யாத சார்பு ஆய்வாளர்களாக மற்றும் சேமப்படை ஆய்வாளர்களாக பதில் பார்க்கும் தலைமைக் காவலர்கள் ஆகிய இவர்கள் அனைவரைப் பற்றியும் அனுப்பவேண்டும். முதல் அறிக்கைக்குப் பிற்பட்ட ஒவ்வொரு அறிக்கையிலும், சம்பந்தப்பட்ட அலுவலர் தகுதிகாண் பருவம் முடிக்கப்படுவதற்குத் தகுதியா இல்லையா என்பதைப்பற்றி காவல் கண்காணிப்பாளர் உறுதியாகச் சொல்லவேண்டும்.

(2) அத்தகைய அறிக்கைகள் மேற்கண்ட அலுவலர்களுக்கு அடுத்த மேல் நிலை அலுவலரின் எப்பொழுதாகிலும் மாறுதல் ஏற்படும்போதும், அரையாண்டு அறிக்கையின் தவணைத் தேதிக்கு முன்பு மேற்கண்ட அலுவலர் மாவட்டத்துக்கு வெளியே மாற்றலாகியோ, விடுப்பில் புறப்பட்டோ, தனது நிலையான அலுவலுக்குத் திருப்பப்பட்டோ செல்லும்போதும்கூட, அனுப்பப்பட வேண்டும்.

(3) மேலே குறிப்பிட்ட அரையாண்டு அறிக்கைகளுக்குக் கூடுதலாக ஒரு அலுவலர் அவருக்குக் குறிப்பிடப்பட்ட தகுதிகாண் பருவகாலத்தை முடித்துவிட்ட பின்பு அவர் தகுதிகாண் பருவம் முடிக்கப் பெறுவதற்கு தகுதியா என்பதைப் பற்றி தனிப்பட்ட அறிக்கை ஒன்று திட்டமான ஓர் பரிந்துரையுடன் அனுப்பப்படவேண்டும்.

**PSO 129 - பதவிப் பொறுப்பு தலைமைக் காவலர்கள் பற்றிய அரையாண்டு அறிக்கைகள்.–**
**Half-yearly reports on officiating Head Constables.-**

(1) ஆய்வாளர்கள் கண்காணிப்பாளருக்கு அரையாண்டு தோறும் ஜூலை 15ம் தேதிக்குள்ளும், ஜனவரி 15-ம் தேதிக்குள்ளும் சேரும்படி படிவம் எண் 9-ல் ஒரு இரகசிய அறிக்கையை முறையே ஜனவரி 1 முதல் ஜுன் 30 முடிய மற்றும் ஜுலை 1 முதல் டிசம்பர் 31 முடிந்த காலத்திற்கு தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்யாத பதிலித் தலைமை காவலர்களைப் பற்றி சமர்ப்பிக்க வேண்டும். காவல் உட்கோட்டங்களில் பணிபுரியும் அலுவலர்கள் விஷயத்தில், சம்பந்தப்பட்ட உட்கோட்ட அலுவலர் மூலம் அறிக்கை அனுப்பப்பட வேண்டும். முதல் அறிக்கைக்குப் பிற்பட்ட ஒவ்வொரு அறிக்கையிலும் சம்பந்தப்பட்ட அலுவலர் தகுதிகாண் பருவம் முடிக்கப்படுவதற்குத் தகுதியா இல்லையா என்பதைப் பற்றி ஆய்வாளர் உறுதியாகச் சொல்லவேண்டும்.

(2) அத்தகைய அறிக்கைகள், மேற்கண்ட அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டிய அடுத்த மேல் நிலை அலுவலரில் எப்பொழுதாகிலும் மாறுதல் ஏற்படும்போதும் அரையாண்டு அறிக்கையின் தவணைத் தேதிக்குப் பின்பு பதிலி தலைமை காவலர் வட்டத்துக்கு வெளியே மாற்றலாகியோ, விடுப்பில் புறப்பட்டோ, தனது நிலையான அலுவலுக்குத் திருப்பப்பட்டோ செல்லும்போதும்கூட, அனுப்பப்படவேண்டும்.

(3) மேலே குறிப்பிட்ட அரையாண்டு அறிக்கைகளுக்குக் கூடுதலாக காவல் கண்காணிப்பாளர், ஒரு பதிலி தலைமைக் காவலர் தனது தகுதிகாண் பருவகாலத்தைப் பூர்த்தி செய்தவுடனே, ஆய்வாளரிடமிருந்து அவர் அலுவலில் தகுதிகாண் பருவம் முடிக்கப்படுவதற்குத் தகுதியா என்பதைப்பற்றி ஒரு தனிப்பட்ட அறிக்கையைக் கேட்டு வாங்கிக் கொள்ளவேண்டும்.

******



# பகுதி - II

## அதிகாரிகளின் அதிகாரங்களும் கடமைகளும் மற்றும் அவர்களுக்கான அறிவுறுத்தல்களும்
## POWERS AND DUTIES OF AND INSTRUCTIONS TO OFFICERS

## A – பொது

## அத்தியாயம் - 13

## ASP கள் & DSP கள் மற்றும் அதற்கு மேற்பட்ட படிநிலை அதிகாரிகளுக்கான அதிகாரங்கள், கடமைகள் & அறிவுரைகள்
## POWERS AND DUTIES OF AND INSTRUCTIONS TO OFFICERS OF AND ABOVE THE RANK OF ASSISTANT SUPERINTENDENTS OF POLICE / DEPUTY SUPERINTENDENTS OF POLICE

**PSO 130 - காவல் துறை இயக்குநர்.–**
**Director-General.-**

(1) காவல் துறை இயக்குநர், ஒரு பரந்த பரப்பில் பரவியுள்ள தொழிலாளர் வேலை நிறுத்தங்கள், தொழிலக இடர்ப்பாடுகள், கலகங்கள், குழப்பங்கள் அல்லது அரசியல் இயக்கங்கள் ஆகிய இவற்றால் ஏற்படும் படை நகர்தல்களை உத்தரவிட்டு நடத்தும் மாநில அதிகாரியாவார். அத்தகைய குழப்பங்களையோ இயக்கங்களையோ எதிர்த்து சமாளிப்பதற்குத் தேவையான காவல் படையின் வியூக அமைப்புகளும் செயல்முறைகளும் அவருடைய பொது நிர்வாகத்தின் கீழும் ஆளுகையின் கீழும் இருக்கும்; எனினும் மாவட்ட ஆட்சியர் தனது மாவட்டத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் சரிவர நிலை நிறுத்தும் பொறுப்புடையவராதலால், காவல் துறை இயக்குநர் ஆயுத காவல் படையையோ அல்லது அதன் பகுதி ஒன்றையோ நகர்த்துவதற்கு முன்பு, போதிய அவகாசம் இருப்பின் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரைக் கலந்தாலோசிக்க வேண்டும். ஆயினும் ஒரு நெருக்கடியில் அப்படி கலந்தாலோசிக்க நேரம் இல்லாதிருப்பின், அவர் பிறப்பிக்கலாகும் உத்தரவுகளையும் அவற்றிற்கான காரணங்களையும் கூடிய விரைவில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்குத் தெரிவிக்க வேண்டும் எனும் நிபந்தனையின்மேல், அவருடைய விருப்புரிமையின்படி செயலாற்றலாம். சட்டம், அமைதி, இவற்றின் பேணுதலையொட்டி, உதாரணமாக ஆயுத காவல் படைக்கு அறிவுரை போன்ற கட்டளைகள் எவற்றையேனும் அவர் பிறப்பித்தால், அவற்றைச் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் தகவலுக்காக அனுப்பவேண்டும்.

(2) "The following officers will conduct the biennial inspection of the units noted against them"

| | Officers | Units |
|---|---|---|
| 1) | Additional Director-General of Police (Law & Order) | All Commissionerates |
| 2) | Additional Director-General of Police TANSIT | Vellore Range |
| 3) | Additional Director-General of Police Social Justice, C.I.D., | Chengai Range |
| 4) | Additional Director-General of Police Civil Supplies, C.I.D. | Madurai Range |
| 5) | Additional Director-General of Police Special Operations | Trichy Range |

Scanned by CamScanner
Scanned with CamScanner

| | |
|---|---|
| 6) Inspector-General of Police (Law and Order) | Coimbatore and Villuppuram Ranges |
| 7) Inspector-General of Police Southern Zone | Dindigul and Tirunelveli Ranges |
| 8) Inspector-General of Police (Coastal Security) | Thanjavur Range |

They will also conduct inspection of the select field units when they conduct the above inspection",

**(G.O. Ms. No. 13/4, Home (Pol. XIL) Dept. dated 21.9.98 ASR 1/122890/98, dated 16th October 1998)**

## PSO 131 - கூடுதல் காவல் துறை தலைவர்.– Additional Inspector-General of Police.-

***1)*** காவல் துறையினை தொழில்நுட்பத்தில் நவீனப்படுத்துவதற்கும், மற்றும் மனித ஆற்றல் திட்டமிடுதலுக்கும் ADGP முதன்மையான பொறுப்பு கொண்டவராவார். காவல்துறை ஆராய்ச்சி, காவல்துறை கணினிப் பிரிவு, புள்ளியியல் பிரிவு, விரல் ரேகை பதிவுக்கூடம் மற்றும் காவல் வானொலிப் பிரிவு இவற்றிற்கும் பொறுப்புடையவராவார். காவல்துறை இயக்குநரின் வழக்கமான செய்கடமைகளுக்கும், உதவி செய்திடவும் வேண்டுறுத்தப்படுவார்.

### 2) காவல் துறை துணைத் தலைவர்

ஒரு சரகப் பொறுப்பிலுள்ள காவல் துறை துணைத் தலைவர், காவல் துறை இயக்குநருக்கும் மாவட்ட அலுவலர்களுக்கும் இடையே உள்ள பொறுப்புத் தொடரில் சரகப் பொறுப்பில் உள்ள காவல் துறை துணைத் தலைவர் ஒரு பகுதியினர் ஆவார். அவர் அடிக்கடி நேரில் ஆய்வு செய்வதன் மூலம், திறமை, ஒழுங்கு முறை, இவற்றை நிலை நிறுத்திப் பேணவும், நடைமுறைப் பழக்கம். இவற்றை ஒரே சீராய் வைத்துக்கொள்ளவும், அவருடைய பல மாவட்டங்களில் உள்ள காவல் பணியாளர்களுக்கு இடையே கூட்டுறவு ஏற்படுத்தவும். காவல் படைக்கும், குற்றவியல் நடுவர்களுக்கும் இடையே நேசப்பான்மையான செயல்முறை ஆகிய இவற்றை நிலை பெறச் செய்யவும் வேண்டும். அவர் காவல் கண்காணிப்பாளர்களின் முறையான செய்கடமைகள் அல்லது சார்நிலைப் பணியாளருடன் அவர்களுக்குரிய சுமுகமான உறவு இவற்றில் எதிலேனும் அவர்களை ஒதுக்கிவிடாமல் கவனமாய் இருப்பதுடன் அவர்களை ஆளுகை செய்யவும், அவர்களுக்கு விளக்கம் கூறவும், ஆலோசனை சொல்லவும் வேண்டும். பெருங்குழப்பம் நிகழும் காலங்களில், நிலைமையைச் சமாளிக்கும் பொறுப்பை அவரே முழுவதும் ஏற்றுக்கொண்டு காவல் கண்காணிப்பாளர்களுக்கு ஆலோசனை கூறுவதுமன்றி, அவசியமானால், அவர்களை ஒதுக்கியும் விடலாம். அவர் ஆயுத காவல் படைகள் இயன்றவரையில் உயர்ந்த திறமைத் தரத்தை அடைந்து அதிலே நிலைத்து நிற்கும்படி, அவற்றின் பயிற்சிக்கும் ஒழுங்கு முறைக்கும் தனிக் கவனத்தைச் செலுத்தவேண்டும். காவல் கண்காணிப்பாளர்கள், அவர்களை பொறுத்தமட்டில் காவல் துறை துணைத் தலைவரை நடத்தி, அவருடைய ஆய்வுகளில் உதவிபுரிந்து, அவர்களுடைய மாவட்டங்களின் தேவைகளை அவருடைய கவனத்துக்குக் கொண்டுவந்து, கடினமான விஷயங்கள் யாவற்றிலும் அவரை இரகசியமாகக் கலந்தாலோசிக்க வேண்டும்.

### 3) காவல் துறை துணைத் தலைவர், ஆயுதக் காவல்

தமிழ்நாடு சிறப்பு காவல் துறை படைப் பிரிவுகள், ஆவடி படைத்துறை மையம் மற்றும் போக்குவரவு பணிக் கூடம் மற்றும் பயிற்சிப் பள்ளிக்கு DIG (AR) முழுப்பொறுப்பு கொண்டவராவார். படைத்துறை மையத்தில் நடத்தப்படும் பல்வேறு பயிற்சி வகுப்புகளுக்கும் மற்றும் பணியில் சேர்ந்தவருக்கான பயிற்சியினையும் அவர் மேற்பார்வையிடுவார். காவல்துறை பணியாளர்களின் நலத்திட்டங்களுக்கும் அவர் பொறுப்புடையவராவார். அவரது கட்டுப்பாட்டிலுள்ள மேற்காண் அலகுகளின் செய்கடமைகளுடன், சரக DIG யின் பிறகடமை மற்றும் பொறுப்புகளும் DIG (AR) க்கும் பொருந்துவனவாகும்.



### 4) DIG – உணவுப் பொருள் CID

DIG - உணவுப் பொருள், CID, சென்னை, தமிழ்நாடு முழுமைக்கும் ஆள்வை கொண்டவராவார். அவர் தமிழ்நாடு அரசினால் மேற்கொள்ளப்படும் ஒழுங்கு முறை நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளையும் செயலுறுத்திடவும் மற்றும் திறம்பட மேற்பார்வை செய்து அத்தியாவசியப் பொருட்கள் போதுமான வகையில் வழங்கப்படுவதையும் மற்றும் அதன் விலைகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும், பொதுமக்களுக்கு சீரான முறையில் உணவுப் பொருட்கள் வழங்கிடுவதற்கு நுகர்பொருள் வாணிபத் துறைக்கு உதவி செய்திடுவார். மாநில எல்லைகளில் அனுமதிச் சீட்டின் பேரில் அத்தியாவசியப் பொருட்கள் கொண்டு செல்லுதலை முறைபடுத்துவதில், கடத்தலுக்கு எதிரான நடவடிக்கைகளில் தனி கவனம் செலுத்திடுவார். மேற்குறிப்பிட்ட கடமைகளுடன் சரக DIG க்கு பொருந்துகிற பிற கடமை மற்றும் பொறுப்புகளும் DIG உணவுப் பொருள் CID க்கும் பொருந்துவனவாகும்.

### 5) DIG – மதுவிலக்கு அமலாக்கம்

மதுவிலக்கு ஆயத்துறை ஆணையரின் கீழ் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் கீழ் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தினை செயலுறுத்திட அவர் பணியாற்றுவார். அவர் மாநிலம் முழுமைக்கும் ஆள்வை கொண்டவராவார். மாவட்டங்களில் அமலாக்கப் பிரிவு ஊழியர்களின் மீதான ஒழுங்கு நடவடிக்கை கட்டுப்பாட்டினைப் பொறுத்து, சரக DIG யின் அதிகாரங்களைக் கொண்டிருப்பார். அவர் காவல் கண்காணிப்பாளர்கள், காவல் ஆணையர்கள் மற்றும் DSP அமலாக்கம் ஆகியோரிடமிருந்து, அமலாக்கப் பணி விவரங்களைச் சேகரித்து, திங்கள் தோறும் மதுவிலக்கு ஆயத்துறை ஆணையருக்கு மறு ஆய்விற்கு அனுப்பிடுவார் மற்றும் பிரதி ஒன்றினை காவல்துறை இயக்குநருக்கு அனுப்பிடுவார். அவர் காவல் நிலையங்களைப் பார்வையிடவும் மற்றும் மதுவிலக்குச் சட்ட செயலாக்கம் தொடர்பான தனது கருத்துகளை பதிவு செய்திடவும் அதிகாரம் கொண்டவராவார்.

### 6) குடிமைப் பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் படை

குடிமைப் பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் படை பொறுப்பிலுள்ள காவல் துறைத் தலைவர், குடிமைப் பாதுகாப்பு இயக்குநர் மற்றும் தமிழ்நாடு ஊர்க்காவல் படை பொது துணை தளவாய் எனப் பதவிப் பெயரிடப்பட்டுள்ளார். அவர் ஊர்க்காவல் படையினரின் ஆள்சேர்ப்பு அமைப்பு, பயிற்சி மற்றும் ஒழுக்கத்திற்கும் பொறுப்புக் கொண்டவராவார். அவர் அனைத்துக் குடிமை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் மற்றும் போக்குவரவு கட்டுப்பாட்டிற்குக் கூடுதலாக பிற தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் பொறுப்புடையவராவார்.

### 7) DIG – CID (நுண்ணறிவு)

(a) சிறப்புப் பிரிவு மற்றும் "Q" பிரிவு தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்கும் மற்றும் அதனைப் பரவவிடுவதற்கும் DIG - CID (நுண்ணறிவு) பொறுப்பு உடையவராவார்.

(b) மிகவும் இரகசிய ஆவணமான சிறப்புப்பிரிவு நடைமுறை நூலில் அவரது பொறுப்புகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

### 8) DIG - CID (குற்றப்பிரிவு)

குற்றங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதையும் மற்றும் அசாதாரணமாக திடீரென்று ஏற்படும் நிகழ்வுகளை கையாள்வதற்கு போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பதை கவனிப்பது D.I.G.யின் பணியாகும். வழக்குகளில் புலனாய்வின் போக்கில் திடமான கூர்ந்தாய்வு செய்திடலும் மற்றும் தனது சார்நிலை அதிகாரி போதுமான பங்கெடுத்துக் கொள்வதை கவனிப்பதும் அவரது பணியாகும். சிக்கலான (அ) முக்கியமான வழக்குகளில் புலனாய்வினை கண்காணித்திடவும் மற்றும் இதன் நோக்கத்திற்காக, அத்தகைய வழக்குகளில் படிவம் 13ல் FIR வரப் பெற்றவுடன், படிவம் 15ல் முன்னேற்ற அறிக்கையும் கோரலாம் மற்றும் அறிக்கைகள் அனுப்ப வேண்டிய கால இடைவேளைகளையும் குறித்துரைக்கலாம்.

Scanned by CamScanner

## PSO 132 - அவருடைய ஆட்சி அதிகாரங்கள்.– His Administrative powers.-

காவல் துறை துணைத் தலைவருக்கு அவருடைய சரகத்துக்குள் பெருமளவில் நிர்வாக மேலாதிக்கம் உண்டு. நியமனங்கள், பணியமர்த்தல்கள், விடுப்பு, பரிசுகள், தண்டனைகள், மேல்முறையீடுகள், ஆகிய இவ்விஷயங்களில் அவருடைய அதிகாரங்கள் காவல் நிலை ஆணைகளின் பொருத்தமான பிரிவுகளிலும், த.நா.காவல் சார்நிலைப் பணியாளர் தொகுதி, தநா.சிறப்புக் காவல் சார்நிலைப் பணியாளர் தொகுதி, ஆகியவற்றின் பணியாளர்களைப் பற்றிய நியமன முறை, பணிவிதிகள், அவர்களுடைய சம்பளம், படிகள், ஓய்வூதியம், ஒழுங்குமுறை, நடத்தை, ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும் பொருட்டு அரசாங்கம் அவ்வப்போது வெளியிட்ட விதிகளிலும் கூறப்பட்டுள்ளன.

## PSO 133 - அவருடைய சுற்றுப் பயணத் திட்டம்.– His Tour Programme.-

ஒவ்வொரு காவல் துறை துணைத் தலைவரும் அவருடைய மாதச் சுற்றுப்பயணத் திட்டத்தின் நகல்களை காவல் துறை இயக்குநருக்கும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கும் அனுப்ப வேண்டும். மேலும், அவர், ஒவ்வோர் இருவார இறுதிக்குப்பின் கூடிய விரைவில் அந்த இரு வாரத்தில் செய்த சுற்றுப் பயணம், ஆய்வுப்பணி, ஆகியவற்றின் விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை ஒன்றை காவல் துறை இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

**STATEMENT SHOWING THE DETAILS OF TOURS DONE BY THE D.I.G.**

| Camp places visited | Date and time of arrival | Date and time of departure | Purpose of visit | Remarks |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |

**Particulars regarding inspection work done.**

1. Number of districts to be inspected.
2. Number of districts so far inspected
3. Date of completion of district inspection
4. Date of despatch of district inspection notes to Chief Office.

## PSO 134 - ஆய்வு சம்பந்தமான அவருடைய கடமைகள்.– Duties regarding inspection.-

(1) ஒரு காவல் துறை துணைத் தலைவர் ஒரு மாவட்டத்தை அல்லது அதன் பகுதியொன்றை பார்வையிடும் போதெல்லாம் அவருடைய ஆய்வு அறிக்கைகளின் நகல்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கும் காவல் துறை இயக்குநருக்கும் அனுப்பப்பட வேண்டும்.

2 (a) மாவட்டத்தில் 1/7 காவல் நிலையங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் சரக D.I.G. யினால் ஆய்வு செய்யப்பட வேண்டும். காவல் நிலையங்களைத் தெரிவு செய்யும் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளரால் ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ள நிலையங்களைத் தவிர்க்க வேண்டும் மற்றும் ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு வட்டத்தில் குறைந்தபட்சம் இரு நிலையங்களையும், அத்துடன் அத்தகைய நிலையங்களின் வட்ட அலுவலகங்களும் ஆய்வு செய்யப்பட வேண்டும். குறைந்தபட்சம் 2 உட்கோட்ட அலுவலகங்கள் ஆய்வு செய்யப்பட வேண்டும் மற்றும் அனைத்து தலைமையகங்கள், ஒவ்வொரு மாவட்டத்தின் கீழ்க்குறிப்பிட்ட பிரிவுகள் ஆண்டுதோறும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.



(i) The Armed Reserve;
(ii) District Police Office;
(iii) Crime Records Bureau;
(iv) District Crime Branch;
(v) City Crime Branch of District Headquarters;
(vi) City Traffic Station of District Headquarters;
(vii) Prohibition Mobile Party;
(viii) Traffic Flying Squad;
(ix) District Special Branch;
(x) Superintendents of Police personal records;
(xi) Mobile Police Squads on Untouchability in the districts;
(xii) Single Digit Finger Print Section;
(xiii) Mobile Forensic Science laboratory;
(xiv) Photographic Section; and
(xv) District Stores,

(G.O. Ms. No. 2087, Home, 15th November 1975.)

(b) ADGP (திட்டமிடல் & ஒருங்கிணைப்பு) சென்னை மற்றும் சரகப் பொறுப்பிலுள்ள DIG மற்றும் அனைத்து இயங்கும் DIG களும் தங்கள் அலுவலகங்களில் ஆண்டு ஆய்வினை மேற்கொள்ள வேண்டும் மற்றும் முக்கிய ஆய்வு அறிக்கைகளின் பிரதிகளை காவல்துறை இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். ஆய்வுக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட வினாப் படிவத்தில் தமிழ் அலுவல் மொழியாக அமல்படுத்துவது குறித்து குறிப்பான கருத்துரைகளையும் தெரிவிக்க வேண்டும். காவல் ஆணையர்களும் தங்கள் அலுவலகத்தின் சில பிரிவுகளில் ஆண்டு ஆய்வு மேற்கொண்டு ஆய்வின் பிரதி ஒன்றை காவல்துறை இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். அவரும் ஆய்வுக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட வினாப் படிவத்தில் தமிழ்மொழித் திட்டம் அமல் பற்றி குறிப்பாக கருத்துரை தெரிவிக்க வேண்டும்.

(c) மாவட்ட காவல் அலுவலகங்கள், உட்கோட்ட அலுவலகங்கள், வட்ட அலுவலகங்கள் மற்றும் காவல் நிலையங்களில் ஆய்வு மேற்கொள்ளும் போது DIG தமிழ்மொழி அலுவல் மொழியாக அமல்படுத்துவது குறித்து ஆய்வுக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட வினாப் படிவத்தில் கருத்துரை தெரிவிக்க வேண்டும்.

(d) தனது கட்டுப்பாட்டில் உள்ள கீழ்க் கண்ட பிரிவுகளில் ADGP ஆண்டு ஆய்வு மேற்கொள்ள வேண்டும் மற்றும் ஆய்வு அறிக்கையின் பிரதிகளை காவல்துறை இயக்குநருக்கு அனுப்பிட வேண்டும்.

(1) காவல்துறை வானொலி அலுவலகம்
(2) புள்ளியியல் பிரிவு
(3) காவல் துறை ஆராய்ச்சி மையம்
(4) தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுக் கழகம்

(3) ஒரு அலுவலர் முதன் முறையாக காவல் கண்காணிப்பாளராகச் செயலாற்றும் மாவட்டம் ஒன்றை அவர் நிலையான வகையில் அமர்ந்தவுடன் காவல் துறை துணைத் தலைவர் கூடிய விரைவில் பார்வையிட வேண்டும்; இளநிலை அலுவலர்களின் பொறுப்பில் உள்ள மாவட்டங்களை ஓராண்டில் இருமுறை அல்லது அதற்கு மேலும் அடிக்கடி பார்வையிடலாம்.

Scanned by CamScanner

(4) ஒரு சரகத்தின் பொறுப்பிலுள்ள காவல் துறை துணைத் தலைவர் ஒருவர் ஒரு மாவட்டத் தலைமையிடத்தை பார்வையிடும்போதெல்லாம், முக்கியமாக தகுதிகாண் பருவத்தில் இன்னும் பணிபுரியும் அலுவலர்களின் முன்னேற்றத்தை மதிப்பிட்டு வேலையைச் சரிபார்க்கும் பொருட்டு, அவர்களை நேரில் காணவேண்டும். அவர் மாவட்ட ஆட்சியரையும் சந்திக்க வேண்டும்.

(5) காவல் துறை துணைத் தலைவர் (நுண்ணறிவு) இயன்றவரை அடிக்கடி மாவட்டப் புலனாய்வு அலுவலகங்களையும், சம்பந்தப்பட்ட காவல் கண்காணிப்பாளர் வைத்துவரும் மாவட்டத் தனிப்பிரிவுப் பதிவுக்கட்டுகளையும் பார்வையிடவேண்டும். D.I.G C.I.D (குற்றம்) இயன்றவரை பல குற்றப்பதிவேடு கூடங்களை ஆய்வு செய்திடல் வேண்டும்.

(6) மாவட்டத்தினை ஆய்வு செய்திடும் D.I.G. ஒருவர், ஒவ்வொரு S.P, J.S.P, A.S.P, A.D.S.P மற்றும் D.S.P மற்றும் ஆய்வின் போதான காலத்தில் பொறுப்பு வகிக்கும் PA To SP ஆகியோரின் செயல் ஆற்றல் பற்றிய இரகசியக் குறிப்பு ஒன்றினை வைத்து வர வேண்டும் மற்றும் இத்தகைய குறிப்புரைகள் மாவட்ட ஆய்வுக் குறிப்புகளுடன் அனுப்புவதற்கு பதிலாக அவை அடுத்த காலமுறை ஆய்வு (அ) சிறப்பு அறிக்கையுடன் சேர்த்து அனுப்பப்படும்.

(7) காவல் துறை துணைத் தலைவர்கள் அவர்களுடைய மாவட்ட தனிப் பிரிவுகளைப் பற்றிய அறிக்கைகளை தனிப் பிரிவு விஷயங்களுக்கு மட்டும் வரையறைப்படுத்திக் கொண்டு, அவர்களுடைய மாவட்ட தனிப் பிரிவு அறிக்கைகளை, மற்றைய நிலையங்கள் வட்டங்கள் முதலியனவற்றின் ஆய்வுக் குறிப்புகளோடும், தொகுத்த மாவட்ட ஆய்வுக் குறிப்புகளோடும், காவல் துறை இயக்குநருக்கு அனுப்பவேண்டும். அவர்கள் மாவட்ட தனிப் பிரிவுகளைப் பற்றிய அறிக்கைகளின் நகல்களை சென்னை, காவல் துறை துணைத் தலைவருக்கும் (நுண்ணறிவு) அனுப்பவேண்டும்; அவர் அவைகளைப் பரிசீலனை செய்து, தான் அவசியமெனக் கருதும்வண்ணம் செயலாற்றி, அவ்வறிக்கைகளில் தனிப்பட்ட விசேஷம் அல்லது முக்கியத்துவம் எதையேனும் காவல் துறை இயக்குநரின் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டும். மாவட்ட தனிப் பிரிவுகளைப் பற்றிய இவ்வறிக்கைகள் இறுதியில் (நுண்ணறிவு) தனிப்பிரிவு அலுவலகத்தில் கோர்த்துவைக்கப்படும்.

(8) எனினும், மாவட்ட தனிப் பிரிவுகளைப் பற்றிய காவல் துறை துணைத் தலைவரின் (நுண்ணறிவு) ஆய்வு அறிக்கைகள் அலுவலகத்துக்கு (அல்லாமல்) காவல் துறை இயக்குநருக்கு நேரடியாக அனுப்பப்பட வேண்டும். குற்றப் பதிவேடுக் கூடங்களின் ஆய்வுக் குறிப்புகள் D.I.G C.I.D (குற்றம்) நேரடியாக தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிடுவார்.

(9) தொடர்பான DIG தனது ஆய்வுக் குறிப்புகளில் முதன்மை குறிப்புகளுக்கு இறுதியில் ஒரு பத்தியில் கீழ்க்கண்டவை பற்றிய தகவல் அளித்திடுவார்:-

(a) கடைசியாக மாவட்டத்தின் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலம் (மாதம் & வருடம்) மற்றும் எந்த அதிகாரி (அதிகாரியின் பெயர்)

(b) நிகழ் ஆய்வு தொடங்கிய தேதி

(c) ஆய்வு முடிவுற்ற தேதி

(d) ஆய்வு குறிப்புகளின் தேதி

(e) நிகழ் ஆய்வின் போது பொறுப்பு வகித்த SP மற்றும் DSP யின் பெயர்

(f) மேற்காண் (e) யில் குறிப்பிடப்பெற்ற அதிகாரிகளின் மந்தண அறிக்கை DGP க்கு அனுப்பப்பட்டு விட்டதா ? அப்படியெனில் எப்போது ?

## PSO 135 - காவல் கண்காணிப்பாளர்.– Superintendent of Police.-

(1) காவல் கண்காணிப்பாளர் மாவட்ட காவல் படையின் தலைவராவார். அவர் அதன் அகப்பொருளாதாரம், ஆளுகை, இவை சம்பந்தமான அனைத்து விஷயங்களுக்கும், அதன் ஒழுங்கு முறையைப் பேணுதலுக்கும், அதன் குற்றத் தடுப்புக் கடமைகள், நிர்வாகக் கடமைகள் இவை காலந்தவறாமலும் ஒழுங்காகவும் நிறைவேற்றப்படுதலுக்கும் பொறுப்புள்ளவர் ஆவார்.



### (2) காவல் கண்காணிப்பாளர்கள் அலுவலக நேரத்தை கடைப்பிடித்தல்

தலைமையகத்தில் இருக்கும் போது SPகள் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் ஆஜராக வேண்டும். சிறப்புப் பிரிவு மற்றும் இரகசியப் பணிகள் தொடர்பான வேலையினை இரகசியப் பதிவுருக்கள் வைக்கப்பட்டுள்ள தங்கள் இருப்பிடத்தில் மேற்கொள்ளலாம். மாவட்ட காவல் அலுவலகத்தில் வெளிப்படுத்த முடியாத இரகசியங்கள் தொடர்பாக பார்வையாளர்களை தமது இருப்பிடத்தில் சந்திக்கலாம்.

## PSO 136 - மாவட்ட ஆட்சியருடன் அவரது தொடர்பு.– His relations with Collector.-

(1) மாவட்ட ஆட்சியர், மாவட்டத் தலைமை நிர்வாக அதிகாரியெனும் முறையில், மாவட்டத்தின் குற்றவியல் நிர்வாகத்துக்கும், சட்டம் ஒழுங்கு இவற்றைப் பேணுவதற்கும், முதன்மையான பொறுப்புள்ளவர் ஆவார். ஆகையால், அவருக்கு மாவட்ட அமைதி, குற்றநிலை இவை சம்பந்தமான அனைத்து முக்கிய விஷயங்களையும் நேர்முக சந்திப்பு, தனி அறிக்கைகள், ஆகிய இரண்டின் மூலம் முற்றிலும் அறிவிக்கவேண்டியது காவல் கண்காணிப்பாளரின் கடமையாகும். குற்றத்தைக் கட்டுப்படுத்துதல், சட்டம், ஒழுங்கு இவற்றைப் பேணுதல் ஆகிய இவை பொருட்டு மாவட்ட காவல் படையானது மாவட்ட ஆட்சியரின் ஆளுகைக்கும் நடத்துதலுக்கும் கீழ் இருக்கும். மேற்படி வகையான முக்கிய விஷயங்களில் காவல் கண்காணிப்பாளர் மாவட்ட ஆட்சியரின் உத்தரவுகளைப் பெறவேண்டும். காவல் கண்காணிப்பாளர்கள் சார்நிலை குற்றவியல் நடுவர்களின் தவறுதல்கள் தாமதங்களைக் குறித்து தலைமைக் குற்றவியல் நடுவர்களுடன் நேரடிக் கடிதப்போக்குவரத்து வைத்துக் கொள்ளலாகாதென்று கண்டிப்பாய்த் தடை செய்யப்பட்டிருக்கின்றனர். அத்தகைய நிகழ்ச்சிகளைச் சென்னை காவல் துறை இயக்குநரின் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டும்; அவர் தனது முறையில் அவைகளை உயர்நீதி மன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வருவார்.

(2) அரசாங்க ரயில் காவல் கண்காணிப்பாளர் தனது மாவட்டத்துக்குள் தனது அதிகார வரம்புப் பகுதிகள் பொறுத்தவரை, அதே கடமைகளுக்கு உட்பட்டிருப்பார்.

## PSO 137 - மாவட்ட ஆட்சியர் தலையிடுதல்.– Intervention of Collector.-

(1) மாவட்ட ஆட்சியர், எந்த சிறப்புக் காரணத்தை முன்னிட்டாவது உதவி ஆய்வாளர், பதவி அல்லது அதற்குக் குறைந்த பதவியில் உள்ள ஒரு காவல் அலுவலர் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து அல்லது யாதொரு தனிப்பணியிலிருந்து மாற்றப்படவேண்டுமென்று கருதினால், அவர் அத்தகைய அலுவலரை மாற்றும்படி காவல் கண்காணிப்பாளரைக் கேட்கலாம்.

(2) ஒரு உதவி ஆய்வாளர் பதவிக்கு மேற்பட்ட பதவியில் உள்ள ஓர் காவல் அலுவலர் விஷயத்தில், மாவட்ட ஆட்சியர் அந்த அலுவலரின் மாற்றுதலுக்காக காவல் துறை இயக்குநரிடம் முறையிட வேண்டும்.

## PSO 138 - சார்நிலைப் பணியாளர்களின் பண்பைப்பற்றி தெரிந்து கொள்ளுதல்.– To be acquainted with the character of his subordinates.-

காவல் கண்காணிப்பாளரும் காவல் உட்கோட்ட அலுவலரும் தங்களுடைய சார்நிலைப் பணியாளர்களின் பண்பு, தகுதிகளைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டியது அவர்களுடைய கடமையாகும். இதன்பொருட்டு, அவர்கள், அரசிதழ்ப் பதிவு பெறா அலுவலர்களின் பணியாளர் மந்தண கோப்புகளைப் பராமரிப்பதற்காகக் குறிப்பிடப்பட்ட பதிவுகளுக்குக் கூடுதலாக அடியிற்கண்ட பதிவுகளையும் வைத்து வரவேண்டும்:-

(1) துப்பறிபவர்களின் பட்டியல் ஒன்று (படிவம் எண்.9);

(2) உதவி ஆய்வாளர்களின் முது நிலைப் பட்டியல் ஒன்று;

Scanned by CamScanner

(3) தலைமைக் காவலர்களின் பதவி உயர்வுக்கான தகுதியைப் பற்றிய குறிப்புகளோடு அவர்களுடைய முதுநிலைப் பட்டியல்;

(4) பதவி உயர்வுக்குத் தகுதியாக உள்ள காவலர்களின் பட்டியல்;

(a) ஆயுத காவற் படையில்;

(b) தாலுகா காவற் படையில்;

(5) நிலைய எழுத்தர் பதவிகளுக்குத் தகுதியாக உள்ள நிலை I காவலர்களின் பட்டியல்.

## PSO 139 - உதவியாளர்கள் சம்பந்தமான கடமைகள்.– Duties towards his Assistants.-

தனது உதவியாளர்களும், துணையாளர்களும் திறம்படப் பணியாற்றும்படி பார்த்துக்கொள்வது காவல் கண்காணிப்பாளரின் கடமையாகும்; காவல் அலுவலர்களாகப் பயன்படுவதைக் குறைக்கத் தக்க பண்பு அல்லது மனோபாவக் குறைபாடுகள் அல்லது ஆர்வக்குறைவு எவையேனும் அவர்களிடம் இருப்பின் அவற்றை காவல் துறை இயக்குநரின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டியது அவரது கடமையாகும். காவல் கண்காணிப்பாளர், தனக்கு நம்பிக்கை பெறாத உதவியாளர் அல்லது துணையாளரைத் தனக்கு அறிக்கைகள் எவற்றையேனும் அனுப்பும்படி கட்டளையிடலாம் அல்லது தான் தகுதியெனக் கருதும் யாதொரு அலுவலை மட்டும் செய்யும்படி வரையறை செய்யலாம்; அது விஷயத்தை அவர் காவல் துறை இயக்குநருக்கு அறிவிக்க வேண்டும்.

## PSO 140 - சுற்றுப்பயணம் மேற்கொள்ளுதல்.– Touring.-

காவல் கண்காணிப்பாளர் தனது மாவட்டப் பகுதிகள் எல்லாவற்றிலும் நிலையான சுற்றுப்பயணம் செய்ய வேண்டும்; இடையூறுகள் உள்ள இடங்களில் நீண்டகாலம் தங்கவேண்டும். அவர் காவல் நிலையங்களை மட்டும் ஆய்வு செய்தல் போதாது. ஆனால் அவர் கிராமங்களைப் பார்வையிட்டு கிராமத் தலைவர்களையும் முக்கியமான கிராமவாசிகளையும் பழக்கப்படுத்திக் கொண்டு அவர்களுடைய நம்பிக்கையையும் ஒற்றுமையையும் பெறுவதற்கு முயன்று, அதே சமயத்தில் குற்றநிலையைக் கண்டறிந்துகொண்டு, தனது சார்நிலைப் பணியாளர்களின் பணியினைப் பற்றி விசாரணையும் செய்துகொள்ளவேண்டும்.

## PSO 141 - நேர்முக விசாரணை.– Personal Investigation.-

(1) காவல் கண்காணிப்பாளர், கீழ்க்கண்ட குற்றங்களின் ஆய்வைக் கண்காணிப்பதுடன் சாத்தியமான போதெல்லாம் நேரில் விசாரணை செய்யவேண்டும்:-

(i) கூட்டுக் கொள்ளை
(ii) நெடுஞ்சாலை வழிப்பறிக் கொள்ளை
(iii) கொலை
(iv) மரணம் விளைவிக்கும் குற்றம்,
(v) தனிவகைப்பட்ட கொடிய கன்னக்களவும் திருட்டும்,
(vi) தனிவகைப்பட்ட கொடிய களவுகள்,
(vii) யாதொரு தனிப்பட்ட பெருங்குழப்பம் அல்லது கலகம்,
(viii) சதி வழக்குகள்,
(ix) இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 400, 401ன் கீழான குற்றங்கள்,
(x) ஒரு தனிப்பட்ட கொடிய தன்மையுள்ள யாதொரு வழக்கு,
(xi) போலிப் பணத் தாள்கள்
(xii) வன் கொடுமை தடுப்புச் சட்டப் பிரிவுகள் 3 & 4ன் கீழான குற்றங்கள்



(2) ஒரு காவல் அலுவலர் செய்ததாகச் சொல்லப்படும் அச்சுறுத்திப் பறித்தல் அல்லது லஞ்சம் வாங்குதல் எனும் வழக்குகளில் காவல் கண்காணிப்பாளர் நேர்முக விசாரணை நடத்த வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றி அவரது உளத்தேர்வினைப் பயன்படுத்த வேண்டும்; எனினும், உண்மையாகவே இத்தகைய கடுமையான வழக்குகள் யாவற்றையும் காவல் கண்காணிப்பாளரோ அல்லது அவரது உதவியாளரோ அல்லது துணையாளரோ விசாரிக்கவேண்டும்.

(3) மேற்சொன்ன எந்த வழக்கிலேனும் முதல் வழக்கு நாட்குறிப்பு வரப்பெற்றவுடனேயோ அல்லது அவருடைய நேர் விசாரணைக்குப் பின்னரோ, இதில் எது முந்திய சமயமோ அதில் இவர் படிவம் எண் 11-ல் ஒரு அறிக்கையை காவல் துறை துணைத் தலைவருக்கும், அதன் நகல் ஒன்றை மாவட்ட ஆட்சியருக்கும் அனுப்ப வேண்டும்.

குறிப்பு.- (1) இவ்வாணையின்படி செய்தலில் சிறிது விதிவிலக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக குற்றம் செய்தவர்கள் தெரிந்தவர்களாயிருந்து சாட்சியமானது, உடனே கிடைக்கக்கூடியதாயிருந்தால் அல்லது மேற்கண்ட வழக்கானது நுட்ப ரீதியான காரணங்களால் மட்டும் மேற்கண்ட ஆணையின் வகைபாட்டில் வந்தால், அல்லது வழிப்பறிக் கொள்ளை, கூட்டுக்கொள்ளை இவை சம்பந்தமாக மேற்கண்ட வழக்கானது தனித்ததாயும் அற்பவகைப்பட்டதாயுமிருந்து, அது நேர்விசாரணை செய்வது பயனின்றி போகக் கூடியதாயிருந்தால், அல்லது கொலையைத் தொடர்ந்து தற்கொலை நேர்ந்த வழக்குகளாயிருந்தால் பெரும்பாலும் நேர்விசாரணையானது அனுகூலமாயிருப்பதற்குப் பதிலாக ஒரு அலுவலருடைய நேரத்தை வீணாக்கிவிடும்.

குறிப்பு.- (2) இரயில் பயணிகளுக்கு நேரும் கொள்ளைகளை நெடுஞ்சாலை வழிப்பறிக் கொள்ளைகளாகக் கருதவேண்டும்.

## PSO 142 - காவல் உட்கோட்ட அலுவலர்கள்–நேர் விசாரணை.- Sub-Divisional Officers–Personal Investigation.-

(1) காவல் கோட்ட அலுவலர்கள் கீழ்க்கண்ட வகுப்புகளைச் சேர்ந்த வழக்குகளில் குற்றம் நிகழ்ந்த இடத்தைப் பார்வையிட்டு, புலனாய்வைக் கண்காணித்து, விசாரணை செய்யவேண்டும்:-

(i) கூட்டுக் கொள்ளை,
(ii) நெடுஞ்சாலை வழிப்பறிக் கொள்ளை,
(iii) கொலை,
(iv) மரணம் விளைவிக்கும் குற்றம்
(v) 1973ஆம் ஆண்டு குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் பிரிவு 174 உட்பிரிவு (3)ல் குறிப்பிடப் பெற்ற இறப்புகள்
(vi) ரூ.200க்கு மேற்பட்ட கொள்ளையும், முக்கிய அம்சங்களைக் காட்டும் யாதொரு வழக்கும்,
(vii) கன்னக்களவும், தனிவகைப்பட்ட பெருந் திருட்டும்,
(viii) தனிவகைப்பட்ட களவுகள்,
(ix) தனிவகைப்பட்ட யாதொரு கொடிய குழப்பம், கலகம், அல்லது அமளி,
(x) யாதொரு முக்கிய அல்லது தனிப்பட்ட பெரும் வழக்குகள்,
(xi) போலிப் பணத்தாள்கள்,
(xii) ஆதி திராவிடர்களுக்கு கொடுங்காயம் விளைவிக்கும் வன்முறை,
(xiii) ஆதி திராவிடர்கள் பாதிப்புக்குள்ளாகும் வன்புணர்ச்சி
(xiv) ஆதி திராவிடர்கள் சொத்தின் மீதான கடும் அழிம்பு அல்லது தீ வைப்பு,
(xv) 1955 ஆம் ஆண்டு வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவுகள் 3 & 4ன் கீழான குற்றங்கள்

Scanned by CamScanner

அவர்கள் தங்குமிடங்களுக்கு அருகில் நிகழக்கூடிய குறைந்த கடுமையுள்ள பெரும் வழக்குகளை அவர்கள் விசாரணை செய்யவேண்டும்.

(2) மேற்சொன்ன எந்த வழக்கிலேனும் முதல் வழக்கு நாட்குறிப்பு கிடைக்கப் பெற்றவுடன் அல்லது அவர்களுடைய நேர் விசாரணைக்குப் பின்னரோ, இதில் எது முந்திய சமயமோ அதில், அவர்கள் படிவம் எண்.13-ல் ஒரு அறிக்கையை காவல் கண்காணிப்பாளர் மூலம் காவல் துறை துணைத் தலைவருக்கும் அதன் நகல் ஒன்றை மாவட்ட ஆட்சியருக்கும் அனுப்பவேண்டும்.

குறிப்பு.- (1) இவ்வாணையின்படி செய்தலில் சிறிது விதிவிலக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, குற்றம் செய்தவர்கள் தெரிந்தவர்களாயிருந்து சாட்சியமானது, உடனே கிடைக்கக்கூடியதாயிருந்தால், அல்லது மேற்கண்ட வழக்கானது நுட்ப ரீதியான காரணங்களால் மட்டும் மேற்கண்ட ஆணையின் வகைப்பாட்டில் வந்தால், அல்லது வழிப்பறிக் கொள்ளை, கூட்டுக்கொள்ளை, இவை சம்பந்தமாக மேற்கண்ட வழக்கானது தனித்ததாயும் அற்பவகைப்பட்டதாயுமிருந்து, அது நேர் விசாரணை செய்வது பயனின்றி போகக் கூடியதாயிருந்தால், அல்லது கொலையைத் தொடர்ந்து தற்கொலை நேர்ந்த வழக்குகளாயிருந்தால் பெரும்பாலும் நேர் விசாரணையானது அனுகூலமாயிருப்பதற்குப் பதிலாக ஒரு அலுவலருடைய நேரத்தை வீணாக்கிவிடும்.

குறிப்பு.- (2) கொடிய வகைப்பட்ட சந்தேக மரணங்கள் எனும் வழக்குகள் யாவற்றையும் உயர்நிலை அதிகாரிகள் (உட்கோட்ட அலுவலர் அல்லது காவல் கண்காணிப்பாளர்) கூடியவரை ஆரம்ப நிலையிலேயே, காவல் நிலை ஆணை எண்கள் 141 & 142-ல் கண்டபடி குற்றம் நிகழ்ந்த இடத்தை நேரில் பார்வையிட்டு, கொடுங்குற்ற அறிக்கைகளை அனுப்பி வைத்து விசாரணை செய்யவேண்டும்.

## PSO 143 - வார அறிக்கைகள்.– Weekly reports .-

(1) வார இறுதியில் காவல் கண்காணிப்பாளர்களும், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களும், உட்கோட்ட அலுவலர்களும் வார அறிக்கையினை சமர்ப்பித்திடுவர். காவல் கண்காணிப்பாளர்கள் மாவட்ட ஆட்சியர் மூலமாகவும், ADSP & SDO-க்கள் SP மூலமாகவும் அறிக்கையினை சமர்ப்பித்திடுவர். கண்காணிப்பாளர்கள் முறையான ஒரு தனிப் பிரிவு வார அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டும். மற்றும் உட்கோட்ட அலுவலர்கள் அவசியமான போது சமர்ப்பிப்பர். வார அறிக்கையானது, படிவங்கள் எண்கள் 11, 12-ன்படி இரு பகுதிகள் கொண்டதாக இருக்கும். இரண்டாம் பகுதியானது முதல் அறிக்கை படிவம் எண்.11-ன் பேரில் காவல்துறை துணைத் தலைவர் முன்னேற்ற அறிக்கையைக் கேட்கும் விஷயங்களில் மட்டும் அனுப்பப்படவேண்டும்.

(2) காவல் கண்காணிப்பாளர்களின் வார அறிக்கைப் பகுதி-I ஒரு இரகசியப் பத்திரமாகவும், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் உட்கோட்ட அலுவலர்களின் அறிக்கை ஒரு மந்தணப் பத்திரமாகவும் இருக்கும். காவல் கண்காணிப்பாளரின் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளரின் அறிக்கையானது காவல்துறை இயக்குநருக்கு அனுப்பப்படுகிறது. அதில், அலுவலர் செய்த வேலையும், காவல் துறையினர் அக்கறை கொள்ளக் கூடிய எவையேனும் விஷயங்களும், மாவட்டம் சம்பந்தமாக ஆட்சியருக்கு ஏதேனும் பயன்படத்தக்க செய்தியும், கண்டிருக்கவேண்டும். ஒரு அலுவலர் சுற்றுப்பயணத்தில் இருக்கையில், அவர் தங்கின இடங்கள் பார்வையிட்ட கிராமங்கள். பயணம் செய்த தூரம், பயணங்கள் செய்யப்பட்ட முறை ஆகிய இவைகளைக் குறிப்பிடவேண்டும். காவல்துறை இயக்குநரின் குறிப்புகள் அடங்கியுள்ள 1-ம் பகுதியானது காவல்துறை துணைத் தலைவர் மூலம் திருப்பி அனுப்பப்பட்டு, சாதாரண அலுவலக வழியில் பதில்களுடன் மீண்டும் துறைத் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவை சம்பந்தப்பட்ட அலுவலரின் அலுவலகத்தில் இரகசியமாகக் கோர்த்துவைக்கப்பட்டு கீழ்க்கண்ட குறிப்பில் உள்ள மாற்றத்துக்குட்பட்டு, பத்து ஆண்டுகளுக்கு வைத்துக்கொள்ளப்படும்.



குறிப்பு.- காவல் கண்காணிப்பாளர்கள் தங்களுடைய வார அறிக்கைக்குச் சம்பந்தமான கடிதத் தொடர்பை அனைத்து நிலைகளிலும் இரகசியமாகக் கையாண்டு, அதைத் தங்களுடைய அலுவலகத்தில் அல்லாமல் தாங்களே நேரில் பார்த்துவரவேண்டும். காவல் கண்காணிப்பாளர்கள் வைத்துக்கொள்ளும் வார அறிக்கைகளின் அலுவலக நகலையும், காவல்துறை இயக்குநருக்கு அனுப்பப்படும் சுத்த நகல்களையும், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தங்களுடைய கைவசம் வைத்துக் கொள்ள வேண்டும்.

(3) ஒரு காவல்துறை துணைத் தலைவர் ஒரு மாவட்டப் பொறுப்பில் இருக்கும்போது ஒரு வார அறிக்கையை அனுப்ப வேண்டியதில்லை. ஆனால் காவல் கண்காணிப்பாளரின் அலுவலகத்தில் உள்ள வார அறிக்கைக் கோப்பில், ஒரு குறிப்பிட்ட காலத்தில் காவல்துறை துணைத் தலைவர் பொறுப்பில் இருந்தார் எனும் குறிப்பு ஒன்று கண்டிருத்தல் வேண்டும்.

## PSO 144 - வார அறிக்கைகள்–பகுதி II – காவல் கண்காணிப்பாளர்கள்.– Weekly Reports, Part II – Superintendents.-

வார அறிக்கையின் II-ம் பகுதியில் (படிவம் எண் 15-ல்) குற்ற அறிக்கைகள் அடங்கியிருக்க வேண்டும். காவல் கண்காணிப்பாளர் கீழ்க்கண்ட குற்றங்களை அறிக்கை செய்யவேண்டும்:-

(a) கூட்டுக்கொள்ளை,

(b) நெடுஞ்சாலை வழிப்பறிக் கொள்ளை,

(c) கொலை,

(d) மரணம் விளைவிக்கும் குற்றம்,

(e) கன்னக் களவும் தனி வகைப்பட்ட பெருந்திருட்டும்,

(f) தனி வகைப்பட்ட பெருங் களவுகள்,

(g) தனி வகைப்பட்ட யாதொரு கொடிய குழப்பம், கலகம் அல்லது அமளி,

(h) போலிப் பணத்தாள்கள்

## PSO 145 - வார அறிக்கைகள்–பகுதி II–காவல் உட்கோட்ட அலுவலர்கள்.– Weekly Reports, Part - II – Sub-divisional Officers.-

காவல் உட்கோட்ட அலுவலர்கள் கீழ்க்கண்ட வழக்குகளை அறிக்கை செய்யவேண்டும்:-

(a) கூட்டுக்கொள்ளை,

(b) நெடுஞ்சாலை வழிப்பறிக் கொள்ளை,

(c) ரூ.150-க்கு மேற்பட்ட கொள்ளை,

(d) கொலை,

(e) மரணம் விளைவிக்கும் குற்றம்,

(f) 1973 ஆம் ஆண்டு கு.வி.மு.ச. பிரிவு 174 உட்பிரிவு (3)ல் குறிப்பிடப்பெற்ற மரணங்கள் மற்றும் சந்தேகத்திற்குரிய மணக்கொடை மரணம்

(g) கன்னக் களவும், தனி வகைப்பட்ட பெருந் திருட்டும்,

(h) தனி வகைப்பட்ட பெருங் களவுகள்,

(i) தனி வகைப்பட்ட யாதொரு கொடிய குழப்பம், கலகம் அல்லது அமளி,

(j) போலிப் பணத்தாள்கள்,

(k) ஒன்றுக்கு மேற்பட்ட மரணம் நிகழும் சாலை விபத்துகள்

Scanned by CamScanner
Scanned with CamScanner

## PSO 146 - வார அறிக்கைகளைப்பற்றிப் பொது விளக்கவுரை.– General instructions regarding weekly reports.-

(1) காவல்துறை துணைத் தலைவர் உத்தரவிடும் வழக்குகள் யாவற்றிலும் முன்னேற்ற அறிக்கைகளை அனுப்பி, ஒவ்வொரு வழக்கிலும் இறுதி முடிவைக் காட்டும் இறுதி அறிக்கை ஒன்றைத் தவறாமல் அனுப்பவேண்டும்.

(2) சாதாரணமாக காவல்துறை துணைத் தலைவர் II-ம் பகுதியைக் கையாண்டு கோர்த்துவைத்துக்கொண்டு, அவர் காவல் துறை இயக்குநரின் முழு கவனத்துக்குரியதெனக் கருதும் விஷயங்களில்மட்டும் அறிக்கைகளை காவல்துறை இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். காவல்துறை இயக்குநரின் குறிப்புகள் அடங்கியுள்ள அறிக்கைகள், காவல்துறை துணைத் தலைவருக்கும் திருப்பி அனுப்பப்படும்.

## PSO 147 - உட்கோட்ட காவல் அலுவலர்.– Sub-Divisional Police Officer.-

(1) ஒரு உட்கோட்டப் பொறுப்பில் உள்ள உதவி அல்லது துணைக் கண்காணிப்பாளரின் கடமைகள் அவர்களின் வரையறைகளுக்குட்பட்டு, காவல்-கண்காணிப்பாளரின் கடமைகளுக்கு ஒப்பானவையாகும். இந்த அலுவலர்கள் முற்றிலும் காவல்-கண்காணிப்பாளரின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்பட்டு தங்களுடைய செயல்முறைகளையும், உட்கோட்டத்தில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதையும் அவருக்கு முழுவதுமாக அறிவித்து, கடினமான விஷயங்கள் எல்லாவற்றிலும் அவரைக் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

(2) அவரது பொறுப்புகள் நிர்வாக தன்மையினை விட செயல்தன்மை வாய்ந்தவையாகும். அவர் தனது முறை தவறாத ஆய்வுகளினாலும், மற்றும் அடிக்கடி வருகை புரிவதன் மூலம். வட்ட மற்றும் காவல் நிலை அளவில் பணிகள் திறம்பட செய்யப்படுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும். மற்றும் குறிப்பாக குற்றத்தை தடுப்பதில் திட்டமிட்ட முறையில் நடத்திச் செல்ல வேண்டும். மற்றும் ஒருங்கிணைந்த, தொய்வு இல்லாத பலன் தரும் புலனாய்வு மற்றும் துப்பறிதலை உறுதி செய்தல் வேண்டும். கொடுங்குற்ற வழக்குகளை மற்றும் மிகுந்த இடர் விளைவித்திடும் முக்கிய வழக்குகளை மேற்பார்வை செய்திட வேண்டும். சுற்று நிகழ்வுகளில் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக தொல்லை தரும் பகுதிகளில் மற்றும் தனது ஆள்வையிலுள்ள கிராமங்களில் குறிப்பாக உள்ளடங்கிய கிராமங்களில் தொல்லை தரும் வகுப்பினரிடையே அடிக்கடி வருகை புரிந்திட வேண்டும். அப்பொழுது தனது நிலைய பணியாளர்களின் வெளிப்புற பணியினை சரிபார்த்திட வேண்டும்.

(3) பொதுமக்களுக்கு ஆற்றிட வேண்டிய பணியினை கருத்திற் கொண்டு மற்றும் தனது சார்நிலை அலுவலர்கள் ஆற்றிட வேண்டிய பணியினையும் மனதிற்கொண்டு குறிப்பாக காவல் நிலையத்தில் புகார் செய்திட வரும் பொதுமக்கள் துன்புறுத்தப்படாமல் இருக்கும் வகையில் மற்றும் காவல் வைப்பில் இருக்கும் நபர் (அ) கைதி சித்ரவதை செய்யப்படாமல் இருக்கும் பொருட்டு அவர் தனது சார்நிலை அலுவலர்களுக்கு தரம் வாய்ந்த பயிற்சியினை அளித்திடுவதை உறுதி செய்திட வேண்டும். தனது சார்நிலை அலுவலர்களின் ஏதேனும் தவறான நடத்தை தனது கவனத்திற்கு வந்திடும் போது அவர் துரிதமாக முழுமையான விசாரணை நடத்தி ஒழுங்கு நடவடிக்கை எடுத்து முடித்திட தனிப் பொறுப்புரிமை கொண்டவராவார்.

(4) நீதித்துறை மற்றும் பிறதுறையினருடன் அவர் நெருங்கிய சுமூகமான உறவை வைத்துக் கொள்ள வேண்டும். அத்தகைய துறைகளுடன் சாதாரண தன்மை அல்லாத பிற கடிதத் தொடர்பு காவல் கண்காணிப்பாளர் மூலமாக செய்து கொள்ள வேண்டும்.



## PSO 148 - துணைக் கண்காணிப்பாளர்களின் தகுதி நிலை.– Status of Deputy Superintendents.-

DSP கள் மற்றும் ASP கள் ஒரே உட்கோட்டத்தில் ஒன்றாக பணி செய்திடும் வரை அவர்களின் துறை ரீதியான தகுதி நிலை சமமாகும். முதுநிலை சம்பள ஏற்றமுறையில் JSP யாக பணியமர்த்தப்படும் ASP மற்றும் ADSP துறை ரீதியாக சமமான தகுதிநிலை கொண்டவராவார்.

## PSO 149 - விடுதலை பெற்ற சிறையாளர் உதவி சங்கங்கள்.– Discharged Prisoners' Aid Societies.-

காவல் கண்காணிப்பாளர்கள் அவர்களுடைய தனித்தனி மாவட்டங்களில் உள்ள விடுதலை பெற்ற சிறையாளர் உதவி சங்கங்களில் சேர்ந்துகொண்டு, சங்கத்தின் செயல் முறையில் ஊக்கமான சிரத்தை எடுக்கும்படி விரும்பப்படுகின்றனர். அவர்கள் சங்கக் குழுவில் ஒரு பதவியை, கட்டளையிடப்பட்டால், ஏற்றுக் கொள்வதில் யாதொரு ஆட்சேபணையும் கிடையாது.

குறிப்பு.- இதன் நிமித்தம் அரசாங்கத்துக்கு யாதொரு செலவையும் அனுமதிக்கலாகாது. பெரும்பான்மையான விஷயங்களில் காவல் கண்காணிப்பாளர் அவரது அலுவலால் ஒரு உறுப்பினராக இருக்கும்படி ஏற்படுத்திக் கொள்வது சாத்தியமானதாயும் அநேகமாய் விரும்பத்தக்கதாயும் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

## PSO 150 - காவல் துறையினரால் அல்லது காவல் பாதுகாப்பில் ஏற்படும் மரணம் அல்லது காயம் விளையும் நேர்வுகளில் மற்றும் காவல் துறை அல்லது பொது ஊழியர்கள் கலவரம் அடக்கிட அல்லது தற்காப்பிற்காக சுடுபடைக்கலம் பயன்படுத்தும் நேர்வுகளில் விசாரணை.– Inquiry in cases of death or injury caused by Police or suffered in Police Custody and in cases where Police or Public Servants use fire-arm in Suppressing a riot or in self-defence.-

(1) (a) காவல் அதிகாரியினால் பொது ஊழியர் எனும் அல்லது தனிப்பட்ட முறையில் விளைவிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் மரணம் அல்லது கொடுங்காயம் ஏற்பட்ட நேர்வுகளில், அல்லது காவல் பாதுகாப்பில் யாரேனும் நபருக்கு ஏற்பட்டிருப்பின் மற்றும் (b) குற்ற ஒப்புதலுரையைப் பெற வேண்டி காவல் அதிகாரியினால் சித்ரவதை, அதாவது காயம் அல்லது கடுமையான காயம் விளைவிக்கப்பட்ட அனைத்து நேர்வுகளிலும், குற்றவியல் நடுவர் ஒருவரால் விசாரணை செய்யப்படவேண்டும். குற்றப் புலனாய்வில் தனிப்பட்ட பங்கேற்ற காவல் அதிகாரி, காவல் துறை கொடுமைப்படுத்திய குற்றச்சாட்டுத் தொடர்பான புலன்விசாரணையிலிருந்து விலக்கப்படவேண்டும். ஆயினும் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் அவர்தம் சார்நிலை அதிகாரிகள், காவல் துணை கண்காணிப்பாளர் படிநிலைக்கு குறையாத அதிகாரிகள், தனது சார்நிலை அதிகாரிகளிடமிருந்து புலனாய்வு தொடர்பாக நேரடியாக அறிக்கைகள் பெற்றிருந்தாலும், அவ்வாறான நிகழ்ச்சி தொடர்பாக, காவல் துறை இயக்குநருக்கு உறுதிப்படுத்தப்பட்ட பொருண்மைகளை அறிக்கையிட ஏதுவாக, பொதுவான விரைவு விசாரணை மேற்கொள்ளலாம்.

(2) காவல்துறை பாதுகாவலில் ஒருவர் மரணமடைந்தால், பிரேத விசாரணை செய்ய அதிகாரமுள்ள, அருகாமை குற்றவியல் நடுவருக்கு, அறிந்த வரையிலான நிகழ்மைகளையும், சூழ்நிலைகளையும் விளக்கி, ஓர் உடனடி அறிக்கையினை அனுப்பிட வேண்டும் மற்றும் குற்றவியல் நடுவர் பார்வையிடுவதற்கென்று அந்தப் பிணத்தை பாதுகாக்க வேண்டும்.

குறிப்பு.- காவல் கண்காணிப்பாளர்கள், காவல் துறையினர் சித்ரவதை செய்ததாகக் குற்றங் கூறப்படும் போது அல்லது காவல் துறை பாதுகாவலில் மரணம் நேரிடும்போது, உடனடியாக காவல் துறை இயக்குநருக்கு வானொலி மூலம் அல்லது தந்தி மூலம் சுருக்க அறிக்கை அனுப்பிட வேண்டும். இதனைத் தொடர்ந்து ஒரு விவர அறிக்கையைத் துரிதமாக அனுப்பவேண்டும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

(3) காவல் துறையினர் சுடுபடைகலம் பயன்படுத்தும் அல்லது பொது ஊழியர் கலவரத்தை அடக்கிட அல்லது தற்காப்புக்காக சுடுபடை கலம் பயன்படுத்தும் ஒவ்வொரு நேர்விலும், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு விரைவு அறிக்கை அல்லது தந்தி எது துரிதமானதோ அது அனுப்பப்பட வேண்டும். இவ்வறிக்கையில், யாரேனும் கொல்லப்பட்டிருப்பின் அல்லது காயமடைந்தவர் பற்றியும் குறிப்பிட வேண்டும்.

அவ்வாறான விரைவு அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன், சம்பவமானது அற்பத்தன்மையாக இருந்து அவ்வாறான சிறப்பு விசாரணை தேவைப்படாது என்றால் தவிர, மாவட்ட ஆட்சியர் குற்றவியல் ஆட்சித்துறை நடுவர் ஒருவரினால் விசாரணை செய்ய உத்தரவிடுவார். அவ்வாறான அற்பமான வழக்குகளிலுங்கூட குற்றவியல் நடுவர் விசாரணையுடன் விட்டொழித்திட மாவட்ட ஆட்சியர் அரசின் ஆணைகளைப் பெறவேண்டும்.

(4) (a) காவல்துறை பாதுகாவலில் மரணம் நிகழ்ந்தவுடன், காவல்துறை இயக்குநர் தனது முதல் அறிக்கையினை அரசிற்கு உடனடியாக அனுப்பிடுவார்.

(b) மாவட்ட ஆட்சியர், அவ்வாறான நிகழ்வுகள் குறித்து, வருவாய் கோட்டாட்சியரின் விசாரணை தொடர்பான ஆவணங்களும் விரிவான தொடர் அறிக்கை ஒன்றினை அரசிற்கு அனுப்பிடுவார்.

(c) மேற்காண் நடைமுறை நீதிமன்றக் காவலில் ஏற்படும் மரணங்களின் நேர்விலும் பொருந்தும், (மரணமுற்றவர் மரணமடையும் நேரத்தில் நீதிமன்றக் காவலில் இருப்பின்)

## PSO 151 - காவல் துறையினர் சித்ரவதை செய்ததாக (அ) மரணம் விளைவித்ததாக (அ) கொடுங்காயம் ஏற்படுத்தியதாக குற்றச்சாட்டுகளின் பேரில் நடைமுறை.–

## Procedure in respect of charges of torture by the Police or of death or grievous hurt caused by the Police.-

(1) காவல் அலுவலர் சித்ரவதை (அ) மரணம் (அ) கொடுங்காயம் அல்லது பிற கடுங்குற்றம் ஏற்படுத்தியதான குற்றச்சாட்டுகளைப் பொறுத்து கீழ்க்கண்ட நடைமுறை குறித்துரைக்கப்பட்டுள்ளது. வன்புணர்ச்சி செய்ததான அல்லது இயற்கைக்கு மாறான குற்றமிழைத்ததான குற்றச்சாட்டுகளைப் பொறுத்து, செய்கை (அ) செய்கைகள் அலுவல் கடமையின் போது அல்லது அலுவல் வழிக்கு புறத்தே செய்யப்பட்டதா என்பதைக் கருத்தில் கொள்ளாது விசாரணை நடத்தப்படும்.

(2) **புற நகர்ப் பகுதிகள்.**- (a) உதவி அல்லது துணை காவல் கண்காணிப்பாளர் படிநிலைக்கு குறையாத காவல் அலுவலரிடம் அவ்வாறான குற்றம் குறித்து முறையிடப்படும் போது அல்லது அவ்வாறான நிகழ்வு குறித்து அவர் கேள்விப்படுவாராயின், உடனடியாக அந்நிகழ்வு குறித்து பொதுவான விசாரணை மேற்கொண்டு, தொடர்பான வருவாய் கோட்டாட்சியரிடம் உடன் அறிக்கையிட வேண்டும். அவ்வாறான விசாரணை கீழ்க்காண் பத்தி (3)ன் அறிவுறுத்தல்களுக்குட்பட்டு இருக்கும்.

(b) உதவி அல்லது துணை காவல் கண்காணிப்பாளர் படிநிலைக்கு குறைந்த காவல் அலுவலரிடம், அவ்வாறான குற்றம் இழைக்கப்பட்ட தகவல் கிடைக்கப்பெற்றவுடன், அவர் வழக்கமான புலன் விசாரணை செய்திடாமல், வருவாய் கோட்டாட்சியருக்கும், தான் சார்நிலை அதிகாரியாக உள்ள உதவி/துணை காவல் கண்காணிப்பாளருக்கும் உடன் அறிக்கையிட வேண்டும் மற்றும் அவ்வாறான அறிக்கை நகல் ஒன்றினை காவல் கண்காணிப்பாளருக்கும் அனுப்பிட வேண்டும்.

(3) (a) மேற்காண் பத்தி (2)ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காவல் அலுவலரிடமிருந்து அல்லது வேறு வகையில் தகவல் கிடைக்கப்பெற்றவுடன், வருவாய் கோட்டாட்சியரால் அல்லது இந்நோக்கத்திற்காக அமர்த்தப்பட்ட வேறு அதிகாரியினால், நிகழ்வு பற்றி முதனிலை விசாரணை



மேற்கொள்ளப்படவேண்டும். விசாரணையானது நீதித்துறை சாராத தன்மை கொண்டதாகவும், நிகழ்வுக்கான பொறுப்புடையவரைக் குறிப்பிடுவதற்காகவும், யாரேனும் அல்லது தனிப்பட்ட காவல் அலுவலர்கள் தொடர்புடையவர்களாக இருப்பின் அவர்களுக்கெதிராக குற்ற வழக்கு தொடர்ந்திட முதல் நோக்கில் வழக்கு உள்ளதா என்பதற்காக இருக்கும். விசாரணையின் போது பொது மக்கள் வந்து சான்றுரைக்க விளம்பரம் செய்யப்பட்டாலுங்கூட விசாரணை நடவடிக்கைகள் விளம்பரப்படுத்தலாகாது.

(b) உதவி அல்லது துணை காவல் கண்காணிப்பாளர் படிநிலைக்கு மேற்பட்ட காவல் அதிகாரிகள் அவ்வாறான விசாரணைகளில் பங்கு கொள்ள மறுப்பு ஏதும் இல்லையென்றாலும், குற்றவியல் நடுவரின் விசாரணை தொடங்கப் பெற்றவுடன், காவல் துறையினரால் நேர் நிகரான விசாரணை மேற்கொள்ளப்படலாகாது மற்றும் உதவி அல்லது துணை காவல் கண்காணிப்பாளரால் சேகரிக்கப்பட்ட ஏதேனும் தகவல் குற்றவியல் நடுவருக்கான விசாரணை மேற்கொள்ளும் அதிகாரியிடம் உடன் அறிவிக்க வேண்டும். பிந்தியவர் கீழ்க்காண் பத்தி (4) & (5)ல் குறிப்பிட்டுள்ளவாறு விசாரணையினை முடித்திட வேண்டும்.

(4) (a) மேற்குறிப்பிட்டவாறான அத்தகைய குற்றம் தொடர்பாக பாதிக்கப்பட்ட தரப்பினரால் முதன்மைக் குற்றவியல் நடுவர் முன்பு முறையீடு தாக்கல் செய்யப்பட்டிருக்கும்போது, நிர்வாக நடுவர் புதிதாக முறைசாரா விசாரணையை நடத்துதல் கூடாது; அல்லது அவர் ஏற்கனவே முறைசாரா விசாரணையைத் தொடங்கி நடத்துகிறவிடத்து, அவர் மேற்கொண்டு அதனை தொடரக் கூடாது. மற்றும் நீதிமுறை நடவடிக்கைகள் முடிவுற்ற பின்னர், அந்த விடயம் தொடர்பாக மேற்கொண்டு தொடரவேண்டிய நடவடிக்கை பற்றி நீதிமன்ற முடிவின் அடிப்படையில் நிர்வாக நடுவர் முடிவு எடுப்பார்.

(b) குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குறையீடு தாக்கல் அல்லது அத்தகைய குறையீடு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத நிலையில், நிர்வாக நடுவரால் முறைசாரா விசாரணை மேற்கொள்ளப்படுவதானது, ஒழுங்கு நடவடிக்கை அதிகாரியினால் தொடர்புடைய காவல் அதிகாரியின் மீது, ஒரு படிச் சமன்பாடான (Simultaneous) ஒழுங்கு நடவடிக்கைகளை தொடருவதிலிருந்து விலக்காது.

(5) (a) பாதிப்புற்ற நபர் நீதித்துறை குற்றவியல் நடுவரிடம் அவ்வாறான குறையீடு அளிக்காதிருக்கும் போது, நடுவருக்குரிய விசாரணை மேற்கொள்ளும் அதிகாரி, தனது புலன் விசாரணையை முடித்து, பத்தி 3 (a) ல் வேண்டுறுத்துள்ளவாறு குறித்துரைக்கப்பட்ட முடிவுகளுக்கு வந்து, தனது அறிக்கையினை, ஆட்சியரின் கீழான சார்நிலை அதிகாரியாக அவர் இருப்பாரெனில், ஆட்சியர் மூலமாக அரசிற்கு அவ்வாறன்றி அரசிற்கு நேரடியாக அறிக்கையினை சமர்ப்பித்திடுவார்; அரசானது மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து இறுதி உத்தரவு பிறப்பிக்கும்.

(b) மேற்காண் ஆணையின்படி ஓர் அதிகாரி விசாரணையினை நடத்திடும்போது, தொடர்பான காவல் அலுவலர் இந்த ஆணையின் கீழ் வராத ஏதேனும் வேறு குற்றம் இழைத்திருப்பதாக கண்டுபிடித்தால், தனது அறிக்கையினை ஆட்சியரின் கீழான சார்நிலை அதிகாரியாக அவர் இருப்பாரெனில் ஆட்சியர் மூலமாக அரசிற்கும், அவ்வாறன்றி அரசிற்கு நேரடியாக அறிக்கையினை சமர்ப்பித்திடுவார்; அரசானது விசாரணை பதிவுருக்களை மேற்கொண்டு நடவடிக்கைக்காக காவல்துறை இயக்குநருக்கு மாற்றி விடும்.

(6) **சென்னை மாநகர்.**-சென்னை மாநகரில், அதே தன்மையிலான காவல் துறையினருக்கு எதிரான குற்றச் சாட்டுகளுக்கு, பத்தி 2 முதல் 5 வரையிலான நடைமுறைகள் வேண்டிய மாறுதல்களுடன் பொருந்தும்; பத்திகளில் வருவாய் கோட்டாட்சியர் எனக் குறிப்பிடப்பெற்ற இடங்களில் மட்டும் சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் எனக் கொள்ளப்படும்.

(7) **பொது.**- காவல் சார்நிலை அலுவலருக்கு எதிராக சித்ரவதைப் புகார்கள் முதலியன ஒரு காவல் அலுவலரால், புறநகர்ப் பகுதியில் அல்லது சென்னை மாநகரில், அரசுத் தொடர்பு இல்லாத



Scanned by CamScanner
Scanned with CamScanner

ஆதாரங்களிலிருந்து தந்திச் செய்தி மூலமாகவோ அல்லது எழுதியவர் பெயரில்லா அல்லது பொய்ப் பெயர் மனுக்கள், கடிதங்கள், இவை மூலமாகவோ அல்லது நிச்சயமில்லாத வதந்தி மூலமாகவோ கூட, வரப்பெற்றால், அவைகளைப் பெறும் அதிகாரி புறநகர்ப் பகுதிகளில் வருவாய் கோட்டாட்சியருக்கும், சென்னை மாநகரில் ஆட்சியரின் நேர்முக உதவியாளருக்கும் ஒரு புகார் வரப்பெற்றிருக்கிறதென்றும், அவர் அச்செய்தியின் உண்மை அல்லது மெய்மைத் தன்மையினை சரிபார்க்க முயற்சி செய்து கொண்டிருப்பதாகவும், அந்தச் சரிபார்த்தலின் முடிவானது, நேர்விற்கேற்ப வருவாய் கோட்டாட்சியருக்கோ அல்லது ஆட்சியரின் நேர்முக உதவியாளருக்கோ இயன்ற விரைவில் அறிவிக்கப்படுமென்றும் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். ஆயினும் அவ்வாறான சரிபார்த்து செய்திட்டாலன்றி, அக்குறையீட்டை ஓர் முதல் தகவல் அறிக்கையாகப் பதிவு செய்திடல் கூடாது.

(8) மேற்காண் தகவலின் மெய்மைத் தன்மை சரிபார்த்தலின் முடிவுக்காக காத்திருப்பதையோ அல்லது அவர் அவசியமெனக் கருதும் சரிபார்த்தலைச் செய்யும்படி கட்டளையிடுவதையோ, புறநகர்ப்பகுதியில் வருவாய் கோட்டாட்சியரும், சென்னை மாநகரில் ஆட்சியரின் நேர்முக உதவியாளரும் தங்கள் விருப்பத்தின்படி செய்திடலாம். ஆயினும் நேர்விற்கேற்ப வருவாய் கோட்டாட்சியாளராவது, சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராவது, குற்றச்சாட்டு அடங்கியுள்ள எழுதியவர் பெயரில்லா அல்லது பொய்ப் பெயர் கடிதங்களின் உண்மையைப் பற்றி அவரை உளநிறைவு அடையும் வரை மேற்காண் பத்தி (3)ன் படி முதனிலை விசாரணையினைத் தொடங்கலாகாது.

(9) மேற்காண் பத்தி 2 (a) & (b) யில் குறிப்பிடப்பெற்ற அவ்வாறான வழக்குகளைப் பற்றி காவல் நிலை ஆணை எண் 143ல் குறிப்பிடப்பட்டுள்ள வார அறிக்கை பகுதி I ல் இணை / உதவி / துணை காவல் கண்காணிப்பாளர்கள். மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், ஆகியோர் புறநகர்ப் பகுதியிலும், உதவி / துணை ஆணையர் சென்னை மாநகரிலும், தனி வகையில் குறிப்பிட வேண்டும்.

**(10) சிறு காயங்கள்.**-காவல் துறையினரால் தாக்கப்பட்ட மற்றும் விளைவிக்கப்பட்ட சிறு காயங்கள் குறித்த வழக்குகளில் கீழ்க்கண்ட நடைமுறை குறிப்பிடப்பட்டுள்ளது.

**(a) புறநகர்ப் பகுதிகளில்.**-தொடர்பான நபர் அவ்வட்டார அதிகார எல்லையுள்ள ஆட்சித்துறை நடுவரிடம் நேரில் குறையீடு அளித்திடலாம் மற்றும் அவ்வாறான நடுவர் முதனிலை விசாரணை மேற்கொண்டு தான் அவசியமெனக் கருதும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் ஆட்சித்துறை நடுவர் முதல் நோக்கில் வழக்கு இருப்பதாகவும் விரிவான விசாரணை அவசியம் எனக் கருதினால், கூடுதல் மாவட்டக் குற்றவியல் துறை நடுவர் I க்கு கருத்துருக்கள் அனுப்பி, விரிவான விசாரணை தொடங்கிடும் முன்னர் குறித்த ஆணைகள் பெற்றிட வேண்டும்.

**(b) சென்னை மாநகரில்.**-சென்னை மாநகரைப் பொறுத்து, முதனிலை விசாரணை நடத்துவதற்கான அதிகாரம் மற்றும் விரிவான விசாரணைக்கு ஒப்புதல் அதிகாரமும், முறையே ஆட்சியரின் நேர்முக உதவியாளரிடமும் மற்றும் மாவட்ட ஆட்சியரிடமும் இருக்கும்.

(ii) மாவட்ட குற்றவியல் துறை நடுவரிடம் அல்லது சென்னை மாவட்ட ஆட்சியரிடம் ஒப்புதல் பெற்று முறையான விசாரணை மேற்கொண்ட அனைத்து வழக்குகளிலும், விசாரணை அறிக்கையானது அரசின் பொதுத்துறைக்கு அனுப்பப்படும்.

## PSO 152 - தனி வழக்குகளில் ஆணையத்தை நியமிக்க வேண்டியது.– Commission to be appointed in special cases.-

**(1) ஒரு அமர்வுநீதி மன்றம் அல்லது உயர்நீதி மன்றம் ஒரு தனி விசாரணை அவசியமெனத் தனது கருத்தினைப் பதிவு செய்திருக்கிறவிடத்து, அரசினரால் நியமிக்கப்பட்ட ஒரு ஆணையத்தால் பகிரங்கமாக ஓர் விசாரணை நடத்தப்பட வேண்டும்; அந்த ஆணையம் காவல் துறைத் தொடர்பு இல்லாதவர்களும் அவர்களில் ஒருவர் நீதிமன்ற அனுபவம் உள்ளவருமான இரு அலுவலர்கள் அடங்கியதாய் இருக்க வேண்டும். ஆயினும், தனி ஆணையத்தின் புலனாய்வின்றி உடனடியாகக் குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடர்வதைச் சரியெனக் காட்டுவதற்குப் போதிய சாட்சியம் தயாராக இருப்பின், அச் செயல் முறையை உடனே கையாள வேண்டும்.**



**(2) மேல் சாட்சியம் தேவையான அனைத்து வழக்குகளிலும் செய்ய வேண்டிய துறை விசாரணை ஒன்றுக்குப் பதிலாக ஒரு தனி ஆணையம் நியமிக்கப்படமாட்டாது; எனினும், அத்தகைய துறை விசாரணையானது தனி ஆய்வுக்கோ குற்றவியல் குற்றச்சாட்டுக்கோ முதனிலையாகவும் துணையாகவும் இருக்க வேண்டுவதுடன், காவல் அலுவலரின் விசாரணையிலிருந்தோ மற்றப்படியோ கிடைத்த பயன்படக்கூடிய சாட்சியம் அனைத்தும் தனி ஆணையம் அல்லது குற்றவியல் நீதிமன்றத்தின் முன்பு வைக்கப்பட வேண்டும்.**

## PSO 153 - வழக்கு நாட்குறிப்புகளை அதிகாரிகள் பார்வையிடல்.– Perusal of Case Diaries by officers.-

**(1) முதன்மை சரகத்தின் வழக்கு நாட்குறிப்புகள் யாவற்றையும் காவல் கண்காணிப்பாளரும் உட்கோட்டத்தின் வழக்கு நாட்குறிப்புகள் அனைத்தையும் காவல் உட்கோட்ட அலுவலர்களும் படித்துப்பார்த்துவிட்டு, தேவையான விளக்கங்களையோ உத்தரவுகளையோ பிறப்பிக்க வேண்டும்.**

**(2) வழக்கு நாட்குறிப்புகளில் செய்யப்படும் குறிப்புகளைக் குற்றக் குறிப்பாணைகள் மூலம் நேர்விற்கேற்ப, ஆய்வாளர்களுக்கும் காவல் நிலைய அலுவலர்களுக்கும் அனுப்பவேண்டுமேயன்றி குறிக்கப்பட்ட அசல் வழக்கு நாட்குறிப்புகளையே திருப்பி அனுப்பலாகாது.**

**(3) காவல் உட்கோட்ட அலுவலர்களும் ஆய்வாளர்களும் தவறாமல், அவர்களுடைய குறிப்பாணைகளுக்குப் பதில்கள் வந்துவிட்டனவா என்று இரு வாரத்துக்கொருமுறை அவர்களுடைய குற்றக் குறிப்பாணையைப் பார்த்துக் கொண்டு தேவையான மேல் நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டும்.**

**குறிப்பு.- (1) மதுவிலக்கு வழக்குகள் சம்பந்தப்பட்டவரையில் வழக்கு நாட்குறிப்புகள் காவல் வட்ட ஆய்வாளர்களால் கோத்துவைக்கப்படும்.**

**(2) சென்னை மாநகர காவல் சட்டம் 64, 65 பிரிவுகளின்கீழ் வரும் வழக்கு நாட்குறிப்புகளை உட்கோட்ட அலுவலர்களுக்கு அனுப்ப வேண்டுவதில்லை. அவற்றை கூர்ந்தாய்வுக்குப் பின்னர் ஆய்வாளர்களே கோர்த்து வைத்துக்கொள்ளலாம்.**

## PSO 154 - ஆய்வுகள்.– Inspections.-

**(1) காவல் கண்காணிப்பாளர்களின் ஆய்வுகளைக் கணக்கில் கொள்ளாமல், உட்கோட்ட அலுவலர்கள் உட்கோட்டத்திலுள்ள ஒவ்வொரு காவல் நிலையத்தையும் புறக் காவலிடத்தையும் குறைந்தது ஓர் ஆங்கில ஆண்டுக்கொருமுறை ஆய்வு செய்ய வேண்டும். கூடியவரையில் ஆய்வை வட்ட வாரியாக செயலாற்றவேண்டும்.**

**(2) ஆய்வுகள் முழுமையாகவும், காவல் துறை செயல்பாடுகள் மற்றும் நிலைய நிர்வாகத்தினையும் பற்றியதாக இருக்க வேண்டும். ஆய்வின்போது நிலையத்தில் உள்ள ஒவ்வோர் துப்பாக்கியையும் ஒரு குண்டில்லா தோட்டாவை வைத்துச் சுட்டுச் சோதித்துப் பார்க்க வேண்டும்.**

**(3) ஒவ்வொரு உட்கோட்டத்திலும் மூன்று நிலையங்களுக்குக் குறையாமல் ஒவ்வொரு ஆண்டும் விரிவாக SP ஆய்வு செய்திடுவார். காவல் நிலையங்களின் ஆய்வானது, எந்த ஒரு நிலையமும் 4 ஆண்டுகளுக்கு மேலாக ஆய்வு செய்யப்படாமல் இருந்திடாதவாறு உறுதி செய்யும் வகையில் நடத்தப்பட வேண்டும்.**

**(4) அனைத்து அலுவலகங்கள் மற்றும் காவல் நிலையங்களை SP ஆய்வு செய்திடும் போது, ஆய்வு குறிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட வினாப் படிவத்தில தமிழ்மொழி செயலாக்கம் குறித்து குறிப்புரை எழுதிடுவார். உட்கோட்ட அலுவலர்களும், வட்ட அலுவலகம் மற்றும் காவல் நிலையங்களின் ஆய்வு குறிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட வினாப்படிவத்தில் தமிழ் அலுவலக மொழி முன்னேற்றம் குறித்து குறிப்பாக தனது கருத்துரைகளை எழுதிடுவார்.**

Scanned by CamScanner
Scanned with CamScanner

(5) (a) மேற்காண் துணைப் பத்தி (3) னை பின்பற்றுவதை உறுதி செய்திட மற்றும் வட்ட அலுவலகம் மற்றும் நிலையங்களின் ஆய்வு விடுதல் காக்கும் பொருட்டு SP முகாம் அலுவலகத்தில் ஒரு சரிபார்ப்பு பதிவேடு பேணப்பட வேண்டும். இப்பதிவேடு "காவல் கண்காணிப்பாளரின் ஆய்வுகளின் பணிமுறைப்பட்டி" என அழைக்கப்பெறும் மற்றும் இது கீழ்க்கண்ட படிவத்தில் இருக்கும்.

| Name of Police Unit | Date of inspection (here enter the year e.g., 1977) | Date of inspection during (here enter the year e.g.,1978) | Date of inspection during (here enter the year e.g.,1979). | Date of inspection during (here enter the year e.g., 1980.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |

(b) மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்கள், புறக்காவலிடங்கள், வட்ட அலுவலகங்கள் மற்றும் உட்கோட்ட அலுவலகங்கள் கலம் (1)ல் வரிசைப்படி ஒன்றன் கீழ் ஒன்றாக பதிவு செய்யப்படும். பெயர்கள் வட்ட வாரியாகவும் உட்கோட்ட வாரியாகவும் அமைக்கப்படும். தனியாக இயங்கும் போக்குவரவு நிலையங்கள் தனியாக கணக்கிடப்படும். மைய குற்ற நிலையம் தனி அலகாக கருதப்படும்.

(c) கலம் (2), (3), (4) மற்றும் (5)ல் தேதிகள் ஆண்டிற்கு பின் ஆண்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் போது பூர்த்தி செய்யப்படும். ஒவ்வொரு காவல் நிலையம், புறக் காவலிடத்தைப் பொறுத்து 4 வருட சுழற்சி பின்பற்றப்பட்டுள்ளதா என்பது இப்பதிவேடு முதற்நோக்கில் காண்பித்துவிடும்.

(d) இந்தப் பணிமுறைப்பட்டி SP களின் முகாம் அலுவலகம் ஆய்வு செய்யப்படும் போது கூர்ந்தாய்வு செய்யப்படும் மற்றும் ஆய்வுகளின் முன்னேற்றம் மறு ஆய்வு செய்யப்படும்.

(6) **திடீர் வருகை.-** வழக்கமான ஆய்வுகளுக்கு அப்பால், SP கள் மற்றும் உட்கோட்ட அலுவலர்கள் அடிக்கடி காவல் நிலையங்களுக்கு திடீர் வருகை புரிய வேண்டும். அவ்வாறான வருகையின் போது குற்ற நிகழ்வு அதன் தடுப்பு மற்றும் கண்டுபிடிப்பு, நிலுவை வழக்குகள் மற்றும் ஒழுங்கினைப் பேணி காப்பது ஆய்வு செய்யப்பட வேண்டும். ஆஜராகியுள்ள நபர்களின் இன்னல் குறித்து விசாரிக்க வேண்டும். வருகை தரும் அதிகாரிகள், நிலைய ஆய்வுக் குறிப்புகள் போன்று தங்கள் வருகை குறிப்புரை பிரதிகளை DIG க்கு அனுப்பிட வேண்டும்.

(7) பயிற்சி சார்பு ஆய்வாளரின் நிலையத்திற்கு ஆய்வு செய்ய முடியாத விடத்து, அவர்கள் நிலையத்திற்கு வருகை புரிந்து தகுதிகாண் பருவத்தினரின் பணித்திறன் விரிவாக சரிபார்த்திட வேண்டும் மற்றும் தகுதிகாண் பருவத்தினர் மீது ஆய்வாளர், உட்கோட்ட அலுவலர்களின் வழிகாட்டு தரம் மற்றும் கட்டுப்பாட்டினையும் கவனிக்க வேண்டும். தகுதிகாண் பருவ ஆய்வாளர் மற்றும் சார்பு ஆய்வாளர்களின் நிலையங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்துவதுடன் காலாண்டிற்கு ஒரு முறை உட்கோட்ட அலுவலர்கள் நிலையங்களுக்கு வருகை புரிய வேண்டும்.

## PSO 155 - நிலைய ஆய்வு அறிக்கைகள்.- Station Inspection Reports.-

ஒரு ஆய்வின்போதோ அல்லது ஒரு பார்வையின்போதோ ஒரு காவல் நிலையத்தின் அல்லது புறக்காவலிடத்தின் பார்வைப் புத்தகத்தில் எழுதப்படும் குறிப்புகளின் நகல் ஒன்றை வார அறிக்கையுடன் அனுப்பி வைக்கவேண்டும். ஒரு ஆய்வு அறிக்கையைப் படிவம் எண்.13-உடன் அனுப்பவேண்டும். காவல் துறை துணைத் தலைவர் இவ்வறிக்கைகளைப் பரிசீலனை செய்து திருப்பி அனுப்ப வேண்டும்.



## PSO 156 - வட்ட ஆய்வு அறிக்கைகள்.- Circle Inspection Reports.-

(1) ஒரு வட்ட ஆய்வு முடிவடைந்ததன்மேல், காவல் கண்காணிப்பாளர் வட்ட ஆய்வாளரின் பார்வைப் புத்தகத்தில் விளக்கவுரையை எழுதிவைத்துவிட்டு, அதன் நகல் ஒன்றைப் படிவம் எண்.13-ன்படி உள்ள ஒரு அறிக்கையோடும் அவருடைய வார அறிக்கையோடும் சேர்த்து அனுப்ப வேண்டும். காவல்துறை துணைத் தலைவர் இவ்வறிக்கைகளைப் பரிசீலனை செய்துவிட்டு அவற்றில் காவல்துறை இயக்குநரின் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டியது ஏதேனும் இருந்தாலன்றி மற்றப்படி அவற்றை காவல் துறை இயக்குநருக்கு அனுப்ப வேண்டியதில்லை.

(2) ஆய்வு செய்யும் அலுவலர்கள், எழுதுபொருள்கள், அச்சிட்ட படிவங்கள், இவற்றின் இருப்புச் சரக்குப் புத்தகங்கள் சரியாக வைத்து வரப்பட்டிருக்கின்றனவா என்று பார்வையிட்டு அவ்விஷயத்தைப் பற்றி ஒரு குறிப்பிட்ட அறிக்கை செய்ய வேண்டும்.

## PSO 157 - ஆய்வாளர்களின் அரையாண்டுக் கூட்டங்கள்.- Half-yearly meetings of Inspectors.-

(1) மாவட்ட காவல் நிர்வாகத்தைக் குறித்த விஷயங்களைக் கலந்து பேசி செய்திகளை பரிமாறிக் கொள்ளும் பொருட்டு, மாவட்டத்தின் அனைத்து காவல் ஆய்வாளர்கள், காவல் கண்காணிப்பாளர் தேவையெனக் கருதும் உதவி ஆய்வாளர்கள் ஆகிய இவர்களின் கூட்டம் ஒன்று ஒவ்வோர் அரையாண்டுக்கொருமுறை காவல் கண்காணிப்பாளர் தீர்மானிக்கும் இடத்திலும் நேரத்திலும் நடைபெறவேண்டும். மேற்கண்ட மாவட்டத்தில் அதிகார வரம்புள்ள இரயில் காவல் ஆய்வாளர்களும் அவர்களுடைய கண்காணிப்பாளருக்கு அனுப்பப்படும் அறிவிப்பின்மேல் ஆஜராக வேண்டும். இயன்ற வரை மாவட்டத்தில் உள்ள அனைத்து DSP களும் வந்திருக்க வேண்டும்.

(2) ஆயுத காவல் படையின் அனைத்து சேம ஆய்வாளர்களின் கூட்டம் ஒன்று, ஆயுத காவல் படைகளுக்குச் சம்பந்தமான பயிற்சி, நெறிமுறை முதலியன பற்றிய விஷயங்களை ஒரு தடையில்லாத வெளிப்படையான வகையில் கலந்து பேசிக்கொள்வதற்காக வருடாந்திர சரக காவல் விளையாட்டின்போது நடைபெறவேண்டும்.

## PSO 158 - தென்னக இரயில்வே அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு மாநில காவல் துறையினர்க்கிடையிலான சந்திப்புக் கூட்டம்.- Meeting between the officers of the Southern Railway and Tamil Nadu State Police.-

(1) Meeting between the officers of the Southern Railway and Tamil Nadu State Police will be held as shown below :-

| Officers who will attend the meeting | When to be held | Place of meeting | Convenor |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (a) A Conference of the General Manager, Heads of Departments of Southern Railway with Deputy Inspector-General and Superintendent of State Railway Police. | Yearly | Chennai | Chief Security Officer, Southern Railway, Chennai |

Scanned by CamScanner
Scanned with CamScanner

| | Officers who will attend the meeting | When to be held | Place of meeting | Convenor |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| (b) | Meeting of Railway Officers with the Railway Police and Local Police Officers | As and when required | Chennai | Security Officer, Southern Railway, Chennai. |
| (c) | Meeting of the Officers of the Southern Railway, Tiruchirappalli Division and Officers of the Railway Police and Local Police | Half-yearly | Tiruchirappalli | Assistant Security Officers, Southern Railway, Tiruchirappalli, Junction on behalf of Divisional Superintendent, Tiruchirappalli. |
| (d) | Meeting between the Officers of the Railway Police and the Officers of the Railway Protection Force | Half-yearly | Tiruchirappalli | Superintendent of Police, Railway Police, Tiruchirappalli. |
| (e) | Meeting of Railway Officers of Madurai Division with Officers of the Railway Police and Local Police | Half-yearly | Madurai | Assistant Security Officer, Madurai on behalf of the Divisional Superintendent, Madurai. |
| (f) | Meeting of the officers of the Railway Police and Officers of the Commercial Branch and Railway Protection Force of Madurai Division. | Quarterly | Madurai. | Assistant Security Officer, Southern Railway, Madurai. |

(2) கூட்டங்களின் செயல் முறைகளை அக் கூட்டங்களின் கூட்டுநர்கள் வெளியிடுவார்கள்.

(3) மேற்சொன்ன கூட்டங்கள், குற்றவாளிக் குழுக்களின் ஒழுங்கான கூட்டுவேலை, முதலியவற்றைப்பற்றிய செய்திகளைத் தடையில்லாமல் பரிமாறிக் கொள்வதற்காகவும், குற்றங்களில் ரயில் பணியாட்களின் உடந்தையைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முறைப்படுத்திக் கொள்வதற்காகவும், உத்தேசிக்கப்பட்டுள்ளனவாகும்.

## PSO 159 - சிறப்புக்கால அணிவகுப்புகளில் வணக்கம் தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ள உரிமையுடைய அலுவலர்.– Officers entitled to take the Salute at Ceremonial Parades.-

சிறப்புக் கால காவல் அணி வகுப்புகளில், உதாரணமாக, குடியரசு தினத்தன்று அல்லது சுதந்திர தினத்தன்று நடத்தப்படுவனவற்றில், அச்சமயம் வந்துள்ள மிக உயர்ந்த நிர்வாக அதிகாரி, அதாவது, நேர்விற்கேற்ப, ஆளுநர் அவர்கள் சென்னை காவல் ஆணையர் அல்லது மாவட்ட ஆட்சியர், மரியாதையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.



## PSO 160 - அமர்வு நீதிமன்றங்களில் ஆஜராதல்.– Attendance at Sessions.-

உயர் நீதிமன்றமானது அமர்வு நீதிபதிகளுக்கு அவர்களுடைய அமர்வு ஒவ்வொன்றும் ஆரம்பமாவதற்கு முன்னர் விசாரணைக்குப் போட்டிருக்கும் வழக்குகளின் பட்டியல் ஒன்றை குறிப்பிட்ட விசாரணைத் தேதிகளுடன் அவர்களுடைய கோட்டங்களின் காவல் கண்காணிப்பாளர்களுக்கு அனுப்பும்படி கட்டளையிட்டிருக்கிறது. காவல் கண்காணிப்பாளர் இப்பட்டியல்களைப் பரிசீலனை செய்து அவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தகுதி எனக் கருதும் விசாரணைகளில் அவர்கள் ஆஜராக வேண்டும், அல்லது அவர்களுடைய காவல் உட்கோட்ட அலுவலர்களைத் தங்களுக்குப் பதிலாக அப்படிச் செய்யும்படி அனுப்பவேண்டும். காவல் துறை துணைத் தலைவர்கள் அவர்களுடைய ஆய்வுகளில் அமர்வுகளில் ஆஜராதல் திருப்திகரமாயிருந்திருக்கிறதென்றும் நல்ல காரணமின்றி அது தவிர்க்கப்படவில்லையென்றும் அவர்களே உளநிறைவு அடைய வேண்டும்.

## PSO 161 - ஆய்வாளர்கள் மற்றும் சேமப்படை ஆய்வாளர்கள் முதலானோரின் இறப்பினை அறிக்கையிடல்.– Report of casualities among Inspectors, Reserve Inspectors etc.-

(1) ஆய்வாளர்கள், சேமப்படை ஆய்வாளர்கள், SI & RSI இவர்களுள் ஏற்படும் இறப்புகள் மற்றும் விடுவிப்புக் குறித்து காவல்துறை இயக்குநருக்கு அறிக்கையிட வேண்டும்.

(2) அனைத்து வகை பிரிவுகளினரில் பதக்கம் பெற்றவர்களுள் ஏற்படும் இறப்புகள் குறித்து இதே போன்று அறிக்கைகள் காவல்துறை இயக்குநருக்கு அனுப்புதல் வேண்டும்.

## PSO 162 - இரும்பு இருப்புப் பெட்டிகள், பணப் பெட்டகங்கள், மந்தண நிலைப் பேழைகள் மற்றும் பெட்டிகளின் மாற்றினைத் திறவுகோல்களின் காப்புப் பொறுப்பு.– Safe custody of duplicate keys of iron safes, Cash chests, Confidential almirahs and boxes.-

DSP மற்றும் அதற்கு மேற்பட்ட படிநிலை கொண்ட அலுவலர்கள் அனைவரின் இரும்பு இருப்புப் பெட்டிகள், பணப்பெட்டகங்கள் இவைகளுக்கு இரட்டைச் சாவிகள் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். இரட்டைச் சாவிகளை முத்திரையிட்ட உறையில் போட்டு மாவட்ட காவல் அலுவலகத்தில் பணப் பெட்டகத்தில் காப்புப் பொறுப்பில் வைக்கப்பட வேண்டும். காவல் நிலையங்களில் அல்லது பிற பிரிவுகளில் உள்ள இரும்பு இருப்புப் பெட்டி & பணப் பெட்டகங்களின் சாவிகள் மாவட்ட கருவூலகத்தில் காப்புப் பொறுப்பில் வைக்கப்பட வேண்டும். மாவட்ட கருவூலங்களில் வைக்கப்பட்டுள்ள மற்றும் மாவட்ட காவல் அலுவலக இரும்பு இருப்புப் பெட்டிகளில் வைக்கப்பட்டுள்ள இரட்டைச் சாவிகளுக்காகக் கையெழுத்துப் பதிவேடு ஒன்றை வைத்துவந்து, இரு ஆண்டுக்கொரு முறை ஏப்ரல் மாதத்தில் சாவிகளைத் தருவித்து அல்லது இரட்டை பூட்டு அலுவலர் மாறுதலில் செல்வாராயின் எது முன்னரோ அப்போது சோதனை செய்து ஒரு புதிய முத்திரையின்கீழ் கருவூலத்திற்குத் திருப்பி அனுப்பி வைக்க வேண்டும். அது தொடர்பான குறிப்புரையை பதிவேட்டில் குறித்துக் கொள்ளவேண்டும். இவ்வாணைகள் செயலாற்றப்பட்டு வருகின்றனவா என்று காவல் கண்காணிப்பாளர்கள் கவனித்துக்கொள்வதில் தனிப் பொறுப்புள்ளவர்கள் ஆவார்கள்.

## PSO 163 - சிறு குழல் துப்பாக்கி நீடித்த பயிற்சி.– Revolver practice.-

தகுதி காண் பருவத்தினர் உள்பட ASP/DSP கிரமநிலைக்கு மேற்பட்ட ஒவ்வொரு அலுவலரும் ஒவ்வோர் ஆண்டில் 48 முறை சிறு குழல் துப்பாக்கி வெடிகுண்டுகளைச் சுடவேண்டும். குண்டுகள் இலவசமாக வழங்கப்படும்.

Scanned by CamScanner

**PSO 164 - அதிகாரிகள் வைத்து வரவேண்டிய ஊர்தி அளவுத் திட்டம்.–**

**Scale of conveyance to be maintained by officers.-**

ஒவ்வொரு ASP/DSP கிரம நிலைக்கு மேற்பட்ட அலுவலரும் ஒரு நன்கு பயன்படத்தக்க மோட்டார் கார், மோட்டார் சைக்கிள் (அ) ஸ்கூட்டர் வைத்துவர வேண்டும்.

**PSO 165 - ஒரு மோட்டார் வண்டியை வைத்து வருவதினின்று விலக்கப்பட்ட அலுவலர்கள்.–**

**Officers exempted from maintaining a conveyance.-**

அடியிற்கண்ட அலுவலர்கள் ஒரு மோட்டார் வண்டியை, மோட்டார் சைக்கிளை அல்லது ஸ்கூட்டரை வைத்துவர வேண்டியதில்லை:-

(1) Deputy Inspector-General of Police (Administrations)

(2) Assistant Inspector-General of Police.

(3) The Superintendents, Special Branch, C.I.D., Crime Branch. C.I.D. 'Q' Branch, C.I.D., Civil Supplies, C.I.D., and Prohibition Enforcement Wing.

(4) Officers of the Railway Police.

(5) Principals, Police Training College and Police Recruits Schools.

(6) Deputy Superintendents of the units referred to in item. (3) above.

(7) Officers of the Tamil Nadu Special Police.

(8) Additional Superintendents of Police.

(9) Deputy Superintendent of Police Incharge of Armed Reserves, Police Computer Centre and Police Research Centre.

(G.O. No. 107, Judl. (Pol.) 6th March 1923, and 714. Judl., 15th Dec., 1925)

**PSO 166 - மோட்டார் வண்டிகள் வாங்கிக்கொள்ள அல்லது பதிலாக வைத்துக் கொள்வதற்கான கால அளவு.–**

**Conveyance – Period within which to be obtained or replaced.-**

(1) தகுதி காண் பருவத்திலுள்ள ஒவ்வொரு காவல் உதவிக் கண்காணிப்பாளர் அல்லது காவல் துணைக் கண்காணிப்பாளர் அல்லது பதிலி காவல் துணைக் கண்காணிப்பாளர், ஒரு உட்கோட்டப் பொறுப்பில் அமர்த்தப்பட்டதிலிருந்து மூன்று மாதத்துக்குள்ளாக ஒரு நன்கு பயன்படத்தக்க மோட்டார் கார் (அ) மோட்டார் சைக்கிள் (அ) ஸ்கூட்டரை வைத்துவரவேண்டும்.

(2) விற்கப்பட்ட ஓர் மோட்டார் வண்டிக்குப் பதிலாக ஒரு வண்டியை வைத்துக்கொள்ள ஒரு அலுவலருக்கு ஒரு மாதம் அனுமதிக்கப்படும்.

(3) நீண்ட விடுப்பிலிருந்து திரும்பிவரும் அலுவலர் ஒருவர் அவர் வந்து சேர்ந்ததிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாக ஒரு மோட்டார் வண்டியை அவரே வைத்துக்கொள்ள வேண்டும்.

**PSO 167 - ஒரு வண்டியை வைத்துவருவதில் விலக்கு அளிக்க அதிகாரமுடைய அலுவலர்.–**

**Exemption from maintaining a conveyance – Authority competent to grant..-**

(1) ஒரு மோட்டார் கார், மோட்டார் சைக்கிள் (அ) ஸ்கூட்டர் வைத்துவரவேண்டிய கடப்பாட்டிலிருந்து தற்காலிக விலக்கை ஆறு மாதத்துக்கு மேற்படாத காலம் வரைக்கும் அலுவலர்களுக்கு அளிப்பதற்கு காவல் துறை இயக்குநருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அனுமதிக்கப்பட்ட கால அளவுக்குள் அலுவலர்கள் ஒரு மோட்டார் கார், மோட்டார் சைக்கிள் (அ) ஸ்கூட்டர் வாங்கிக்கொள்ளாவிட்டால், காவல்துறை இயக்குநர் அவ்விஷயத்தின்மேல் உத்தரவுகள் பெறுவதற்காக அரசாங்கத்துக்கு எழுதிக் கேட்க வேண்டும்.



(2) ஒரு அலுவலர், குறிப்பிட்ட கால அளவுக்குள் தேவைப்பட்ட வாகனத்தை அவரே தேடி வைத்துக்கொள்ளாமலும், மேலே சொல்லியுள்ள முறைப்படி விலக்கு அளிக்கப்பெறாமலும் இருந்தால், அவருடைய பயணப்படி குறைக்கப்படுவதற்கு உட்பட்டிருக்கும்.

**PSO 168 - DSP மற்றும் அதற்கு மேற்பட்ட கிரம நிலை அலுவலர்கள் வண்டி வைத்து வருவதைப்பற்றி சான்றிதழ்களும் அறிக்கைகளும்.–**

**Certificate and Reports regarding maintenance of conveyance by the officers of and above the rank of Deputy Superintendent of Police.-**

(1) ஒவ்வொரு அலுவலரும் அவரது பயணப்படிப் பட்டியல்களில் அவர் ஒரு மோட்டார் கார், மோட்டார் சைக்கிள் (அ) ஸ்கூட்டர் வைத்துக் கொண்டிருப்பதாகவும்; அது ஓடும் நிலையில் இருப்பதாகவும் சான்றிடவேண்டும்.

(2) ஒரு அலுவலருடைய மோட்டார் கார், மோட்டார் சைக்கிள் (அ) ஸ்கூட்டர் விற்கப்பட்டால் அல்லது பயனற்றதாய்விட்டால், அவர் அது விஷயத்தை அவருடைய பயணப்படிப் பட்டியலை மேலொப்பம் செய்யும் அதிகாரிக்கு அலுவல் முறையில் உடனடியாக அறிக்கை செய்யவேண்டும்.

(3) காவல் துறை துணைத் தலைவர் சுற்றுப்பயணம் செய்கையில், அலுவலர்கள் தேவைப்பட்ட வாகன வசதிகளை வைத்திருக்கிறார்களா என்று பார்வையிட்டு அவ்விஷயத்தைத் தங்களுடைய ஆய்வுக் குறிப்புகளில் அறிக்கை செய்ய வேண்டும்.

**PSO 169 - மாவட்டத்தில் இல்லாதிருத்தலைப்பற்றி மாவட்ட ஆட்சியருக்கு அறிவிக்க வேண்டியது.–**

**Collector to be informed of absence from District.-**

காவல் கண்காணிப்பாளர் அலுவலின்பேரில் அல்லது தற்செயல் விடுப்பின்பேரில் மாவட்டத்தை விட்டுப் போவதற்கு முன்பு அவருடைய ஆஜரின்மை பற்றி மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்க வேண்டும்.

**PSO 170 - அவசரவேலை – காவல் கண்காணிப்பாளர் அல்லது உட்கோட்ட அலுவலர் தற்செயல் விடுப்பில் இருக்கையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள செய்ய வேண்டிய ஏற்பாடுகள்.–**

**Urgent work – Transaction when Superintendent or Sub-divisional officer is on casual leave – Arrangements to be made.-**

காவல் கண்காணிப்பாளர், அவராவது அவருடைய எந்த உட்கோட்ட அலுவலராவது தற்செயல் விடுப்பு எடுத்திருக்கையில், அனைத்து அவசரமானதும் முக்கியமானதுமான வேலையும் நடைபெறுவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும்.

**PSO 171 - அரசாங்க உள்துறைச் செயலாளருக்கும் ஆளுநர் அவர்களின் தனிச் செயலாளருக்கும் அறிக்கைகள்.–**

**Reports to the Secretary to Government, Home Department, and to the Private Secretary to the Governor.-**

(1) அடியிற்கண்ட அலுவலர்கள் அவர்கள் சென்னை மாநகருக்கு வருதல், திரும்பி வருதல், திரும்பிச் செல்லுதல் இவற்றைப்பற்றி அரசாங்க உள்துறைச் செயலாளருக்கும் ஆளுநர் அவர்களின் தனிச் செயலாளருக்கும் அறிக்கை செய்யவேண்டும்:-

(i) காவல்துறை இயக்குநர்

(ii) காவல் ஆணையர்

(iii) காவல்துறை துணைத் தலைவர்

(2) மேற்சொன்ன அலுவலர்கள் எவரேனும் ஆளுநர் அவர்கள் உதக மண்டலத்தில் தங்கியிருக்கையில் அங்கு வந்தால், அல்லது அதைவிட்டுத் திரும்பிச் சென்றால், அவர் ஆளுநர் அவர்களின் தனிச் செயலாளருக்கு அறிக்கை செய்யவேண்டும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

## PSO 172 - அறிக்கைகள் அனுப்புகையில் பின்பற்ற வேண்டிய நடைமுறை.– Procedure to be followed in sending reports.-

அறிக்கைகள் அனுப்புகையில் பின்பற்ற வேண்டிய நடைமுறையும் உபயோகிக்கவேண்டிய படிவங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. படிவங்களைச் சென்னை அரசினர் எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநரிடமிருந்து தேவைப்பட்டியலின் மேல் பெற்றுக் கொள்ளலாம்.

**(1) வருகைகள்.-** அலுவலர் ஒருவர் தலைமையிடத்துக்கு வரவேண்டிய நேரத்துக்கு முன்பு, படிவம் II-ல் அவர் ஏற்கனவே செய்தி அறிவித்திருந்தாலன்றி அல்லது தலைமையிடத்தைவிட்டு அவர் திரும்பிச் சென்றதன் மேல், படிவம் 1-ல் அறிக்கை அனுப்ப வேண்டும். அவருடைய வருகையைப்பற்றிய திட்டங்களில் ஏற்படும் மாறுதல் எதையேனும் படிவம் 1-ல் அறிக்கை செய்ய வேண்டும். அலுவலர் ஒருவர் தலைமையிடத்துக்கு வந்த தேதியையோ அல்லது திரும்பிவந்த தேதியையோ படிவம் I அல்லது படிவம் II-ல் ஏற்கனவே அறிவித்திராவிட்டால், அவர் தலைமையிடத்துக்கு வந்ததன் பேரில் அரசு தலைமைச் செயலகத்தில் அதற்கென்று வைக்கப்பட்டிருக்கும் புத்தகத்திலும் படிவங்களிலும் ஒரு குறிப்பு செய்தோ, அல்லது கடிதம் மூலமோ, அல்லது தொலைபேசி செய்தி மூலமோ, அறிக்கை செய்ய வேண்டும். ஆளுநர் அவர்களின் தனிச் செயலாளருக்கென்று அரசு தலைமைச் செயலக அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் அறிவிப்புப் படிவத்தின் பதிவுகள் அவருக்குத் தாமதமின்றி அனுப்பப்படும்.

**(2) திரும்பிச் செல்லல்.-** அலுவலர் ஒருவர் திரும்பிச் செல்லும் தேதியைக் குறிப்பிட்டவுடனே படிவம் I-ல் செய்தியானது முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, படிவம் II-ல் ஓர் அறிக்கையை அனுப்பவேண்டும். அவர் திரும்பிச் செல்வதைப்பற்றிய திட்டங்களில் ஏற்படும் மாறுதல் எதையேனும் படிவம் II-ல் அறிக்கை செய்ய வேண்டும்.

**குறிப்பு.-** மேலே உள்ள ஆணையில் அடங்கியுள்ள அறிவுறுத்தல்கள் விடுப்பில் உள்ள அலுவலர்களுக்கும், அலுவலில் உள்ளவர்களுக்கும் பயன்படும்.

### படிவம் – I

### வருகை அறிக்கை

1. பெயர்
2. பதவிப் பெயர்
3. எவ்விடத்திலிருந்து வருகின்றார் அல்லது எங்கே திரும்பிச் செல்கின்றார் என்பது
4. அரசு தலைமையகத்திற்கு வந்த அல்லது திரும்பி வந்த தேதி
5. தலைமையிடத்தில் முகவரி
6. திரும்பிச் செல்லும் உத்தேச தேதி
7. சேருமிடம்

நிலையம் : அலுவலரின் கையெழுத்து

தேதி :

பெறுநர் :

மேதகு ஆளுநர் அவர்களின் தனிச் செயலாளருக்கு

அரசாங்க உள்துறைச் செயலாளருக்கு



### படிவம் – II

### திரும்புதலைப் பற்றிய அறிக்கை

1. பெயர்
2. பதவிப் பெயர்
3. திரும்பிச் செல்லும் உத்தேச தேதி
4. அரசு தலைமையகத்திற்கு திரும்பி வரும் உத்தேச தேதி
5. அலுவலர் ஓர் துறைத் தலைவராயிருந்தால் அவர் போய்ப் பார்க்க வேண்டிய மாவட்டங்களும் முக்கிய இடங்களும்

நிலையம் : அலுவலரின் கையெழுத்து

தேதி :

பெறுநர் :

மேதகு ஆளுநர் அவர்களின் தனிச் செயலாளருக்கு

அரசாங்க உள்துறைச் செயலாளருக்கு

## PSO 173 - அண்டை மாநிலங்களைக் காணல்.– Visit to neighbouring States.-

ஒரு எதிரியை ஓர் அண்டை மாநில எல்லைக்குள் பிடிக்கவோ அல்லது பொருள்களை கைப்பற்றவோ வேண்டியிருக்கும் போதெல்லாம், மாநிலங்களின் நல்லுறவு தீவிரமானதும் திறம்பட்டதுமான ஆய்வு, ஆகிய இவற்றின் பொருட்டு, இம்மாநிலக் காவல் படையினர் அம்மாநிலத் தல காவல் படையினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருத்தல் வேண்டும். அவசர நிலைகளில் தல காவல் படையினரோடு தொடர்பு கொள்வதற்குத் தேவையான நேரமானது, குற்றத்திற்கு உட்படுத்தும் சான்றின் மறைவையோ, நீக்குதலையோ, அல்லது சந்தேகிக்கப்பட்ட எதிரி தப்பித்துக் கொள்ளலையோ விளைவிக்கக்கூடியதாயிருக்கையில், அவசியமெனக் கருதும் அளவுக்கு தனித்த செயல் முறையைக் கையாளலாம். ஆனால், எடுத்துக்கொண்ட நடவடிக்கையைப் பற்றி தல காவல் படையினருக்குத் தெரிவிக்கவேண்டும்.

## PSO 174 - சென்னை வருகை பற்றி AIG க்கு அறிக்கையிடல் மற்றும் D.I.G C.I.D (குற்றம்) & D.I.G C.I.D (நுண்ணறிவு) அவர்களைத் தொடர்பு கொள்ளுதல்.– Reports of arrival in Chennai to the Assistant Inspector-General of Police and contacting the Deputy Inspector-General of Police, C.I.D. (Crime) and Deputy Inspector-General of Police, C.I.D. (Intelligence).-

(1) DSP மற்றும் அதற்கு மேற்பட்ட கிரம நிலையில் உள்ள அலுவலர்கள் சென்னை மாநகருக்கு வந்தவுடன் அவர்களுடைய முகவரியை காவல் துறை உதவித் தலைவருக்கு அறிக்கை செய்யவேண்டும்.

(2) காவல் கண்காணிப்பாளர்கள், அவர்களுடைய மாவட்டங்களின் குற்றம், தனிப்பிரிவு விஷயங்கள் சம்பந்தமாக D.I.G C.I.D (குற்றம்) & D.I.G C.I.D (நுண்ணறிவு) அவர்களைத் தொடர்பு கொள்ளுதல், அவர் இல்லாதிருக்கையில், தனிப் பிரிவு (அ) குற்றப் பிரிவு காவல் கண்காணிப்பாளரையாவது சந்திக்க வேண்டும்.

Scanned by CamScanner

Scanned with CamScanner

**PSO 175 - சுற்றுப்பயணத்தில் வழங்குப் பொருளுக்குப் பணம் கொடுத்தல்.–**
**Payment for supplies on Tour.-**

அலுவலர்கள், சுற்றுப் பயணத்தின் போது வழங்குப்பொருளுக்கான முழு நடப்பு விலையைக் கொடுப்பதையும், பணமானது சரியான நபருக்கு சேர்வதையும் கவனித்துக்கொள்ள வேண்டும்.

**PSO 176 - சுற்றறிக்கைகளின் நகல் காவல் துறை இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டியது.–**
**Copy of Circulars to be sent to Director-General.-**

(1) எந்த காவல் நிலை ஆணையையாவது விளக்குவதற்காகவோ நிறைவு செய்வதற்காகவோ வெளியிடப்படும் எந்த சுற்றறிக்கையின் அல்லது மற்ற பொது அறிவிப்பின் நகல் ஒன்றை ஒரு காவல் துறை துணைத் தலைவரும், அவர் மூலம் ஒரு காவல் கண்காணிப்பாளரோ அல்லது உட்கோட்ட அலுவலரோ காவல் துறை இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

(2) ஒரு புதிய விவர அறிக்கையையோ அல்லது ஒரு காலமுறைச் செய்தி அறிவிப்பையோ கேட்கும் சுற்றறிக்கை எதையேனும் காவல் துறை இயக்குநரின் முன் ஏற்பு இன்றி வெளியிடலாகாது.

(3) ஒரு காவல் கண்காணிப்பாளர் அல்லது உட்கோட்ட அலுவலர் வெளியிட்ட எந்த சுற்றறிக்கையையேனும் காவல் துறை துணைத் தலைவர் ஒருவர் நிராகரித்துவிட்டால், அவர் அதை ரத்து செய்யலாம். அந்த விஷயத்தில் அதை காவல் துறை இயக்குநருக்கு அனுப்ப வேண்டியதில்லை.

**PSO 177 - ஆவணங்கள் (அ) நகல்களை அளித்தல்.–**
**Grant of Documents or copies.-**

காவல்துறைக்குச் சொந்தமான அல்லது அதன் வசமுள்ள எத்தகைய ஆவணத்தையேனும் அலுவல் பதிவையேனும், அப்பதிவின் எந்த நகலையேனும், யாதொரு தனியாருக்காவது அதைத் தேவைப்படுத்தும் சட்ட சம்மதத்தைப் பெறாத எவருக்காவது, ஒரு அதிகாரமுடைய நீதிமன்றத்தின் அல்லது அதிகாரமுடைய அலுவலரின் உத்தரவுகளின் கீழ் அன்றி மற்றப்படி கொடுக்கலாகாது.

**PSO 178**

நிர்வாக அலுவலர் எவரேனும் இட்ட எந்தக் கட்டளையின் அல்லது அத்தகைய அலுவலகப் பதிவுக்கட்டில் உள்ள வேறெந்த ஆவணத்தின் நகல் அல்லது மொழிபெயர்ப்பு ஒன்றைப் பெறும் பொருட்டு அந்த அலுவலருக்குக் கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கேனும் மனுக்களுக்கேனும் ஒரு ரூபாய் நீதிமன்றக் கட்டண வில்லையை ஒட்டவேண்டும்.

❋❋❋❋❋❋



## அத்தியாயம் - 14

## அலுவலர்களின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் மற்றும் அவர்களுக்கு அறிவுரைகள்

## POWERS AND DUTIES OF AND INSTRUCTIONS TO OFFICERS

**PSO 179 - காவல் ஆய்வாளர் (சட்டம் & ஒழுங்கு).–**
**Inspector of Police (Law and Order).-**

(1) காவல் ஆய்வாளர், அவருடைய அனைத்து வட்டப் பிரிவுகளின் காவல் வேலையை மேற்பார்வையிடுவதும் அவருடைய சார்நிலைப் பணியாளர்களுக்கிடையே நெறிமுறையை நிலை நிறுத்துவதும், ஆயுதங்கள், காவல் படைகள், மற்றைய அரசுச் சொத்து கட்டிடங்கள், இவைகளைப் பேணுவதும், தனது கட்டுப்பாட்டில் உள்ள நிலையங்களின் எல்லை காவல் துறை கண்ணோட்டத்துடன் அவருக்கு அடுத்த மேல்நிலை அதிகாரிக்குத் தெரியப்படுத்திக் கொண்டு வருவதும், அவருடைய முக்கிய கடமைகளாகும். சட்டம் & ஒழுங்கு காவல் ஆய்வாளரின் மேற்பார்வையானது காவல் நிலையப் பரப்பின் காவல் வேலை பொறுத்த வரை சார்பு ஆய்வாளருக்குள்ள முழுப் பொறுப்பினின்று துணை ஆய்வாளரை எவ்வகையிலும் விடுவிக்காது.

**காவல் ஆய்வாளர்கள் (குற்றம்)**

(2) காவல் ஆய்வாளர்கள் குற்றத்தினைத் தடுத்தல், குற்றத்தினைக் கண்டுபிடித்தல் மற்றும் நீதிமன்றங்களில் குற்ற வழக்கு தொடர்தல் போன்றவற்றை முழுமையான நேர அடிப்படையில் செய்திட பணியமர்த்தப்பட்டு பொறுப்புடையவராவார். தங்கள் நிலைய எல்கைக்குள் தொழில் ரீதியான சொத்து திருட்டினையும் கையாளுவர். மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறப்பு பிரிவுகளில் குற்றம் மற்றும் நுண்ணறிவுப் பணிகளும் மேற்கொள்வர்.

**PSO 180 - காவல் நிலைய ஆய்வு.–**
**Inspection of Station.-**

1 (அ) ஊரக, நகர் மற்றும் இரயில்வே காவல் வட்டங்களில் காவல் நிலையப் பொறுப்பு வகிக்கும் ஆய்வாளர்கள் கீழ்க்கண்டவாறு காவல் நிலைய ஆய்வு மேற்கொள்வர்.

(ஆ) **ஆய்வாளர்கள் :** ஒரு காவல் நிலையத்தில் நேரடி பொறுப்பு கொண்டுள்ள ஆய்வாளர்கள் தங்கள் காவல் நிலையத்தினை ஆய்வு செய்திட வேண்டியதில்லை.

(இ) இரண்டு அல்லது மேற்பட்ட நிலையங்களின் பொறுப்பு வகிக்கும் ஆய்வாளர்கள் அரை ஆண்டுக்கொரு முறை ஆய்வு செய்திட வேண்டும் மற்றும் திங்களுக்கொரு முறை பார்வையிட வேண்டும். தகுதிகாண் பருவ SI உள்ள நிலையங்களுக்கு தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

(ஈ) இரண்டு நிலையங்களுக்கு ஆய்வாளர் பொறுப்பாக இருக்கிறவிடத்து, அதில் ஒன்றில் SI இல்லாமல் இருக்கும் போது, அவர் தான் நேரடியாக பொறுப்பில் உள்ள நிலையத்திற்கு ஆய்வு செய்திட அல்லது வருகை புரிந்திட வேண்டியதில்லை.

(உ) அவர்களின் பார்வையிடல் அறிக்கையானது முறை சார்ந்த ஆய்வு அறிக்கையில் பகுதியாக ஏற்கப்படும். நிலையத்தின் ஒவ்வொரு பார்வையிடல் பதிவும் மற்றும் வழங்கப்பட்ட அறிவுரைகளும ஆய்வாளரின் பார்வைப் புத்தகத்தில் பதிவு செய்யப்படும்.

(2) ஒரு காவல் நிலைய ஆய்வின்மேல் ஒரு ஆய்வாளர் செய்யும் குறிப்புகள் முக்கியமாகப் பிழைகளை எடுத்துக்காட்டி அறிவுறுத்தும் வகையில் இருத்தல்வேண்டும். அவற்றை வெவ்வேறு காவல் வேலை பிரிவுகளின் மேல் செய்யப்படும் ஓர் மறுஆய்வு போல் உருவெடுக்கவிடக் கூடாது.

(3) காவல் ஆய்வாளர்கள் அவர்களுடைய வட்டங்களில் உள்ள அனைத்து கிராமங்களையும் குறைந்தது ஆண்டுக்கொரு முறை பார்வையிட வேண்டும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

(4) **ஆய்வாளர்கள் (குற்றம்)** : ஆய்வாளர் தனது வட்டத்தில் அனைத்து காவல் நிலையங்களையும் திங்களுக்கொருமுறை பார்வையிடுவார் மற்றும் முதன்மை மற்றும் துணை குற்றப் பதிவுருக்கள் நாளது தேதிவரை முறையாகப் பேணப்பட்டு வருகிறதா என்பதனை அவ்விடத்திலேயே உறுதி செய்து கொள்வார். காலந்தவறாமலும், முழுமையாகவும் உள்பதிவு படிவங்கள் குறிப்பிடப்பெற்றவாறு கணினி மையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதா என்பதனை உறுதி செய்து கொள்வார். அவரது பிரிவின் மீதான ஆய்வு குறிப்புரைகள் முக்கியமாக பிழைகளை சுட்டிக்காட்டி அறிவுறுத்தும் வகையில் இருக்க வேண்டும். அவர் தவறுகளைப் பட்டியலிட்டு, அவ்விடத்திலேயே தீர்வழி செய்யப்படுவதையும் பார்த்திடுவார். அவரது கட்டுப்பாட்டின் கீழுள்ள காவல் நிலையங்களை உயர் அதிகாரிகள் ஆய்வு செய்திடும் போது அவரும் உடனிருப்பார்.

## PSO 181 - குற்றப்பிரிவு ஆய்வாளர்களின் கடமைகள்.– Duties of Inspector (Crime).-

(1) எந்த முக்கியத்துவம் வாய்ந்த குற்றமேனும் நிகழ்ந்தவுடன் ஆய்வாளர் (குற்றம்) விசாரணையை மேற்பார்வையிட்டு வழி நடத்துவதற்காக அவ்விடத்துக்குத் தாமதமின்றி புறப்பட்டுப் போகவேண்டும். அன்றியும் அவசியமாயிருக்கையில் அவர் அண்டைய காவல் நிலையங்களின் காவலர்களுடைய கூட்டுறவைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். சந்தர்ப்பங்கள் தேவைப்படுத்தினால், அல்லது காவல் கண்காணிப்பாளர் அல்லது உட்கோட்ட அலுவலர் அவ்வாறு உத்தரவிட்டால், விசாரணை பொறுப்பை அவரே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

(2) ஆய்வாளர் (குற்றம்) அவருடைய வட்டத்துக்குள் ஒரு தனிவகைப்பட்ட குற்ற எழுச்சிகள் சம்பந்தமாக அவரே நேரில் கூடிய விரைவில் விசாரணையை வழி காட்டி ஒருமைப்படுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். அனைத்து செய்திகளையும் ஆராய்ந்து ஒத்துப் பார்த்து, முடிவுக்கு வருவதையும் ஒவ்வொரு துப்பையும் பற்றிக் கொண்டு இறுதிவரைக்கும் அதைச் சீராய்த் தொடர்ந்து செல்வதையும் ஒரே வேலையை வெவ்வேறு நிலையங்கள் இரட்டிப்பாய்ச செய்வதைத் தடுப்பதையும், கவனித்துக்கொள்வதற்கு அவர் பொறுப்புள்ளவர் ஆவார்.

(3) காவல் ஆய்வாளர் ஒருவர் அவர் நேரில் விசாரித்துக்கொண்டிருந்த வழக்கு ஒன்றை விட்டுவிட வேண்டியிருக்கையில், அவர் தனது வழக்கு நாட்குறிப்பில் அதுவரை வழக்கைப்பற்றி அவர் கொண்டிருந்த கருத்தினையும் மேற்கொண்டு ஆய்வு செய்யவும் நடைமுறையைப் பற்றி அறிவுறுத்தல் விவரங்களையும் மேற்கண்ட வழக்கில் இன்னும் எடுத்துக்கொள்ள வேண்டிய செயல்முறையையும், எழுதிவைக்க வேண்டும்.

(4) தொழில் சார்ந்த கடுமையான சொத்து குற்றங்களையும் தானே புலனாய்வு மேற்கொள்வார் மற்றும் முக்கிய தொடர் குற்றங்கள், உயர் அதிகாரிகளினால் அவருக்கு மேலனுப்பப்பட்ட முக்கிய வழக்குகளையும் விசாரித்திடுவார்.

(5) திங்கள் தோறுமான மற்றும் வருடாந்திர குற்ற மனு ஆய்வுகள் மற்றும் பகுதி I குற்ற ஆய்வினை வரைந்திடுவார்.

## PSO 182 - சார்நிலைப் பணியாளரின் வழக்கு நாட்குறிப்பை மேலொப்பமிடுதல்.- To countersign subordinate's case diary.-

(1) ஒரு குற்றப் பிரிவு ஆய்வாளர் அவருடைய சார்நிலைப் பணியாளர்களில் ஒருவர் நடத்தும் விசாரணைக்கு வந்திருக்கையில், அவர் வழக்கு நாட்குறிப்பில் மேலொப்பமிட்டு, அதில் விசாரணையின் உண்மையான பதிவு அடங்கியிருக்கிறதாகச் சான்றிட வேண்டும்.

(2) ஆய்வாளர், புலனாய்வு மற்றும் நீதிமன்ற ஆஜர் குறித்த வழக்கு நாட்குறிப்புகளைப் பேணிவருவார். அவர் குற்றக் குறிப்பாணையையும் வரைந்திடுவார்.



## PSO 183 - அமைதிக் குலைவு.– Breach of peace.-

ஒரு கடும் அமைதிக் குலைவு எதிர்பார்க்கப்பட்டால், ஆய்வாளர் (ச & ஒ) உடனடியாக அந்த இடத்துக்குப் புறப்பட்டுச் சென்று அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். எந்த கலகத்திலேனும் அவர் வந்திருந்தால், யாதொரு முதுநிலை அலுவலர் இல்லாதிருக்கையில், அதை அடக்குவதற்காக அமர்த்தப்படும் காவற்படையின் மேலாண்மையை அவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## PSO 184 - திருவிழாக்களும் பொதுக்கூட்டங்களும்.– Festivals and Public Assemblies.-

ஆய்வாளர் (ச & ஒ) பெரிய திருவிழாக்களும் பொதுக்கூட்டங்களும் நடக்கையில் வந்திருந்து காவல் ஏற்பாடு முறைகளை மேற்பார்வையிட வேண்டும்.

## PSO 185 - நாட்குறிப்புகள்.– Diaries.-

ஆய்வாளர் ஒரு நாட்குறிப்பைப் படிவம் எண் 14-ல் அனுப்பவேண்டும். ஆய்வாளரின் நாட்குறிப்புகள் காலை 6 மணி முதல் மறுநாள் காலை 6மணி வரை இருபத்திநான்கு மணி நேரத்தை உட்படுத்தியிருத்தல் வேண்டும்.

## PSO 186

ஒப்பிடுகையில் சிறு முக்கியத்துவம் கொண்ட குற்றங்களில் வழக்குத் தொடர்வது ஆய்வாளருடைய கடமையின் ஓர் பாகமாகும். காவல் கண்காணிப்பாளர்கள், அவர்களுடைய ஆய்வாளர்கள் இக்கடமையை அசட்டை செய்யாமலிருப்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

## PSO 187 - தலைமை காவலர்கள் வழக்குகளைத் தொடர்தல்.– Prosecution of cases by Head Constables.-

சாதாரண தன்மை வாய்ந்த வழக்குகளில் வழக்கமான குற்ற விசாரணை வழக்கறிஞர்களின் அல்லது தலைமைக் காவலர்களுக்கு மேல் முதுநிலைப் பதவி வகித்துள்ள மற்றைய அலுவலர்களின் சேவை கிடையாமலிருக்கையில் ஒரு தலைமை காவலர் நீதி மன்றத்தின் அனுமதியுடன் குற்ற விசாரணை வழக்கை நடத்தலாம்.

## PSO 188 - சேமப்படை ஆய்வாளர்கள் (R.I.).– Reserve Inspectors.-

பெரிய மாவட்டங்களில் 3 RIகள் இருக்கிறவிடத்து, அவர்களில் மிகவும் மூத்த நிலை உள்ளவர் AR கம்பெனிக்கு பொறுப்புடையவராகவும், அடுத்த முதுநிலை கொண்டவர் கிடங்குக்கு பொறுப்பாளராகவும், மூன்றாமவர் மோட்டார் போக்குவரத்துக்கு பொறுப்பாளராகவும் இருப்பார். 2 RI கள் மட்டுமே இருக்கிற மாவட்டங்களில் அவர்களில் மூத்தவர் AR கம்பெனிக்கும், மற்றவர் கிடங்கு & மோட்டார் போக்குவரத்துக்கு பொறுப்பாளராகவும் இருப்பார். அவர்கள் அதற்கேற்ப பயிற்சியளிக்கப்பட வேண்டும். ஆயினும் அவர்கள் பெற்ற (அ) பெறப் போகிற சிறப்பு பயிற்சிக்கேற்ப SP தற்காலிகமாக இம்முறையினை மாற்றிடலாம். கம்பெனிகளின் பொறுப்பில் உள்ள R.I. படிவம் 15ல் தின அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

## PSO 189

காவல் சேமப் படைச்சிறு பகுதிகளின் பொறுப்பில் உள்ள சார்பு ஆய்வாளர்கள் ஒரு தினசரி அறிக்கையைப் படிவம் எண் 16ல் சமர்ப்பிக்க வேண்டும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

**PSO 190 - சேமப்படை ஆய்வாளர்கள் & தமிழ்நாடு சிறப்பு காவற்படை ஆய்வாளர்களின் தகுதிநிலை.– Status of Reserve Inspectors and Inspectors in Tamil Nadu Special Police Battalions.-**

சேமப்படை ஆய்வாளர்கள் மற்றும் தமிழ்நாடு சிறப்பு காவற்படை ஆய்வாளர்களின் துறை தகுதிநிலை ஆய்வாளர்களின் நிலைக்குச் சமமானதாகும்.

**PSO 191 - தமிழ்நாடு சிறப்பு காவற் படைப் பிரிவில் உதவி ஆய்வாளர்கள் மற்றும் ஆயுத சேமப்படை சார்பு ஆய்வாளர்களின் தகுதிநிலை.– Status of Reserve Sub-Inspectors in the Armed Reserve and Sub-Inspectors in the Tamil Nadu Special Police Battalions.-**

R.S.I. மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவற்படை சார்பு ஆய்வாளர்களின் துறை தகுதிநிலை சார்பு ஆய்வாளர்களின் நிலைக்குச் சமமானதாகும்.

**PSO 192 - மோட்டார் வாகனப் பணியாளர்களும் கடமைகளும்.– Motor Vehicles personnel and duties.-**

காவல் துறையில் பல்வேறு அலகுகளில் மோட்டார் வாகனப் பிரிவுகளில் உள்ள பணியாளர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் அத்தியாயம் XXIVல் கொடுக்கப்பட்டுள்ளன.

**PSO 193 - R.S.I. களுக்கு பணி அளித்தல்.– Employment of Reserve Sub-Inspectors.-**

(1) R.S.I.கள் சில நகரங்களிலும் முக்கியமான ரயில்வே நிலையங்களிலும் பணிக்கு அமர்த்தப்படுகின்றனர்.

(2) ஒரு RSI மாவட்டப் படைக்கலக் காவல் படையின் ஒவ்வோர் பகுதியுடன் சேர்க்கப்படுவார்.

**PSO 194 - R.S.I. களின் கடமைகள்.– Duties of Reserve Sub-Inspectors.-**

(1) படைக்கலக் காவல் படைகளில் அமர்த்தப்படும் RSI களின் கடமைகள் - படைக்கலக் காவல் படைகள் - அத்தியாயம் XXIV-ல் சொல்லப்பட்டுள்ளன.

(2) ரயில்வே நிலையங்களில் மேடைப் பணியாளரை மேற்பார்வை செய்தலும், பொது அமைதியைக் காப்பதற்கு உதவுதலும், R.S.I.களின் கடமைகளாகும். காவல் நிலைய அலுவலர் அல்லது மேடைத் தலைமைக் காவலருக்கு அவர்கள் அவருக்கு உதவி செய்யக் கடமைப்பட்டிருப்பார்.

**PSO 195 - SHO - நிலைப் பொறுப்பு அதிகாரி.– Station House Officers.-**

சாதாரணமாக சார்பு ஆய்வாளர்கள் காவல் நிலைய பொறுப்பு அலுவலர்களாக பணிக்கு அமர்த்தப்படுகின்றனர். ஆயினும் பெரிய நகரங்களில் ஆய்வாளர்கள் நிலைய பொறுப்பு அதிகாரிகளாக பணியமர்த்தப்படுகின்றனர்.

**PSO 196 - காவல் நிலைய நிர்வாகத்திற்கான பொறுப்பு.– Responsibility for Station administration.-**

ஒரு காவல் நிலையப் பொறுப்பில் உள்ள உதவி ஆய்வாளர் ஒருவர் தனது பொறுப்பின் காவல் நிர்வாகத்தை நடத்துவதற்கும் அதற்கு முழு உத்தரவாதம் உள்ளவராகவும் இருப்பார். தனது சார்நிலைப்பணியாளர்களுக்கு அவர்களுடைய அலுவல்களை ஒப்படை செய்வதும் அவர்கள் அவற்றைச் சரிவரச் செய்கின்றனரா என்று கவனிப்பதும் தனது நிலைய வரம்புக்குள் குற்றத்தடுப்பு, குற்றம் துலக்குதல், பொது அமைதி பாதுகாப்பு, ஆகியவற்றிற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதும் அவருடைய கடமையாகும்.



**PSO 197 - தல அறிவு பெறல்.– To acquire local knowledge.-**

தல அறிவை முற்றிலும் பெறுவதும், அவருடைய நிலைய வரம்பில் உள்ள மக்களை முக்கியமாக கிராமத் தலைமை அலுவலர்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களின் கூட்டுறவைப் பெறுவதும், அவர் மேற்கொள்ள வேண்டிய கடமையாகும். அவர் காலாண்டுக்கொரு முறை தனது ஆட்சி வரம்புக்குள் உள்ள அனைத்து கிராமங்களையும் போய் பார்க்க வேண்டும்.

**PSO 198 - சார்நிலைப் பணியாளர்களுக்கு அறிவுரை.– Instructions to subordinates.-**

தனக்குக் கீழுள்ள பணியாளர்களுக்கு அறிவூட்டி பயிற்சி அளிப்பதையும், அவர்களுடைய பயணசாமான் மூட்டைகளைப் பார்வையிடுவதையும், அவர்களுடைய கடமை நிறைவேற்றுதலைப் பற்றி அவர்களுக்கு போதிப்பதையும், அவர்களுடைய முறைக் காவல் (Beat) புத்தகங்கள், குறிப்பு புத்தகங்களை ஆய்வு செய்வதையும், அவர் கவனித்துக் கொள்ள வேண்டும்.

**PSO 199 - புலனாய்வு.– Investigation.-**

இயன்ற அளவு சார்பு ஆய்வாளர் படிநிலைக்குக் குறையாத அதிகாரி, அனைத்து குற்ற விசாரணைகளையும் நடத்த வேண்டும்.

**PSO 200 - ஓர் காவல் நிலைய வட்டங்களில் சார்பு ஆய்வாளரின் கடமைகள்.– Duties of Sub-Inspectors in Single Station Circles.-**

(1) ஓர் காவல் நிலைய வட்டங்களில் ஆய்வாளர் நிலைய பொறுப்பு அதிகாரி ஆவார். அத்தகைய நிலையத்தின் SI ஆய்வாளரின் உத்தரவின் கீழ் குற்றத்தினை விசாரித்து, தலைமைக் காவலர் & காவலர்களின் பணியினை மேற்பார்வையிட்டு, அறிவுரைகள் வழங்கியும் பணியாற்றுவார். ஆய்வாளர் இல்லாத போது, அவர் நிலையத்தின் முழு பொறுப்பாளராகவும் தனது சொந்த தன் முயற்சியிலும் செயலாற்றுவார்.

(2) அவ்வாறான ஓர் நிலைய வட்டங்களில் ஒன்றுக்கு மேறபட்ட SIகள் இருப்பின், இளையவர் மூத்தநிலை SIயின் உத்தரவின் கீழ் பணியாற்றுவார். ஆயினும் அவர்கள் நிலையத்தினை நன்முறையில் நடத்திச் செல்வதற்கு ஒருங்கியல் பொறுப்புடையவர்களாவர்.

**PSO 201 - தலைமைக் காவலர்கள்.– Head Constables.-**

தலைமைக் காவலர்கள் காவல் நிலைய அலுவலரின் கீழ் காவல் நிலையப் பொது அலுவலிலும், முக்கியமான நிலையங்களில் நிலைய எழுத்தர்களாகவும், புறக் காவலிடங்கள், காவற்படைகள் இவற்றின் பொறுப்பிலும், மற்றும் சேமக் காவல் படைகளிலும் அமர்த்தப்படுகின்றனர். SHO இல்லாவிட்டால், அவர்களைக் குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பின் 4(P) பிரிவின்கீழ் அன்றி மற்றபடி நிலையப் பொறுப்பில் வைக்கலாகாது; குற்றவியல் நடைமுறை விதித்தொகுப்பின் 157-வது பிரிவின் கீழ் எளிதான வழக்குகளை விசாரிப்பதற்கோ அல்லது SHO இல்லாதிருக்கையிலோ பதிலாய் அனுப்பப்பட்டாலன்றி மற்றப்படி தனித்த விசாரணை செய்தலும் ஆகாது.

**PSO 202 - பொது அலுவல் – தலைமைக் காவலர்.– General Duty - Head Constable.-**

காவலர்கள் வேலையை மேற்பார்வையிட்டு அவர்களுக்குக் கட்டளையிடுவது ஒரு காவல் நிலையத்தில் பொது அலுவலில் உள்ள ஓர் தலைமைக் காவலரின் முக்கிய கடமையாகும். அவர் தேவையான போது குற்ற விசாரணைக்காக காவல் நிலைய அலுவலரோடு கூடச் செல்வதுடன், அவர் பிரித்துக் கொடுக்கும் எந்த அலுவல்களையேனும் நிறைவேற்ற வேண்டும். ஒரு காவல் காப்பு அல்லது வழிக்காவல் (Escort) பொறுப்பில் அமர்த்தப்படுவதற்கும் அவர் ஆயத்தமாய் இருக்க வேண்டும். அவர் குறைந்தது காலாண்டுக்கொருமுறையேனும் நிலைய அதிகார வரம்பிலுள்ள அனைத்து கிராமங்களையும் போய்ப் பார்க்கவேண்டும்.



Scanned by CamScanner

## PSO 203 - காவல் நிலைய எழுத்தர்.– Station Writer.-

நிலைய எழுத்தர் காவல் நிலைய அலுவலருடைய கட்டளையின் கீழ் நிலையத்தின் எழுத்தர் பணியினைச் செய்ய வேண்டும்.

## PSO 204 - காவல் நிலையப் பொறுப்பு.– Station Charge.-

ஒரு சார்பு ஆய்வாளர் இல்லாதிருக்கையில், அங்குள்ள முதுநிலை அலுவலர் நிலைய வேலையை ஒப்புக்கொள்ள வேண்டும்.

## PSO 205 - கருவூலகம் மற்றும் கிளைச் சிறைச்சாலைக் காப்புப் பொறுப்பு.– Treasury and Sub-Jail Guard Charge.-

கருவூலகம் அல்லது கிளைச் சிறைச்சாலைக் காப்புக்கென்று யாதொரு தலைமைக் காவலரேனும் அனுமதிக்கப்பெறாத நிலையங்களில் மேற்கண்ட காப்பின் பொறுப்பானது காவல் நிலைய அலுவலருடைய கட்டளையின் கீழ் பொது அலுவல் தலைமைக் காவலருக்கும், காவல் நிலைய எழுத்தர் தலைமைக் காவலருக்கும் இடையே பிரிக்கப்படும்.

## PSO 206 - புறக்காவலிட (Out post) தலைமைக் காவலர்கள் (அ) வேறு ஏதேனும் காவல் அலுவலர்.– Outpost Head Constables or any other Police Officer.-

தனது ஆட்களின் பணியை மேற்பார்வையிடுவதும், குறிப்பிட்ட பதிவுருக்களை பராமரித்து வருவதும், காவல் நிலையத்துக்கு படிவம் எண்கள் 75 & 76ல் தினசரி அறிக்கை ஒன்று அனுப்புவதும், புறக் காவலிட தலைமைக் காவலரின் (அ) பொறுப்பில் உள்ள ஏதேனும் காவல் அலுவலரின் கடமையாகும்.

## PSO 207 - புறக் காவலிடத்தில் புகார் மனு பெறல்.– Receipt of complaint at an outpost.-

(1) புறக்காவலிடப் பொறுப்பிலுள்ள தலைமைக் காவலர் ஒரு காவல் நிலையப் பொறுப்பிலுள்ள ஓர் அலுவலர் அல்ல; அவருக்கு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு, 154-வது பிரிவின் பொருளமைவில் ஒரு பிடியாணை வேண்டாக் குற்றத்தின் முதற் தகவலைப் பதிவு செய்யவோ, அல்லது அதன் உட்கருத்தை முதற் தகவல் அறிக்கைப் படிவத்தில் பதிவு செய்யவோ, அதிகாரம் கொடுக்கப்படவில்லை. ஆகையால், ஒரு பிடியாணை வேண்டா குற்றத்தைப் பற்றிய செய்தியானது புறக்காவலிடப் பொறுப்பு அலுவலருக்குக் கொடுக்கப்பட்டால், அவர் மேற்கண்ட விஷயங்களைத் தனது "பொது நாட்குறிப்பில்" பதிவு செய்து கொண்டு, அவற்றை மேற்கண்ட குற்றத்தின் சூழ்நிலை தேவைப்படுத்தக் கூடிய விரைவில் காவல் நிலைய அலுவலருக்கு அறிக்கை செய்ய வேண்டும். அத்தகைய விஷயத்தில் குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு 154-வது பிரிவில் குறிப்பிடப்பட்ட செய்தியும் முதற் தகவல் அறிக்கையில் பதிவு செய்ய வேண்டிய அதன் பொருளும், காவல் நிலைய அலுவலர் முதலாவது பெற்றுக் கொள்ளும் செய்தியே ஆகும். பெரும்பான்மையான வழக்குகளில் புறக்காவலிடத்தின் தலைமைக் காவலருடைய அறிக்கையே அது ஆகும்.

(2) ஒரு புறக்காவலிடப் பொறுப்பில் உள்ள தலைமைக் காவலர், காவல் நிலையப் பொறுப்பு அலுவலரின் தலையிடுதல் இல்லாமலே, சென்னைச் சாலைப் போக்குவரத்து விதித் தொகுப்பு, 1940-ல் கண்ட பற்பல சட்டங்களின் கீழ் ஒரு தலைமைக் காவலர் சட்டப்படி வழக்கு எடுத்துக்கொள்ளக் கூடிய குற்றங்களில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.



## PSO 208 - அவசர வழக்குகளில் நடவடிக்கை.– Action in urgent cases.-

(1) ஒரு புறக்காவலிடப் பொறுப்பின் காவல் அலுவலர், ஒரு குற்றம் அல்லது கடுமையான நிகழ்ச்சியைப் பற்றிய ஓர் நேரடிக் குற்றச்சாட்டையோ செய்தியையோ பெற்றுக் கொண்டவுடன் உதவி செய்யவோ அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவரை கைது செய்திட நிகழ்விடத்துக்குப் புறப்பட்டுச் செல்வது போன்ற, உடனடி நடவடிக்கையை எடுத்துக் கொள்ளலாம்.

**புறக்காவலிடங்களின் காவலர்களை விடுவித்தல் :**

(2) புறக்காவலிடங்களில் அலுவல் புரியும் தலைமைக் காவலர்களும், காவலர்களும் கால முறைப்படி முன்னுரிமையாக ஓராண்டின் ஏப்ரல் மாதத்தில் விடுவிக்கவேண்டும். அவர்களை இந்த அலுவலின் மேல் நீண்ட கால அளவு வைக்கலாகாது.

## PSO 209 - கருவிகலப் பெட்டிக்குப் பொறுப்பான அலுவலர்கள்.– Officers responsible for kit.-

அரசாங்கச் செலவில் கருவிகலப்பெட்டி வழங்கப்பெற்ற ஒவ்வொரு அலுவலரும் அதை நல்ல நிலைமையில் வைத்துக் கொள்வதற்குப் பொறுப்பாயிருப்பதுடன், அஜாக்கிரதையாய் இழந்துபோன அல்லது சேதப்படுத்தின பொருள் எதற்கேனும் அவருடைய சொந்தச் செலவில் பதில் வைக்கும்படி கட்டளையிடப்படுவர்.

## PSO 210 - ஓய்வூதியம் வாங்க ஓய்வூதியர்கள் வராதிருத்தல் – காவல் விசாரணை.– Non-appearance of pensioners to draw pension – police enquiry.-

ஏந்த அரசாங்கத்துறை ஓய்வூதியரேனும் அவருடைய ஓய்வூதியத்தை மூன்று மாதத்துக்கு மேல் வாங்கிக் கொள்ள தவறி விட்டார் எனும் செய்தி வரப்பெற்றவுடன், காவல் துறையினர், அவருடைய வராமையின் காரணத்தைப் பற்றி விசாரணைகள் செய்து சம்பந்தப்பட்ட ஓய்வூதிய பட்டுவாடா அலுவலருக்கு முடிவைத் தெரியப்படுத்தவேண்டும்.

## PSO 211 - ஆய்வாளர்களின் வழக்கு நாட்குறிப்புகள்.– Inspector's Case diary.-

ஆய்வாளர்கள் அவர்களுக்கு அடுத்த மேல்நிலை அலுவலருக்கு, அந்தந்த நாளுக்குரிய நாட்குறிப்போடு அவர்களே ஆய்வு செய்த வழக்குகளின் விசாரணை நாட்குறிப்புகளை அனுப்பவேண்டும். அவர்கள் வழக்கு நாட்குறிப்பின் மற்றொரு பிரதியை வழக்கு பதிவு செய்யப்பட்ட காவல் நிலைய கோப்பில் வைத்துக் கொள்வதற்கு அனுப்பிவிட்டு, ஒரு பிரதியைத் தாங்களே வைத்துக்கொள்ளவேண்டும்.

## PSO 212 - காவல் நிலைய அலுவலர்கள் காவல் நிலைய அறிக்கை அனுப்புதல்.– Station House Officers to send Station House Report.-

(1) காவல் நிலைய அலுவலர்கள் தினந்தோறும் நிலையப் பொது நாட்குறிப்பு (படிவம் எண்.75)ன் குறிப்புகளின் மைத் தாள் நகலோடு படிவம் எண்.76ல் ஓர் மேல் தாளையும், பதிவான வழக்குகளில் அனைத்து முதற்செய்தி அறிக்கைகளின் நகல் ஒன்றையும், செய்த விசாரணை ஏதேனும் பதிவு செய்துள்ள விசாரணை நாட்குறிப்புத் தாள்களையும், ஆய்வாளருக்கு அல்லது உட்கோட்ட அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

(2) நிலைய பொறுப்பு பதிவேடு (படிவம் 76) ஒவ்வொரு நிலையத்திலும் பொது நாட்குறிப்பு (படிவம் 75) அடிப்படையில் தினமும் ஒப்பிட்டு தொகுக்கப்படும்.

## PSO 213 - முற்றிலும் நகரமாகவுள்ள வட்டங்களில் வழக்கு நாட்குறிப்பு சரிபார்ப்பு பதிவேடு.– Check Register of Case Diaries in purely Town circles.-

முற்றிலும் நகரமாகவுள்ள வட்டங்களில் வட்ட ஆய்வாளர் படிவம் 17ல் குற்றப் பதிவேட்டினைப் பேணுவார்.

Scanned by CamScanner

**PSO 214 - வட்ட காவல் ஆய்வாளர்களின் குற்றப் பதிவேடு.– Crime Register of Circle Inspectors.-**

காவல் ஆய்வாளர் மேற்பார்வையிடுவதற்கும், தனது வட்டத்தில் பதிவான வழக்குகள் அனைத்தையும் மேற்பார்வை செய்வதற்கு, மற்றும் கட்டுப்பாட்டிற்கு உதவியாக இருக்கும் பொருட்டு இப்பதிவேட்டில் முதற் தகவல் அறிக்கைகள் பயன்படுத்தப்படும் வழக்குகள் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு மாத இறுதியிலும் இப்பதிவேட்டில் ஒவ்வோர் நிலையத்துக்கென்று ஒரு சுருக்கத்தைத் தொகுத்து, அதில் முடிவாகா வழக்குகள் எல்லாவற்றையும் காட்டி இன்னும் விசாரணையில் இருப்பனவற்றைக் குறிப்பிடவேண்டும். சார்பு ஆய்வாளரோடு அவருடைய முடிவாகா வழக்குகள் அனைத்தையும் செம்மையாய்ச் சரிபார்க்கும் பொருட்டும், அவருடைய விசாரணைகளை மேற்பார்வையிட்டு அவருக்கு வழிகாட்டும் பொருட்டும், முடிவாகா விசாரனை வழக்குகளைச் சரிபார்க்கும் பொருட்டும், இப்பதிவேட்டை குற்ற குறிப்புப் பதிவேட்டுடன் காவல் நிலையங்களைக் காணச்செல்லும் போதெல்லாம் எடுத்துக்கொண்டு போக வேண்டும். ஆய்வாளர் காவல் நிலையங்களைப் பார்க்கும் இச்சமயங்களில் அவர் ஆராய விரும்பும் விஷயங்கள் அனைத்தையும் 6-வது கட்டத்தில் குறித்துக்கொள்ளவேண்டும். அத்தகைய மேற்பார்வைகள் அடிக்கடி ஒரு திங்கள் இடைவெளிக்கு ஒரு முறை இருத்தல் வேண்டும். 1 முதல் 5 வரை கட்டங்களில் வட்ட எழுத்தர் எழுதிக் கொள்ளலாம். (படிவம் எண். 17)

**PSO 215 - வழக்கு விசாரணை நாட்குறிப்புகளை அனுப்புதல்.– To forward Case Diaries.-**

வட்ட ஆய்வாளர் அந்தந்த நாளுக்குரிய தனது நாட்குறிப்போடு தனது சார்நிலைப் பணியாளர்களிடமிருந்து வரப்பெற்ற அனைத்து வழக்கு நாட்குறிப்புகளையும் தனக்கு அடுத்த மேல்நிலை அலுவலருக்கு அனுப்ப வேண்டும். அத்தகைய வழக்கு நாட்குறிப்புகள் தாமதமின்றி அனுப்புவதை தனது முதன்மைப் பணியாக அவர் கருதிட வேண்டும்.

**PSO 216 - காவல் ஆய்வாளரின் பதிவுருக்கள்.– Inspector's Records.-**

காவல் ஆய்வாளா வைத்துவரவேண்டிய பதிவுருக்கள் இப்புத்தகத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. விளக்கங்கள் தேவையாயிருக்கும் இனங்களுக்குக் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

**PSO 217 - காவல் ஆய்வாளர் குறிப்பேடுகளின் காப்புப் பொறுப்பு.– Custody of Inspector's note-books.-**

ஒரு வட்ட ஆய்வாளரின் குறிப்பேடு முடிந்தவுடன் அவர் அதைப் பதிவுருக்களோடு கோர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். அவர் மாற்றலாகிச் செல்கையில் தனது நடப்புக் குறிப்பேடுகளை வைத்துவிட்டுப் போகவேண்டும். மேற்கண்ட குறிப்பேடு மூன்று ஆண்டுகளுக்கு வைத்துக் கொள்ளப்படும்.

**PSO 218 - வட்ட வரலாறு.– History of the circle.-**

வட்டச் செய்திப் புத்தகம் (படிவம் எண்.18-ல்) சரியாகத் தொகுக்கப்பட்டு, வழக்கொழிந்த பதிவுகள் அடித்து விடப்பட்டு, நாளது தேதிவரை எழுதப்பட்டிருக்கிறதா என்று ஆய்வாளர்கள் ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும். அலுவலர் ஒருவர் அடைந்த அறிவு அவருடைய பின்னவருக்குக் கிடையாமற் போவதைத் தடுப்பதுதான் இப்புத்தகத்தின் நோக்கம்.



**PSO 219 - காவல் நிலையக் குற்ற வரலாற்றில் குற்றத்தைப் பற்றிய குறிப்புகள் – சரியான பராமரிப்புக்கு காவல் ஆய்வாளர்கள் பொறுப்புள்ளவர்கள்..– Notes on Crime in the Station Crime History – Inspectors responsible for correct maintenance.-**

காவல் நிலையக் குற்ற வரலாற்றில் Iவது IVவது பாகங்களில் உள்ள குற்றக் குறிப்புகளைச் சரியாக வைத்து வருவதற்கு காவல் ஆய்வாளர்கள் பொறுப்புள்ளவர்களாவர். அவர்கள் இப்பதிவுகளில் செய்யும் குறிப்புகளின் நகல்களைத் தங்களுடைய தகவலுக்கென்று வட்ட அலுவலகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

**PSO 220 - பயண நாட்குறிப்பு.– Traveiling Diary.-**

காவல் ஆய்வாளர், அவர் போய்ப் பார்த்த இடங்களையும் வருகை, புறப்பாடு, இவற்றின் தேதிகளையும், நேரங்களையும், பயண தூரத்தையும், வாகன வழிவகையினையும், பயணம் அல்லது பார்வையின் நோக்கத்தையும் பயண நாட்குறிப்பு (படிவம் எண்.19)ல் குறித்துக் கொள்ள வேண்டும். இரவுத்தங்கல் செய்த இடத்தின் பெயரைக் கீழ்க்கோடிட வேண்டும்.

**PSO 221 - வட்டக் குறிப்புரைப் புத்தகம்.– Circle Remarks Book.-**

காவல் ஆய்வாளர்கள் வட்டக் குறிப்புரைப் புத்தகத்தில் வட்டப் பொறுப்பு மாற்றங்களில் ஏற்படும் மாறுதல்களின் தேதிகளைப் பதிவு செய்யவேண்டும்.

**PSO 222 - காவல் நிலைய ஆய்வு அறிக்கை.– Station Inspection Report.-**

வட்ட ஆய்வாளர்கள் ஒரு காவல் நிலைய ஆய்வின் மேல் செய்யும் அவர்களுடைய குறிப்புகளை ஆய்வாளர் பார்வைக் குறிப்பேடு (படிவம் எண்.20)ல் பதிவு செய்துவிட்டு, அவற்றின் மைத் தாள் நகல் ஒன்றை அவர்களுடைய நாட்குறிப்போடு அனுப்பவேண்டும்.

**PSO 223 - காவல் ஆய்வாளர்கள் ஆட்சியர்களையும் கோட்ட ஆட்சியாளர்களையும் காணல்.– Inspectors to visit the Collectors and Revenue Divisional Officers.-**

ஆட்சியர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் வருவாய் கோட்ட ஆட்சியாளர்களின் சுற்றுப்பயணத்தில் தங்கள் நிலஆள்வரையில் தங்கும் போது வட்ட ஆய்வாளர்கள் அதிகாரிகளுக்குத் தங்களை அறிவித்துக் கொள்ள வேண்டும்.

**PSO 224 - வட்டங்கள், காவல் நிலையங்கள் இவற்றிலிருந்து வரும் பதிவுருக்கள்.– Records from Circles and Stations.-**

(1) மாவட்ட காவல் அலுவலகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய காவல் நிலையம், வட்டம், இவற்றின் பதிவுக் கட்டுகளை வட்ட ஆய்வாளர்கள் ஆண்டுத் தொடக்கத்தில் தலைமையிடத்துக்கு அனுப்பிவிட வேண்டும்.

(2) ஒவ்வோர் ஆண்டு இறுதியில், ஆய்வாளர்கள் இப்புத்தகக் கடைசியில் உள்ள பட்டியலின் படி வைத்துக்கொள்ள அவசியமில்லாத காலாவதியான பதிவுருக்களையும் மற்ற பயனற்ற கோப்புகளையும் அழிப்பதற்காக அவை அடங்கியுள்ள பட்டியல் ஒன்றை காவல் கண்காணிப்பாளரின் ஒப்பளிப்புக்கென்று தயாரித்து. மாவட்ட காவல் அலுவலகத்துக்கு அனுப்பவேண்டும். காவல் கண்காணிப்பாளரின் உத்தரவைப் பெற்றவுடன் ஆய்வாளர்களே அவைகளை அழித்துவிடவேண்டும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

(3) ஆய்வாளர்கள் அவர்களுடைய அலுவலகங்களிலும் காவல் நிலையங்களிலும் வைத்துக்கொள்ளப்படும் வழக்கு நாட்குறிப்புகள், முதல் தகவல் அறிக்கைகள், இவற்றின் நகல்களை அழிப்பதற்கு பொறுப்புள்ளவர்கள் ஆவர். இந்த ஆணையின் கூறு (4)ல் குறிப்பிடப்பட்டுள்ள அவை நீங்கலாக இக்கோப்புகள், அவை வழக்கு முடிவான ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு வைத்துக்கொள்ளப்படும் முடிவாக அல்லது முற்றிலும் முடிவாகா வழக்குகளில் உதாரணமாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் கைது செய்யப்படாமல் இருக்கும் வழக்கில் விசாரணை நாட் குறிப்புகள் முப்பது ஆண்டுகால அளவுக்கு வைத்துக் கொள்ளப்படும். வட்டப் பதிவுருக்களும் காவல் நிலைய பதிவுருக்களும் மாவட்ட காவல் அலுவலகத்தால் எடுத்து வைக்கப்படவேண்டிய ஆண்டுப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படும்.

(4) அனைத்து வழக்குகளிலும் இறப்பு விசாரணை நடைபெற்றிருக்கிறவிடத்து, வழக்கு நாட்குறிப்பு கோப்புகள் & FIR நகல்கள், வழக்கு முடிவு செய்யப்பட்ட வருடத்திலிருந்து 5 நாட்காட்டி வருடங்கள் வரை வைத்திருக்கப்படும்.

## PSO 225 - வருகை, புறப்பாடு அறிக்கை.–
### Report of Arrival and Departures.-

ஒவ்வொரு காவல் ஆய்வாளர், சேமப்படை ஆய்வாளர், RSI மற்றும் சார்பு ஆய்வாளா (தலைமையிட வட்டாரத்தைச் சேராத) ஆகிய இவர்கள் வரும்போதும் போகும்போதும் மாவட்ட காவல் அலுவலகத்தில் அறிவிக்க வேண்டும்.

## PSO 226 - அமர்வு நீதிமன்றங்களில் ஆஜராதல்.–
### Attendance at Sessions.-

புலனாய்வு அதிகாரி ஒரு விதிமுறைப்படி தான் விசாரித்த ஒரு வழக்கு விசாரணை நடக்கையில் ஆஜராக வேண்டும். எனினும், வட்ட ஆய்வாளர்கள் அவர்களுக்கு ஆஜராக அவகாசம் இருக்கும் போதெல்லாம் அமர்வு நீதிமன்றத்திற்கு வர வேண்டும்.

## PSO 227 - அமர்வு நீதிமன்றத்தில் தலைமைக் காவலர் அமைதி காப்பது.–
### Head Constable to maintain order in Sessions.-

(அமர்வு நீதிமன்றம் மாவட்டத் தலைமையிடத்தில் இல்லாமல் இருந்தாலன்றி மற்றப்படி சேம காவற் படையிலிருந்து) ஒரு தலைமைக் காவலர் நீதிமன்றத்தில் அமைதி காப்பதற்கென்று நீதிபதி ஆளுகையின் கீழ் இருக்கும்படி அனுப்பப்படுவார். அதே தலைமைக் காவலரை வழக்கமாக ஒவ்வொரு மாதமும் அவ்வேலைக்கு அனுப்பவேண்டும்.

## PSO 228 - வாகனம்.–
### Conveyance.-

காவல் நிலையங்கள் மற்றும் வட்டங்களுக்கு வகை செய்யப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள் மற்றும் பிறவகை போக்குவரவு வாகனங்கள் நன்முறையில் பராமரிக்கப்பட்டு திறம்பட பயன்படுத்தப்படல் வேண்டும்.

## PSO 229 - வாகனப்படி.–
### Conveyance Allowance.-

(1) காவல் ஆய்வாளர்களுக்கும் சார்பு ஆய்வாளர்களுக்கும் ஒப்பளிக்கப்பட்ட வாகனப்படி வீதங்கள் தமிழ்நாடு சிறப்பு ஊதியம் மற்றும் படிகள் நடைமுறை நூல் பாகம் -Iலும் அதன் பின் இணைப்பிலும் உள்ள விதிகளைக் காண்க.

(2) வாகனப்படி உரிமைக் கோரிக்கைகள் சம்பளப்பட்டியலில் படிவம் எண்.21-ல் ஓர் சான்றிதழால் ஆதரிக்கப்பட்டிருக்கவேண்டும். காவல் துறை துணைத்தலைவரின் தனி ஒப்பளிப்பின்றி ஒரு வாடகை வண்டி சம்பந்தமாக ஓர் சான்றிதழ் கொடுக்கலாகாது.



(3) ஒரு காவல் ஆய்வாளர் அல்லது சார்பு ஆய்வாளருக்கு ஒரு மோட்டார் சைக்கிளை வைத்து வருவதற்காக மாதமொன்றுக்கு ரூ.40/- வீதம் அளிக்கப்பட்ட வாகனப்படியினை அதன் வாங்குதலுக்குச் சம்பந்தப்பட்ட வண்டி தற்காலிகமாகப் பயன்படாமல் இருக்கையில், அவர் வாங்கலாகும் உச்ச கால அளவு பத்து நாள் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது.

## PSO 230 - காவல்துறை மற்றும் தீயணைப்புப்படை அலுவலர்கள் வணக்கம் அளித்தல்.–
### Police and Fire Service Officers salutation.-

மாவட்டத் தீயணைப்பு அலுவலர்கள் உள்பட தமிழ்நாடு தீயணைப்புப்படை அலுவலர்கள் அனைவரும், அவர்களுடைய பதவிக்கு மேற்பட்ட காவல் அலுவலர்களைக் கடந்து செல்லும்போதும், அவர்களுடன் பேசும்போதும் அல்லது அவர்களால் பேசப்படும்போதும், வணக்கம் செய்யவேண்டும்; அவ்வாறே அனைத்து காவல் அலுவலர்களும் அவர்களுடைய பதவிக்கு மேற்பட்ட தமிழ்நாடு தீயணைப்புப் படை அலுவலர்களை வணக்கம் செய்யவேண்டும். இவ்வாணையின் பொருட்டு, தீயணைப்பாளர்களும் அவர்களுக்குச் சமமான படிநிலையினர்களும் காவலர்களுக்கும் முன்னணித் தீயணைப்பாளர்கள் தலைமைக் காவலர்களுக்கும், தீயணைப்பு உதவி அலுவலர்கள், நிலைய அலுவலர்கள் ஆகியோர், காவல் சார்பு ஆய்வாளர்களுக்கும், மாவட்டத் தீயணைப்பு அலுவலர்கள் காவல் துணைக் கண்காணிப்பாளர்களுக்கும், சமமானவர்கள் எனக் கருதப்படுவர்.

## PSO 231 - தண்டனைக்குப் பரிந்துரை.– Recommendation for punishment.-

(1) தண்டனைப் பட்டியல் படிவங்கள் (படிவம் எண்.22)ல் காவல் நிலைய அலுவலர்களுக்கு வழங்கப்படும்; மேலும் நிலைய அலுவலர் ஒருவர் தண்டனைக்கென்று ஒருவரை ஒப்புவிக்கும்போது, அவர் ஒரு தண்டனைப் பட்டியலில் பிழை செய்தவர்களின் எண்ணிக்கை கட்டத்தையும் கடைசி மூன்று கட்டங்களையும் நிரப்பி, மற்ற கட்டங்களைக் காலியாக விட்டு விட்டு அதை ஆய்வாளருக்கு அனுப்ப வேண்டும்.

(2) ஆய்வாளர் தண்டனையை பரிந்துரை செய்கையில், முதலாம் கட்டத்தை நிரப்பி, ஒரு நடவடிக்கைக் குறிப்பை எழுதி வைத்து, பட்டியலை நேர்விற்கேற்ப காவல் கண்காணிப்பாளருக்கோ காவல் உட்கோட்ட அலுவலருக்கோ அனுப்பவேண்டும்.

(3) ஒரு ஆய்வாளர் அல்லது நிலைய அலுவலர் ஏதேனும் காவல் சார்நிலை அலுவலரையேனும் விளக்கம் கொடுக்கும்படி கேட்டால் அதைத் தாமதமின்றி கூடிய விரைவில் வாங்கிக்கொண்டு, ஒவ்வொரு விஷயத்திலும் உடனடியாக காவல் கண்காணிப்பாளருக்கோ அல்லது உட்கோட்ட அலுவலருக்கோ அனுப்ப வேண்டும், அதை ஒரு தண்டனைப்பட்டியலோடு, சேர்த்து அனுப்பவோ அல்லது அதை அனுப்பாததன் காரணங்களையோ கூற வேண்டும். எந்தத் தாமதமும் கண்காணிப்பாளரால் அல்லது உட்கோட்ட அலுவலரால் கவனிக்கப்படவேண்டும்.

## PSO 232 - சிறுபணிப் பதிவேடுகளில் குறிப்புகள்.– Entries in Small Service Books.-

காவல் ஆய்வாளர்களும் சார்பு ஆய்வாளர்களும் தங்களுடைய சார்நிலைப் பணியாளர்களின் சிறுபணிப் பதிவேடுகளில் அனுமதிக்கப்பட்ட குறிப்புகளைச் செய்யவேண்டும்.

## PSO 233 - பணியிடை நீக்கத்தில் உள்ள அலுவலரின் முகவரியை அனுப்புதல்.–
### Headquarters of Officer under suspension to be communicated.-

(1) பணியிடை நீக்கத்தில் வைக்கப்படும் காவல் அலுவலர், உத்தரவினை நிறைவேற்றும் அதிகாரியினால் குறிப்பான தலைமையகம் கொடுக்கப்படல் வேண்டும்; சாதாரணமாக அது அவர் கடைசியாகப் பணியாற்றிய இடமாக இருக்கும். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தலைமையகத்தை விட்டு

Scanned by CamScanner

அதிகாரியின் அனுமதியின்றி செல்லுதல் கூடாது. அவசர நிமித்தம் முன் அனுமதியின்றி தலைமையகம் விட்டுச் செல்வாராயின் தனது மேலனுப்பு முகவரியினை அலுவலகத் தலைவரிடம் அல்லது அவரது நடத்தையினை விசாரிக்கும் அதிகாரியிடம் கொடுத்துவிட்டு செல்ல வேண்டும். அதன் பின்னர் அவர் அதற்கான காரணத்தையும் மற்றும் தனது வராமைக் காலத்தினையும் அது அவசியமான காலத்திற்கு மேல் நீண்ட காலமாகக் கூடாது பற்றியும் தெரிவிப்பார்.

(2) அவருடைய நடத்தையைப் பற்றி செய்யப்படும் எவ்விசாரணைக்கேனும் ஆஜராகும்படி இடப்படும் கட்டளைகள் அனைத்திற்கும் அவர் கீழ்ப்படிய வேண்டும்; அவர் அப்படிச் செய்யத் தவறினால், விசாரணையை அவர் இல்லாமலே நடத்தலாம்.

## PSO 234 - புள்ளி விவரங்கள் தகுதிக்கு அடிப்படை நியதி அல்ல.– Statistics not a criterion for merit.-

ஒரு காவல் விசாரணை அலுவலரின் தகுதிப்பாடுகள் நீதிமன்ற விசாரணைக்கென்று மேல் அனுப்பப்படும் வழக்குகளின் எண்ணிக்கையைக் கொண்டோ, அல்லது அவருடைய ஆட்சிப் பரப்பிலுள்ள குற்றங்களின் குறைந்த விகிதாசாரத்தைக் கொண்டோ கணிக்கப்படாமல் அவருடைய பணியின் சிறப்பு பண்பு, தன்மை, இவற்றைக்கொண்டும், ஒவ்வொரு வழக்கிலும் காட்டப்படும் புலனாய்வுத் திறமையைக் கொண்டும் கணிக்கப்படும்.

❀❀❀❀❀❀



# அத்தியாயம் - 15

## அதிகாரிகளை மாற்றுதல் மற்றும் விடுவித்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள்

## INSTRUCTIONS REGARDING TRANSFER AND RELIEF OF OFFICERS

## PSO 235 - தமிழ்நாடு காவல் பணித்தொகுதி அதிகாரிகளின் பணியமர்வு மற்றும் இடமாற்றல்கள்.– Postings and Transfers of the officers of the Tamil Nadu Police Service.-

(1) அனைத்து DSPகளின் பணியமர்வு & இடமாற்றல்கள் DGP யினால் உத்தரவிடப்படும்; அவ்வாறான இடமாற்றல் & பணியமர்வுகள் DSPக்கு சென்னை நகரில் ACP எனில் காவல் ஆணையருடன் கலந்தாலோசித்து உத்தரவிடப்படும்.

(2) சென்னை மாநகரில் ஒரு சரகத்திலிருந்து மற்றொரு சரகத்திற்கு ACPயின் இடமாற்றல் காவல் ஆணையரினால் பிறப்பிக்கப்படும்.

(3) பணித்தொகுதியின் பிற உறுப்பினர்களின் அனைத்து பணியமர்வு & இடமாற்றல்கள் மாநில அரசினால் மேற்கொள்ளப்படும்.

## PSO 236 - A & B தொகுதி அலுவலர்களின் விடுவிப்பு பற்றிய அறிக்கைகள்.– Reports of relief of Group 'A' and 'B' Officers.-

(1) (a) A & B தொகுதி அலுவலர்கள், அலுவல் பொறுப்பு மாற்றுதல் பற்றிய அறிக்கை ஒன்றைப் பயணப் படி (T and A) படிவம் எண்-7ல் நிலைபான முன் பணத்தின் ஒப்பத்துடன் சேர்த்து மாநில கணக்காய்வுத் தலைவருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

(b) ஒரு A & B தொகுதி அலுவலரை அலுவல் பொறுப்பு மாற்றுதல் ஒவ்வொன்றையும் அதே நாளன்று அஞ்சல் மூலம் அரசு தலைமைச் செயலாளருக்கும் மாநில கணக்காய்வுத் தலைவருக்கும் அரசு உள்துறைச் செயலாளருக்கும் அறிக்கை செய்ய வேண்டும்.

(2) காவல் துறை துணைத் தலைவர்களும் கண்காணிப்பாளர்களும் தங்களுடைய பதவிப் பொறுப்பேற்றலை காவல் துறை உதவித் தலைவருக்கு தந்தி மூலம் தெரிவிக்கவேண்டும். மற்றைய A & B தொகுதி அலுவலர்கள் உடனடியாக அஞ்சல் மூலம் ப.ப. (T & A) படிவம் எண்-7ல் அறிக்கை ஒன்றை அனுப்ப வேண்டும்.

(3) பொறுப்பேற்றல் பற்றிய அறிக்கை ஒன்றை காவல் துறை துணைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

(4) காவல் கண்காணிப்பாளர் ஒருவர் ஒரு மாவட்டத்தை விட்டு மாற்றுதல் அல்லது நீண்ட விடுப்பில் செல்லும்போதெல்லாம் காவல் துறைத் தலைவருக்கு வேலை ஒப்புவித்தல் குறிப்புகளின் நகல் ஒன்றை அனுப்ப வேண்டும்.

## PSO 237 - சார்நிலைக் காவல் அலுவலர்களை பணியில் அமர்த்துதல் மற்றும் மாற்றுதல்.– Postings and Transfers of subordinate Police officers.-

தமிழ்நாடு காவல் சார்நிலைப்பணியாளர் தொகுதி உறுப்பினர்களின் பணியில் அமர்த்துதல் மற்றும் மாற்றுதல், அத்தொகுதியின் நியமன முறை, பணி வரையறைகள், சம்பளம், படிகள் ஆகியவற்றை முறைப்படுத்தும் விதிகளின் 32-வது விதியால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. ஆய்வாளர்கள் சேமப்படை ஆய்வாளர்கள், சார்பு ஆய்வாளர்கள் ஆகிய இவர்களின் மாற்றுதல்களை காவல் துறை அரசிதழில் வெளியிடுவதற்கென்று காவல்துறை இயக்குநருக்கு அறிவிக்க வேண்டும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

காவல் உட்கோட்ட அலுவலர்கள், அவர்களுடைய உட்கோட்டங்களின் தலைமைக் காவலர்களையும், காவலர்களையும் மாற்றுவதற்கான, உத்தரவுகளை, அவசியமான மாவட்டக் கட்டளைகளாக வெளியிடுவதற்கென்று, காவல் கண்காணிப்பாளர்களுக்கு அனுப்பவேண்டும்.

## PSO 238 - மாற்றுதல்களை அடிக்கடிச் செய்யலாகாது.– Transfers not to be frequent.-

(1) காவலர்களை அடிக்கடி மாற்றுவதுகூடாது; அவர்களை ஒரே நிலையத்தில், இயன்றபோதெல்லாம், மூன்று ஆண்டு காலத்துக்கு வைத்திருக்கவேண்டும். காவல் துறை துணைத் தலைவர்கள் தேவையில்லாத மாறுதல்கள் செய்யப்படாதபடிக் கவனித்துக்கொள்ள வேண்டும்.

(2) சரிபார்ப்பினை எளிதாக்கும் பொருட்டு, தலைமைக் காவலர்கள், காவலர்கள் இவர்களின் மாற்றுதல்கள் சம்பந்தமான மாவட்ட ஆணைகளை மாவட்ட ஆணைப் புத்தகம், படிவம் எண்-23ல் சிவப்பு மையில் பதிவு செய்ய வேண்டும்.

## PSO 239 - பணியேற்பிடைக்காலம்.– Joining time.-

பணியேற்பிடைக்காலத்தை அடிப்படை விதிகளின் வகையங்களின்படி அளிக்கலாம் பணியேற்பு இடைக்காலத்தை ஒரு உரிமையாக கோரக்கூடாது என்றும் எந்த அலுவலரையேனும் உடனே வேலை ஒப்புக்கொள்ளும்படி கேட்கலாகும் என்றும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

## PSO 240 - ஆய்வாளர்கள் மற்றும் சேமப்படை ஆய்வாளர்கள் அலுவல் பொறுப்பை மாற்றுதல்.–Transfer of charge by Inspectors and Reserve Inspectors.-

காவல் ஆய்வாளர், சேமப்படை ஆய்வாளர் இவர்களின் அலுவல் பொறுப்பு மாற்றுதல் நேரும் போது, காவல் கண்காணிப்பாளர்கள் படிவம் எண்-24ல் சான்றிதழ் ஒன்றை காவல் துறை இயக்குநருக்கு காவல் துறை துணைத்தலைவர் மூலம் அனுப்ப வேண்டும்.

## PSO 241 - காவல் ஆய்வாளர்கள், சார்பு ஆய்வாளர்களின் விடுவிப்பு.– Relief of Inspectors and Sub-Inspectors.-

(1) காவல் ஆய்வாளர் ஒருவர் ஒரு வட்ட அலுவல் பொறுப்பை ஒப்புவிக்கையில், விடுவிக்கும் அலுவலருக்கு ஒரு ஆய்வாளர் வைத்துவர வேண்டிய பதிவுகள் அனைத்தையும் ஒப்புவிக்கவேண்டும். மேலும் அவர் (i) ஒப்புவிக்கப்பட்ட அனைத்து பணங்களைப்பற்றிய குறிப்பு ஒன்றையும், (ii) முடிவாகாத பதிவுக் கட்டுகளின் பட்டியல் ஒன்றையும் அவருக்குக் கொடுக்கவேண்டும். விடுவிக்கும் அலுவலர் இப்பொருள்களுக்காக ரசீது ஒன்றைக் கொடுக்கவேண்டும்.

(2) (a) காவல் நிலையங்களில் வைக்கப்பட்டிருக்கும் ஆயுதப் பகிர்மானப் பட்டியலானது, முதலியன, (சென்னை காவல் அலுவலக நடைமுறை நூல் படிவம் எண்-25) வட்டச் சொத்துப் பதிவாக அமைந்திருக்க வேண்டும்; விடுவிக்கும் அலுவலர் முப்பது நாட்களுக்குள்ளாக வட்டத்திலுள்ள ஒவ்வொரு நிலையத்தையும் பார்வையிட்டு, சொத்தைச் சரிபார்த்து பற்றாக்குறைகள் எவற்றையேனும் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டும்.

(b) காவல் நிலையப் பொறுப்புப் பட்டியல் (படிவம் எண் காவல் ஆ.269) ஒரு காவல் நிலைய அலுவலர் வைத்துவரவேண்டிய, அல்லது அவருடைய பொறுப்பில் உள்ள சொத்து, பதிவேடுகள், முதலியன அடங்கிய ஓர் பதிவாக இருத்தல் வேண்டும். ஒரு காவல் நிலைய அலுவலர் ஒரு நிலையப் பொறுப்பை ஒப்புவிக்கையில் விடுவிக்கும் அதிகாரிக்கு நிலையப் பொறுப்புப் பட்டியலை ஒப்புவிக்கவேண்டும்; விடுவிக்கும் அலுவலர் பட்டியலை ஒப்புக்கொள்வதற்கு முன்பு, அதில் கண்ட அனைத்து சொத்து இனங்கள், பதிவேடுகள் முதலியவற்றைச் சரிபார்த்து அனைத்து இனங்களும் சரியாக ஒப்புவிக்கப்பட்டனவா என்ற விஷயத்தை பொதுநாட் குறிப்பில் எழுதி வைக்க வேண்டும்.



(3) மேற்சொன்ன சரிபார்த்தல் நிறைவேற்றப்படும் வரைக்குமோ அல்லது அதற்கென்று அனுமதிக்கப்பட்ட முப்பது நாட்கள் முடிவடையும் வரைக்குமோ காவற் படையை விட்டுப் போகும் அலுவலர் ஒருவருடைய சம்பளமானது இறுதியாகக் கணக்குத் முடித்து அவருக்குக் கொடுக்கப்படமாட்டாது.

(4) (a) ஒரு சேமப்படை ஆய்வாளர் விஷயத்தில் அவர் பொறுப்பாளியாக உள்ள சொத்து அனைத்தையும் விடுவிக்கும் அலுவலர் பொறுப்பேற்கும் முன்பு சரிபார்த்து, பற்றாக்குறைகள் எவற்றையேனும் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டும்.

(b) ஒரு சேமப்படை ஆய்வாளரால் அலுவல் பொறுப்பு மாற்றப்படுவது நீட்டிக்கும் விஷயங்களில், விடுவிக்கப்படுபவர், விடுவிக்கிறவர், ஆகிய இருவரும் ஒரே பதவிக்குரிய சம்பளத்தையும் படியையும் வாங்கிக்கொள்ள ஏக காலத்தில் உரிமையுள்ளவர்களாய்விட்டால், காவல் கண்காணிப்பாளர் மேற்கண்ட அலுவல் பொறுப்பை மாற்றுவதற்கு மூன்று வேலை நாட்களை ஒரு உச்ச அளவாக அனுமதிககலாம். அத்தகைய நிலைகளில் காவல் கண்காணிப்பாளர் விடுவிக்கும் அலுவலரின் முன் ஊதியச் சான்றில், மேற்கண்ட அலுவலர் அரசாங்கச் சொத்தினை சரிபார்த்து வேலை ஒப்புக்கொள்வதற்கு எடுத்துக்கொண்ட கால அளவு நியாயமானதென்றும், அவர் முழுக்கால அளவுக்கும் அலுவலில் இருந்ததாகக் கருதப்படவேண்டுமென்றும் சான்றிடவேண்டும்.

*****

Scanned by CamScanner
Scanned with CamScanner

# அத்தியாயம் - 16

## கவாத்து, துப்பாக்கிப் பயிற்சி பற்றிய அறிவுறுத்தல்கள்
## INSTRUCTIONS REGARDING DRILL AND MUSKETRY

**PSO 242 - வட்ட காவல் துறைக்கு பயிற்சியும் அறிவுறுத்தல்களும்.– Drill and Instruction for Taluk Police.-**

அனைத்து காவல் நிலையங்களிலும் காலை 6-30 மணிமுதல் 7-30 மணி வரை நடத்தவேண்டிய பயிற்சி, அறிவுறுத்தல் வகுப்புகள், இவற்றிற்கான அட்டவணை பின்வருமாறு

திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை - வினாவிடையும், தலச் செய்தியும்.

புதன்கிழமை - கவாத்து.

வியாழக்கிழமை - ஆயுதங்களைச் சுத்தம் செய்தல்.

சனிக்கிழமை - அலுப்பு அலுவல்.

குறிப்பு : சார்நிலை வகுப்பின் உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒரு மாதத்தில் குறைந்தது ஒரு அணிவகுப்பிலேனும் ஆஜராக வேண்டும்

**PSO 243 - வட்ட காவலர்களுக்கு பணியில்லா நேரம்.– Off duty for Taluk Police.-**

(1) வட்ட காவலர்களுக்கு ஒவ்வொரு வாரத்திலும் பணியில்லா நாள் ஒன்று பிரித்துக் கொடுக்கப்படும். ஒவ்வொரு நிலையத்தின் காவல் அலுவலரும் முன்னதாகவே ஒவ்வொரு வெள்ளிக் கிழமையில் தலைமைக் காவலர்கள், காவலர்கள் ஆகியோரின் பட்டியல் ஒன்றைத் தொகுத்து, அதில் பின்வரும் வாரத்தில் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும் பணியில்லா நாளைக் குறிப்பிட்டு, அறிவிப்புப் பலகையில் ஒட்டி வைக்கவேண்டும். பிற்பாடு ஒரு குறிப்பிட்ட தலைமைக் காவலரோ அல்லது காவலரோ அவருடைய பணியில்லா நாளன்று ஒரு குறிப்பிட்ட அலுவலுக்குத் தேவையாயிருப்பதாகத் தெரியவந்தால் இப்பட்டியல் மாறுதலுக்குட்பட்டிருக்கும். அதன் பிறகு, மேற்கண்ட தலைமைக் காவலருக்கு அல்லது காவலருக்கு அவருக்கு ஒதுக்கப்பட்ட நாளுக்கு முந்திய அல்லது பிந்திய நாளை பணியில்லா நாளாகக் கொடுத்து, அந்த நாளன்று வேலையில்லாமல் செல்லும் தலைமைக் காவலரையோ அல்லது காவலரையோ மாற்றிக் கொள்ள வேண்டும்.

(2) பணியில்லா நேரம் அளிக்கப்பெறும் காவலர்களை வார நாள் ஒவ்வொன்றுக்கும் சமமாகப் பகிர்ந்து கொள்ளவேண்டும்; பெரும்பான்மையோருக்கு வாரத்தின் தொடக்க நாட்களிலும் நீதிமன்ற விடுமுறைகளிலும் பணியில்லா நேரம் கொடுக்கவேண்டும். இவ்வாறாக, 16 காவலர்கள் உள்ள காவல் நிலையம் ஒன்றில் ஞாயிற்றுக் கிழமையன்றும் திங்கட்கிழமையன்றும் மும்மூன்று காவலர்களுக்கும், வாரத்தில் எஞ்சி நிற்கும் நாட்கள் ஒவ்வொன்றிலும் இருவர் இருவருக்கும் பணியில்லா நேரம் அளிக்கவேண்டும். எனினும் வியாழக்கிழமை உதாரணமாக, ஒரு நீதிமன்ற விடுமுறையாக இருப்பின், ஞாயிற்றுக்கிழமையன்றும் வியாழக்கிழமையன்றும் மும்மூன்று காவலர்களுக்கும், வாரத்தில் எஞ்சி நிற்கும் நாட்கள் ஒவ்வொன்றிலும் இருவர் இருவருக்கும் பணியில்லா நேரம் அளிக்கவேண்டும்.

(3) பணியில்லா நேரத்தில் உள்ள எவரேனும் அனுமதியின்றி தனது தலைமையிடத்தை விட்டுப் போகலாகாது.

(4) ஒரு தலைமைக் காவலர் அல்லது காவலர் ஒரு வாரத்தில் ஒரு நாள் விடுப்பு எடுத்திருந்தால் அவ்வாரத்தின் மீதி நாட்களில் பணியில்லா நாள் ஒன்றுக்கு தகுதியுடையவராகமாட்டார்.



(5) பொது நலன் நிமித்தம் எவ்வாரத்திலேனும் எந்தத் தலைமைக் காவலர் (அ) காவலர் பணியில்லா நாள் அளிக்கப்படாவிட்டால் அவருக்கு நாளொன்றுக்கு 50 ரூபாய் வீதம் மிகை நேர வேலைக்கென்று உழைப்பூதியம் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு காவல் நிலைய அலுவலரும், இம்மிகைநேர உழைப்பூதியத்திற்கு தகுதியுடைய தலைமைக் காவலர்கள் (அ) காவலர்கள் ஆகியோரின் பெயர்களையும், "பணியில்லா" நாட்கள் அனுமதிக்கப்படக்கூடாத நேர்வுகளின் முழு விவரங்களையும் காட்டும் பதிவேடு ஒன்றை வைத்துவர வேண்டும். அத்தகைய உரிமை கோரிக்கைகள் கொணரப்படுகையில், இப்பதிவுகளின் நகல் ஒன்றை மாதத்துக்கொரு முறை மாவட்டக் காவல் அலுவலகத்துக்கு அனுப்பவேண்டும்.

**PSO 244 - நகர காவல் நிலையங்கள்.– Town Stations.-**

(1) நகரங்களில் உள்ளபடியாக அலுவலில் உள்ளவர்களைத் தவிர, மற்ற நிலைய காவலர்கள் அனைவரும் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையன்றும் காலை 6-30 மணி முதல் 7-30 மணி வரை பயிற்சிக்கென்றும் பொது அறிவுரைக்கென்றும் ஆஜராகவேண்டுமென்று கட்டளையிடப்படுவர்.

(2) மற்றைய நாட்களில் ஆயுதங்களைத் துடைப்பதற்காகவும் அறிவுரைக்காகவும் எண் 5 கொண்ட விடுவிக்கப்பட்ட ஆட்கள் காலை 5-30 மணிக்கு ஆஜராக வேண்டும்.

குறிப்புகள் : (1) நகர காவல் நிலையங்களின் ஆட்கள் பயிற்சியும், படைப்பிரிவு (Platoon) பயிற்சியும், கம்பெனிப் (Company) பயிற்சியும் பழகவேண்டியதில்லை.

(2) சார்நிலை வகுப்பின் உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒரு மாதத்தில் குறைந்தது ஒரு அணிவகுப்பிலேனும் ஆஜராகவேண்டும்.

**PSO 245 - தடி.– Lathi.-**

கூட்டங்களை கட்டுப்படுத்துதல் பாதுகாப்பு அலுவல், (ஆயுதங்களைக் கொண்டு போகாமல்) சுற்றுக்காவல், அமைதி குலைந்த இடங்களில் முறைக் காவல்கள் (beats), தற்காப்புக்காக ஒரு தடி தேவையாயிருக்கும் யாதொரு சமயம், ஆகிய இவற்றிற்காகக் கூடும்போது காவலர் எப்போதும் தடிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

**PSO 246 - அலுப்பு அலுவல்.– Fatigue duty.-**

காவல் நிலையம், குடியிருப்பு, காவல், அலுவலர்கள் வசிக்கும் அரசினர் கட்டிடங்கள் ஆகிய இவைகளைச் சுற்றிலுமுள்ள நிலத்தைச் சுத்தப்படுத்தி ஒழுங்காக வைத்திருத்தல், காய்கறி வகை தவிர வேறு வகைத் தோட்ட வேலை சரகத்தை ஒழுங்காக வைத்திருத்தல், பொதுவாகக் கட்டிடச் சுற்றுப்புறங்களின் சீர் நிலையைப் பேணுதல் ஆகிய இவைகள் அடங்கியது அலுப்பு அலுவலாகும்.

**PSO 247 - கருவிகலப்பெட்டி தணிக்கை.– Kit Inspection.-**

(1) நகரைப் பொறுத்து காவல் நிலைய பொறுப்பு அதிகாரியினால் உடுப்புப் பை தணிக்கை மேற்கொள்ளப்படும்; மாவட்ட ஆயுத சேமப்படையைப் பொறுத்து தலைமைக் காவலர் மற்றும் காவலர்களின் உடுப்புப் பையினை முதல் மற்றும் மூன்றாவது காலாண்டின் முதல் மாதத்தில் முதல் வாரத்தில் RSI ஆய்வு செய்வார். மற்றும் ஆய்வாளர் இரண்டாவது மற்றும் நான்காவது காலாண்டின் உடுப்புப் பையினை ஆய்வு செய்வார். அந்த நாளில் ஆஜராகாத ஒவ்வொரு நபரும் பின்னிட்ட நாளில் தங்களது உடுப்புப் பையினை முன் வைப்பர்.

(2) ஆய்வாளர் படிநிலைக்கு மேற்பட்ட அலுவலர்கள் காவல் நிலையங்களைப் பார்க்கையில், உடுப்புப் பை தணிக்கை சரியாகச் செய்யப்பட்டிருக்கிறதா என்று சரிபார்க்க வேண்டும்.

(3) ஆஜர் செய்யவேண்டிய பொருள்களைக் காட்டும் விளக்கப் படம் ஒன்று காவல் தலைமைக் காவலர்கள், காவலர்கள் ஆகியோரின் வழிகாட்டிப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. உடுப்பானது சமீபத்தில் வழங்கப்பட்டவைகளாக இருத்தல் வேண்டும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

**PSO 248 - துப்பாக்கி.– Musketry.-**

(1) ஒரு காவல் நிலையத்திலுள்ள ஒவ்வொரு காவலரும் ஒவ்வோர் ஆண்டிலும் 25 குண்டுத் தோட்டாக்களையும் 10 வெற்றுத் தோட்டாக்களையும் சுடவேண்டும். சுடுதல் ஆறுமாதத்துக்கொரு முறை நடைபெற வேண்டும். சார்பு ஆய்வாளர் கூட தனது காவல் நிலைய காவலர்கள் சுட்டது போன்ற ஓர் வருடாந்திரத் துப்பாக்கிப்பயிற்சி செய்ய வேண்டும்

(2) (a) வட்ட காவல் ஆய்வாளர் பயிற்சித் தோட்டாக்களின் பொறுப்பினை வைத்துக்கொண்டு தனது அரையாண்டு காவல் நிலைய ஆய்வின் போது துப்பாக்கிப் பயிற்சியை நடத்தவேண்டும். அவர் இலக்குப் பயிற்சிப் பதிவேடு ஒன்றைப் படிவம் எண் 27-ல் வைத்து வரவேண்டும். புறக் காவலிடங்களில், அவருடைய ஆய்வின்போது எவர்களேனும் வராவிட்டால் அவர்களுடைய பயிற்சிக்கான தோட்டாக்களை வைத்துவிட்டுப் போக வேண்டும். சார்பு ஆய்வாளர் தனது மேற்பார்வையின் கீழ் பயிற்சியை நடத்திவிட்டு, எடுக்கப்பட்ட கணக்கீடுகளைப் பதிவேட்டில் குறித்துக்கொள்வதற்காக காவல் ஆய்வாளருக்கு அனுப்பவேண்டும்.

(b) காவல் ஆய்வாளர் அவராகவே பயிற்சியைத் தனது தலைமையிடத்தில் முடித்திட வேண்டும்.

(3) வரவு-செலவைக் காட்டும் (C.F. எண் 268 (a); ல்) தோட்டாக் கணக்குப் பதிவேட்டை ஒவ்வொரு காலாண்டிலும் முடிக்கவேண்டும்.

**PSO 249 - சுழல் கைத்துப்பாக்கிப் பயிற்சி.– Revolver practice.-**

காவல் ஆய்வாளர், சேமப்படை ஆய்வாளர், RSI மற்றும் சார்பு ஆய்வாளர் ஆகிய இவர்கள் ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் 60 சுழல் துப்பாக்கித் தோட்டாக்களைச் சுடவேண்டும். தனிப் பிரிவு CID அலுவலகளில் அமர்த்தப்பட்டிருக்கும் ஆய்வாளர்கள், சார்பு ஆய்வாளர்கள், தலைமைக் காவலர்கள் ஆகியோர் கூட ஆண்டு தோறும் 60 தோட்டாக்களைச் சுடவேண்டும். பயிற்சியின் விவர நடைமுறைகள். தமிழ்நாடு காவல் கவாத்து, பயிற்சி நடைமுறைநூல் 147 முதல் 151 பிரிவுகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

**PSO 250 - ரவைத் தோட்டாக்களை (buckshot ammunition) ஆண்டு தோறும் புதுப்பித்துக் கொள்ளுதல்.– Annual renewal of buckshot ammunition.-**

காவல் நிலையங்களுக்கு வழங்கப்படும் 410 ரவைத் தோட்டாக்களை நிலையங்களில் சுட்டுத் தீர்த்துவிட்டு இருப்புச் சரக்குக்கு உடனே மாவட்டப் பண்டகசாலையிலிருந்து புதிய தோட்டாக்களைப் பதிலாக வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். இருப்புச் சரக்கின் 50 சதவீதத்தை, அதாவது, துப்பாக்கி ஒன்றுக்கு ஒரு தோட்டா வீதம் அரையாண்டுத் துப்பாக்கிப் பயிற்சியின்போது சுட்டுத் தீர்க்கவேண்டும்.

**PSO 251 - திறமைச் சுடுதல் வில்லை.– Good Shooting Badge.-**

ஆண்டுப் பயிற்சி முடிந்தவுடன் நபர்களுக்கு திறமைச் சுடுதலுக்கான வில்லைகள் அளிக்கப்படும் மற்றும் அவை இடது முன் கையின் கீழ் அணிந்து கொள்ள வேண்டும். பட்டுத்துணி வெள்ளி (அ) தங்க வில்லைகள் பெறுவதற்கான தகுதிகள் தமிழ்நாடு காவல்துறை பயன்பாட்டிற்கான கவாத்து மற்றும் பயிற்சி நடைமுறை நூல் பிரிவு 156-ல் விதிக்கப்பட்டுள்ளன.

******



# அத்தியாயம் - 17

## சம்பளம், படிகள், சில்லறைச் செலவினங்கள், ரொக்கக் கணக்குகள் பேணுதல் பற்றிய அறிவுறுத்தல்கள்

## INSTRUCTIONS REGARDING PAY AND ALLOWANCES, CONTINGENCIES, MAINTENANCE OF CASH ACCOUNTS ETC.

**PSO 252 - சம்பளமும் படிகளும்.– Pay and Allowances.-**

அலுவலர்களின் சம்பளமும் படிகளும் வாங்கல் பற்றிய பொது விதிகள் தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பிலும் தமிழ்நாடு கருவூலக விதித் தொகுப்பிலும் அடங்கியிருக்கின்றன. அடியிற்கண்ட விவர அறிவுரை வெளியிடப்படுகிறது:-

**PSO 253 - இறந்துபோன அலுவலருக்குரிய சம்பளம்.– Pay due to deceased officer.-**

(1) இறந்துபோன அல்லது பணியாளர் தொகுதியை விட்டுப் போகிற அலுவலர் ஒருவருக்குரிய கடைசிச் சம்பளத்தை, அவருக்கு எதிராக விதித்த தொகைகள் எவையேனும் நிலுவைப் பாக்கியாக இல்லையென்று கேட்டறியப்படும் வரையிலும், அவருடைய முழு உடுப்புப் பையும் கணக்கு ஒப்புவிக்கப்பட்டு பற்றாக்குறைகளுக்கான கழித்தல்கள் செய்யப்படும் வரையிலும், கொடுக்கப்படமாட்டாது.

(2) தமிழ் நாடு கருவூலக விதித் தொகுப்பு-I க.வி.16 து.வி.34ன் காப்புரைக்கு உட்பட்டு மரணமடைந்த அரசு ஊழியரின் சார்பில் கோரப்படும் ஊதியம் & படிகள் உரிமைக் கோரிக்கை வழக்கமான அதிகார ஆவணமின்றி அளிக்கப்படலாம்.

(a) உரிமைக் கோரிக்கையின் மொத்த தொகை ரூ.2500க்கு மேற்படாதிருப்பின், இறப்பின் போது பணியாற்றிய அலுவலகத்தின் தலைவரின் உத்தரவின் பேரில், வரம்புரையாக அலுவலகத் தலைவர் உரிமை கோருபவரின் உரிமை/ உரியவர் தான் என்பதனை உளநிறைவுடைய தெரிந்திருக்க வேண்டும்

(b) உரிமைக் கோரிக்கை ரூ.2,500/-க்கு மேற்படின், தேவையான பிணையதாரர்களுடன் முத்திரையிட்ட ஈட்டுறுதிப் பிணைமுறியின் பேரில் அரசு உத்தரவின் பேரில் வழங்கப்படும்.

(c) கூறு (a) வில் குறிப்பிடப் பெற்ற அதிகாரி அதில் குறிப்பிடப்பெற்ற வரையறைகளுக்குட்பட்டு ரூ.2,500/-க்கு மேற்படாத முன்பணத் தொகையினை அளிக்கலாம்.

(d) ஏதேனும் ஐயம் எழுமாயின், சட்டமுறையான அதிகார ஆவணத்தை முன்னிடும் நபருக்கு மட்டுமே தொகை அளிக்கப்படும்.

**PSO 254 - மிகையாகக் கொடுத்தவைகளைத் திரும்பப்பெறல்.– Recovery of overpayments.-**

மிகையாகக் கொடுத்தவைகளைப் பெற்றவர்களிடமிருந்து வசூலிக்க முடியாவிட்டால், மிகையாகக் கொடுத்ததற்குப் பொறுப்புள்ளவரான அலுவலர், மேற்படி மிகையாகக் கொடுத்தலுக்கு ஓர் உளநிறைவான விளக்கம் இராதபோது, மிகையாகக் கொடுக்கப்பட்ட தொகையைத் திரும்பத் தருவதற்குக் கடமைப்பட்டிருப்பார்.

**PSO 255 - பணம் பட்டுவாடா.– Disbursement.-**

(1) பணம் வழங்கும் அதிகாரியின் தலைமையகத்தில் இல்லாமல் வேறு இடத்தில் உள்ள பணியாளர்களுக்கு பணம் செலுத்தம் தொடர்பான வட்ட ஆய்வாளரின் பெயரில் வங்கி கேட்பு வரைவோலை மூலம் அளிக்கப்படும்; அவர் அதனை ரொக்கமாக்கி உரிய தேதியில் பணியாளர்கட்கு பட்டுவாடா செய்யப்படுமாறு பார்த்துக் கொள்வார்.

Scanned by CamScanner
Scanned with CamScanner